மெய்கண்ட சாத்திரங்கள்

சைவ சித்தாந்தத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகச் சைவசித்தாந்தத் துறை
வெளியீட்டு வரிசை-1

பொதுப் பதிப்பாசிரியர்
டாக்டர் வை. இரத்தினசபாபதி

மெய்கண்ட சாத்திரங்கள்

மெய்கண்ட சாத்திரங்கள்

சைவ சித்தாந்தத் துறை

சென்னைப் பல்கலைக் கழகம்

© சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை 600 005.

விலை ரூ. 38/-

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம்,
சென்னை, 600 013.

பதிப்புரை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஒரு நூற்றாண்டின் மேல் வளர் வெள்ளிவிழாவை (*1983*) ஒட்டி, பல புதிய துறைகள் தொடங்க வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளப் பெற்றது. அம்முயற்சியின் விளைவாக நிதியுதவி வேண்டிப் பொது மக்களிடமும் ஆன்மீக நெறி வளரப் பெருங்கொடையளிக்கும் புரவலர்களிடமும் வேண்டுகோள் விடப்பெற்றது. புரவலர்களும் ஆன்மீக நெறி பரப்பும் அருளாளர்களும் பொதுமக்களும் மனமுவந் தளித்த நன்கொடைகளின் அடிப்படையில் தொடங்கப்பெற்ற துறைகளுள் ஒன்றே **சைவ சித்தாந்தத் துறை.**

சென்னைப் பல்கலைக் கழகத்தில் *1927*–இல் தொடங்கப்பெற்ற தத்துவத் துறையின் ஒரு பிரிவாக நின்று வளர்ந்த சைவசித்தாந்தம் **23—4—1986 முதல்** சென்னைப் பல்கலைக் கழகத்தின் தனியொரு துறையாகவே தோற்றம் கொண்டு வளர்ந்து வருகிறது. நன்கொடையாக அளிக்கப்பெற்ற பதினைந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட வெண்பொற் காசுகளை முதலீடாகக் கொண்டு, அதற்குரிய வட்டித் தொகையின் அடிப்படையில் வளர்ந்து வரும் **சைவ சித்தாந்தத் துறையானது** சென்னைப் பல்கலைக் கழகத்தின் தனித் துறை என்ற தகுதியுடன் விளங்கி வருகிறது.

சென்னை அண்ணா சாலை, *603* எண்ணில் அமைந்துள்ள **'சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனம்'** *17—9—1983*-இல் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் கீழ்க் கண்டவைகள் இச் சைவ சித்தாந்தத் துறையின் நோக்கங்களாகக் கொடுக்கப் பெற்றுள்ளன.

1. சைவ சித்தாந்தத்தின் மைய அறிவுரைகள், நோக்கம் ஆகியவை பற்றி ஆய்வு செய்தல்.

2. சைவக் கொள்கையின் தத்துவம், இலக்கியம் பற்றிய விரிவாக்கப் பணியை ஏற்றல்; சைவ சித்தாந்தமானது பிற இந்திய மொழிகளுக்கும் நாகரிகத்துக்கும் வழங்கிய அருள் தொண்டு பற்றியும் சைவசித்தாந்த வரலாறு, தத்துவம் பற்றியும் கருத்தரங்குகள் அமைத்தல்.

3. சைவ சித்தாந்தத்தின் உலகவாம் பொதுமையியலான கொள்கைகளை வெளிப்படுத்தும் வகையில் உரிய பணிகளைத் தொடங்குதல்.

4. சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கைகளைப் பிற தத்துவக் கொள்கைகளுடன் இணைவாராய்ச்சி செய்வதை ஊக்கப் படுத்துதல்.

5. தொன்மைக் காலந்தொட்டு சைவக் கொள்கை பெற்று வரும் வரலாற்று நிலையையும் வளர்ச்சிப் பெருமையையும் கால அடிப்படையில் தொகுத்து எழுதுதல்.

6. சைவ சித்தாந்தத்தை இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்புக்களுக்கு உரிமையாக்குதல்.

மேலே குறிப்பிட்ட நோக்கங்களின் அடிப்படையில் இன்று M.A. சைவசித்தாந்தம், M. Phil. சைவசித்தாந்தம் Ph. D. சைவ சித்தாந்தம் ஆகிய பிரிவுகளில் மாணாக்கர்களைச் சேர்த்து அவர் களுக்கு *1988-89* கல்வியாண்டு முதல், பயிற்சியளித்து வருகிறது.

சைவசித்தாந்தத் தத்துவத்தை அறிவாய்வு முறையில் பயிற்று விக்க வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையைச் செயற் படுத்தும் வகையில் சைவ சித்தாந்தத் தத்துவத்தின் மூல தத்துவ நூலாகிய **'மெய்கண்ட சாத்திரம்'** சைவ சித்தாந்தத் துறையின் முதல் நூலாக வெளிவருகிறது.

'மெய்கண்ட சாத்திரம்' இப்போது கிடைக்கவில்லை என்ற குறை நீக்கத்தையும், சந்திபிரித்த பதிப்பு ஒன்று வெளிவர வேண்டும் என்ற இன்றியமையாமையையும் கருத்தில் கொண்டு வெளியிடப் பெறுகிறது.

இத்துறையின் ஆக்கவழிச் செயல்களை அவ்வப்போது உடனி ருந்து அமைதியுடன் கேட்டும் அரவணைத்தும் ஆக்கவழிக் கருத்துக்களை வழங்கியும் நெறிப்படுத்தி வருகிற சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், மூதறிஞர், பேராசிரியர் ஆ. ஞானம் அவர்களுக்கும், தனிப்பரிவுடன் எங்கள் திட்டங் களுக்குச் செயல்வழி ஆக்கம் புரிந்துவரும் பதிவாளர் அவர்களுக்கும் பல்கலைக் கழக ஆட்சிக்குழு அலுவலக உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூற் பதிப்புச் செயலை மேற்கொண்டு திறமுறப் பணி யாற்றிய இத்துறையின் ரீடர் **டாக்டர். சபாரத்தினம்** அவர்களுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த சென்னை, அவ்வை அச்சுக் கூடத்தாருக்கும் என் உளங்கனிந்த நன்றி உரியன.

வை. இரத்தினசபாபதி
பேராசிரியர், தலைவர்
சைவ சித்தாந்தத் துறை
பொதுப் பதிப்பாசிரியர்

சென்னை-5
10—10—88

முன்னுரை

மெய் காணும் கடமைப்பாடு உடைய மக்களுக்கு, மெய் கண்ட அருளாளர்கள் நன்னெறி காட்டுவர். மெய் கண்ட நல்லோரின் அமுதமொழிக் கோவையே மெய்கண்ட சாத்திரங்கள். சைவ சித்தாந்த மரபுக்கு அடிப்படைத் தமிழ்நூல்களாக மட்டுமல்ல, அரண் செய்யும் மெய்ந்நூல்களாகவும் நின்று விளங்குபவை மெய்கண்ட சாத்திரங்கள்.

இந்திய மெய்ப்பொருள் இயல் வரலாற்றில் கி. பி. 12 முதல் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலம் மிகவும் சிறப்பு வாய்ந்த வளமைக் காலமாகும். இக்கால கட்டத்தில் எண்ணற்ற மெய்ப்பொருள் நூல்களும் முன்னர் எழுந்த மெய்ப்பொருள் நூல் களுக்குப் பேருரைகளும் விரிவான அளவில் எழுதப்பட்டன. இக்கால எல்லையில் தமிழ் மொழியில் எழுந்த மெய்கண்ட சாத்திரங்கள் தமிழகத்தே தத்துவ மறுமலர்ச்சியைச் சீரிய முறையில் தோற்றுவித்தன. சைவசித்தாந்த மரபுக்கு அடித்தளங்களாக எழுந்த இம்மெய்கண்ட நூல்களை இந்திய மெய்ப்பொருள் இயலின் வரலாற்றுப் பின்னணியில் வைத்தும், பிற மதங்களின் – மரபுகளின்– மெய்ப்பொருள் கூறுகளோடு ஒப்பீடு செய்தும் பயிலும் போதுதான் இம் மெய்கண்ட சாத்திரங்களின் தத்துவ வளம் எந்த அளவிற்கு உயர்ந்தும் செறிந்தும் விளங்குகின்றது என்பது புலனாகும்.

மெய்கண்ட சாத்திரங்கள் என்ற தொகுப்பில் திருஉந்தியார் முதல் சங்கற்ப நிராகரணம் ஈறாக உள்ள பதினான்கு நூல்களையே கொள்ளும் மரபு வேரூன்றி உள்ளது. திரு உந்தியாருக்கு முன்னர்த் தோன்றிய ஞானாமிர்தம் என்னும் நூலும், சங்கற்ப நிராகரணத் திற்குப் பின்னர்த் தோன்றிய துகளறு போதம், சித்தாந்த நிச்சயம் முதலான நூல்களும் சைவசித்தாந்த சாத்திரங்களே எனினும் 'உந்தி களிறு' எனத் தொடங்கும் வெண்பாவின் கூற்றுக்கு இயையப் பதினான்கு நூல்களைக் கொளவதே மரபாக உள்ளது.

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கனுள் காலத்தால் முற் பட்டது திருஉந்தியார். திரு உந்தியார் என்ற பெயரில் மணிவாசகப் பெருந்தகையின் தோத்திர நூல் அமைந்ததற்கு ஏற்ப அதே பெயரில் சாத்திர நூலும் அமைந்திருப்பது அருள் வெளிப்பாடே எனலாம். 'உந்தீ பற' 'உந்தீ பற' என ஒவ்வொரு தாழிசையும் முடிவுறுவதால் உந்தியார் எனும் பெயர் அமைந்தது. நாற்பத்தைந்து கலித்தாழிசை

களைக்கொண்டு அமைந்துள்ள திரு உந்தியார் எனும் மெய்ந்நூல் சிவஞானத்தின் சிறப்பினை விதந்து ஓதுகின்றது. சரியை, கிரியை யோகம், ஞானம் எனப்படும் நன்னெறி நான்கனுள் இந்நூல் ஞான நெறியின் விழுப்பத்தைக் கூறுகிறது; ஞானநெறி நின்றோரின் சிறப்பு களையும் எடுத்துக் கூறுகிறது; ஆதாரயோகம், நிராதார யோகம், நிருத்த மூர்த்தி வழிபாடு முதலான செய்திகளை இயம்புகிறது; ஞான நெறி நின்ற சிவஞானியின் அருள் அனுபவ உண்மைகளை வெளிப் படுத்துகிறது. இந்நூலுக்குத் தில்லைச் சிற்றம்பலவர் என்னும் சிவப்பிரகாசனார் செய்த பழைய உரை ஒன்று உள்ளது.

இந்நூலின் ஆசிரியர் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் என்பவர். 'இரவு பகல் இல்லா இன்ப வெளியூடே, விரவி விரவி நின்று' சிவப்பேரின்பம் துய்க்கும் சிவஞான யோகியாக விளங்கியவர் இவர். தாம் துய்த்த அருளின்பத்தைப் பல தாழிசைகளில் இவர் தெளிவாக வெளிப்படுத்தி அருள்கிறார்.

இந்நூலின் காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு **(கி. பி. 1148).**

மெய்கண்ட சாத்திர வரிசையில் இரண்டாவதாக விளங்கும் **திருக்களிற்றுப்படியார்** நூறு வெண்பாக்களை உடையது. திரு உந்தியார் என்னும் நூலுள் கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஒட்டியே நூறு வெண்பாக்களும் அமைந்துள்ளன. சித்தாந்த சைவத்தின் சிறப்பு, திருவடிப் பேற்றின் மாண்பு, திருவைந்தெழுத்தின் சிறப்பு, முப்பொருள்களின் இயல்பு, முதல்வன் இயக்க உலகம் இயங்கும் முறைமை – இவை முதலான கருத்துக்களை இந்நூல் வெளிப்படுத்து கின்றது. சைவ சமய குரவர் நால்வரின் பெருமையையும் ஏனைத் திருத்தொண்டர்களின் மாண்பையும் இந்நூல் சிறப்புற எடுத் தோதுகின்றது. இந்நூல் பொன்னம்பலத்திலுள்ள திருக்களிற்றுப் படியிலே வைக்கப்பட்ட பொழுது அப்படியில் உள்ள களிற்றின் கை நிமிர்ந்து நூலை எடுத்துக் கூத்தப் பெருமானின் திருவடியில் வைத்ததனால் இந்நூலுக்குத் **திருக்களிற்றுப்படியார்** எனும் பெயர் வாய்த்தது என ஆன்றோர் கூறுவர். தில்லைச் சிற்றம்பலவர் என்னும் சிவப்பிரகாசனார் இந்நூலுக்கும் உரை வரைந்துள்ளார்.

திருவியலூர் உய்யவந்த தேவ நாயனாரின் மாணவர் ஆளுடைய தேவ நாயனார் என்பவர். இவர்தம் மாணவர் திருக் கடவூர் உய்யவந்த தேவநாயனார் என்பவர். இவரே **திருக்களிற்றுப் படியார்** என்னும் சித்தாந்த நூலை அருளியவர். திருக்குறட்பாக்கள் சிலவற்றைச் சித்தாந்த மரபுக்கு ஏற்ற முறையில் நயமுற விளக்கும் இவரது புலமைத் திறம் போற்றுதற்கு உரியதாகும்.

இந்நூலின் காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு ***(கி. பி. 1178).***

சிவஞானபோதம் சித்தாந்த நூல்களுள் தனிமுதன்மை பெற்றுத் திகழ்வது. இதனுள் அடங்கியுள்ள நூற்பாக்கள் பன்னிரண்டு;

அதிகரணங்கள் முப்பத்தொன்பது; உதாரண வெண்பாக்கள் எண்பத்தொன்று. பன்னிரண்டு நூற்பாக்களுள் முதல் ஆறு நூற்பாக்களும் முப்பொருள்களின் பொது இலக்கணத்தைக் கூறுதலின் பொது அதிகாரம் எனவும் எஞ்சிய ஆறு நூற்பாக்களும் முப்பொருள்களின் சிறப்பு இலக்கணத்தைக் கூறுதலின் சிறப்பு அதிகாரம் எனவும் கூறப்பெறும். முப்பொருள்களின் உண்மை உணர்த்தும் பிரமாண இயல், அவற்றின் இலக்கணம் கூறும் இலக்கண இயல், அதிகாரி, சாதனம், சாதிக்கும் முறை ஆகிய இவற்றைக் கூறும் சாதன இயல், பாச நீக்கம், சிவப்பேறு, சீவன் முத்தர் இயல்பு ஆகிய இவற்றைக் கூறும் பயன் இயல் என இந்நூல் நான்கு இயல்களைக் கொண்டுள்ளது.

முதற்சூத்திரம் கடவுள் உண்மையையும், அவர் எல்லாவற்றையும் ஒடுக்கி மீளத் தோற்றுவிக்கும் செயற்பாடு உடையவர் என்பதையும் வெளிப்பட உணர்த்தி மாயையையும் ஆணவ மலத்தையும் குறிப்பாக உணர்த்துகிறது; இரண்டாம் சூத்திரம் கடவுள் உயிர் களுடன் இரண்டற நின்று அவைகட்கு வினைப்பயனை ஊட்டும் முறையையும் உயிர்கட்கு மலநீக்கம் காரணமாகப் பிறப்பும் இறப்பும் நிகழும் முறையையும் உணர்த்துகிறது; மூன்றாம் சூத்திரம் உடல், ஐம்பொறி, கனவுடல், பிராணவாயு ஆகிய இவற்றிற்கு வேறாயும் உயிர் உண்டு என்னும் கருத்தைப் புலப்படுத்துகிறது; நான்காம் சூத்திரம் அந்தக் கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு என்றும், மலமறைப்பால் உயிருக்கு அறிவு நிகழ்வதில்லை என்றும் உயிர் மூன்று அவத்தைப்படும் என்றும் உணர்த்துகிறது; ஐந்தாம் சூத்திரம் தத்துவங்கள் எல்லாம் உயிருக்குக் கருவியாக நிற்கும் முறைமையை யும், முதல்வனாலே உயிர்களெல்லாம் அறியும் என்னும் உண்மை யையும் எடுத்துக் கூறுகிறது; ஆறாம் சூத்திரம் தோன்றி நின்று அழியும் உலகம் சுட்டியறியப்படுவது ஆதலின் அது அசத்து என்றும் அவ்வாறு சுட்டி அறியப்படாது சுட்டிறந்து உணரப்படும் பரம்பொருள சத்து என்றும் உணர்த்துகிறது.

அசத்தாகிய உலகத்தையும் சத்தாகிய முதல்வனையும் அறிய வல்லதாய் அசத்தை நீக்கிச் சத்தைப் பற்றக் கூடியது உயிர் என்று உணர்த்தும் முறையில் சாதனத்திற்கு உரிய அதிகாரியின் தன்மையைக் கூறுவது ஏழாவது நூற்பா; உயிருக்கு நல்லறிவு தவத்தினாலேயே வரும் என்றும் உயிருக்கு ஞானாசிரியனாக (குரு) எழுந்தருள்பவன் முதல்வனே என்றும் ஐம்புலன் வழிச் செல்வதால் உயிர் தன்னையும் அறியாது தலைவனையும் அறியாது என்றும் ஐப்பொறி வழியிற் பற்றற்றால் உயிர் நன்னிலை எய்தும் என்றும் கூறுகிறது எட்டாம் நூற்பா; முதல்வனை அவன் அளித்த ஞானக் கண் கொண்டு காணும் இடத்து உயிர் ஆன்மசுத்தி எய்தும் என்றும் ஆன்மசுத்தி நிலைபெறுதற் பொருட்டு விதிப்படித் திருவைந் தெழுத்தை எண்ண வேண்டும் என்றும் கூறுகிறது ஒன்பதாம் நூற்பா; முதல்வனுடன் ஒன்றாகி நின்று இறைபணிக்கண் நிற்பின் மலநீக்கம் ஏற்படும் என உணர்த்துகிறது பத்தாம் நூற்பா; சிவஞானிக்கு வரும்

விடயங்களை முதல்வனே அனுபவிப்பன் என்றும் மறவா அன்பில் உறைந்து நிற்பின் ஆன்மா முதல்வனுடன் இரண்டறக் கலக்கும் என்றும் கூறுகிறது பதினொன்றாம் நூற்பா; சிவப்பேற்றினை நிலை நிறுத்தும் பொருட்டுஅன்பர் கூட்டுறவும் அவர்தம் திருவேடத்தையும் திருக்கோயிலையும் முதல்வன் எனவே காணும் வழிபாடும் வேண்டும் என உணர்த்துகிறது பன்னிரண்டாம் நூற்பா.

இந்நூலுக்கு மாதவச் சிவஞான யோகிகள் சிற்றுரை ஒன்றும் பேருரை ஒன்றும் அருளியுள்ளார். பாண்டிப்பெருமாள் என்பவர் விருத்தி உரை அருளியுள்ளார்.

தன்னிகரற்ற சிவஞானச் செந்தமிழ் நூலாம் சிவஞானபோதத்தை அருளியவர் **மெய்கண்டார்**. திருப்பெண்ணாகடத்தில் வாழ்ந்திருந்த அச்சுத களப்பாளர் அருணந்தி சிவாசாரியார் திருமுறையிற் கயிறு சார்த்திஉணர்த்தியவண்ணம் திருவெண்காடு எனும் திருத்தலத்திற்குச் சென்று அங்கே பிள்ளைப்பேறு வேண்டிச் சிவநோன்பில் நிற்க, அச் சிவத்தவப் பயனாய் அவதரித்தருளியவர் மெய்கண்டார். பெற்றோர் இட்ட பெயர் சுவேதவனப் பெருமாள் என்பது. பரஞ்சோதி முனிவர் இவரது அதிதீவிர பக்குவம் உணர்ந்து அருள்ஞான உரை வழங்கி மெய்கண்ட தேவர் எனும் சிறப்புத் திருப்பெயர் சார்த்தி அருளினார். மெய்கண்ட தேவர் தாம் ஞானாசிரியரிடம் பெற்ற அருள் உபதேச மொழியைப் பன்னிரண்டு நூற்பாக்களால் வெளியிட்டு அருளினார். சிவஞான போத நுண்பொருளை மெய்கண்டாரிடம் கேட்டுத் தெளிந்தோர் நாற்பத்தொன்பது மாணாக்கர் எனக் கூறுவர்.

இவரது காலம் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

சிவஞான சித்தியார் என்னும் நூல் சிவஞானபோதத்தின் வழி நூலாகக் கருதப்படுகிறது. இந்நூல் பரபக்கம், சுபக்கம் எனும் இரு பெரும் பகுதிகளை உடையது. 301 பாடல்களை உடைய பரபக்கம் புறச்சமயங்களின் நிலையை அளவிடுவது; 328 பாடல்களைக் கொண்டுள்ள சுபக்கம் சைவ சித்தாந்தத்தின் அடிப்படை உண்மை களைத் தெற்றென விளக்குவது. உலோகாயதம், சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்தியமிகம், வைபாடிகம், நிகண்டவாதம், ஆசீவகன், மதம், பாட்டாசாரியன் மதம், பிரபாகரன் மதம், சுத்தப் பிரமவாதம், கிரீடாப் பிரம்மவாதம், பாற்கரியவாதம், மாயாவாதம், சாங்கியம், பாஞ்சராத்திரம் எனப்படும் மதங்களின் கருத்துக்கள் பரபக்கத்தில் ஆராயப்படுகின்றன. திருவொற்றியூர் தத்துவப்பிரகாசர் என்பார் பரபக்கத்திற்கு உரை வரைந்துள்ளார்.

சிவஞானபோதத்தில் உள்ள பன்னிரண்டு நூற்பாக்களின் கருத்துக்களைப் பன்னிரண்டு அதிகாரங்களில் விரித்து விளக்கும் பகுதியே சுபக்கம் என்பது.

நிரம்பவழகியர், மறைஞான தேசிகர், சிவாக்கிர யோகிகள், ஞானப்பிரகாசர், சிவஞானமுனிவர், சுப்பிரமணிய தேசிகர் என்னும் சிவஞானப் பெருமக்கள் அறுவரும் சிவஞானசித்தியார்–சுபக்கப்

பகுதிக்கு உரை எழுதியுள்ளனர். அண்மைக் காலத்தே இந்நூற்குத் தோன்றிய உரைகள் இரண்டு.

சிவஞான சித்தியார் எனும் சிறப்புப் பெருநூலை அருளியவர் அருணந்தி சிவாசாரியார். சிவாகமங்கள் அனைத்தையும் கற்றுத் துறைபோகியவர் என்பதால் சகலாகம பண்டிதர் என இவர் அழைக்கப்பட்டார். அச்சுதகளப்பாளரின் அருள்ஞானப் புதல்வ ராகிய மெய்கண்டாரிடம் சிவஞானோபதேசம் பெற்று, அவர் அருளிய **சிவஞானபோதப்** பொருளை விரித்துரைக்கும் வகையில் சிவஞானசித்தியார் எனும் நூலை அருளினார்.

அருணந்தி சிவாசாரியார் அருளிய மற்றொரு நூல் **இருபா இருபது** என்பது. இந்நூல் வெண்பா, ஆசிரியப்பா எனும் இருவகைப் பாக்களால் அந்தாதி முறையில் அமைந்திருப்பது. இருபது பாடல் களைக் கொண்டுள்ள இந்நூல் சைவ சித்தாந்த நுணுக்கங்களை நயமாக விரித்து விளக்கும் பான்மை உடையது. "முதல்வனே குரு" எனும் உண்மையைத் தம் அனுபவத்தில் கடைப்பிடித்து அந்த ஞானாசிரியப் பெருந்தகையைத் துதிக்கும் வாயிலாகப் பல நுணுக்க மான ஐயங்களை எழுப்பி அவற்றிற்கு விடைகாணும் போக்கில் அருணந்தி சிவாசாரியார் இந்நூலை யாத்துள்ளார். பதிப்பொருள் உயிருடன் நீக்கமற நிறைந்திருப்பினும் பாசம் பசுக்களை (உயிர்க் கூட்டத்தை) விட்டு நீங்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? ஆன்மாவுக்குப் பாசம் கூடும் முறையும் நீங்கும் முறையும் எவ்வாறு? சதசத்தாகிய ஆன்மா இருளினின்று நீங்குவது எப்படி? அவத்தை நீங்கும்போது ஆன்மாவுக்குக் கருவி ஏது? ஆன்மா தன்னை அறியும் போது கருவி யாது? ஆன்மாவுக்கு அதீதத்திலும் உணர்த்தும் முறைமை எப்படி? முத்தியைப் பெற்ற ஆன்மாக்களுக்கு மலம் இல்லை என்னும் முறைமை எவ்வாறு? — இவை இந்நூல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் நுணுக்கங்களுள் சில. சீகாழித் துத்துவநாதர் இந்நூலுக்கு உரை வரைந்துள்ளார்.

அருணந்தி சிவாசாரியாரின் காலம் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

சித்தாந்த உண்மைகளை எளிதாகக் கற்று உணர்தற்கு ஏற்ற வகையில் தெளிவுற அமைந்திருப்பது **உண்மை விளக்கம்** எனும் சித்தாந்த நூல். காப்புச் செய்யுள், நூலாசிரியர் பற்றிய வெண்பா உட்பட இந்நூலில் ஐம்பத்தைந்து வெண்பாக்கள் காணப்படு கின்றன. ஆறாறு தத்துவங்கள் யாவை? ஆணவம் ஏது? வினை ஏது? ஆன்மாவின் சொரூபம் யாது? பதியின் சொரூபம் யாது? திருக்கூத்தின் உண்மை என்ன? திருவைந்தெழுத்தின் உண்மை என்ன? எனப் படும் சுத்த வினாக்களுக்குரிய விளக்கமான விடையே இந்நூற் கருத்து. இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உளது. உரையாசிரியர் இன்னார் என அறிய இயலவில்லை.

இந்நூலின் ஆசிரியர் மெய்கண்டாரின் மாணாக்கருள் ஒருவ ராகிய திருவதிகை மனவாசகம் கடந்தார் என்பவர்.

இந்நூலின் காலமும் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டே.

சைவ சித்தாந்த நூல்களுள் **சிவப்பிரகாசம்** முதலாக உள்ள எட்டு நூல்களும் உமாபதி சிவாசாரியாரால் அருளப்பெற்றவை. திருப்பெண்ணாகடத்தில் தோன்றிய மறைஞான சம்பந்தர் அருணந்தி சிவாசாரியாரிடம் ஞானோபதேசம் பெற்றவர். மறை ஞான சம்பந்தரிடம் சித்தாந்த ஞான உபதேசம் பெற்றவரே உமாபதி சிவாசாரியார். இவர் தில்லைவாழ் அந்தணர் மரபினர். சிவஞானப்பேறு ஒன்றையே விரும்பி இருந்த இவரது பக்குவம் நோக்கி மறைஞானசம்பந்தர் ஞானோபதேசம் செய்து சிவஞான போதப் பொருள் உரைக்க, உபதேசத்தை உள்ளத்திருத்திய உமாபதியார் தில்லைக்கு வெளியே வந்து கொற்றவன்குடி எனும் ஊரில் மடம் அமைத்துச் சிவஞான வாழ்க்கை வாழ்ந்தார். பல நூல்களைத் தமிழிலும் வடமொழியிலும் அருளினார். இவரது காலம் கி. பி. பதினான்காம் நூற்றாண்டு.

சிவப்பிரகாசம் என்பது சிவஞானபோதம் எனும் நூலுக்குச் சார்பு நூலாக விளங்குவது. திருக்கைலாய பரம்பரை ஆசிரியர்கள் இன்னார் என்பது, சைவ நூல்களின் இயல்பு, தீக்கைவகை ஆகிய இவற்றைக் கூறுவது சிவப்பிரகாசத்தின் பாயிரப்பகுதி. இந்நூல் பொது, சிறப்பு என்னும் இரண்டு பகுதிகளை உடையதாய் நூறு விருத்தங்களைக் கொண்டுள்ளது. பொது இயலில் அடங்கிய ஐம்பது பாட்டுக்கள் சிவஞான போதத்தின் முதல் இரண்டு சூத்திரக் கருத்துக்களை விளக்கும் முறையில் பதி இலக்கணம், பசு இலக்கணம், பாச இலக்கணம் எனும் மூன்றையும் விரிவாகக் கூறுகின்றன. சிறப்பு இயலில் அடங்கி உள்ள பாடல்கள் சிவஞான போதத்தின் மூன்றாம் சூத்திரம் முதல் பன்னிரண்டாம் சூத்திரம் வரை உள்ள கருத்துக்களை விளக்கும் முறையில் உயிரின் ஐந்தவத்தை இலக்கணம், கேவலம், சகலம், சுத்தம் எனும் மூன்று அவத்தைகளின் தன்மை, முதல்வன் உயிர்க்கு அறிவிக்கும் முறைமை, உயிர்கள் வினைப்பயனை நுகரும் முறைமை, முதல்வன் குருவாய் வரும் பாங்கு, ஞானம் பெறுதற்குரிய ஆன்ம நிலை, ஞானத்தின் பயனான ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம், ஐந்தெழுத்து அருள் நிலை, அணைந்தோர் தன்மை ஆகிய நுண் பொருள்களை எடுத்துரைக்கின்றன.

இந்நூலுக்கு மதுரைச் சிவப்பிரகாசர் என்பார் மிகச் சீரிய முறையில் உரை வரைந்துள்ளார்.

திருவருட்பயன் என்னும் நூல் குறள் வெண்பாக்களால் ஆகியது. இறைவனது இயல்பு கூறும் **பதிமுதுநிலை** என்பது முதல் திருவடிக் கலப்புற்றோரின் நிலையைக் கூறும் **அணைந்தோர் தன்மை** என்பது ஈறாக இந்நூல் பத்து அதிகாரங்களைக் கொண்டுள்ளது. திருக்குறளைப் போன்றே திருவருட்பயனும் திட்பநுட்பம் செறிந்த சிறப்பான நூலாகும். திருமுறைகளிலும், ஆகமங்களிலும்,

சிவஞானபோதம் முதலான சித்தாந்த நூல்களிலும் தோய்ந்து அவற்றின் நுண்பொருளைச் சிந்தித்துச் சிந்தித்துத் தெளிந்த நிலையில் உமாமதிசிவாசாரியாரின் உள்ளத்தே முகிழ்த்த அரிய சித்தாந்த உண்மைகளே இந்நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நூலுக்குச் 'சிந்தனை உரை' எனும் பழைய உரை ஒன்று உளது.

வினாவெண்பா என்னும் நூல் பதின்மூன்று வெண்பாக்களால் ஆயது. தம் ஞானகுருவாகிய மறைஞான சம்பந்தரிடம் சாத்திர உண்மைகளை வினவும் முறையில் இந்நூல் யாக்கப்பட்டுள்ளது. இருபா இருபது என்னும் நூலைப் போன்றே இந்நூலும் சில நுணுக்க மான ஐயப்பாடுகளை எழுப்பி விடைகாண வைக்கின்றது.

திருவாவடுதுறை ஆதீனம் நமச்சிவாயத் தம்பிரான் ஐயப் பாடுகளை விளக்கும் முறையில் நல்லுரை ஒன்று இந்நூலுக்கு வரைந்துள்ளார்.

போற்றிப் பஃறொடை தொண்ணூற்றைந்து கண்ணிகளைக் கொண்டு விளங்கும் அரிய சித்தாந்த நூல். இதனைச் சாத்திர நூலாக மட்டுமல்லாமல் தோத்திர நூலாகவும் ஓதிப் பயன்பெறலாம். இதன்கண் பதினான்கு போற்றிகள் அமைந்துள்ளன. முழுமுதற் பரம்பொருளின் சிறப்பு, முதல்வனே குருவாய் எழுந்தருளி வந்து ஆட்கொள்ளும் அருள்நிலை, சிவபெருமானைப் போற்றாமையால் வரும் நரகத்துன்பம், போற்றும்படி நமன் செய்யும் பாங்கு, தேவ வாழ்க்கையின் நிலையாமை — இவை முதலான கருத்துக்கள் இத்தனிநூலை அணிசெய்கின்றன. 'தாருலாவும் புயத்துச் சம்பந்த நாதன் என்று பேரிலா நாதன் ஒரு பேர் புனைந்து' செய்த அருட் செயல்களை உமாபதி சிவாசாரியார் எடுத்துக் கூறும் தனிநயம் பயின்று பயின்று மகிழத் தக்கது. இந்நூற்கும் பழைய உரை ஒன்று உளது.

கட்டளைக் கலித்துறை ஒன்றும் வெண்பாக்கள் மூன்றுமாக நான்கு திருப்பாட்டுக்களைக் கொண்டு விளங்குவது **கொடிக்கவி** எனும் நூல். தில்லைத் திருவிழாவில் ஏறாதிருந்த ஆனேற்றுக்கொடி ஏறுமாறு செய்தருளிய அருள்வன்மையும் அருள்வண்மையும் உடையது இந்நூல். ஆலய நிகழ்ச்சிகளுக்கும் சித்தாந்தக் கருத்துக் களுக்கும் நெருங்கிய பிணைப்பு உண்டு என்னும் உண்மையை இந்நூல் நன்கு வெளிப்படுத்திக் காட்டுகிறது. சிவமந்திரங்களின் இயல்பை நுட்பமான முறையில் எடுத்து இயம்புவது இந்நூல்.

நெஞ்சுவிடுதூது என்பது ஆசிரியர் தமக்கு ஞானப்பொருள் நல்கிய மறைஞான சம்பந்தரிடம் சென்று தம் நிலை உணர்த்தித் திருக்கொன்றை மாலை வாங்கி வருமாறு தம் நெஞ்சைத் தூது விடுக்கும் பாங்கில் அமைந்திருப்பது. நூற்று இருபத்தொன்பது

கண்ணிகளால் அமைந்த கலிவெண்பாவால் இந்நூல் அமைந்துள்ளது. உலகாயதம் முதலான சமயங்களின் பொருந்தாமை, சித்தாந்த சைவத்தின் தனிச்சிறப்பு, சிவபெருமானின் முழுமுதற்றன்மை, அப்பெருமானுக்குரிய தசாங்கம் எனப்படும் பத்து உறுப்புக்களின் விளக்கம், பெருமானின் அருட்கருணையால் உயிர்கள் எய்தும் இன்பப் பேறுகள், பெருமான் திருவுலாக் கொண்டருளும் செயல், அவன் திருக்கொலு வீற்றிருக்கும் சிறப்பு — இவை முதலான செய்திகளை இந்நூல் உள்ளடக்கி உள்ளது. மறைஞான சம்பந்தரையே சிவபெருமானாகக் கருதித் துதிக்கும் நூலாசிரியரின் மனப்பாங்கு போற்றிப் பஃறொடையில் வெளிப்படுவது போன்றே இந்நூலிலும் வெளிப்படுகின்றது.

உண்மைநெறி விளக்கம் என்பது தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் எனப்படும் பத்துச் செயன் முறைகளையும் ஆறு திருப்பாட்டுக்களால் விளக்கிக் கூறும் சித்தாந்த நூலாகும்.

கொடிக்கவி முதல் இந்நூல் உட்பட மூன்று நூல்களுக்கும் பழைய உரைகள் உண்டு.

சங்கற்ப நிராகரணம் என்னும் நூல் மாயாவாதமும் அகச் சமயங்கள் பலவும் கூறும் கொள்கைகளை எடுத்துக் கூறி அவற்றைச் சித்தாந்த நோக்கம் கொண்டு நிராகரிக்கும் முறையில் வரையப்பட்டுள்ள நூலாகும். இந்நூலில் மறுக்கப்பட்ட சமயங்கள் மாயாவாதம், ஐக்கியவாதம், பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், ஈசுவர அவிகாரவாதம், நிமித்தகாரண பரிணாமவாதம், சைவவாதம் (சுத்தசைவம்) என்பன. சங்கற்பம் — கொள்கை அல்லது கோட்பாடு; நிராகரணம் — மறுத்துரைத்தல். பிறர்கோளும் தன்கோளும் நடுநிலைநின்று ஆய்ந்து சீர்தூக்கித் தருக்க முறைப்படியும் அறிவாராய்ச்சி முறைப்படியும் சித்தாந்தக் கருத்தை நிலைநாட்ட எழுந்த சீரிய முயற்சியின் வெளிப்பாடாகவே இம்மறுப்புரையைக் கருத வேண்டும்.

இந்நூலுக்கு ஞானப்பிரகாச தேசிகர் என்பார் அருளிய பழைய உரை ஒன்று உண்டு.

★

பொருளடக்கம்

	நூற் பெயர்	பக்கம்
1.	திரு உந்தியார்	1— 4
2.	திருக்களிற்றுப்படியார்	5— 16
3.	சிவஞான போதம்	17— 40
4.	சிவஞான சித்தியார் (பரபக்கம்)	41—102
	சிவஞான சித்தியார் (சுபக்கம்)	103—172
5.	இருபா இருபது	173—180
6.	உண்மை விளக்கம்	181—188
7.	சிவப்பிரகாசம்	189—212
8.	திருவருட் பயன்	213—222
9.	வினா வெண்பா	223—224
10.	போற்றிப் பஃறொடை	225—230
11.	கொடிக்கவி	231—232
12.	நெஞ்சுவிடு தூது	233—240
13.	உண்மைநெறி விளக்கம்	241—242
14.	சங்கற்ப நிராகரணம்	243—267

"மூன்று மலம்கெடுத்து மூலமாம் அப்பொருளும்
தோன்ற அருளும்தன் தொண்டர்க்கு இங்கு — ஆன்றமைந்தோர்
கைகண்ட தன்றே கடல்ஞாலத்து எப்பொருட்கும்
மெய்கண்ட தேவன்விரைத் தாள்."

★

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்துஇருபா உண்மை பிரகாசம் — வந்தஅருள்
பண்புவினா போற்றிகொடி பாசம்இலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று."

உ
திருச்சிற்றம்பலம்

1

திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார்
அருளிய

திரு உந்தியார்

1. அகளமாய் யாரும் அறிவு அரிது, அப்பொருள்
சகளமாய் வந்தது என்று உந்தீபற
தானாகத் தந்தது என்று உந்தீபற.

2. பழக்கம் தவிரப் பழகுவது அன்றி
உழப்புவது என்பெணே உந்தீபற
ஒருபொருளாலே என்று உந்தீபற.

3. கண்ட அத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்
பிண்டத்தில் வாரார் என்று உந்தீபற
பிறப்பு இறப்பு இல்லை என்று உந்தீபற.

4. இங்ஙன் இருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுகேன்
அங்ஙன் இருந்தது என்று உந்தீபற
அறியும் அறிவு அது அன்று உந்தீபற.

5. ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்
நாதனும் ஆனான் என்று உந்தீபற
நம்மையே ஆண்டான் என்று உந்தீபற.

6. நம்செயல் அற்று, இந்த நாம் அற்ற பின், நாதன்
தன்செயல் தானே என்று உந்தீபற
தன்னையே தந்தான் என்று உந்தீபற.

7. உள்ளம் உருகில் உடன் ஆவர் அல்லது
தெள்ள அரியர் என்று உந்தீபற
சிற்பரச் செல்வர் என்று உந்தீபற.

8. ஆதாரத் தாலே நிராதாரத்தே சென்று
மீதானத்தே செல்க உந்தீபற
விமலற்கு இடம் அது என்று உந்தீபற.

9. ஆக்கில் அங்கே உண்டாய் அல்லது அங்கு இல்லையாய்ப்
பார்க்கில் பரம் அது என்று உந்தீபற
பாவனைக்கு எய்தாது என்று உந்தீபற.

10. அஞ்சே அஞ்சு ஆக அறிவே அறிவு ஆகத்
துஞ்சாது உணர்ந்து இருந்து உந்தீபற
துய்ய பொருள் ஈது என்று உந்தீபற.

11. தாக்கியே தாக்காது நின்றது ஓர் தற்பரம்
நோக்கில் குழையும் என்று உந்தீபற
நோக்காமல் நோக்க என்று உந்தீபற.

12. மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர் என்று உந்தீபற
தவத்தில் தலைவர் என்று உந்தீபற.

13. ஓட்டு அற்று நின்ற உணர்வு பதி முட்டித்
தேட்டு அற்ற இடம் சிவம் உந்தீபற
தேடும் இடம் அது அன்று உந்தீபற.

14. பற்றை அறுப்பது ஓர் பற்றினைப் பற்றில் அப்
பற்றை அறுப்பர் என்று உந்தீபற
பாவிக்க வாரார் என்று உந்தீபற.

15. கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
உடந்தை உடனே நின்று உந்தீபற
உன்னையே கண்டது என்று உந்தீபற.

16. உழவாது உணர்கின்ற யோகிகள் ஒன்றோடும்
தழுவாமல் நிற்பர் என்று உந்தீபற
தாழ்மணி நாவே போல் உந்தீபற.

17. திருச்சிலம்பு ஓசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக கும்பிடு என்று உந்தீபற
நேர்பட அங்கே நின்று உந்தீபற.

18. மருளும் தெருளும் மறக்கும் அவன்கண்
அருளை மறவாதே உந்தீபற
அதுவே இங்கு உள்ளது என்று உந்தீபற.

19. கருதுவதன் முன் கருத்து அழியப் பாயும்
ஒருமகள் கேள்வன் என்று உந்தீபற
உன்ன அரியன் என்று உந்தீபற.

20. இரவு பகல் இல்லா இன்ப வெளியூடே
விரவி விரவி நின்று உந்தீபற
விரைய விரைய நின்று உந்தீபற.

21. சொல்லும் பொருள்களும் சொல்லாதனவும் அங்கு
அல்லனாய் ஆனான் என்று உந்தீபற
அம்பிகை பாகன் என்று உந்தீபற.

22. காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள்
ஆற்றுவது ஆற்றல் என்று உந்தீபற
அல்லாதது அல்லல் என்று உந்தீபற.

23. கள்ளரோடு இல்லம் உடையார் கலந்திடில்
வெள்ள வெளியாம் என்று உந்தீபற
வீடும் எளிதாம் என்று உந்தீபற.

24. எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக்கொண்டே நின்றார்
விட்டார் உலகம் என்று உந்தீபற
வீடே வீடாகும் என்று உந்தீபற.

25. சித்தமும் தீய கரணமும் சித்திலே
ஒத்ததே ஒத்தது என்று உந்தீபற
ஒவ்வாதது ஒவ்வாதது என்று உந்தீபற.

26. உள்ளும் புறம்பும் நினைப்பு அறின் உன்னுள்ளே
மொள்ளா அமுதாம் என்று உந்தீபற
முளையாது பந்தம் என்று உந்தீபற.

27. அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்கு
அவிழும் இவ் அல்லல் என்று உந்தீபற
அன்றி அவிழாது என்று உந்தீபற.

28. வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர்
பித்து ஏறினார்கள் என்று உந்தீபற
பெறுவது அங்கு என் பெணே உந்தீபற.

29. சொல்லும் இடம் அன்று; சொல்லப் புகும் இடம்
எல்லை சிவனுக்கு என்று உந்தீபற
என்றால் நாம் என்செய்கோம் உந்தீபற.

30. வீட்டில் இருக்கில் என், நாட்டிலே போகில் என்
கூட்டில் வாள் சாத்தி நின்று உந்தீபற
கூடப் படாதது என்று உந்தீபற.

31. சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்குநின்று
ஆவி அறாதே என்று உந்தீபற
அவ்வுரை கேளாதே உந்தீபற.

32. துரியம் கடந்த இத்தொண்டர்க்குச் சாக்கிரம்
துரியமாய் நின்றது என்று உந்தீபற
துறந்தார் அவர்கள் என்று உந்தீபற.

33. பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே
முற்ற வரும் பரிசு உந்தீபற
முளையாது மாயை என்று உந்தீபற.

34. பேரின்பம் ஆன பிரமக் கிழத்தியோடு
ஓரின்பத்து உள்ளான் என்று உந்தீபற
உன்னையே ஆண்டான் என்று உந்தீபற.

35. பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டார் என்று உந்தீபற
காணாதார் காணார் என்று உந்தீபற.

36. நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்
நாலாம் நிலையாம் என்று உந்தீபற
நாதற்கு இடம் அது என்று உந்தீபற.

37. சென்ற நெறியெல்லாம் செந்நெறி ஆம்படி
நின்ற பரிசு அறிந்து உந்தீபற
நீசெயல் செய்யாதே உந்தீபற.

38. பொற்கொழுக் கொண்டு வரகுக்கு உழுவது என்?
அக்கொழு நீ அறிந்து உந்தீபற
அறிந்து அறியா வண்ணம் உந்தீபற.

39. அது இது என்னாது அனைத்து அறிவாகும்
அது இது என்று அறிந்து உந்தீபற
அவிழ்ந்த சடையான் என்று உந்தீபற.

40. அவன் இவன் ஆனது அவனருளால் அல்லது
இவன் அவன் ஆகான் என்று உந்தீபற
என்றும் இவனே என்று உந்தீபற.

41. முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்தது என்று உந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற.

42. அண்டம் முதலாம் அனைத்தையும் உட்கொண்டு
கொண்ட அத்தைக் கொள்ளாதே உந்தீபற
குறைவு அற்ற செல்வம் என்று உந்தீபற.

43. காயத்துள் மெய்ஞ்ஞானக்கள் உண்ணமாட்டாதே
மாயக்கள் உண்டார் என்று உந்தீபற
வறட்டுப் பசுக்கள் என்று உந்தீபற.

44. சிந்தையின் உள்ளும் என் சென்னியினும் சேர
வந்தவர் வாழ்க என்று உந்தீபற
மடவாள் உடனே என்று உந்தீபற.

45. வையம் முழுதும் மலக்கயம் கண்டிடும்
உய்ய வந்தான் உரை உந்தீபற
உண்மை உணர்ந்தார் என்று உந்தீபற.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

2

திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார்

அருளிய

திருக்களிற்றுப் படியார்

1. அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று அறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்து அளிப்பர் — அம்மையப்பர்
எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பர் அவர்.

2. தம்மில் தலைப்பட்டார் பாலே தலைப்பட்டுத்
தம்மில் தலைப்படுதல் தாம் உணரின் — தம்மில்
நிலைப்படுவர் ஓரிருவர் நீக்கி நிலை ஆக்கித்
தலைப்படுவர் தாம் அத் தலை.

3. என்னறிவு சென்றளவில் யான்இன்று அறிந்தபடி
என்னறிவிலார் அறிக என்றொருவன் — சொன்னபடி
சொல்லக்கேள் என்று ஒருவன் சொன்னான் எனக்கு அதனைச்
சொல்லக்கேள் யான் உனக்கு அச்சொல்.

4. அகளமய மாய்நின்ற அம்பலத்து எம் கூத்தன்
சகளமயம் போல் உலகில் தங்கி — நிகளமாம்
ஆணவ மூல மலம்அகல ஆண்டான் காண்
மாணவக என்னுடனாய் வந்து.

5. ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வு எங்கே — பாகத்து
அருள் வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யார் அறிவார் பேசு.

6. சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன் வசன
மாத்திரத்தே வாய்க்குநலம் வந்து உறுமே — ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ
தெள் நீர்மையாய் இதனைச் செப்பு.

7. இன்று பசுவின் மலம் அன்றே இவ்வுலகில்
நின்ற மலமனைத்தும் நீக்கு வதிங்கு — என்றால்
உருவுடையான் அன்றே உருவழியப் பாயும்
உருவருள வல்லான் உரை.

8. கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவரே
அண்டத்தின் அப்புறத்தது என்னாதே — அண்டத்தின்
அப்புறமும் இப்புறமும் ஆரறிவுஞ் சென்றறியும்
எப்புறமும் கண்டவர்கள் இன்று.

9. அன்றுமுதல் ஆரேனும் ஆளாய் உடனாகிச்
சென்றவர்க்கும் இன்னது எனச் சென்றதிலை — இன்று இதனை
எவ்வாறு இருந்ததென்று எவ்வண்ணஞ் சொல்லுகேன்
அவ்வா றிருந்தது அது.

10. ஒன்றுங் குறியே குறியாத லால் அதனுக்கு
ஒன்றுங் குறியொன்று இலாமையினால் — ஒன்றோடு
உவமிக்க லாவதுவும் தானில்லை ஓவாத்
தவமிக்காரே இதற்குச் சான்று.

11. ஆற்றால் அலைகடற்கே பாய்ந்தநீர் அந்நீர்மை
மாற்றிஅவ் வாற்றான் மறித்தாற்போல் — தோற்றிப்
புலன்களெனப் போதம் புறம்பொழியும் நந்தம்
மலங்களற மாற்றுவிக்கும் வந்து.

12. பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனை அன்றுஏவிக் கராம்கொண்ட — பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்.

13. தூங்கினரைத் தூய சயனத்தே விட்டதற்பின்
தாங்களே சட்ட உறங்குவர்கள் — ஆங்கதுபோல்
ஐயன் அருட்கடைக்கண் ஆண்டதன்பின் அப்பொருளாய்ப்
பைய விளையுமெனப் பார்.

14. உள்ள முதலனைத்தும் ஒன்றாய் உருகவரின்
உள்ளம் உருகவந்து உன்னுடனாம் — தெள்ளி
உணருமவர் தாங்கள் உளராக என்றும்
புணரவர நில்லாப் பொருள்.

15. நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நான் அழிய — வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படும்காண்
ஆரேனும் காணா அரன்.

16. மெல்வினையே என்ன வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே என்ன வரும் இரண்டும் — சொல்லில்
சிவதன்மம் ஆம்அவற்றிற் சென்றதிலே செல்வாய்
பவகன்மம் நீங்கும் படி.

17. ஆதியை அர்ச்சித்தற்கு அங்கமும் அங்கங்கே
தீதில் திறம்பலவும் செய்வனவும் — வேதியனே
நல்வினையாம் என்றே நமக்கும் எளி தானவற்றை
மெல்வினையே என்றதுநாம் வேறு.

18. வரங்கள் தரும்செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினால் அன்றுகறி யாக்க — இரங்காதே
கொல்வினையே செய்யும் கொடுவினையே ஆனவற்றை
வல்வினையே என்றதுநாம் மற்று.

19. பாதகம் என்றும் பழி என்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும் — சேதிப்பக்
கண்டுஈசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
தண்டீசர் தஞ்செயலால் தான்.

20. செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை
ஐயஇது அமுது செய்க என்று — பைய இருந்து
ஊட்டி அறுத்தவர்க்கே ஊட்டி அறுத்தவரை
நாட்டியுரை செய்வது என்னோ நாம்.

21. செய்யும் செயலே செயலாகச் சென்றுதமைப்
பையக் கொடுத்தார் பரங்கெட்டார் — ஐயா
உழவும் தனிசும் ஒருமுகமே யானால்
இழவுண்டோ சொல்லாய் இது.

22. ஆதார யோகம் நிராதார யோகம் என
மீதானத்து எய்தும் விதியிரண்டே — ஆதாரத்து
ஆக்கும் பொருளாலே ஆக்கும் பொருளாம் ஒன்று
ஆக்காப் பொருளேயொன் றாம்.

23, ஆக்கி ஒருபொருளை ஆதாரத்து அப்பொருளை
நோக்கி அணுவில் அணுநெகிழப் — பார்க்கில்
இவனாகை தானொழிந்திட்டு ஏகமாம் ஏகத்து
அவனாகை ஆதார மாம்.

24. கொண்டது ஒருபொருளைக் கோடிபடக் கூறு செயிற்
கொண்டவனும் அப்பரிசே கூறுபடும் — கொண்ட
இருபொருளும் அன்றியே இன்னதுஇது என்னாது
ஒருபொருளேயாய் இருக்கும் உற்று.

25. அஞ்செழுத்துமே அம்மை அப்பர்தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை ஆறாகப் பெற்றறிந்தே — அஞ்செழுத்தை
ஓதப்புக்கு உள்ள மதியுங் கெடில் உமைகோன்
கேதமற வந்தளிக்கும் கேள்.

26. ஆக்கப் படாத பொருளாய் அனைத்தினிலும்
தாக்கித்தான் ஒன்றொடும் தாக்காதே — நீக்கியுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய்
நிற்கை நிராதார மாம்.

27. காண்கின்றது ஓர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்றார் காட்சியறக் கண்ணுதலைக் — காண்
கின்றார்
காண்பானுங் காணப் படும்பொருளும் அன்றியே
காண்கையினாற் கண்டனரே காண்.

28. பேசாமை பெற்றுஅதனிற் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான் — பேசாதே
எண்ணொன்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள்பால்
உள்நின்றும் போகான் உளன்.

29. ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற இடஞ்சிவமாம் — நாட்டுற்று
நாடும் பொருளனைத்தும் நானா விதமாகத்
தேடுமிடம் அன்று சிவம்.

30. உணராதே யாதும் உறங்காதே உன்னிப்
புணராதே நீ பொதுவில் நிற்கில் — உணர்வரிய
காலங்கள் செல்லாத காதலுடன் இருத்தி
காலங்கள் மூன்றினையும் கண்டு.

31. பற்றினுட் பற்றைத் துடைப்பதொருபற்றறிந்து
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற — பற்றதனைப்
பற்றுவிடில் அந்நிலையே தானே பரமாகும்
அற்றமிது சொன்னேன் அறி.

32. அறிவறிவாய் நிற்கில் அறிவுபலவாம் என்று
அறிவின் அறிவு அவிழ்த்துக்கொண்டுஅவ் — அறிவினராய்
வாழ்ந்திருப்பர் நீத்தோர்கள் மானுடரின் மாணவகா
தாழ்ந்தமணி நாவேபோல் தான்.

33. ஓசையெலாம் அற்றால் ஒலிக்கும் திருச்சிலம்பின்
ஓசை வழியேசென்று ஒத்து ஒடுங்கின் — ஓசையினின்
அந்தத் தானத்தான் அரிவையுடன் அம்பலத்தே
வந்துஒத்தான் அத்தான் மகிழ்ந்து.

34. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம் — சார்பு
கெடவொழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
பட வருவது இல்லைவினைப் பற்று.

35. அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே
நின்றபடியே நிற்க முன்னிற்கும் — சென்று
கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு.

36. உண்டெனில் உண்டாகும் இல்லாமை இல்லையெனில்
உண்டாகும் ஆனமையின் ஓரிரண்டாம் — உண்டில்லை
என்னும் இவைதவிர்ந்த இன்பத்தை எய்தும் வகை
உன்னில்அவன் உன்னுடனே யாம்.

37. தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல உடம்பாம் முதல்நான்கும் — மேலைச்
சிவமாம் பரிசினையும் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாம் பரிசறுப்பார் பார்.

38. எத்தனையோ தத்துவங்கள் எவ்வெவர் கோட்பாடுடைய
அத்தனையும் சென்றங்கு அளவாதே — சித்தமெனும்
தூதுதனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனிற்
பாதிதனைக் கும்பிடலாம் பார்.

39. சாம்பொழுதும் ஏதும் சலமில்லை செத்தாற்போல்
ஆம்பொழுதிலே அடைய ஆசையறில் — சோம்புதற்குச்
சொல்லும் துணையாகும் சொல்லாத தூய்நெறிக்கண்
செல்லும் துணையாகும் சென்று.

40. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது — வேண்டினது
வேண்டாமை வேண்ட வரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டும்அவன் பால்.

41. அரண உணர்வுதனில் அவ்வுணர்வை மாற்றில்
கரணமும் காலும்கை கூடும் — புரணமது
கூடாமையும் கூடும் கூடுதலுங் கூட்டினுக்கு
வாடாமையும் கூடும் வந்து.

42. இன்றிங்கு அசேதனமாம் இவ்வினைகள் ஓரிரண்டும்
சென்று தொடருமவன் சென்றிடத்தே — என்றுந்தான்
தீதுறுவன் ஆனால் சிவாபதிதான் கைவிடுமோ
மாதொருகூறு அல்லனோ மற்று.

43. அனாதி சிவனுடைமை யால்எவையும் ஆங்கே
அனாதி எனப்பெற்ற அணுவை — அனாதியே
ஆர்த்த துயரகல அம்பிகையோடு எவ்விடத்தும்
காத்தல் அவன்கடனே காண்.

44. தம்மில் சிவலிங்கம் கண்டுஅதனைத் தாம் வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாம்ஆட்டித் — தம்மையொரு
பூவாக்கிப் பூஅழியா மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை யன்றே உடல்.

45. தன்னைப் பெறுவதன்மேல் பேறுஇல்லை, தான்என்றும்
தன்னைத்தான் பெற்றவன்தான் ஆரென்னில்—தன்னாலே
எல்லாந்தன்னுள் கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே
எல்லாமாய் நிற்கும் இவன்.

46. துன்பமாம் எல்லாம் பரவசனாய்த் தான்துவளில்
இன்பமாம் தன்வசனாய்த் தானிருக்கில் — என்பதனால்
நின்வசனா யேயிருக்கில் நின்னுடனாம் நேரிழையாள்
தன்வசனா யேயிருப்பன் தான்.

47. செத்தாரே கெட்டார் கரணங்கள் சேர்ந்ததனோடு
ஒத்தாரே யோகபரர் ஆனார் — எத்தாலும்
ஆராத அக்கரணத்து ஆர்ப்புண்டு இங்கு அல்லாதார்
பேராமற் செல்வர் அதன் பின்.

48. கண்ணும் கருத்தும் கடந்ததொரு பேறேயும்
கண்ணும் கருத்தும் களிகூர — நண்ணி
வடம்அடக்கி நிற்கும் வடவித்தே போல
உடனடக்கி நிற்பர்காண் உற்று.

49. வானகமும் மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை
ஊனகத்தே உன்னுமது என் என்றனையேல் — ஏனகத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலாம்
ஆதனமே அன்றோ அதற்கு.

50. கல்லில் கமரில் கதிர்வாளில் சாணையினில்
வல்லுப் பலகையினில் வாதனையைச் — சொல்லும்
அகமார்க்கத் தால்அவர்கள் மாற்றினர்காண் ஐயா
சகமார்க்கத் தால்அன்றே தான்.

51. உள்ளும் புறம்பும் நினைப்பொழியில் உன்னிடையே
வள்ளல் எழுந்தருளும் மாதினொடும் — தெள்ளி
அறிந்தொழிவாய் அன்றியே அன்புடையை ஆயின்
செறிந்தொழிவாய் ஏதேனுஞ் செய்.

52. கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை என்றமையால்
கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக் — கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யார்அறிதல் அல்லதுமற்று
யாமறியும் அன்பன்று அது.

53. அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க — அவிழ்ந்தசடை
வேந்தனார்க்கு இன்னமுதம் ஆயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்.

54. சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் — சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு.

55. அன்பேயென் அன்பேயென்று அன்பால் அழுது அரற்றி
அன்பே அன்பாக அறிவழியும் — அன்பன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்.

56. எல்லார் அறிவுகளின் தாற்பரியம் என்னறிவு
செல்லும் இடத்தளவும் சென்றறிந்தேன் — வல்லபடி
வாதனையை மாற்றும் வகையிதுவே மற்றவற்றுள்
ஏதமறக் கண்ட விதம்.

57. வித்தும் அதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்
வித்தும் அதன் அங்குரமும் மெய்யுணரில் — வித்து அதனிற்
காணாமையால் அதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணாமை யால்அற்றார் பேறு.

58. ஒன்றன்று இரண்டன்று உளதன்று இலதன்று
நன்றன்று தீதன்று நானன்று — நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவும் அன்று
தலையன்று அடியன்று தான்.

59. செய்யாச் செயலை அவன் செய்யாமை கண்டு தனைச்
செய்யாச் செயலிற் செலுத்தினால் — எய்யாதே
மாணவக! அப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கும்
ஆணவமும் அற்றது அறி.

60. ஏதேனும் காலமுமாம் ஏதேனும் தேசமுமாம்
ஏதேனும் திக்கு ஆசனமுமாம் — ஏதேனும்
செய்தால் ஒருவலுமாம் செய்யாச் செயலதனைச்
செய்யாமை செய்யும் பொழுது.

61. செய்தற்கரிய செயல்பலவுஞ் செய்துசிலர்
எய்தற் கரியதனை எய்தினார் — ஐயோ நாம்
செய்யாமை செய்து செயல்அறுக்கல் ஆயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு.

62. இப்பொருள்கள் யாதேனும் ஏதெனினும் ஒன்றுசெய்தல்
எப்பொருளும் செய்யா தொழிந்திருத்தல் — மெய்ப்பொருளைக்
கண்டிருத்தல் செய்யாதே கண்ட மனிதரெலாம்
உண்டிருப்ப தென்னோ உரை.

63. வீட்டிலே சென்று வினையொழித்து நின்றிடிலென்
நாட்டிலே நல்வினைகள் செய்திடிலென் — கூட்டில்வாள்
சாத்தியே நின்றிலையேல் தக்கனார் வேள்விசெய்த
மாத்திரமேயாம் கண்டாய் வந்து.

64. சிவன்முதலே அன்றி முதலில்லை என்றும்
சிவனுடையது என்னறிவ தென்றும் — சிவனவனது
என்செயல தாகின்றது என்றும் இவையிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான்.

65. இன்றுஇச் சமயத்தின் அல்லதுமற்று ஏழையுடன்
ஒன்று சொலி மன்றத்து நின்றவர்ஆர் — இன்றிங்கே
அங்கம் உயிர்பெறவே பாடும் அடியவரார்
எங்குமிலை கண்டாய் இது.

66. ஆதனமும் ஆதனியுமாய் நிறைந்து நின்றவனைச்
சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச் — சேதனனைச்
சேதனனிலே செலுத்திச் சிற்பரத்த ராய் இருப்பர்
ஏதமறக் கண்டவர்கள் இன்று.

67. விரிந்தும் குவிந்தும் விழுங்குவர்கள் மீண்டும்
தெரிந்தும் தெரியாதே நிற்பர் — தெரிந்தும்
தெரியாது நிற்கின்ற சேயிழைபால் என்றும்
பிரியாது நின்றவனைப் பெற்று.

68. தாமடங்க இந்தத் தலமடங்கும் தாபதர்கள்
தாமுணரில் இந்தத் தலமுணரும் — தாமுனியில்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து.

69. துரியம் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாது நிற்கின்ற பெம்மான் — துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யும் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க்கு அவன்.

70. ஓடம் சிவிகை உலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல் — ஏடெதிர் வெப்பு
என்புக்கு உயிர்கொடுத்தல் ஈங்கிவை தாம் ஓங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

71. கொல்கரியின் நீற்றறையின் நஞ்சின் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாய்க் கடல்நீந்தல் — நல்ல
மருவார் மறைக் காட்டில் வாசல்திறப் பித்தல்
திருவாமூராளி செயல்.

72. மோகம் அறுத்திடின் நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் — தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்றொண்டன் தொண்டுதனை
ஏதாகச் சொல்வேன் யான்.

73. பாய்பரியோன் தந்த பரமானந்தப் பயனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து — மாயக்
கருவாதை யாம்அறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாதவூர் ஆளும் தேன்.

74. அம்மையிலும் இம்மையிலும் அச்சந் தவிர்த்தடியார்
எம்மையுமாய் எங்கும் இயங்குதலான் — மெய்ம்மைச்
சிவயோகமே யோகம் அல்லாத யோகம்
அவயோகம் என்றே அறி.

75. மன்னன் அருள் எவ்வண்ணம் மானுடர்பால் மாணவக!
அன்ன வகையே அரன் அருளும் — என்னில்
அடியவரே எல்லாரும் ஆங்கவர்தாம் ஒப்பில்
அடியவரே எல்லாம் அறி.

76. உடம்புடைய யோகிகள் தாம் உற்றசிற் றின்பம்
அடங்கத்தம் பேரின்பத்து ஆக்கில் — தொடங்கி
முளைப்பதும் ஒன்றில்லை முடிவதும் ஒன்றில்லை
இளைப்பதும் ஒன்றில்லை இவர்.

77. பேரின்ப மான பிரமக் கிழத்தியுடன்
ஓரின்பத்து உள்ளானை உள்ளபடி — பேரின்பம்
கண்டவரே கண்டார் கடலுயிர்த்த இன்னமுதம்
உண்டவரே உண்டார் சுவை.

78. நங்கையினால் நாமனைத்தும் செய்தாற் போல் நாடனைத்தும்
நங்கையினாற் செய்தளிக்கும் நாயகனும் — நங்கையினும்
நம்பியாய்த் தான்நடுவே நாட்டப் பெறுமிதுகாண்
எம்பெருமா னார்தம் இயல்பு.

79. பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்றாற்போல்
அந்நிறம் அண்ணலும் அம்பிகையும் — செந்நிறத்தள்
எந்நிறத்த ளாயிருப்பள் எங்கள் சிவபதியும்
அந்நிறத்த னாயிருப்பன் ஆங்கு.

80. தாரத்தோடு ஒன்றாவர் தாரத்தோர் கூறாவர்
தாரத்தோடு எங்கும் தலைநிற்பர் — தாரத்தின்
நாதாந்தத்தே இருப்பர் நாற்றானத்தே இருப்பர்
வேதாந்தத்தே இருப்பர் வேறு.

81. ஒன்றுரைத்தது ஒன்றுரையாச் சாத்திரங்கள் ஒன்றாக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவால் — இன்றுரைக்க
என்னால் இயன்றிடுமோ என்போல்வார் ஏதேனும்
சொன்னால்தான் ஏறுமோ சொல்.

82. யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும்
மாதேயும் பாகன் இலச்சினையே — ஆதலினால்
பேதமே செய்வாய் அபேதமே செய்திடுவாய்
பேதாபே தஞ்செய்வாய் பின்.

83. நின்றபடி நின்றவர்கட்கு அன்றி நிறம்தெரியா
மன்றினுள் நின்றாடல் மகிழ்ந்தானும் — சென்றுடனே
எண்ணுறும் ஐம்பூதம் முதல் எட்டுருவாய் நின்றானும்
பெண்ணுற நின்றாடும் பிரான்.

84. சிவமே சிவமாக யான் நினைந்தாற் போலச்
சிவமாகியே இருத்தல் அன்றிச் — சிவமென்று
உணர்வாரும் அங்கே உணர்வழியச் சென்று
புணர்வாரும் உண்டோ புவி.

85. அதுஇது என்றும் அவன்நானே என்றும்
அதுநீயே ஆகின்றாய் என்றும் — அதுவானேன்
என்றும் தமையுணர்ந்தார் எல்லாம் இரண்டாக
ஒன்றாகச் சொல்லுவரோ உற்று.

86. ஈறாகி அங்கே முதலொன்றாய் ஈங்குஇரண்டாய்
மாறாத எண்வகையாய் மற்றிவற்றின் — வேறாய்
உடனாய் இருக்கும் உருவுடைமை என்றும்
கடனாய் இருக்கின்றான் காண்.

87. உன்னுதரத்தே கிடந்த கீடம் உறுவது எல்லாம்
உன்னுடையது என்னாநீ உற்றனையோ — மன்னுயிர்கள்
அவ்வகையே காண்இங்கு அழிவதுவும் ஆவதுவும்
செவ்வகையே நின்றசிவன் பால்.

88. அவனே அவனி முதலாகி நின்றானும்
அவனே அறிவாய் நின்றானும் — அவனேகாண்
ஆணாகிப் பெண்ணாய் அலியாகி நின்றானும்
காணாமை நின்றானும் கண்டு.

89. இன்றுதான் நீயென்னைக் கண்டிருந்துங் கண்டாயோ
அன்றித்தான் நானுன்னைக் கண்டேனோ — என்றால்
அருமாயை ஈன்றவள்தன் பங்கனையார் காண்பார்
பெருமாயைச் சூழல் பிழைத்து.

90. கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்துநின்றும்
கடலளக்க வாராதாற் போலப் — படியில்
அருத்தி செய்த அன்பரைவந்து ஆண்டதுவும் எல்லாம்
கருத்துக்குச் சேயனாய்க் காண்.

91. சிவன்எனவே தேறினன்யான் என்றமையால் இன்றும்
சிவன் அவனி வந்தபடி செப்பில் — அவனிதனில்
உப்பெனவே கூர்மை உருச்செய்யக் கண்டமையால்
அப்படியே கண்டாய் அவன்.

92. அவன்இவனாய் நின்றது அவனருளால் அல்லது
எவன்அவனாய் நிற்கின்றது ஏழாய் — அவனிதனில்
தோன்றும்மரப் புல்லூரி தொல்உலகில் அம்மரமாய்
ஈன்றிடுமோ சொல்லாய் இது.

93. முத்தி முதல்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்தது அருளென்னும் — கத்தியினால்
மோகக் கொடிஅறுக்க முத்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடியெழும் காண் இன்று.

94. அகளத்தில் ஆனந்தத் தானந்தி யாயே
சகளத்தில் தையலுடன் தோன்றி — நிகளத்தைப்
போக்குவதும் செய்தான்தன் பொன்னடிஎன் புன்தலை
மேல்
ஆக்குவதும் செய்தான் அவன்.

95. குற்றம்அறுத்து என்னைஆட்கொண்டருளித்
தொண்டனேன்
உற்ற தியானத்து உடன் உறைவன் — முற்றவரின்
மாட்சியுமாய் நிற்பன்யான் மற்றொன்றைக் கண்டிடின்அக்
காட்சியுமாய் நிற்பன் கலந்து.

96. ஆளுடையான் என்தரமும் ஆளுடையானே அறியும்
தாளுடையான் தொண்டர் தலைக்காவல் — நாளும்
திருவிசலூர் ஆளுஞ் சிவயோகி இன்றென்
வருவிசையை மாற்றினான் வந்து.

97. தூலத்து அடுத்த பளிங்கின் துளக்கம்எனத்
தூலத்தே நின்று துலங்காமல் — காலத்தால்
தாளைத்தந்து என்பிறவித்தாளை அற விழித்தார்க்கு
ஆளன்றி என்மாறு அதற்கு.

98. இக்கணமே முத்தியினை எய்திடினும் யான்நினைந்த
அக்கணமே ஆனந்தம் தந்திடினும் — நற்கணத்தார்
நாயகர்க்கும் நாயகிக்கும் நந்திக்கும் யான்அடிமை
ஆயிருத்தல் அன்றியிலேன் யான்.

99. என்னை உடையவன்வந்து என்னுடனாய் என்னளவில்
என்னையும்தன் ஆளாகக் கொள்ளுதலால் — என்னை
அறியப்பெற்றேன் அறிந்த அன்பருக்கே ஆளாய்ச்
செறியப்பெற்றேன் குழுவில் சென்று.

100. சிந்தையிலும் என்தன் சிரத்தினிலும் சேரும் வண்ணம்
வந்தவனை மண்ணிடைநாம் வாராமல் — தந்தவனை
மாதினுடன் எத்திறமும் வாழ்ந்திருக்க என்பதலால்
ஏதுசொலி வாழ்த்துவேன் யான்.

[கீழ்வரும் இரண்டு பாக்களும் பிற்காலச்
சான்றோர் வாக்கு]

1. ஆதாரம் ஆகி அருளொடு நிற்கின்ற
சூதான இன்பச் சுகவடிவை — ஓதாமல்
உள்ளவர்கள் கூடி உணர்வுஒழிய நிற்பதுஅலால்
தெள்ள வாராதே சிவம்.

2. பொருளும் மனையும் அறமறந்து போகம்மறந்து புலன்மறந்து
கருவிகரணம் அவைமறந்து காலம்மறந்து கலைமறந்து
தருமம் மறந்து தவம்மறந்து தம்மைமறந்து தற்பரத்தோடு
உருகி உருகி ஒருநீர்மையாயே விட்டார் உய்யவந்தார்.

திருஉந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் ஒத்த பாட்டெண்கள்

உந்தியார்	களிற்றுப்படியார்	உந்தியார்	களிற்றுப்படியார்
1	4-5	23	42-43
2	6-7	24	44-45
3	8	25	46-50
4	9-10	26	51-52
5	11	27	53-56
6	12-13	28	57
7	14-21	29	58-62
8	22	30	63-64
9	23-24	31	65-68
10	25	32	69-75
11	26	33	76
12	27-28	34	77
13	29	35	78-79
14	30	36	80-81
15	31	37	82-83
16	32	38	84
17	33	39	85-91
18	34	40	92
19	35	41	93-94
20	36-37	42	95-96
21	38-40	43	97-99
22	41	44	100

உ

திருச்சிற்றம்பலம்

3

திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவர் அருளிய

சிவஞானபோதம்

சிறப்புப்பாயிரம்

நேரிசை ஆசிரியப்பா

மலர்தலை உலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் இருள்தீர்ந்து
அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வுஅற நந்தி முனிகணத்து அளித்த
உயர்சிவ ஞான போதம் உரைத்தோன்,
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண்டு அகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே.[1]

மங்கல வாழ்த்து

கல்லால் நிழன்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

அவையடக்கம்

தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை எமைஇகழார் — தம்மை
உணரார் உணரார் உடங்குஇயைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன்.

1. இதனை இயற்றியவர் பெயர் பிரதிகளில் காணப்படவில்லை.

1. பொது அதிகாரம்

1. பிரமாண இயல்

முதல் சூத்திரம்

அவன்அவள் அதுவெனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், சங்கார காரணனாய் உள்ள முதலையே முதலாக உடைத்து இவ்வுலகம் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

உரை வகை : இதன் பொழிப்பு உரைத்துக் கொள்க.

1. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து என்றது.

ஏது : தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்.

உதாரணம் :

பூதாதி ஈறும் முதலும் துணையாக,
பேதாய், திதிஆகும் பெற்றிமையின் — ஓதாரோ
ஒன்று ஒன்றின் தோன்றி உளதாய் இறக்கண்டும்
அன்றுஎன்றும் உண்டுஎன்ன ஆய்ந்து. *1*

2. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, ஒடுங்கின சங்காரத்தின்அல்லது உற்பத்தி இல்லை என்றது.

ஏது : இல்லதற்குத் தோற்றம் இன்மையின், உள்ளதற்குச் செய்வோர் இன்றிச் செய்வினை இன்மையின்.

உதாரணம்:

இலயித்த தன்னில்இல யித்ததாம் மலத்தால்
இலயித்த வாறு உளதா வேண்டும் — இலயித்தது
அத்திதியில் என்னின் அழியாது அவையழிவது
அத்திதியும் ஆதியுமாம் அங்கு. 2

வித்துண்டாம் மூலம் முளைத்தவா தாரகமாம்
அத்தன்தாள் நிற்றல் அவர்வினையால் — வித்தகமாம்
வேட்டுவன்ஆம் அப்புழுப்போல் வேண்டுருவைத்
தான்கொடுத்துக்
கூட்டானே மண்போல் குளிர்ந்து. 3

நோக்காது நோக்கி நொடித்துஅன்றே காலத்தில்
தாக்காது நின்றுஉளத்திற் கண்டுஇறைவன் — ஆக்காதே
கண்ட நனவுஉணர்விற் கண்ட கனவுஉணரக்
கண்டவனின் இற்றுஇன்றாம் கட்டு. 4

3. மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, சங்காரமே முதல்என்றது.

ஏது : சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வுஇன்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரம்இன்றி நிற்றலான்.

உதாரணம் :

ஒன்றுஅலா ஒன்றால் உளதுஆகி நின்றவாறு
ஒன்றுஅலா ஒன்றில்அவை ஈறாதல் — ஒன்றலா
ஈறே முதல்அதனின் ஈறுஅலா ஒன்று பல
வாறே தொழும்புஆகும் அங்கு. 5

இரண்டாம் சூத்திரம்

அவையே தானே ஆய், இரு வினையிற்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், புனர்உற்பவம் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

4. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்தானே யாய் நிற்கும் என்றது.

ஏது : அத்துவிதம்என்ற சொல்லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவதுஉண்மையின் அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு.

உதாரணம் :

கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டுஉள்ளம்
இட்டதுஒரு பேர்அழைக்க என்என்றாங்கு — ஒட்டி
அவன்உளம்ஆ கில்லான் உளம்அவன்ஆ மாட்டாது
அவன்உளமாய் அல்லனுமாம் அங்கு. 6

ஒன்றுஎன்றது ஒன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றுஎன்ற நீபாசத் தோடுஉளைகாண் — ஒன்றுஇன்றால்
அக்கரங்கள் இன்றாம் அகர உயிர்இன்றேல்
இக்கிரமத்து என்னும் இருக்கு. 7

பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும்போல் எங்குமாம் — அண்ணல்தாள்
அத்துவிதம் ஆதல் அருமறைகள் ஒன்றுஎன்னாது
அத்துவிதம் என்றுஅறையும் ஆங்கு. 8

அரக்கொடு சேர்த்தி அணைத்தஅக் கற்போல்
உருக்கி உடங்குஇயைந்து நின்று — பிரிப்புஇன்றித்
தானே உலகாம் தமியேன் உளம்புகுதல்
யானே உலகுஎன்பன் இன்று. 9

5. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வரும்என்றது.

ஏது : ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவல் இட்டாங்கு அவை அவனது ஆக்கினை ஆகலான்.

உதாரணம் :

உள்ளதே தோற்ற உயிர்அணையும் அவ்வுடலின்
உள்ளதாம் முற்செய்வினை உள்அடைவே — வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யேபோல்
செய்வன், செயல்அணையா சென்று. 10

அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாம் சென்றுஅங்கு
அவ்வினையைக் காந்த பசாசம்போல் — அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தான் அறிந்து அணைப்பார் ஆங்கு. 11

நெல்லிற்கு உமியும் நிகழ்செம்பி னில்களிம்பும்
சொல்லில் புதிதன்று தொன்மையே — வல்லி
மலகன்மம் அன்றுஉளவாம் வள்ளலால் பொன்வாள்
அலர்சோகம் செய்கமலத்து ஆம். 12

6. மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்துவரும் என்றது.

ஏது : தோற்றமும் ஈறும் உள்ளதற்கு அல்லது உளதாதல் இன்மை யான்.

உதாரணம் :

கண்ட நனவைக் கனவுஉணர்வில் தான்மறந்து
விண்படர்ந்துஅத்தூடு வினையினால் — கண்செவிகெட்டு
உள்ளதே தோற்ற உளம்அணுவாய்ச் சென்றுமனம்
தள்ள விழும்கருவில் தான். 13

அரவுதன் தோல்உரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போய்வரும்அப் பண்பும் — பரவில்
குடாகாய ஆகாயக் கூத்தாட்டாம் என்பது
அடாதுஉள்ளம் போமாறு அது. 14

7. நான்காம் அதிகரணம்

மேற்கோள் : இனி, நீக்கமின்றி நிற்குமன்றே என்றது.

ஏது : அவன் ஏக அநேகம் இரண்டும்இன்றிச் சருவவியாபியாய் நிற்றலான்.

உதாரணம் :

எங்குமுளன் என்றஅளவை ஒன்றுஅன்று இரண்டென்னில்
எங்கும் உளன்அன்று எவற்றுளவனும் — அங்கண்
அவைஅவன் அன்றுஇல்லை பொன்னொளிபோல் ஈசன்
அவையுடைமை ஆள்ஆம்நாம் அங்கு. 15

மூன்றாம் சூத்திரம்

உளதுஇலது என்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படின்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், ஆன்மப் பிரகாசம் உணர்த்து தல் நுதலிற்று.

8. முதல்அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : ஈண்டு, *இலது என்றலின் ஆன்மா உளது என்றது.

பொழிப்புரை : எவற்றினையும் அன்றுஅன்று எனவிட்டு, ஆன்மா இலது என்று நிற்பது உளதாகலின் அதுவே அவ் ஆன்மாவாம் என்றது.

உதாரணம் :

அன்றுஅன்று எனநின்று அனைத்தும்விட்டு அஞ்செழுத்தாய்
நின்றஒன்று உளதுஅதுவே நீஅனைத்தும் — நின்றுஇன்று
தர்ப்பணம்போல் காட்டலால் சார்மாயை நீயல்லை
தற்பரமும் அல்லை தனி. 16

9. இரண்டாம் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : இனி, எனது உடல் என்றலின் ஆன்மா உளது என்றது.

பொழிப்புரை : என்பதி என்மனை என்றாற்போல என்கை என் கால்என நிற்பது உளதாகலின் அதுவே அவ் ஆன்மாவாம் என்றது.

உதாரணம் :

எனதுஎன்ற மாட்டின் எனதுஅலாது என்னாது
உனதலாது உன்கைகால் யாக்கை — எனதென்றும்
என்னறிவது என்றும் உரைத்துநீ நிற்றிகாண்
உன்னில்அவை வேறாம் உணர். 17

10. மூன்றாம் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : இனி, ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது என்றது.

பொழிப்புரை : ஐம்புலனாகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்று அறிந்தது ஒன்று அறியாமையின் இவ் ஐந்தினாலும் ஐம்பயனும் அறிவது உளதாகலின், அதுவே அவ் ஆன்மாவாம் என்றது.

---

*"ஈண்டு மேற்கோளொன்றாயினும் எழுவகை மதங்களை வேறு வேறு மறுக்கும் ஏதுக்கள் ஏழாகலான், ஆன்மா உளதென்னும் மேற்கோள் அவற்றொடு தனித்தனிக்கூட்டியுரைக்கப்பட்டு ஏழ்அதிகரணமாயிற்று இச்சூத்திரம் என்றுணர்க. இச்சூத்திரத்திற் கூறிய ஏதுவே ஏது, மேற்கோளும் அதுவே யாகலின், ஏனைச் சூத்திரங்களுட்போல வேறே ஏதுக்கூற வேண்டாமையின் இவை ஏதுவாமாறும் இவற்றான் மேற்கோளைச் சாதிக்குமாறும் விளங்க உணர்த்தி வலியுறுத்துதல் மாத்திரையே இவ்வதிகரணங்களுள் கூறப்படுவதென்க" — என்பது சிவஞான பாடியம்.

உதாரணம் :

ஒன்றுஅறிந்தது ஒன்றுஅறியா தாகி உடல்மன்னி
அன்றும் புலனாய் அவ்அஞ்செழுத்தை — ஒன்றுஅறிதல்
உள்ளதே ஆகில் அதுநீ தனித்தனிகண்டு
உள்ளல்அவை ஒன்றல்லை ஓர். 18

11. நான்காம் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : இனி, ஒடுக்கம் அறிதலின் ஆன்மாஉளது என்றது.

பொழிப்புரை : நனவின்கண் கனவு கண்டாம் என்றும் கண்டிலம் என்றும் நிற்பதுஉளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உதாரணம் :

அவ்உடலின் நின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாம்கிடப்பச்
செவ்விதின் அவ்வுடலிற் சென்றுஅடங்கி — அவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டுஅதனை
மாறல், உடல் நீஅல்லை மற்று. 19

12. ஐந்தாம் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : இனிக் கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளது என்றது.

பொழிப்புரை : ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ் சீவனம் பிரகிருதிக்கு இன்மையின், ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பஞ் சீவியா நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உதாரணம் :

கண்டறியும் இவ்வுடலே காட்டு ஒடுங்கக் காணாதே
உண்டிவினை இன்றி உயிர்த்தலால் — கண்டறியும்
உள்ளம்வேறு உண்டுஆய் ஒடுங்காது உடல்நண்ணில்
உள்ளதாம் உண்டிவினை ஊன். 20

13. ஆறாம் அதிகரணம்

மற்கோளும் ஏதுவும் : இனி, உணர்த்தஉணர்தலின் ஆன்மா உளது என்றது.

பொழிப்புரை : அவன் அறிந்தாங்கு அறிவன் என்று அறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான் மாவாம் என்றது.

உதாரணம் :

அறிந்தும் அறிவதேஆயும் அறியாது
அறிந்ததையும் விட்டுஅங்கு அடங்கி — அறிந்தது
எது? அறிவும் அன்றுஆகும் மெய்கண்டான் ஒன்றின்
அதுஅதுதான் என்னும் அகம். 21

14. ஏழாம் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : இனி, மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளதுஎன்றது.

வேறும் ஓர் ஏது : அவைதாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்.

உதாரணம் :

கலைஆதி மண்அந்தம் காணில் அவை மாயை,
நிலையாவாம், தீபமே போல — அலையாமல்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடில் அதுதனுவாம்
தானத்தின் வேறாகும் தான். 22

2. இலக்கண இயல்

நான்காம் சூத்திரம்

அந்தக் கரணம் அவற்றின்ஒன்று அன்றுஅவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது
அமைச்சுஅரசு ஏய்ப்பநின்று அஞ்சு அவத்தைத்தே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், இதுவும் அது.

15. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாய் உள்ள மனோ புத்தி அகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது.

ஏது : அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம் :

மனம்ஆதி யால்உணர்தல் மன்னு புலன்கள்
மனம்ஆதி மன்புலனின் அல்லன் — மனமேல்
உதித்து ஒன்றை உள்ளம் உணர்தல் அதனில்
உதிக்கும் கடல்திரையை ஒத்து. 23

சிந்தித்துஆய்ச் சித்தம் தெளியாதாய் ஆங்காரம்
புந்தியாய் ஆய்ந்து மனமாகிப் — பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துஉள்ளம் இவ்வேறாம்
அவ்வேறாம் போதுபோல் ஆங்கு. 24

அகாரம் உகாரம் அகங்காரம் புத்தி
மகாரம் மனம்சித்தம் விந்து — பகாதுஇவற்றை
நாதம் உளவடிவாம் நாடில் பிரணவமாம்
போதம் கடற்றிரையே போன்று. 25

எண்நிலவு ஓங்காரத்து ஈசர் சதாசிவமாம்
நண்ணிய விந்துவொடு நாதத்து, — கண்ணில்
பகர்அயன்மா லோடு பரமன்அதிதெய்வம்
அகரஉக ரம்மகரத் தாம். 26

16. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்வான்மாச் சகச மலத்தினால் உணர்வு இன்று என்றது.

ஏது : அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலான்.

உதாரணம் :

மாயா தனுவிளக்கா மற்றுஉள்ளம் காணாதேல்
ஆயாதாம் ஒன்றை அதுவதுவாய் — வீயாத
வன்னிதனைத் தன்னுள் மறைத்துஒன்றாம் காட்டம்போல்
தன்னைமலம் அன்றணைதல் தான். 27

17. மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்வான்மா, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமாயுள்ள பஞ்சஅவத்திதனாய் நிற்கும் என்றது.

ஏது : அதுதான் மல சொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலான்.

உதாரணம் :

ஒன்றுஅணையா மூலத்து உயிர்அணையும் நாபியினில்
சென்றணையும் சித்தம் இதயத்து — மன்றஎய்
ஐயைந்தாம் நல்நுதலில் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டுஅகன்று வேறு. 28

இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்
இலாடத்தே ஐந்தவத்தை எய்தும் — இலாடத்தே
அவ்வவ இந்திரியத்து அத்துறைகள் கண்டுஅதுவே
அவ்வவற்றின் நீங்கல்அது ஆங்கு. 29

ஐந்தாம் சூத்திரம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்துஅறிந்து அறியா ஆங்குஅவை போலத்
தாம்தம் உணர்வின் தமியருள்
காந்தம் கண்ட பசாசத்து அவையே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், இவ்வான்மாக்களிடத்துத் தமது முதல் உபகாரம் உணர்த்துதல் நுதலிற்று.

18. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, ஐஉணர்வுகள் ஆன்மாவால் உணரும் என்றது.

ஏது : அவற்றினான் ஆன்மா ஒற்றித்துக் காணின்அல்லது அவை ஒன்றையும் விடயியா ஆகலான்.

உதாரணம் :

ஐம்பொறியை ஆண்டுஅங்கு அரசாய் உளம்நிற்ப
ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம் — ஐம்பொறியில்
காணாதேல் காணாது காணும்உளம் காணாதேல்
காணாகண் கேளா செவி. 30

19. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இதுவும் தமது முதலாலே உணரும் என்றது.

ஏது : இவ்ஆன்மாத் தன்னாலே உணரும் இந்திரியங்களைப் போலத் தானும் தன்னை *உணராது நிற்றலான்.

உதாரணம் :

மன்னுசிவன் சந்நிதியில் மற்றுஉலகம் சேட்டித்தது
என்னும் மறையின் இயல்மறந்தாய் — சொன்னசிவன்
கண்ணா உளம்வினையால் கண்டுஅறிந்து நிற்கும்காண்
எண்ணான் சிவன்அசத்தை இன்று. 31

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை ஆகாத மீன்போல — மெய்யவனில்
கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனைக்
கண்டுஉடனாய் மன்னுதலைக் காண். 32

---

*தன்னை உணராது என்பதற்குத் தன்னையும் தன், முதல்வனையும் உணராது என்பது பொருள் (தன் ஐ = தன் முதல்வன்).

அருளுண்டாம் ஈசற்கு அதுசத்தி அன்றே
அருளும் அவன்அன்றி இல்லை — அருளின்று
அவன்அன்றே இல்லை அருட்கண்ணார் கண்ணுக்கு
இரவிபோல் நிற்கும்அரன் ஏய்ந்து. 33

ஆறாம் சூத்திரம்

உணர்உரு அசத்து எனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத் தாம் என
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : சத்தும் அசத்தும் வரைசெய்து உணர்த்துதல் நுதலிற்று.

20. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு. அறிவினால் அறியப்பட்ட சுட்டு அசத்து என்றது.

ஏது : அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம் :

அசத்து அறியாய் கேள்நீ அறிவு அறிந்த எல்லாம்
அசத்தாகும் மெய்கண்டான் ஆயின் — அசத்துஅலாய்!
நீரில் எழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்
ஓரின் அவை இன்று ஆம் ஆறு ஒப்பு. 34

21. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்விரண்டு தன்மையும் இன்றி வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவம் என்று உணரற்பாற்று.

ஏது : பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவது இன்மையானும் அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசம் இன்மையானும்.

உதாரணம் :

எண்ணிய சத்தன்று அசத்தன்று ஆம் என்றால் என்
கண்ணி உளது என்றல், மெய்கண்டான் — எண்ணி
அறிய இரண்டு ஆம் அசத்து ஆதல் சத்தாம்
அறிவு அறியா மெய்சிவன்தாள் ஆம். 35

உணர்ப அசத்தாதல் ஒன்று உணராது ஒன்றை
உணருநீ தான்உணராய் ஆயின் — உணரும் உனில்
தான்இரண்டாம் மெய்கண்டான் தன்னால் உணர்தலால்
தான்இரண்டாய்க் காணான் தமி. 36

பாவகமேல் தான்அசத்தாம், பாவனா அதீதம் எனில்
பாவகமாம் அன்றென்னில் பாழ்அதுவாம் — பாவகத்தைப்
பாவித்தல் தான்என்னில் பாவகமாம் தன்னருளால்
பாவிப் பதுபரம் இல் பாழ். 37

அறிய இரண்டுஅல்லன், ஆங்குஅறிவு தன்னால்
அறியப் படான், அறிவின் உள்ளான் — அறிவுக்குக்
காட்டுஆகி நின்றானைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டாது அறிவுஅறிந்து கண்டு. 38

அதுவென்னும் ஒன்றுஅன்று அதுவன்றி வேறே
அதுவென்று அறி, அறிவும் உண்டே — அதுவென்று
அறிய இரண்டல்லன் ஆங்குஅறிவுள் நிற்றல்
அறியும்அறி வேசிவமும் ஆம். 39

2. உண்மை அதிகாரம்

3. சாதன இயல்

ஏழாம் சூத்திரம்

யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்
சத்தே யறியாது அசத்துஇலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ வெனின், மேலதற்கோர் புறன்நடை உணர்த்துதல் நுதலிற்று.

22. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது என்றது.

ஏது : மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம் :

அன்னியம் இலாமை அரற்குஒன்று உணர்வு இன்றாம்
அன்னியமிலான்அசத்தைக் காண்குவனேல்—அன்னியமாக்
காணான் அவன்முன், கதிர்முன் இருள்போல்
மாணா அசத்துஇன்மை மற்று. 40

23. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, அசத்தினுக்கு உணர்வு இன்று என்றது.

ஏது : அதுதான் நிரூபிக்கில் இன்றாகலான்.

உதாரணம் :

பேய்த்தேர்நீர் என்றுவரும் பேதைக்கு மற்றுஅணைந்த
பேய்த்தேர் அசத்தாகும் பெற்றிமையின் — வாய்த்துஅதனைக்
கண்டுணர்வார் இல்வழியின் காணும் அசத்துஇன்மை
கண்டுணர்வார் இல்லதுஎனக் காண். 41

24. மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இருதிறன் அறிவு உளது இரண்டலா ஆன்மா என்றது.

பொழிப்புரை : இவ்விரண்டினையும் அறிவதாய் உபதேசியாய் நின்ற அவ்வறிவு இரண்டன்பாலும் உளதாயுள்ள அதுவே அவ் ஆன்மாவாம் என்றது.

உதாரணம் :

அருஉருவம் தான்அறிதல் ஆய்இழைஆய் ஆன்மா
அருஉருவம் அன்று ஆகும் உண்மை — அருஉருவாய்த்
தோன்றிஉடன் நில்லாது தோன்றாது நில்லாது
தோன்றல் மலர்மணம்போல் தொக்கு. 42

மயக்கமது உற்றும் மருந்தின் தெளிந்தும்
பெயர்த்து உணர்நீ சத்துஆகாய் பேசில் — அசத்தும்அலை
நீஅறிந்து செய்வினைகள் நீஅன்றி வேறுஅசத்துத்
தான்அறிந்து துய்யாமை தான். 43

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையாது அசத்தாதல்
அஞ்ஞானம் உள்ளம் அணைதல்காண் — மெய்ஞ்ஞானம்
தானே உளஅன்றே தண கடல்நீர் உப்புப்போல்
தானே உளம்உளவாய்த் தான். 44

எட்டாம் சூத்திரம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே

என்பது சூத்திரம்.

---

*"ஈண்டுச் சத்தெதிர் நில்லாத அசத்தும் சத்தும் தம்முள் ஒன்றான் ஒன்றறியப் படாமையான் ஆன்மாவாலும் அறியப் படாதவழி அவை பயப்பாடின்றிச் சூனியமாய் முடியுமாகலான், இரண்டலா ஆன்மா இருதிறன் அறிவுளதேயாம்; தம்முள் ஒன்றான் அனுபவிக்கப்படாத ஞாயிற்றையும் விடயத்தையும் அனுபவிக்கும் கண் போலுமென அனுமானங் கூறிக் காண்க" — என்பது சிவஞான பாடியம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், ஞானத்தினை உணரும் முறைமையினை உணர்த்துதல் நுதலிற்று.

25. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முன்செய் தவத்தால் ஞானம் நிகழும் என்றது.

ஏது : மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறி யாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா ஆகலான்.

உதாரணம் :

தவம்செய்தார் என்றும் தவலோகம் சார்ந்து
பவஞ்செய்து பற்றுஅறுப்பார் ஆகத் — தவஞ்செய்த
நற்சார்பில் வந்துஉதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றார்சூழ் சொல்லுமாம் கண்டு. 45

பசித்துஉண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்
இசைத்து வருவினையில் இன்பம் — இசைத்த
இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தான்
மருவுவன்ஆம் ஞானத்தை வந்து. 46

26. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்ஆன்மாக்களுக்குத் தமதுமுதல் தானே குருவுமாய் உணர்த்தும் என்றது.

ஏது : அவன் அன்னியம் இன்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

உதாரணம் :

மெய்ஞ்ஞானம் தானே விளையும்விஞ் ஞானகலர்க்கு
அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய் — மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்தும் அன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்தும் தான்குருவாய் முன். 47

அறிவிக்க அன்றி அறியா உளங்கள்
செறியுமாம் முன்பின் குறைகள் — நெறியில்
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடுஎன்
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு. 48

இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உளவாமால் நீர்நிழல்போல் — இல்லா
அருவாகி நின்றானை ஆர்அறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று. 49

27. மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்ஆன்மாக்கள் ஐஉணர்வுகளால் மயங்கித் தம்மை உணரா என்றது.

ஏது : அவைதாம் பளிங்கில்இட்ட வன்னம்போல் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

உதாரணம் :

பன்நிறம் காட்டும் படிகம்போல் இந்திரியம்
தன்னிறமே காட்டும் தகைநினைந்து — பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய் கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு. 50

28. நான்காம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்ஆன்மாத் தன்னை இந்திரியத்தின் வேறா வான் காணவே தமது முதல் சீபாதத்தை அணையும் என்றது.

ஏது : ஊசல் கயிறுஅற்றால் தாய்தரையேயாம் துணையால்.

உதாரணம் :

சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறைசெய் புலன்உணர்வில் தீர்ந்து — சிறைவிட்டு
அலைகடலில் சென்றுஅடங்கும் ஆறுபோல் மீளாது
உலைவுஇல்அரன் பாதத்தை உற்று. 51

எவ்வுருவும் தான்என்னில் எய்துவார் இல்லைதாள்
இவ்வுருவின் வேறேல் இறைஅல்லன் — எவ்வுருவும்
கண்போல் அவயவங்கள் காணாஅக் கண்இல்லார்
கண்பேறே காண்அக் கழல். 52

ஐம்பொறியின் அல்லைஎனும் அந்த தர! சிவனை
ஐம்பொறியை விட்டுஅங்கு அணைசகலன் — ஐம்பொறியின்
நீங்கான்நீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம்வரின்
நீங்கானை நீங்கும் நினைந்து. 53

ஒன்பதாம் சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்துஎனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதிவிதி எண்ணும்அஞ் செழுத்தே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், ஆன்மசுத்தி பண்ணுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

29. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, அம்முதலை ஞானக் கண்ணினாலே காண்க என்றது.

ஏது : அவன் வாக்கு மன அதீத கோசரமாய் நிற்றலான்.

உதாரணம் :

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி எனையறியேன் தேர்ந்தவகை — நாடிஅரன்
தன்னாலே தன்னையும் கண்டு தமைக்காணார்
என்னாம் எனஅறிவார் இன்று. 54

காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைக் கண்காணா — காட்டிய
உள்ளம் தனைக்காணா உள்ளத்தின் கண்ணாய
கள்வன்தான் உள்ளத்திற் காண். 55

30. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : *இனி, அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்து என்றுகாண, உளதாய் நிற்பது ஞானசொரூபம் என்று உணரற் பாற்று.

ஏது : இனி அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபம் என்றது வேற்றியல்பாகிய வன்னபேதங்களை வேற்றியல்புஎன்று கண்டு கழிப்பின் உள தாய் நிற்பது படிக சொரூபமாம் துணையான்.

உதாரணம் :

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வன் — அற்புதம்போல்
ஆனா அறிவாய் அளவுஇறந்து தோன்றானோ
வானே முதல்களையின் வந்து. 56

சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்தென்னச்
சட்ட இனியுளது சத்தேகாண் — சுட்டி
உணர்ந்தநீ சத்துஅல்லை உண்மையைத் தைவம்
புணர்ந்ததனால் பொய்விட்டுப் போம். 57

---

*இதனுள் ஏது சொற்பல்காமைப் பொருட்டு ஏகதேச உருவகமாக வைத்து உடம்பொடு புணர்த்து ஓதப்பட்டது — (சிவஞானபாடியம்)

கண்டதை அன்று அன்று எனவிட்டுக் கண்டுஅசத்தாய்
அண்டனை ஆன்மாவில் ஆய்ந்துணரப்—பண்டுஅணைந்த
ஊனத்தைத் தான்விடுமாறு உத்தமனின் ஒண்கருட
சானத்தின் தீர்விடம்போல் தான். 58

31. மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை (திருவைந்தெழுத்தை) விதிப்படி உச்சரிக்க என்றது.

ஏது : இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கு எனக் கொள்க.

உதாரணம் :

அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டுஅரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித்து இதயத்தில் — அஞ்செழுத்தால்
குண்டலியிற் செய்துஓமம் கோதண்டம் சானிக்கில்
அண்டனாம் சேடனாம் அங்கு. 59

இந்துவில் பானுவில் இராகுவைக் கண்டுஆங்குச்
சிந்தையில் காணில் சிவன்கண்ணாம் — உந்தவே
காட்டாக்கின் தோன்றிக் கனல்சேர் இரும்பென்ன
ஆள்தான்ஆம் ஓதுஅஞ்சு எழுத்து. 60

மண்முதல் நாளம், மலர் வித்தை, கலாரூபம்
எண்ணிய ஈசர் சதாசிவமும் — நண்ணில்
கலைஉருவாம் நாதமாம் சத்திஅதன் கண்ணாம்
நிலைஅதில்ஆம் அச்சிவன்தாள், நேர். 61

4. பயன் இயல்

பத்தாம் சூத்திரம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ வெனின், பாசக்ஷயம் பண்ணுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

32. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டுப் பரமேசுரன் இவ்ஆன்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்து ஏகனாகி நிற்க என்றது.

ஏது : அவ்வாறு நிற்கவே யான் எனது என்னும் செருக்குஅற்று அவனது சீபாதத்தை அணையும் ஆகலான்.

உதாரணம் :

நான்அவன்என்று எண்ணினர்க்கும் நாடும்உளம் உண்டாதல்
தான்என ஒன்று இன்றியே தானதுவாய் — நான்எனவொன்று
இல்லென்று தானே எனும்அவரைத் தன்னடிவைத்து
இல்லென்று தான்ஆம் இறை. 62

33. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இறைபணி வழுவாது நிற்க என்றது.

ஏது : அவன்அருளால் அல்லது ஒன்றையும் செய்யான்ஆகவே அஞ்ஞானகன்மம் பிரவேசியா ஆகலான்.

உதாரணம் :

நாம்அல்ல இந்திரியம் நம்வழியின் அல்ல, வழி
நாம்அல்ல நாமும் அரனுடைமை — ஆம் என்னில்
எத்தனுவில் நின்றும் இறைபணியார்க்கு இல்லைவினை
முற்செய்வினையும் தருவான் முன். 63

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்தும் சலம்இலனாய்ச் — சார்ந்தடியார்
தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு. 64

இங்குளி வாங்கும் கலம்போல ஞானிபால்
முன்செய் வினைமாயை மூண்டிடினும் — பின்செய்வினை
மாயையுடன் நில்லாது மற்றவன்தான் மெய்ப்பொருளே
ஆயஅதனால் உணரும் அச்சு. 65

நண்அனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்அமர மாச்செலுத்தும் பாகரினும் — எண்ணி
அரனடி ஓர்பவர் ஐம்புலனில் சென்றும்
அவர்திறல் நீங்கார் அதற்கு. 66

சதசத்தாம் மெய்கண்டான் சத்தருளிற் காணின்
இதமித்தல் பாசத்தில் இன்றிக் — கதமிக்கு
எரிகதிரின் முன்னிருள்போல், ஏலா அசத்தின்
அருகுஅணையார், சத்துஅணைவார் ஆங்கு. 67

பதினொன்றாம் சூத்திரம்

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ எனின், பரமேசுரனது சீபாதங்களை அணையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

34. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றது.

ஏது : இவ்வான்மாக்கள் அவனையின்றியமைந்து ஒன்றையும் விடயியா ஆகலான்.

உதாரணம் :

ஐந்தையும் ஒக்க உணராது அவற்றுணர்வது
ஐந்தும்போல் நின்றுணரும் ஆகலான் — ஐந்தினையும்
ஒன்றொன்றாப் பார்த்துணர்வது உள்ளமே எவ்வுலகும்
ஒன்றொன்றாப் பார்க்கும் உணர்ந்து. 68

ஏகமாய் நின்றே இணையடிகள் ஒன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினான் — ஏகமாய்
உள்ளத்தின் கண்ணானான் உள்குவார் உள்கிற்றை
உள்ளத்தாற் காணானோ உற்று. 69

35. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனிப், பத்தியினான் மறவாது ஏத்த அவனது சீபாதத்தை அணையும்என்றது.

ஏது : அவன் அன்னியமின்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்து நிற்றலான்.

உதாரணம் :

அருக்கன் நேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்கு
இருட்கண்ணே பாசத்தார்க்கு ஈசன் — அருட்கண்ணால்
பாசத்தை நீக்கும் பகல்அலர்த்தும் தாமரைபோல்
நேசத்தின் தன்னுணர்ந்தார் நேர். 70

மன்னும் இருளை மதிதுரந்த வாறு அன்பின்
மன்னும் அரனே மலம் துரந்து — தன்னின்
வலித்துஇரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரிஅலன் தான். 71

நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்றா
நசித்திலதேல் ஒன்றாவது இல்லை — நசித்துமலம்
அப்பு அணைந்த உப்பின் உளம் அணைந்து சேடமாம்
கப்புஇன்றாம் ஈசன் கழல். 72

பொன்வாள்முன் கொண்மூவிற் புக்கு ஒடுங்கிப் போய் அகலத்
தன்வாளே எங்குமாம் தன்மைபோல் — முன்வாள்
மலத்தின் மறைந்து உள்ளம் மற்றுஉலகை உண்ணும்
மலத்து இரித்துச் செல்லும் வரத்து. 73

பன்னிரண்டாம் சூத்திரம்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே

என்பது சூத்திரம்.

வார்த்திகப் பொழிப்பு

கருத்துரை : என் நுதலிற்றோ வெனின், அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

36. முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, ஆணவம் மாயை கான்மியம் என்னும் மலங் களைக் களைக என்றது.

ஏது : அவைதாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்தும் ஆகலான்.

உதாரணம் :

புண்ணிய பாவம் பொருந்தும் இக் கான்மியமும்
மண்முதல் மாயைகாண் மாயையும் — கண்ணிய
அஞ்ஞானம் காட்டும்இவ் ஆணவமும் இம் மூன்றும்
மெய்ஞ்ஞானிக் காகா விடு. 74

37. இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனிச், சிவபத்தர்களோடு இணங்குக என்றது.

ஏது : அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவார்ஆகலான்.

உதாரணம் :

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தம்திறத்துச் சேர்வை — அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரன் உணர்வி னால் உணரும்
மெய்த்தவரை மேவா வினை. 75

38. மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் : இனிப், பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரன் எனக் கண்டு வழிபடுக என்றது.

ஏது : அவன்மற்று இவ்விடங்களில் பிரகாசமாய் நின்றே அல்லாத விடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம் :

தன்உணர வேண்டித் தனதுஉருவைத் தான்கொடுத்துத்
தன்உணரத் தன்னுள் இருத்தலால் — தன்உணரும்
நேசத்தர் தம்பால் நிகழும் ததிநெய்போல்
பாசத்தார்க்கு இன்றாம் பதி. 76

கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தில்அங்கிவேறு
உண்டல்போல் நின்றுஅங்கு உளதாமால் — கண்டஉருத்
தான்அதுவாய் அன்றுஆனான் தான்அதுவாய்த் தோன்றானோ
தான்அதுவாய்க் காணும் தவர்க்கு. 77

39. நான்காம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்விடங்களில் வழிபடுக என்றது.

ஏது : நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவையாகாவாறு அப்புருடனும் ஆகலான்.

உதாரணம் :

அதுஇது என்றது அதுஅல்லான் கண்டார்க்கு
அதுஇது என்றதையும் அல்லான் — பொதுஅதனில்
அத்துவிதம் ஆதல் அகண்டமும் தைவமே
அத்துவிதி அன்பின் தொழு. 78

வினையால் அசத்து விளைதலால் ஞானம்
வினைதீரின் அன்றி விளையா — வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்
ஆனத்தால் அன்பின் தொழு. 79

தன்னை அறிவித்துத் தான்தானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது — முன்னவனே
தானேதா னாச்செய்தும் தைவமென்றும் தைவமே
மானே தொழுகை வலி. 80

நூற்கு அதிகாரிகள்

சிவமென்னும் அந்ததர சிந்தைநேர் நோக்கப்
பவம்இன்றாம் கண்வா சகத்தின் — சிவம் உண்டாம்
ஒன்றும் இரண்டும் மலத்தார்க்குஇங்கு ஒண்குருவால்
இன்றுஇந்நூல் மும்மை மலர்க்கு.

சிறப்புப்பாயிரம்

எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழஇயல்பாய்
நந்தி உரைத்து-அருளும் ஞானநூல் — சிந்தைசெய்து
தான்உரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாம்உணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று.

சூர்ணிக்கொத்து

அதிகரண எண் முதல் சூத்திரம்

1. சகம் பிறப்பு இருப்பு இறப்பாகிய முத்தொழிலையுடையது.
2. அது அரனாலே உடையது.
3. மற்றஇருவரும் முத்தொழிற்படுவர்கள்.

இரண்டாம் சூத்திரம்

1. அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்.
2. உயிர்களுக்குக் கன்மப்பலனை அரனே கொடுப்பன்.
3. உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்.
4. அரன் சருவ வியாபகன்.

மூன்றாம் சூத்திரம்

1. இல்லைஎன்கிற அறிவுடனே சொல்லுகையினாலே அறி உயிர் உண்டு.
2. எனது உடல் என்று பொருட்பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே, உடற்கு வேறாய் உயிர் உண்டு.
3. ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கும் வேறாய் உயிர் உண்டு.
4. கனவுடலை விட்டு நனவுடலிலே வருகையினாலே அக் கனவுடற்கு வேறாய் உயிர் உண்டு.
5. நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண்ணவும் சரீரத் துக்குப் புசிப்பும் தொழிலும் இல்லாதபடியினாலே, பிராண வாயுவுக்கு வேறாய் உயிர் உண்டு.
6. மறந்து மறந்து நினைக்கிறபடியினாலே மறவாமல் இருக்கிற அரனுக்கு வேறாய் உயிர் உண்டு.
7. எல்லாத் தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கை யினாலே, அந்தந்தத் தத்துவங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

நான்காம் சூத்திரம்

1. அந்தக்கரணங்களுக்கு உயிர் உட்கூடினால்அன்றித் தொழில் இல்லாதபடியினாலே, அந்தக்கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.
2. மலமறைப்பால் உயிருக்கு அறிவு இல்லை.
3. உயிர் மூன்று அவத்தைப்படும்.

ஐந்தாம் சூத்திரம்

1. உயிராலே தத்துவங்கள்எல்லாம் தொழில் செய்யும்.
2. அரனாலே உயிர்களெல்லாம் அறியும்.

ஆறாம் சூத்திரம்

1. உயிர்அறிவினாலே அறியப்பட்டதெல்லாம் அழியும்.
2. அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

ஏழாம் சூத்திரம்

1. அரன் பாசத்தை அனுபவியான்.
2. பாசம் அரனை அனுபவியாது.
3. உயிர் அவ்அரனை அடையும்; அனுபவிக்கும்.

எட்டாம் சூத்திரம்

1. உயிருக்கு நல்லறிவு தவத்தினாலேயே வரும்.
2. உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே.
3. உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினாலே தன்னையும் அறியமாட்டாது.
4. உயிர் பஞ்சேந்திரியங்களிலே பற்றற்றால் தன்னையும் அறியும்.

ஒன்பதாம் சூத்திரம்

1. உயிர் அரன் ஞானத்தினாலேயே அரனைக் காணும்.
2. உயிர் பாசத்திலே பற்றற்றால், அரன் வெளிப்படுவன்.
3. பஞ்சாட்சரசெபம் பண்ணினால் வாசனாமலம் போம்.

பத்தாம் சூத்திரம்

1. அரனுடன் ஒன்றாகி நில்.
2. உன்தொழிலெல்லாம் அரன் பணி என்று கொள்.

பதினொன்றாம் சூத்திரம்

1. ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அனுபவிப்பன்.
2. அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கியமாய்ப் போவன்.

பன்னிரண்டாம் சூத்திரம்

1. மும்மலங்களையும் களைக.
2. சிவஞானிகளுடனே கூடுக.
3. சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவனெனவே தேறி வழிபடுக.
4. வழிபடாமையை ஒழிக.

ஆகச் சூத்திரம் 12க்குச் சூர்ணிக்கொத்து 39

முற்றுப்பெற்றது

உ

திருச்சிற்றம்பலம்

4

திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியார்

அருளிய

சிவஞான சித்தியார்
பரபக்கம்

கணபதி வணக்கம்

1. ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தரும்ஒருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டுஅன் பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகுஓட்டும் அயன் திருமால் செல்வமும்ஒன்
றோஎன்னச் செய்யும் தேவே.

பாயிரம்

சிவ வணக்கம்

2. ஆதிநடு அந்தம் இலா அளவில் சோதி
அருள்ஞான மூர்த்தியாய் அகிலம் ஈன்ற
மாதினையும் ஒருபாகத்து அடக்கி வானோர்
மகுடசூ ளாமணியாய் வையம் போற்றப்
பாதிமதி அணிபவளச் சடைகள் தாழப்
படர்ஒளிஅம் பலத்துஆடும் பரனார் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம்.

சத்தி வணக்கம்

3. ஈசன்அருள் இச்சை அறிவு இயற்றல் இன்பம்
இலயமொடு போகம்அதி காரம் ஆகித்
தேசுஅருவம் அருவுருவம் உருவ மாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வ மாகிப்
பேசரிய உயிரையெலாம் பெற்று நோக்கிப்
பெரும்போகம் அவையளித்துப் பிறப்பினையும் ஒழித்திட்டு
ஆசுஅகலும் அடியர்உளத்து அப்பனுடன் இருக்கும்
அன்னைஅருட் பாதமலர் சென்னி வைப்பாம்.

விநாயகர் வணக்கம்

4. இயம்புநூல் இருந்தமிழின் செய்யுள் ஆற்றால்
இடையூறு தீர்ந்துஇனிது முடிய வேண்டித்
தயங்குபேர் ஒளியாகி எங்கும் நின்ற
தலைவனார் மலைமாது தன்னோடு ஆடிப்
பயந்தஐங் கரம்நாற்றோள் முக்கண்இரு பாதப்
பரியது ஒரு நீள்கோட்டுப் பெரிய பண்டிக்
கயம்தன்அடிக் கமலங்கள் நயந்து போற்றிக்
கருத்திலுற இருத்திமிகக் காதல் செய்வாம்.

குமாரக்கடவுள் வணக்கம்

5. அருமறை ஆகமம்அங்கம் அருங்கலைநூல் தெரிந்த
அகத்தியனுக்கு ஒத்துஉரைக்கும் அருட்குருவாம் குருளை
திருமறைமா முனிவர்முனி தேவர்கள்தம் தேவன்
சிவன்அருள்சேர் திருமதலை தவநிலையோர் தெய்வம்
பொரும்அறையார் கழல்வீரர் வீரன் கையில்
பூநீர்கொண்டு ஓவாது போற்றும்அடி யார்கள்
கருமறையா வகைஅருளிக் கதிவழங்கும் கந்தன்
கழல்இணைகள் எம்சிரத்தில் கருத்தில் வைப்பாம்.

குரு வணக்கம்

6. பண்டைமறை வண்டுஅரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்துஒழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டஇரு தயகமல முகைகள் எல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

அவையடக்கம்

7. மால்அயன்மா மறைஅறியா ஆதி மார்க்கம்
வையகத்து ஆகமம்வேதம் மற்றும் உள்ள
நூலையெலாம் உணர்ந்துஇறைவன் கழலே நோக்கும்
நோன்மைஅருந் தவர்முன்யான் நுவலு மாறு
வேலையுலா வும்திரைகள் வீசி யேறி
வேறுஏழும் ஒன்றாகி நின்ற போது
சாலவும்ஆன் குளப்படியில் தங்கி நின்ற
சலமதுதான் நேர்என்னும் தன்மைத் தாலோ.

8. நீடுபுகழ் உலகுதனில் மைந்தர் மாதர்
நேயமொடு தாம்பயந்த புதல்வர் வாயில்
கூடுமொழி மழலையொடு குழறி ஒன்றும்
குறிப்புஅரிது ஆயிடினும்மிகக் குலவிப் போற்றி
மாடுநமக்கு இதுஎன்று கொண்டு வாழ்வர்
அதுபோல மன்னுதமிழ்ப் புலமை யோர்என்
பாடுகவிக் குற்றங்கள் பாரார் இந்நூல்
பாராட்டா நிற்பர்அருட் பரிசி னாலே.

நூல்சிறப்பு

9. சுத்தவடிவு இயல்பாக உடைய சோதி
சொல்லிய ஆகமங்கள்எலாம் சூழப் போயும்
ஒத்துமுடி யும்கூட ஓரி டத்தே
ஒருபதிக்குப் பலநெறிகள் உளவா னாற்போல்
பித்தர்குணம் அதுபோல ஒருகால் உண்டாய்ப்
பின்னொருகால் அறிவின்றிப் பேதை யோராய்க்
கத்திடும்ஆன் மாக்கள்உரைக் கட்டில் பட்டோர்
கன்கவரை குறித்துப்போய்க் கடற்கே வீழ்வார்.

நூற்குஅதிகாரியும் - நூல்வழியும் - நூல்பெயரும்

10. போதமிகுத் தோர், தொகுத்த பேதை மைக்கே
பொருந்தினோர் இவர்க்குஅன்றி, கதிப்பால் செல்ல
ஏதுநெறி எனும்அவர்கட்கு அறிய முன்னாள்
இறைவன்அருள் நந்திதனக்கு இயம்ப நந்தி
கோதில்அருட் சனற்குமா ரர்க்குக் கூறக்
குவலயத்தின் அவ்வழிஎம் குருநாதன் கொண்டு
தீதுஅகல எமக்குஅளித்த ஞான நூலைத்
தேர்ந்துஉரைப்பன் சிவஞான சித்தி என்றே.

நூல்கருத்து

11. இறைவனையும் இறைவனால் இயம்பும் நூலும்
ஈண்டுஅளவும் பொருள்இயல்பும் வேண்டும் செய்தி
முறைமைகளும் பெத்தமொடு முத்தி யெல்லாம்
மூதுலகில் எமக்குஇயன்ற முயற்சி யாலே

சிறையுலவும் புனல்நிலவித் தோன்றும் பேய்த்தேர்ச்
செய்கைபோல் உண்டாய பொய்கொள் மார்க்கத்
துறைபலவும் கடாவிடையால் சொல்லிப் போக்கித்
துகள்தீர இந்நூலில் சொல்ல கிற்பாம்.

நூல்

1. உலகாயதன் மதம்

12. இந்திர புரோகிதன் இயம்பும்ஒரு நூலின்
தந்திரம் எனாதுஅறி வினோடு அருள்இலாமல்
சந்தணை புயத்துமண மாலைகள் தயங்க
உந்திஉல கத்தில் உல காயதன் உரைப்பான்.

13. ஈண்டுஅளவை காட்சி, மனம் ஆதிஇரு மூன்றாய்
வேண்டும், அனு மானம்முதல் ஆனபல வேண்டா
பூண்டபொருள் பூதம்அவை புகழ்கடின சீதம்
தீண்டுஅரிய வெம்மைசல னத்தினொடு சேர்வே.

14. சாற்றுபெயர் ஆனவை தலம்புனல் கனல்பின்
காற்றும்எனலாம் இவை கலந்தகுணம் ஓதின்
நாற்றம்இர தம்உருவம் நற்பரிசம் ஆகும்
போற்றும்இவை நித்தஇயல் பாம் இவை புணர்ப்பே.

15. ஒத்துஉறு புணர்ச்சியின் உருக்கள்பல ஆகும்
வைத்துறு கடாதிபல மண்ணின்வரு மாபோல்
புத்திகுண நற்பொறி புலன்கள் இவை எல்லாம்
இத்தில்வரும் நீரினில் எழும்குமிழி ஒத்தே.

16. பூதம்அதின் ஒன்றுபிரி யப்புலன் இறக்கும்
நீதியினில் நிற்பன நடப்பனவும் முன்போல்
ஓதும்வகை யாகிஉறு காரியம் உலந்தால்
ஆதியவை யாம் இதனை அறிவதுஅறி வாமே.

வேறு

17. இப்படி அன்றிக் கன்மம்
உயிர்இறை வேறுண்டு என்று
செப்பிடும் அவர்க்கு மண்ணோர்
செய்திடும் குற்றம் என்னோ!
ஒப்பிலா மலடி பெற்ற
மகன்ஒரு முயற்கொம்பு ஏறித்
தப்பில் ஆகாயப் பூவைப்
பறித்தமை சாற்றினாரே.

18. செய்திடும் கன்மம் எல்லாம்
செய்தவர் தம்மைப் பற்றி
எய்திடும் என்னில் இங்கே
மாய்ந்திடும் ஏய்வது எங்ஙன்?
மெய்தரு தூலம் கெட்டுச்
சூக்கமாய் மேவும் என்னில்
ஐயனே தீபம் போனால்
அதன்ஒளி ஆவது உண்டோ.

19. மாய்ந்துபின் வயலில் இட்ட
வைதழை பலிக்கு மாபோல்
ஏய்ந்திடும் கன்மம் என்னில்
இட்டஇடத்து இசையும் மேனி
ஒய்ந்துவந் தவரை உண்ணப்
பண்ணும் சோறு உதரத்து அற்றால்
வாய்ந்திடும் மலம் வயிற்றில்
கொண்டிடும் வழக்கு வைத்தாய்.

20. உருவமும் உணர்வும் செய்தி
ஒத்திரா கன்மம் என்னின்
மருவுகை விரல்கள் தம்மின்
வளர்வுடன் குறைவுஉண்டாகி
வருவதிங்கு என்ன கன்மம்
செய்து முன் மதியிலாதாய்
பெருகுபூ தங்கள் தம்மின்
மிகுகுறைப் பெற்றி யாமே.

21. இன்பொடு துன்பம் எல்லாம்
எய்துவ கன்மம் என்னில்
நன்புனல் சந்த னாதி
நணுகவும் அணுக ஒண்ணா
மின்பொலி அழலி னோடு
மேவுவ நன்மை தீமை
என்செய்தது இயம்பிடாய் நீ
இவையெலாம் இயல்ப தாமே.

22. காயத்தின் குணமது அன்றிக்
கண்டதுஆன் மாஉண்டாயின்
மாயத்திற் சொல்லி டாதே
மனமுதல் ஆறி னுக்கும்
நேயத்தது ஆக வேண்டும்
அன்றியே நிகழ்த்தும் உண்மை
தேயத்தின் முயற்கொம்பு எல்லை
செப்புவோர் செய்தி யாமே.

23. அருவமே இறைவன ஆகில்
அறிவின்று ஆகாயம் ஆகும்
உருவமே என்னில் பூதக்
கூட்டத்தின் ஒருவன் ஆகும்
மருவிய இரண்டும் கூடி
நிற்பவன் என்னின் மண்மேல்
இருவிசும்பு ஒருகல் ஏந்தி
நிற்குமோ இயம்பி டாயே.

24. பூதத்தே அன்ன மாகி
அன்னத்தால் உடம்பு புத்தி
பேதித்தே மனமும் ஆகிப்
பிரிந்தமை திருந்த இன்று
வேதத்தே உரைக்க என்னோ
மேதினி யோர்கள் எல்லாம்
கேதத்தே வீழ்ந்து வேறு
நெறியல கேட்கு மாறே.

25. போகத்தை மண்ணில் கண்டு
விட்டுப்போய் விண்ணில் கொள்ள
மோகத்தர் ஆகி அல்லல்
முயன்றுஉழல் மூடர் எல்லாம்
தாகத்தில் தண்ணீர் கண்டு
விட்டுப்போய்த் தண்ணீர் கேட்டுச்
சோகித்தே உண்ண எண்ணித்
துயர்உறு வார்கள் அந்தோ.

26. வாழவே வல்லை வாமி
வலக்கைதா, என்னுயிர்க்குத்
தோழன் நீஉன்னை ஒப்பார்
சொல்லிடின் இல்லை கண்டாய்
கோழை மானுடர் தீதுஎன்னும்
கொலைகளவு ஆதி கொண்டே
சூழும்வார் குழலார் மொய்ப்பச்
சுடர்எனத் தோன்றி னாயே.

27. ஈசனார் அயனார் மாலோடு
இந்திரன் தெரிவை மார்பால்
பேசொணா வகைகள் எல்லாம்
செய்துஅன்றோ பெரியோர் ஆனார்
ஆசையால் அவர்போல் நாமும்
ஆகவே வேண்டும் ஆயின்
வாசமார் குழலா ரோடும்
வல்லவா கூடி வாழ்மின்.

28. தையலார் ஊடல் ஆடத்
தாம்அவ ரோடும் கூடிச்
செய்ய தாமரையை வென்ற
சீறடி செம்பஞ்சு ஊட்டி
மெய்யெலாம் பாதம் சூடும்
வேடத்தார் மெய்யிற் கூடா
மையல்மானுடர் பொய் மார்க்க
வேடத்தே மாய்கின் றாரே.

29. வாசமார் குழலி னார்கள்
மணிஅல்குல் தடத்தே மூழ்கி
நேசமார் குமுதச் செவ்வாய்
அமுதினை நிறைய உண்டு
தேசுலா மணிமென் தோள்மேல்
சேர்ந்துவீற்று இருந்தி டாதே
மாசுலா மனத்தோர் எல்லாம்
மறுமை கொண்டுஅழிவர் மன்னோ.

30. மதிநிலா நுதலா ரோடு
மணிநிலா முன்றில் ஏறி
முதிர்நிலா எறிப்பச் செவ்வாய்
இளநிலா முகிழ்ப்ப மொய்த்த
கதிர்நிலா வடங்கொள் கொங்கைக்
கண்கள்மார்பு அகல மூழ்கும்
புதுநிலா வியநன் போகம்
விடுவர்புன் சமயத் தோரே.

31. ஊடுவது உணர்வது உற்ற
கலவிமங் கையரை உள்கி
வாடுவது அடியில் வீழ்ந்து
வருந்துவது அருந்தவம் பின்
கூடுவது உணர்வு கெட்டுக்
குணமெலாம் வேட்கை யேயாய்
நீடுவது இன்ப முத்தி
இத்தில்நின் றார்கள் முத்தர்.

32. வீட்டினை உளதுஎன்று ஓடி
மெலிவதுஇங்கு என்னை? வீடு
காட்டினோர் கண்டோர் கேட்டோர்
கரியவை உண்டேல் காட்டீர்
நாட்டினில் அரசன்ஆணைக்கு
இசையவே நடந்து நாளும்
ஈட்டிய பொருள் கொண்டு இங்கே
இன்பத்துள் இசைந்தி டீரே.

உலகாயதன் மதம் மறுதலை

33. உள்ளதாவது கண்டது என்றுஉரை
கொண்டது என்? உல கத்து நீ
பின்னை யாய்வளர் கின்ற நாள்உனைப்
பெற்ற தாயொடு தந்தையைக்
கன்ன மேபுரி காலன் ஆருயிர்
உண்ண, இன்றுஒரு காளையாய்
மென்ன வேஉளர் என்று கொண்டு
விளம்பு மாறு விளம்பிடே.

34. இடித்து மின்னி இருண்டு மேகம்
எழுந்த போதுஇது பெய்யும்என்று
அடுத்த தும்அகில் சந்தம் உந்தி
அலைத்து வார்புனல் ஆறுகொண்டு
எடுத்து வந்திட மால்வ ரைக்கண்
இருந்து கொண்டல் சொரிந்தது என்று
முடித்த தும்இவை காட்சி அன்றுஅனு
மானம் என்று மொழிந்திடே.

35. காண்ட லேஅனு மானம் ஆவதும்
காட்சி முன்னதும் காட்சியேல்
பூண்ட பூத உடம்பின் உள்ளெழு
போதம் என்கொடு கண்டனை
மாண்ட வாயின் மனங்கொள் ஞானம்
உணர்ந்த தும்அனு மானம்என்று
ஈண்டு பூதம் இயைந்தது இவ்வுடல்
என்பது என்பிர மாணமே.

36. பழுதி லாமறை கண்ட நூல்பழுது
இன்றி உண்டது பாரின்மேல்
மொழிவர் சோதிடம் முன்னி இன்னது
முடியும் என்பது முன்னமே
அழிவி லாதது கண்ட னம்அவை
அன்றி யும்சில ஆக மங்களின்
எழுதி யோர்படி ஏன்று கொண்டுஇரு
நிதி எடுப்பதும் எண்ணிடே.

37. பூதம் ஆனவை நித்தம் என்று
புகன்றது என்னை? உருக்களாய்
ஆத லோடுஅழி வாகும் ஆதலின்
ஆக்குவோர் அவர் வேண்டிடும்
காத லோடு கடாதி மண்கொடு
இயற்று வோர்உளர் கண்டனம்
சீத நீரில் எழுந்த கொப்புள்
நிகழ்ந்த மாருதச் செய்கையே.

38. நீரின் வந்துஎழு கொப்புள் நீரது
வாய் எழும் நிகழ் பூதமும்
ஓரின் வேறுஉணர்வாய் எழா அவை
பூத மாகி உதித்திடும்
தேரின் நூறுஅடை காய்செ றிந்துஅவை
சேர வேறு சிவப்புஎழும்
பாரி னில்பிரி யாது புந்தி
பழிப்பு உடம்பு கிடக்கவே.

39. கூறு சேர்வையின் வந்த போது
சிவப்பு எனும்குணம் ஒன்றுமே
வேறு வேறு புலன் குணங்கள்
உடற்கண் வந்து விளைந்தது என்?
நூறு காய்அடை கூடும் வேறுஒரு
வந்த னால்என நோக்கிநீ
தேறு, பூத செயற்கும் வேண்டும்
ஒருத்தன் என்று தெளிந்திடே.

40. ஆன ஐம்பொறி உண்டி நித்திரை
அச்சம் மைதுனம் ஆதியாய்
ஊனில் வந்திடும் முன்பு இலாதவை
என்று ரைக்கின், உலூதைபோல்
வானின் வந்திடும் மாதர் ஆண் அலி
ஆகி மானுடர் ஆதியாய்
யோனி பன்மையும் இன்று பூதம்
உறும்பு ணர்ச்சிஓர் தன்மையே.

41. ஐந்து நான்குஒரு மூன்று இரண்டுடன்
ஒன்ற தாய்உட லங்களின்
வந்தி டாஉணர்வு இந்தி யங்களும்
வன்ன பன்மையும் இன்மையாம்
புந்தி யோடிய வன்ன போக
குணங்கள் பூத புணர்ச்சிதான்
தந்தி டாதுஇவை பேதம் ஆயிட
வந்த வா, வினை தந்தவா.

42. அறிவு பூதமது என்னில் வேறு
புறத்து அறிந்தமை கண்டிலம்
செறிவு தான்உட லத்து எனில்சவம்
ஆன போதுஉடல் தேருமோ
குறிகொ ளாதுஉடல் வாயு வானது
கூடி டாமையின் என்னில்நீ
பிறி தராதுஉயிர் நிற்க ஞானம்
உறக்கம் என்பிற வாததே.

43. அறிவு உடற்குணம் என்னில் ஆனையது
ஆதி அந்தம் எறும்பதாம்
உறும், உடற்பெரி தான வற்றில்
உதித்தி டும்பெரி தாகவே,
சிறுவு டற்செறி ஞான மும்சிறி
தாயி டும்பரி ணாமமும்
பெறும், உடற்சிறி தாவது என்,பெரி
தாவது என்சில பேசிடே.

44. போத மும்மெலி வாகி யும்மலி
பூதம் ஆனவை கூடலில்
பேத மோடு பெருத்து உடற்கள்
சிறுத்த பெற்றிமை என்றிடில்
ஓது டற்பெரி தான வும்சிறிது
ஆயிடா சிறிது ஆனவும்
நீதியில் பெரிது ஆயிடா முனம்
உள்ள தன்மையின் நீடுமே.

45. இயல்பு காண்இவை என்னின் வேறிசை
பெண்ணொடு ஆண்இரு தன்மையாம்
செயல்கொ ளாஇவர் செய்தி காரணம்
ஆக வந்து செனிப்பதென்
இயல்ப தாம்உடல் பூத காரியம்
ஆவ தும்இல்லை யாகுமால்
மயல தாம்வினை யால் ஒருத்தன்
வகுத்த தன்மையின் வந்ததே.

46. கார ணம்அவை என்றது என்னை
கடாதி போல்நிகழ் காரியம்
நேர் அணைந்து சமைந்து நின்றிடும்
என்ப தும்அது நேர்கிலோம்
போர் அணைந்திடும் ஒன்றொடு ஒன்று
பொருந்து மாயின் வருந்தியும்
நீர் அணைந்துஒரு தீயின் நின்றது
கண்ட தாயின் நிகழ்த்திடே.

47. பூதம் மேவு புணர்ச்சி யேபுரி
காய காரணம் ஆகுமேல்
காதல் ஆணொடு பெண்ணும் மேவு
புணர்ச்சி காரணம் ஆவதென்
ஆதி யேஉல கத்தில் ஆணொடு
பெண்ணு மாய்அணை காரியம்
நாதன் நாயகி யோடு கூடி
நயந்த காரணம் என்பரே.

48. கந்தம் வெம்மை கலந்தி டும்புனல்
கன்மம் என்செய்தது என்றனை
சந்த னம்தழல் சார நீர்இரு
தன்மை யுற்றிடுமாறு அதுஓர்
தந்த கன்மம் இரண்டு அணைந்து
தரும்சு கத்தொடு துக்கமும்
சிந்தி யாஎழு சீவன் உற்றிடும்
வேறு உடற்குஇலை தேறிடே.

49. இன்பம் எய்தி இருந்து நீவினை
இல்லை இங்குஇயல்பு என்றிடில்
துன்பம் எய்திடு வான்என் மற்றிது
சொல்லி டாய்சொல வல்லையேல்
முன்பு செய்திடு கன்மம் என்றுஅறி
கன்ம மும்முதல் வன்அறிந்து
அன்பி னால்உறு விக்கும் அப்பயன்
ஆங்கு அமைப்பொடு அநாதியே.

50. அநாதி யேல்அமைவு இன்று எனின்மலம்
மாயை கன்மம் அணுசிவன்
அநாதி, கன்மம் அணுக்கள் செய்ய
அறிந்து கன்மம் உடற்செயா.
அநாதி காரிய மாம் உடல்கள்
அசேத னம்அணையா அறிந்து
அநாதி ஆதி அமைக்க வேண்டும்
அமைப்பி னோடும் அநாதியே.

51. காணொ ணாகர ணங்க ளுக்குஉயிர்
கண்டி டாமையின் இன்றெனில்
காணு மோகடம் கண்ட கண்ணினைக்
கண்டு நிற்பதும் கண்ணதே
காணொ ணாதுஉயிர் தானும் இப்படிக்
கண்டி டும்கர ணங்களைக்
காணொ ணாகர ணங்க ளுக்குஉயிர்
உண்மை யாவதும் கண்டிடே.

52. அங்கி யானது தானும் ஒன்றை
அணைந்து நின்று நிகழ்ந்திடும்
பங்கி யாதுஉயிர் தானும் இப்படிப்
பற்றி யல்லது நின்றிடாது
எங்கு மார்தயி லத்தை உண்டுஎழு
தீப மானது எரிந்திடும்
அங்க தாம்உடல்நின்று கன்மம்
அருந்தி ஆருயிர் ஆவதே.

53. அறிவு தான்உட லத்தின் வேறது
வாய் இறந்து பிறந்திடின்
அறிவு முன்புளது இங்கு வந்தும்
அறிந்தி டாமையது இன்றெனின்
அறிவை யோகன வத்து நீநன
வத்தை அன்று உதரத்துஇருந்து
அறியும் அவ்வறி வோம யக்கறிவு
ஆத லால்அறி யாதுகாண்.

54. இறந்தி டும்அறி வேபி றந்திடும்
என்பது இங்குஇசை யாதுஎனின்
உறங்கி டும்பொழுது இன்றி நின்றுஉணர்வு
இங்கு உதித்திடும் ஆறதோர்
பிறந்த இவ்வுடல் போக வேறுடல்
பின்பு வந்தமை பேசிடின்
மறந்தி டும்கன வத்தில் வேறுடல்
வந்த வாறு மதித்திடே.

55. கரணம் வாயு விடத்து அடங்க
அடங்கி வந்துஎழு காரியம்
மரண மான இடத்து மற்றிவை
மாய்ந்து பின்பு வரும்செயல்
கிரண மார்கலை கெட்டு உதிப்ப
இறப்பி னோடு பிறப்பையும்
தரணி யோர்கள் மதிக்கு உரைப்பர்
உயிர்க்கும் இப்படிச் சாற்றிடே.

56. பூத மானவை காரி யங்கள்
பொலிந்து மன்னி அழிந்திடும்
ஆத லால்ஒரு நாதன் இங்குளன்
என்று அறிந்துகொள் ஐயனே
பேத மான கடாதி மண்ணினில்
வந்த வாறு பிடித்திடில்
கோதி லாத குலால னால்வரு
செய்கை என்று குறிப்பரே.

57. வேதன் நாரணன்ஆர ணம்அறி
யாவி மூப்பொருள் பேதைபால்
தூத னாய்இரு கால்நடந்திடு
தோழன் வன்மைசெய் தொண்டனுக்கு
ஆத லால்அடி யார்க ளுக்குஎளி
யான் அடிக்கம லங்கள்நீ
காத லால்அணை ஈண்டன் வேண்டின
இம்மை யேதரும் கண்டிடே.

58. பொன்கு லாவு மணிக்க லன்கள்
மலம்பு கில்கை பொருந்திடா
மின்கு லாம்இடை யார்கள் தாம்உல
கத்தின் வேட்கை விடும்பொருள்
புன்பு லால்மல மூத்தி ராதி
பொசிந்து நாறு புலைக்கலம்
என்கொ லாம்இவர் மேல்வி ழுந்தது
இவற்றின் என்பெற எண்ணியே.

59. தோல் இரத்தம் இறைச்சி மேதை
எலும்பு மச்சை சுவேதநீ
ராலெ டுத்த முடைக்கு ரம்பை
அழுக்கி னோடு புழுக்குழாம்
நூலொ ழுக்கிடு கோழை யீரல்
நுரைக்கும் மூத்திர பாத்திரம்
சேல்அ டர்த்தகண் ணார்க ளென்பது
தேர்ம லத்திரள் திண்ணமே.

60. ஆசை யுற்றுஉழல் சூக ரங்கள்
அசுத்த மேவி யளைந்துதின்
றேசு கித்தன வாயி டும்சுகம்
ஏழை யோடுஉறும் இன்பம்நீ
மாச தற்றுஒளிர் நித்த சுத்த
வளம்த ரும்சுக வாரிகாண்
ஈச னுக்கடி மைத்தி றத்தின்
இயைந்து நாம்பெறும் இன்பமே.

61. குரோத மேகுண மாய் இருந்தவர்
சாந்தி நன்மை குறிக்கொளார்
அராக மேஅணை வார்கள் ஆசை
அறுத்த இன்பம் அறிந்திடார்
பராவு தேவர் பராவு தூய
பராப ரன்னடி பற்றிநீ
விராவி மெய்யில் விடாத இன்பம்
விளைந்தி டும்இது மெய்ம்மையே.

62. காம மாதி குணங்க ளைச்சுகம்
என்று கொண்டனை காதலால்
தூமம் ஆரழல் அங்கி சீதம்
மலிந்த போது சுகந்தரும்
நாம மார்தரு சீதம் வெம்மை
நலிந்த போது தரும்சுகம்
சேம மாகிய இன்ப மாம்மிகு
தெய்வ நன்னெறி சேரவே.

63. படிக்கும் நூல்கள் சிவாக மம்பசு
பாச மோடு பதித்திறம்
எடுத்துஇ யம்புவது ஈசன் வார்கழல்
ஏத்தி டும்தொழில் என்றுமே
விடுத்தி டும்பொருள் காம மாதிகள்
வேண்டி டும்பொருள் ஈண்டுஅருள்
முடித்து மும்மலம் விட்டு நின்மல
னோடு நின்றிடல் முத்தியே.

2. பௌத்தரில் சௌத்திராந்திகன் மதம்

64. நீதியார் வேத நூலின்
நெறியலா அறங்கள் நாளும்
ஓதிஓர் ஐந்து சீலம்
உடையராய் உடலம் மூடிப்
போதிநீள் மரத்தின் மேவு
புத்தர்நால் வரினும் வைத்துச்
சாதிதான் இலாத கொள்கைச்
சௌத்திராந் திகன்முன் சாற்றும்.

65. முழுதுணர்ந்து உலகில் கோறல்
முதற்செயல் முனிந்து மற்றும்
பழுதிலா அருளி னாலே
பரதுக்க துக்கன் ஆகித்
தொழுதுவா னவரும் போற்றத்
தொல்பிட கங்க ளான
வழுவில்ஆ கமங்கள் சொன்ன
மாதவன் நாதன் ஆவான்.

66. மருவிய அளவை காட்சி
மானம்என்று இரண்டு இவற்றால்
கருதிய பொருள்கள் ஞான
ஞேயமாய்க் கணத்திற் பங்கம்
வரும்உரு அருவம் வீடு
வழக்கென நான்கு அதுஆகித்
தரும்அவை ஒன்று இரண்டாய்த்
தாம்விரிந்து எட்டின் ஆமே.

67. உருஇயல் பூத மோடுஅங்கு
உபாதான ரூப மாகும்
அருஇயல் சித்தம் கன்மம்
என்றுஇரண் டாகும் வீட்டின்
மருஇயல் குற்றம் கந்தம்
எனவழங் கிடும்வ ழக்கின்
இருஇயல் உள்ள தோடுஅங்கு
இல்லதாம் இயம்பும் காலே.

68. மண்புனல் அனல்கால் பூதம்
 வலிகந்தம் இரதம் வன்னம்
எண்தரும் உபாதா னம்தான்
 இவையிரு நான்கும் கூடி
உண்டொரு பொருள் உரூபம்
 உறுபுலன் உபாங்கம் ஒடக்
கண்டது சித்தம் கன்மம்
 நன்றுதீது என்றல் காணே.

69. குற்றவீடு அராகம் ஆதி
 குணங்களைக் குறைத்த லாகும்
மற்றவீடு உருவம் ஆதி
 ஐந்தையும் மாய்த்தல் ஆகும்
சொற்றரும் தொகைதொ டர்ச்சி
 மிகுத்துரை என்று மூன்றாய்
உற்றிடும் வழக்கு இரண்டும்
 ஒன்றுமூன் றாகி ஆறாம்.

70. ஒருவன்என்று ஓதப் பட்டான்
 உருவாதி ஐந்தும் கூடி
வருபவன் என்று உரைத்தல்
 தொகையுண்மை வழக்க தாகும்
உருவம்அங்கு ஆதி யாய
 ஐந்தையும் ஒருவன் இன்று
தருவது தொகையின் இன்மை
 வழக்கதாம் சாற்றும் காலே.

71. காரண காரி யத்தின்
 தொடர்ச்சியாய்க் காலம் மூன்றின்
சோர்வறத் தோன்றும் கெட்டு
 வழியென்கை தொடர்ச்சி உண்மை
ஓர்தரின் ஒருவனே எக்
 காலத்தும் உள்ளான் என்று
தேர்வது தொடர்ச்சி இன்மை
 வழக்கதாம் செப்பும் காலே.

72. தோற்றிய பொருள்கள் எல்லாம்
 நாசமாம் என்று சொல்லும்
மாற்றம்முன் உரைத்தல் மற்றை
 மிகுத்துரை வழக்கின் உண்மை
போற்றிய பொருள்கண் கட்குப்
 போனது போல்மு திர்ந்து
வேற்றுமைப் பட்டது என்கை
 மிகுத்துரை இல்வ ழக்கே.

73\. உள்வழக்கு இல்வ ழக்குஉள்
ளதுசார்ந்த உள்வ ழக்கோடு
உள்ளது சார்ந்த இன்மை
வழக்குடன் இன்மை சார்ந்த
உள்வழக்கு இன்மை சார்ந்த
இல்வழக்கு என்றோர் ஆறாம்
உள்வழக்கு உளதுண்டு என்கை,
முயற்கோடுஇன்று இல்வ ழக்கே.

74\. உணர்வுசார்ந்து உணர்வு உதிக்கை
உள்ளது சார்ந்த உண்மை
உணர்வுபின் இன்றாம் என்கை
உள்ளது சார்ந்த இன்மை
உணர்வுமுன்பு இன்றித் தோன்றல்
இல்லது சார்ந்த உண்மை
உணரின்இல் லதுசார் இன்மை
உள்ளங்கை உரோம நாணே.

75\. சொன்னநால் வகையும் அன்றிச்
சொல்லிடும் பொருள்கள் எல்லாம்
என்னையோ அறிகி லோம்பித்து
ஏறியோ வானம் ஆன்மா
மன்னுகா லங்கள் திக்கு
மனமொடு வாக்கு இறந்திட்டு
உன்னுமோர் இறையும் உண்டென்று
உரைப்பது நித்தம் அன்றே.

76\. ஈங்கு வான் செயற்கு வாராது
இயம்பிய பொருள்கள் எல்லாம்
தாங்குவான் உளதே என்னில்
தரித்திடாது அருவம் ஆதல்
ஓங்குவான் ஓசைக்கு ஆதி
எனில்அது அங்கு உருவின் கூட்டம்
நீங்குவான் இன்றி எங்கும்
நின்றதேல் எங்கும் இன்றே.

77\. போதமுண்டு உயிர்கட்கு என்னில்
வாயில்ஐம் புலனும் நூலும்
ஆய்தலின் தொட்டுத் தீட்டுக்
கலப்பினில் அறியும் என்னில்
ஏதம்உண்டு இரவிற் பச்சை
சிவப்புடன் ஏய்ந்த போது
கேதம்நின்று என்னோ என்னும்
ஐயமுன் கிடத்த லாலே.

78. அறிந்திடா வாயில் இன்றேல்
அறிவின்றாம் ஐந்தும் பற்றி
அறிந்திடும்அறிவுஉண்டு என்னில்
ஐந்தினும் அறிவுஒன் றாக
அறிந்திட வேண்டும் சார்பின்
அறிந்திடும் என்னில் உன்னை
அறிந்திலோம் புத்தன் என்றிங்கு
அழகிது சொன்ன வாறே.

79. ஞானஞே யங்கள் அன்றி
ஞாதிரு என்று சொல்ல
ஆனதிங்கு அறிவோ அன்றோ
அன்றெனில் அவனி போலும்
தானதிங்கு அறிவே என்னில்
சமைத்திடு நன்ப ருப்புப்
போனகம் தனக்குத் தானே
கறியெனப் புகன்ற தாமே.

80. உயிரினை அருவ தென்னில்
உருவுடன் உற்று நில்லாது
உயிரினை உருவ தென்னில்
உடலினில் உடல் அடங்காது
உயிரினை அணுவ தென்னில்
உடல்பல துவார மோடும்
உயிரினை நித்தம் என்னில்
உணர்வுஉத யாந்தம் இன்றே.

81. எங்குமாய் நின்றது ஆன்மா
என்றிடின் எங்கும் இன்றாம்
தங்கிடு நிறைவு தத்தம்
சரீரங்கள் தோறும் என்னின்
மங்கிடும் உடலத் தோடே
வடிவினில் ஓரி டத்தே
அங்கது நின்றது என்னில்
அடிமுடி அறிவின்று ஆமே.

82. சாற்றிய காலம் இங்குத்
தங்கிய வாறிது என்னை
தோற்றுவித்து அளித்துப் போக்கும்
தொழில்இவை காலம் என்னின்
போற்றிய பொருளில் புக்குப்
பிணங்கிடும் பொருட்பின் இன்றாம்
தேற்றிய இல்வ முக்குத்
திரவியத்து இயல்பின் ஆமே.

83. எனக்குநீ கிழக்கு இருந்தாய்
ஆகின்மேற்கு என்றாய் என்பால்
எனக்குமேற்கு இருந்தான் என்பால்
கிழக்கென இயம்பும் திக்குத்
தனக்குநாம் கொள்வது எப்பால்
சாற்றிடாய் இல்வ ழக்குத்
தனக்குள தாகும் உண்மை
தான்இல தாகும் அன்றே.

84. உலகினைப் படைத்தான் என்றாய்
ஒருவனிங்கு உள்ளது ஆயின்
உலகினைப் படைக்க வேண்டா
இல்லையேல் படைக்க ஒண்ணாது
உலகினுக்கு உபாதா னம்தான்
உள்ளதாய்க் காரி யத்தாம்
உலகினைப் படைக்கில் அங்கும்
உளதிலது ஆவது உண்டோ.

85. உள்ளது கடாதி போல
உதிப்பித்தான் என்று உரைக்கின்
மெள்ளவே எங்கு நின்று
விதித்தனன் உலகின் மீது
வள்ளல்தான் நின்றான் என்னில்
வந்ததாம் உலகம் முன்னே
தள்ளிடாது எங்கும் நிற்கில்
எங்குமுன் தந்த தாமே.

86. இல்லது கருணை யாலே
இயற்றினன் இறைவன் என்னில்
கொல்லரி உழுவை நாகம்
கூற்றமும் கொண்டு தோற்ற
வல்லவன் கருணை என்னோ
வலியினால் வேண்டிற்று எல்லாம்
பல்கவே படைத்தான் ஆயின்
பித்தரைப் பணிந்தி டாயே.

87. பெறுவதிங்கு என் படைத்துப்
பெற்றது விளையாட்டு என்னில்
சிறுமழவு இறைய தாகும்
செய்திடும் கன்மத்து என்னின்
உறுபெறும் கன்மம் செய்வோர்
முன்புளர் ஆவர் உண்மை
அறிவுறின் ஞால மெல்லாம்
அநாதியென்று அறிந்தி டாயே.

88. உருவொடு நின்றான் என்னில்
உருவம்முன் படைத்தார் வேண்டும்
உருஅவன் இச்சை என்னில்
உலகெலாம் இச்சை யாகும்
உருவுல கத்து ளோர்கட்கு
உறுவது கன்மால் என்னில்
உருவுடை யோர்கட்கு எல்லாம்
உற்றது கன்மத் தாமே.

89. அருவெனில் பவத்தின் நின்றும்
எடுத்திடான் ஆகா யம்போல்
மருவினன் நிழல்போல் என்னின்
மருவினோர்க்கு ஆகும் மாட்சி
பெருகிய அறிவுண்டு என்று
பேசிடின் நேசத் தோடும்
கருதிட உருவம் வேண்டும்
இல்லையேல் கருத லின்றே.

90. எங்கள்நூல் அநாதி யாக
இறைவன்உண்டு என்னும் என்னின்
உங்கள்நூல் உரைப்பார் இன்றி
ஓதுவது அழகி தாகும்
அங்கவன் தன்னை நூல்கொண்டு
அறிந்தனம் அவனைக் கொண்டே
இங்குநூல் அறிந்தோம் என்னின்
ஈதுஓர்ஆச் சரிய மாமே.

91. உற்றெழு மரங்கள் ஆதி
உயிரின்றிப் பூத ரூபம்
பற்றிஇப் பாரின் மீது
பாங்கினால் பலவு மாகிப்
புற்றொடு மயிர்கொம்பு ஆதி
போலவே தோன்றி மாயும்
மற்றுள யோனி கட்குப்
பயனென வழங்கும் அன்றே.

92. கொன்றிடல் ஆகாது என்றும்
கொன்றவை கொண்டு நாளும்
தின்றிடல் ஆகும் மண்ணோடு
ஒத்திடும் செத்த வெல்லாம்
ஒன்றிய வாசம் ஊட்டி
உண்ணுநீர் வைத்த வர்க்கோ
சென்றுநின்று உண்ட வர்க்கோ
புண்ணியம் செப்பி டாயே.

93. அழித்திடும் அராக மாதி
அகற்றிநல் லறங்கள் பூரித்து
இழித்திடும் புலன்கள் போக்கி
இன்பொடு துன்பம் வாட்டிப்
பழித்திடாப் பழுதில் வாழ்க்கை
எட்டையும் பாரித்து எல்லாம்
ஒழித்திடு ஞான சீலம்
சமாதியின் உறுதி யாமே.

94. ஓங்கிய உருவ மோடும்
வேதனை குறிப்பி னோடும்
தாங்குபா வனைவிஞ் ஞானம்
தாமிவை ஐந்துங் கூடிப்
பாங்கினால் சந்தா னத்திற்
கெடுவது பந்த துக்கம்
ஆங்கவை பொன்றக் கேடாய்
அழிவது முத்தி இன்பம்.

சௌத்திராந்திகன் மதம் மறுதலை

95. அனைத்தினையும் உணர்ந்தான்எம் இறைவன் என்றுஇங்கு
அறியாது புத்தநீ அறைந்தாய் என்றும்
அனைத்தினையும் அறிந்திடான் அளவி லாமை
ஒன்றொன்றா அனைத்தினையும் அறிந்தான் என்னின்
அனைத்தினையும் அளவிறந்தது என்ன வேண்டா
அளவிலா ஞானத்தால் அறியின் ஞானம்
அனைத்தினையும் அறியாது கணத்தில் தோன்றி
அழிதலால் அறிந்தமைஇன் றாகும் அன்றே.

96. சிலபொருளை உணர்ந்தவற்றின் திறத்தே ஒட்டிச்
சிந்திப்பன் எப்பொருளும் என்னில் சென்று
பலபொருளாய் ஒன்றுபல பேத மாகிப்
பயின்றுவரும் ஆதலால் பார்க்கும் ஆறென்
உலகுதனில் ஒருபொருள்அங்கு உணரும் போதில்
உற்றுணர்தல் ஆராய்தல் தெளிதல் உண்டாய்
நிலவும்அத னால்உணர்வு பன்மை முன்பின்
நின்றிடாது என்பைஎல்லாம் நினைப்பது எங்கே.

97. முத்திநிலம் கண்டுஅறங்கள் மொழிந்தான் ஆயின்
முதன்முழுதும் பொன்றிப்பின் மொழிந்த வண்ணம்
ஒத்திடும்தேன் நெய்கூட்டி உண்டிறந்தோன் ஒருவன்
உலகினில்வந்து இதுதீதென்று உரைத்தால் ஒக்கும்
செத்ததுபின் என்றுரைக்கின் கதியில் செல்லாத்
தேரனுரை நீர்பெருகிச் சென்று ஆறாகும்
அத்தின் அள வறியாதுஇக் கரையோர் தம்மை
அக்கரைக்கே செல்லவிடும் ஆசை யாமே.

98. நீர்போல நின்றுயிர்கட்கு அளித்தி டாதே
நெருப்பாய துயர்ப்பிறப்பில் நிகழ்ந்து நின்று
பாரோர்கட்கு அளித்தபடி வலையில் பட்ட
பலகலைமான் கண்டுஒரு நீள் கலைபாய்ந்து ஓடி
நேரேசென்று அவ்வலைக்கே நேர்ந்தால் ஒக்கும்
நீள்பாவக் குழியில்விழும் நீர்மை யாகும்
ஆரோஇங்கு அவனொப்பார் அறத்தை ஆக்கப்
பிறந்துஅறமாக் கினன்என்னில் அடங்க ஆமே.

99. அலகிறந்த யோனிகளில் புகுந்த எல்லாம்
அறத்தைஅளித் திடஎன்னில் அவற்றின் எல்லாம்
நிலவுவது கன்மத்தால் ஆகும் அன்றி
நினைந்ததோர் இச்சையினால் நிகழ்ந்தான் ஆகில்
உலகுதனில் உள்ளோர்க்கும் அதுவே யாகும்
ஒருத்திவயிற் றினில்இருந்துஅங்கு உதரம் தள்ளித்
தலமதில்வந் தான்என்னில் தாயைக் கொன்றான்
தருமத்தை இன்றுஎனக்குச் சாற்றி டேலே.

100. அரியினொடு நரிஉழுவை ஆதியாக
ஆனபோது அறம் திரிந்து கோறல் ஆதி
பரிவினொடும் செய்தனனாம் இல்லை யாகில்
பசிதனக்குத் தின்பதுஅவன் பழுதை யோதான்
கருதில்அவன் பரதுக்க துக்கன் ஆகில்
கணவன்இழந் தோர்கட்கும் கண்ணி குத்தித்
திரியுமவர் துயரினுக்கும் இரங்கு வோன்தன்
செயல்அறத்துக்கு அழகியதாம் செப்பும் காலே.

101. ஒருபொருளைத் தேடிஅதற்கு உரையும் தேடி
உரைப்பதன்முன் உணர்விறக்கும் உனக்கு நூல்என்
மருவிவரும் சந்தான வழியில் என்னின்
வாயுரைத்த தேஉரைத்து வழங்கும் ஆகும்
பெருகுவது கெட்டுஎன்னில் அதுபோல் ஆம்பின்
பித்துரைத்தது அறியாது பேதை சொல்லும்
தருவது நூல்எப்பரிசு முதல்நடுவோடு இறுதி
தான்விருத்தம் இன்றியது சாற்றி டாயே.

102. முன்னாகப் பலஅறங்கள் பூரித்துஎம் இறைவன்
முழுதுணர்ந்துஇங்கு அருளினால் உயிர்கள்முத்தி அடையப்
பின்னாகப் பிடகநூல் உரைத்தான் என்று
பேசினாய் இவன்முன்பு பேரறங்கள் புரிநூல்
சொன்னார்ஆர் இவனைப்போல் முன்னொருவன் என்னில்
அவனுக்குச் சொன்னார்ஆர் எனத்தொடர்ச்சி யாகி
அன்னாய்பின் அனவத்தைப் படும்ஒருவன் இன்றாம்
ஆரோஉன் பாழிஇருப்பார் இதனை அறையே.

103. இந்நூலைச் சொன்னவன்தான் இங்கிருந்தான் என்னில்
இவன்இருத்தி ஏத்துமவன் எங்கிருந்தான் எவனோ
அந்நூலோ குருவந்த அடைவும்உனக்கு இல்லை
அடைவுதரின் முடிவின்கண் அநாதி போதன்
சொன்னானாம் அவைவேதா கமங்கள் ஆகும்
சுருக்கிஊண் தவம்புரியச் சொல்லுவது எல்லோரும்
உன்நூல்கண் கழுவாதே உதிப்பதன்முன் புலாலோடு
உண்பான்ஓர் ஊன்பிரியன் உரைத்ததுஒரு நூலே.

104. முன்நூலும் வழிநூலும் சார்பு நூலும்
மூன்றாகும் உலகத்து மொழிந்த நூல்கள்
இந்நூலின் உன்நூலிங்கு எந்நூல் என்னில்
இந்நூல்காண் என்நூலென்று இயம்ப மாட்டாய்
உன்நூலும் ஒருநூலாய் உரைப்பது என்னே
உலண்டுநூல் பருத்திநூல் சிலம்பி நூல்கள்
அந்நூலும் அல்லாதே பொய்ந்நூல் கொண்டிங்கு
அறநோற்றுத் திரிந்தவாறு அழகி தாமே.

105. புத்தனவன் பொன்றக்கெட்டுப் போனான் என்று
போற்றுவது இங்குஆரைநீ பொய்த்தவஞ்செய் புத்தா
செத்தவர்க்குச் சிலகிரியை செய்ய இங்குச்
செய்தவர்க்கும் புண்ணியமாம் என்று செப்பின்
நித்தம்உயிர் ஆதலால் பலிக்கும் செய்தி
நினைந்துதரு வானும்உளன் உனக்கு இவ்வாறில்லை
வைத்தசுடர்த் தீபம்அற மாய்ந்தக்கால் அதற்கு
மருவுதிரி நெய்கூட்டு மதிகேடு உன்வழக்கே.

106. நூலுரைத்தான் ஒருவன்உளன் என்றுஅனுமா னத்தால்
நூல்கொண்டுஇங்கு அறிந்தாற்போல் நூலாநூலின்
பாலுரைத்த பொருள்களெல்லாம் அனுமானம் என்னில்
பரலோக பாதாள லோகங்கள் ஒருசொல்
லால்உரைத்த நூலின்றி அறையாய் இன்றேல்
அவையறிந்த படியென்உனது அனுமானம் அன்றே
மேலுரைக்கும் பிரமாணம் உனக்கில்லை காட்சி
அனுமானம் விட்டபொருள் விளக்குவது ஆகமமே.

107. எப்பொருளும் அநித்தமென இயம்பிடுவை அநித்தம்
இல்லதற்கோ உள்ளதற்கோ உளதிலதா னதற்கோ
செப்பிடின் இல்லதற்கு இல்லது என்றும் இல்லை
சென்றடைவது உள்ளதற்கேல் உள்ளதுஎன்றும் உண்டாம்
அப்படிதான் உளதிலதாம் அப்பொருளுக்கு என்னின்
உளதுஇலது ஆகாதுஇலதும் உள்ளது ஆகாது
இப்பொருளுக்கு அநித்தமிலை என்றொன்றைக் காட்டாய்
எனில்தோன்றும் பொருள் நின்றிங்கு இறுதி யாமே.

108. அங்குரம்வித் தின்கேட்டில் தோன்றும் அதுபோல
அனைத்துருவும் கெட்டுவழி யாகும் என்னின்
அங்கவற்றுக்கு ஆக்கக்கேடு அறைந்தாய் எல்லாம்
அநித்தமெனும் உரைமறந்தாய் அருகனும் ஆனாய் நீ
இங்குமுளை இலைமரமாய் எழுந்துஈண்டிச் செல்லாது
இறந்ததே எழுந்தபடி நில்லாது என்னின்
மங்கியிடா தேபால தருணவிருத் தையாய்
வரும்வடிவு திரிந்துநின்று மாயும் காணே.

109. உடல்பூதம் எனில்ஒன்றுக்கு ஒன்றுபகை ஒன்றா
உதிரசுக் கிலம்என்னின் மரத்தின்உளு, கல்லின்
இடமாகத் தவளைஉரு வந்தவாறு இயம்பாய்
இருவினைகாண் எனில்வினைகள் இரண்டுஉருவாய் நிற்கும்
திடமாக வன்னம்உரு எனில்உண்ண உண்ணச்
சென்றுவள ருங்காயம் தேயும்உணர்வு என்னின்
மடவோனே அருஉணர்வுஇங்கு அசேதனமாய் உருவாய்
வளராது வரும்இல்லாது எனின்மலர்வான் வருமே.

110. என்றுமிலாது ஒன்றின்றாய் வரும்உருவம் வித்தின்
எழுமரம்போல் எனின்வித்தின் உண்டாய்நின்று எழும் காண்
நின்றதேல் வித்தின்மரம் கண்டதில்லை என்னின்
நெல்கமுகாய் நீளாது நெல்லாயே நீளும்
ஒன்றில்ஒன்றுஅங்கு இலாமையினால் உதியா,.காரணம் பெற்று
உதிப்பதுகா ரியம், அதுவும் உள்ள தாகும்
மன்றமதிக் கலைபோலக் கந்தம் ஐந்தும்
மருவியுளது எனும்உரையும் மறந்தனையோ இன்றே.

111. உருவம்எலாம் பூதஉபா தாய சுத்தாட்
டகஉருவம் என்னின்நீ உலவத்துக்கு
மருவும்அன லோடுநீர் மண்கந்தம் இரதம்
வன்னம்இலை வன்னிக்கு வளிநீர்மண் வாசம்
தரும்இரதம் இலைநீர்க்குத் தழல்கால்மண் கந்தம்
தான்இல்லை தலத்தினுக்குச் சலம்அனல்கால்கூடி
வருவதுஇலை இந்திரிய விடய மான
மாபூதங் களும்அறியாய் மதிகெட் டாயே.

112. மருத்துஎண்ணெய் தனில்மருந்து நின்றாற் போல
மறைந்துஎட்டும் சூக்குமமாய் மருவும் என்னில்
திருத்துமவன் மருந்துஎண்ணெய் சேர்த்தாற் போலச்
சேர்ப்பவன்வேறு உண்டுஎல்லா உருவும் எட்டும்
பொருத்தியதேல் ஒருதன்மை யாம்பொருள்கள் ஒன்றின்
குணமொன்றில் புகாது, அறைகை பொருளறியாய் பூத
உருப்பொருள்வேறு உபாதாயப் பொருள்வேறு காட்டாய்
உபாதாயம் பூதகுணம் குணகுணியாம் உலகே.

113. அழிந்துணர்வை உணர்வுதரும் எனின்அழிந்தது ஆக்காது
ஆம்உணர்வில் பொருள்வினைகள் அணையா வாகும்
அழிந்திடுவது ஆக்கிஎனின் முன்னொருகா லத்தே
அறிவுஇரண்டு நில்லாதங்கு அறக்கேடு இன்றி
அழிந்துணர்வை உணர்வுதரும் எனின்நித்தா நித்தம்
அடையும்உணர்வுக்குஅநித்த மாயே செல்லாது
அழிந்தெருவை ஆக்குவது போல்ஆக்கும் என்னில்
ஆம்பொருள்வேறு அழிந்துசத்தி கிடந்துஆக்கும்
அவையே.

114. கேடிலாச் சந்தானத்தே பலிக்கும் என்று
கிளக்கும்நீ சந்தானம் நித்தம் ஆகும்
ஓடுநீர் போல்அழிந்தாம் உணர்வொழுக்கம் என்னில்
ஒழுகுநீர் இட்டதெல்லாம் உடன் கழிதல் போலத்
தேடுபொருள் சீலம்பா வனைகுறிவிஞ் ஞானம்
சென்றஉணர் வோடுஏகும் நின்றுணர்வின் ஏயா
நீடுநீர் முன்னொழுகிக் கெடாதுநிறைந்து ஓடும்
நிகழ்உணர்வும் கேடின்றி நிறைந்து செலும் காணே.

115. சந்தானம் காரணமோ காரியமோ இரண்டின்
தன்மையதோ காரணமும் காரியமும் நித்தம்
வந்தாரும் சந்தானம் தொடர்ச்சிஎனின் அதற்கும்
வருநித்தம் தோற்றக்கேடு அடைதலின்மற்று ஒன்றேல்
ஐந்தான கந்தங்கள் அன்றாய் நித்தம்
அடைபொருளாம் அறிவும்அறிவு அடைவும் இன்றிச்
சிந்தாமுன் பின்னாகிப் பின்முன் ஆகித்
திரிந்துவரும் திரிவறிந்து தேரா தேரே.

116. ஒருகாலத்து உணர்வுகெட்டாம் எனின்உதிப்புஈறு ஒன்றாம்
ஒருபொருளின் திரிவுனக்குக் காலம் ஆனால்
வருகாலம் நிகழ்காலம் கழிகாலம் என்று
வழங்குவதென் பொருள்வரவு நிலைகழிவால் இன்றேல்
திரிகாலம் செப்பிடாய் பொருட்செயலும் ஒன்றாம்
செயல்மூன்றும் ஒருகணத்தே சேரும் என்னில்
தருகாலம் மூன்றாகும் தாமரைநூறு இதழில்
தள்ஊசி யும்காலம் மூன்றினையும் தருமே.

117. உணர்வுகா ரணம்உணர்வுக்கு எனின்நித்தம் உணர்வுக்கு
உண்டாகி நின்றுணர்வை உதிப்பி யாதுஇங்கு
உணர்வுசந் தானவிடத்து ஒழிந்தால் பின்னை
உண்டாகாது உடலுணர்வுக்கு உபாதானம்என்னின்
உணர்வுஉடலின் இடையறாது உதிக்க வேண்டும்
உடலுணர்வின் வினையினால் உணர்வு உதிக்கும்
என்னின்
உணர்வுவினை உளது ஒடுங்காது உணர்வுதரும் செய்தி
உணர்வைவினை தரின் ஒருவன் செயல்வினையின்று
ஆமே.

118. வினையுணர்வு தரும்வினையை உணர்வுதரும் என்றும்
விளம்பின் நீ உணர்வுபோல் வினையினுக்கு
நினைவுவரும் ஒன்றையொன்று நிகழ்த்தி டாபின்
நிலையின்மை யால்நிகழத்திக் கெடுதல் செய்யா
கனல்விறகில் பிறந்ததனைப் பொடிசெய் தாற்போல்
கருத்து வினையில் தோன்றிக் கழிக்கும்வினை என்னின்
முனம்உணர்வு பிறந்தளவே வினைகெடுக்கும் முன்பின்
உதியாது முகிழ்நெருப்பின் விறகுஉதியா ஆறே.

119. பேயும்நர கருஞ்சுரரும் பிரமருமாய் உலகில்
பிதாமாதா ஆதாரம் ஒன்றும் இன்றிக்
காயமொடு தாம்வருவர் என்றுரைப்பை காயம்
காரியமாய் வருதலினால் காரணம்உண் டாகும்
ஆயும்உணர் வோசுத்த அட்டகமோ கன்மம்
வடித்ததோ வடிவுசெய்து வைத்தாரும் உண்டோ
ஆயும்அறிவு உண்டாகில் அறைந்திடாய் உலகுக்கு
ஆதிதுணை நிமித்தகா ரணம்அறிவது அறிவே.

120. உருவாதி கந்தங்கள் ஐந்தும் கூடி
ஒருவன்வேறு ஒருவன்இலை என்றுரைக்கும் புத்தா
உருவாதி ஐந்தினையும் உணர்பவன்வேறு என்ன
உணரும்விஞ் ஞானம்என்றாய் ஞானம் உணர்ந்
தவர் ஆர்
உருவாதி பொருள் காட்டித் தனைக்காட்டும் சுடர்போல்
உணர்வுபிறி தினையுணர்த்தித் தனையுணர்த்தும்
உருவாதி பொருளினையும் சுடரினையும் காணும் [என்னின்
உலோசனம்போல் உணர்வுபொருள் உணர்பவன்வேறு
[உண்டே.

121. காயமுடன் இந்திரியம் மனம்நான் என்று
கதறுவாய் காயம்உறக் கத்துஅறியா வாகும்
வாயில்களும் அப்படியில் ஒன்றை ஒன்றங்கு அறியா
மனம்கணத்திற் கெடும்கால மூன்றின்வரவு அறியாது
ஆயும்உணர் வாகிஉடல் பொறிமனம்மூன்று அறிந்தாங்கு
அவைநானல் லேன்என்றும் அறிந்துமனத் தாலே
ஏயும்ஒரு பொருள்கருதி இந்திரியப் பாலே
இசைவித்துக் காயத்தால் இயற்றுவதுஆன் மாவே.

122. கழிந்தவுணர் வேபின்னும் இயானறிந்தேன் என்று
கருதலின்அவ் வுணர்வு அறிந்தது என்னின் முன்னே
மொழிந்தமொழி நான்மொழிந்தேன் என்றால் வாய்தான்
மொழிந்ததோ மொழிந்தவன்வேறு ஆனால் போல
எழுந்தஉணர்வு எல்லாம்கொண்டு யானறிந்தேன் என்றது
எதுஅதுகாண் உயிருணர்வால் வாக்கால் மற்றை
ஒழிந்தகா யம்தன்னால் உணர்ந்துரைத்துச் செய்தங்கு
உணர்வினுக்கும் ஆதார மாய்நிற்கும் உயிரே.

123. இந்திரிய வீதியெழும் சித்தம் நெஞ்சத்து
எழும்சித்தம் எனவிரண்டும் ஒன்று கெட்டே ஒன்று
வந்துஎழுவது எனில்கனவில் கண்டபடி நனவின்
வாய்திறவார் நனவுகண்ட படிகனவிற் காணார்
அந்தன்உரு வன்னங்கள் அறிந்திடான் இன்றேல்
அறிகனவும் இறந்துஉணர்வும் அழிந்துஉறக்கம்
அடைந்தால்
உந்துவதோர் சந்தானம் இல்லைஉணர்வு உதிப்ப
உயிர்கனவு நனவினையும் உணரும் காணே.

124. ஒருகாலத்து ஓரிடத்தில் ஒருணர்வேல் செவிதான்
ஒன்றுணராது இருசெவியும் உணரும் ஓசை
ஒருகாலத்து இருகண்ணும் இருசெவியும் மனமும்
ஒருவனைக்கண்டு அவனுரைகேட்டு உணர்ந்திடும்
ஐம்பொறியும்
ஒருகாலும் உணராஉள் ளுணர்வின்றிப் பொறிகள்
ஒன்றொன்றாய் உணர்வதுஉள் ளுணர்வைந்தும்
உணரா
ஒருகாலும் பொறிவிகற்பித்து உணராஉள் ளுணர்வுக்கு
உள்ளதுகாண் விகற்பம்இரண் டும்முணர்வது உயிரே.

125. அருவுணர்வு மாய்ஆறும் மாறி மாறி
அங்கங்கே தோன்றியிடில் அகத்துநிலை இன்றி
உருவினொடு பாலதருண விருத்த அவத்தை
உண்டாகாது உறக்கத்தின் உடல்தட்ட அழைப்ப
வருவதுணர்வு எங்கிருந்து நெஞ்சிலிருந்து என்னில்
வாயில்வினை அறிந்துஎழுப்ப ஆயுஅறி யாதாம்
திரியொழிய இடிஞ்சில்தொடத் தீபம்எழாது அடக்கம்
சென்றபொழு தால்உணர்வு நின்றநிலை செப்பே.

126. இச்சைவெறுப்பு இயற்றல்இன்பம் துன்பம் ஞானம்
இவைஅணுவின் குறியாகும் இவற்றில் இச்சை
நச்சிநுகர்ந்து ஒருபழத்தை இனம்கண்டு முன்பு
நான்நுகர்ந்த கனியின்இனம் என்றுநச்சல் பின்பும்
மெச்சவெறுப்பு ஆதிகளும் இப்படியே யாகும்
இவைமுன்பும் பின்பும்உணர்ந் திடுத லாலே
நிச்சயகர்த் தாஒருவன் உளன்என்று நல்லோர்
நிறுத்திடுவர் வெறுத்திடுவர் நின்னுடைய பொருளே.

127. எப்பொருட்கும் இரந்தரமாய் இடம்கொடுத்து நீங்காது
இருள்ஒளிதான் அன்றிஇரண் டினுக்கும்இட
வகையாய்
ஒப்பில்குணம் சத்தமதாய் வாயு ஆதி
உதித்தொடுங்க நிற்கும்வான் உயிர்முன்னே
சொன்னோம்

செப்பிடும்கா லம்பொழுது நாள்ஆதி யாகித்
திரிவிதமாய்த் தீமைநன்மை செய்யும் திக்குத்
தப்பில்குணக் குக்குடக்குத் தெற்குவடக்கு ஆதி
தானாகித் திரியாதே நின்றுபலம் தருமே.

128. காரியமாய் உலகமெலாம் இருத்த லாலே
.கடாதிகள்போல் காரியகர்த் தாஒருவன் வேண்டும்
ஆரியமாய் அறம்பொருளோடு இன்பம்வீடு எல்லாம்
அறைந்துஉயிர்கட்கு அறிவுசெயல் அளிப்பதுநூல் அந்நூல்
சூரியராய் உள்ளவர்கள் ஓத ஓதிக்
கொண்டுவர லால்முன்னே குற்றம் இன்றிச்
சீரியபேர் அறிவுடையோன் செப்ப வேண்டும்
செயலினுக்கும் கரிவேண்டும் சிவன்உளன்என்று அறியே.

129. மரங்கள்உயி ரல்லஎன்று மறுத்துச் சொன்னாய்
வாடுதல்பூ ரித்தலான் மரங்கள்உயி ராகும்
திரங்குநீர் பெறாதுஒழியின் பெறில்சிரத்தை சேரும்
சீவன்அல எனில்உலகில் சீவன் எல்லாம்
உரம்கொள்வது ஊண்பெறில், சோரும்ஊண் பெறாவேல்
உலர்ந்தமரம் நீர்பெற்றால் உய்யாதுஉள் ளுயிர்கள்
கரந்தசினை முட்டைகட்கு வாயில்இன்று வாயில்
கண்டிலதேல் பூத்துக்காய்த்து எழல்மரங்கள் உயிரே.

130. ஒருமரத்தின் உயிரொன்றேல் கொம்புஒசித்து நட்டால்
உய்யும்உயிர் ஒன்றுபல வாமோ என்னில்
கருமரத்தின் வித்துவேர் கொம்புகொடி கிழங்கு
கண்கலந்து கொள்ளும்உயிர் அண்டம் வேர்ப்புத்
தருபிறப்புச் சராயுசங்கள் சனனமும்பெற் றாற்போல்
தானடையும் உற்பீசம் தலம்நடவாது என்னில்
பெருநிலத்தில் காலிலார் நடப்பரோ பேதாய்
பிறப்பின்விதம் அநேகம்காண் பேசுங் காலே.

131. தின்னும்அது குற்றம்இலை செத்ததுஎனும் புத்தா
தின்பையெனக் கொன்றுஉனக்குத் தீற்றினர்க்குப் பாவம்
மன்னுவதுஉன் காரணத்தால் தின்னா தார்க்கு
வதைத்துஒன்றை இடாமையினால் வதைத்தவர்க்கே பாவம்
என்னில்உனை ஊட்டினர்க்குப் பாவஞ் சேர
என்னதவம் புரிகின்றாய் புலால்கடவுட்கு இடாயோ
உன்உடலம் அசுசியென நாணி வேறோர்
உடல்உண்ணின் அசுசியென உணர்ந்திலைகாண் நீயே.

132. குடைநிழலும் கண்ணாடிச் சாயையும்போல் பிறப்புக்
கொள்ளும்உணர்வு என்னிற்கா ரணம்அழிய அழியும்
அடைநிழல்போல் கந்தம்ஐந்தும் அழியும்உனக்கு இங்கே
அவையழிந்தால் அருங்கதியின் அணையும்உணர்வு இன்றாம்
இடைகனவின் எழும்உணர்வு நனவுணர்வு ஆனாற்போல்
எழும்உணர்வு கன்மத்தால் நினைந்தகதி என்னின்
மிடைசினையும் அந்தனும்முட் டையும்உயிர்விட் டக்கால்
மேவுவதுஎன் பிறப்பினுடல் விடாதுகன்ம உணர்வே.

133. ஐந்துகந்தம் சந்தானத்து அழிதல்பந்த துக்கம்
அறக்கெடுகை முத்தியின்பம் என்றறைந்தாய் கந்தம்
ஐந்தும்அழிந் தால்முத்தி அணைபவர்யார் என்ன
அணைபவர்வேறு இல்லைஎன்றாய் ஆர்க்குமுத்தி இன்பம்
ஐந்தின்உணர் வினுக்கென்னில் அழியாதஅவ் உணர்வு உண்டு
ஆகவே எவ்விடத்தும் உருவாதி கந்தம்
ஐந்தும்உள வாம்அதுவும் பந்த மாகி
அரந்தைதரு முத்தியின்பம் அறிந்திலைகாண் நீயே.

134. அநாதிமுத்த னாய்ப்பரனாய் அசலனாய் எல்லா
அறிவுதொழில் அனுக்கிரகம் உடையஅரன் கன்மம்
நுனாதிகம்அற்று ஒத்தவிடத் தேசத்தி நிபாதம்
நுழைவித்து மலங்களெலாம் நுங்க நோக்கி
மனாதிகர ணங்களெலாம் அடக்கித் தன்னை
வழிபடுநல் அறிவுஅருளி மாக்கருணைக் கையால்
இனாதபிறப் பினில்நின்றும் எடுத்து மாறா
இன்பமுத்திக் கேவைப்பன் எங்கள்முத்தி இதுவே.

3. யோகாசாரன் மதம்

135. போதமே பொருளாய்த் தோன்றும்
பொருளதாய் எழலால் போதம்
வாதனை அதனால் கூடி
வருதலால் வடிவி லாமை
ஆதலால் கனவே போலும்
சகம்உளது அறிவே யாம்என்று
ஓதினான் ஓதா னாய
உணர்வினால் யோகா சாரன்.

யோகாசாரன் மதம் மறுதலை

136. போதமும் தவிர வேறுஓர்
வாதனை புகன்றாய் போதம்
வாதனை இரண்டுஉண்டு என்னாய்
போதம்வா தனையும் என்னில்

காதலால் பொருளி னோடு
    கலந்துபின் எழும்க ருத்தாம்
வாதனை கனவு கண்ட
    பொருளின்மேல் வரும்க ருத்தே.

137. அறிவதே பொருளது ஆகில்
    அகம்சடம் என்ன வேண்டும்
பிறிபொருள் ஆகும் பேதித்து
    இதம்பிர பஞ்சம் என்னில்
உறுபொருள் உருவம் தோய்ந்தால்
    உணர்வும் அவ்வுருவாய் நிற்கும்
செறிபொருள் அதுவாய் நிற்கும்
    தெளிபளிங்கு அதுவே போல.

4. மாத்தியமிகன் மதம்

138. அவயவம் பொருளாய்த் தோன்றும்
    அவயவம் அழிந்தால் பின்னை
இவைபொருள் என்ன வேறுஒன்று
    இலாமையால் பொருள்கள் இன்றாம்
அவைபொருள் இலாமை யாலே
    அறிவும்இன் றாகும் என்று
நவைதரு மொழியி னாலே
    நவிலும்மாத் தியமி கன்தான்.

மாத்தியமிகன் மதம் மறுதலை

139. கடத்தினில் அவய வங்கள்
    படத்தினில் புகாமல் காத்தும்
படத்தினில் அவய வங்கள்
    கடத்தினில் புகாமல் கொண்டும்
இடத்தினில் நிற்கும் ஆகும்
    அவயவி இரண்டும் கூடி
உடைத்து ஒரு பொருள் உண்டாகப்
    பொருளும்உண்டு உணர்வும் உண்டே

140. கருவியும் ஒளியும் வேறு
    கருதிடும் கருத்தும் நிற்கப்
பொருள்புண ராமை யாலே
    போதம்வந்து எழுவது இன்றாம்
மருவிடும் பொருள்உண் டாக
    வந்துஎழும் புந்தி ஆனால்
பொருள்உளது ஆகும் ஆகப்
    போதமும் உள்ள தாமே.

5. வைபாடிகன் மதம்

141. அரிசனம் நூறு கூட
அருணம்வந்து எழுந்தால் போல
விரிசகம் பொருள்கள் ஞானம்
விரவிட மேவித் தோன்றும்
தெரிசனம் இதுவே என்று
தெளிந்திடும் தேரர் வீடு
பரிவொடும் அடைவீர் என்று
பகரும்வை பாடி கன்தான்.

வைபாடிகன் மதம் மறுதலை

142. பொருளது புறம்பது ஆகும்
போதம்அந் தரமது ஆகும்
தெருளிடின் இரண்டும் சென்று
சேர்ந்திடும் ஆறது இன்றாம்
அருவுஉணர்வு உருவம் ஞேயம்
ஆதலி னாலும் கூடா
உருஅரு உடைய வைபா
டிகற்குஇனி மாற்றம் இன்றே.

6. அமணரில் நிகண்டவாதி மதம்

143. வாச மாமலர் அசோகு பேணிமறை
நீதி யோடுமலை யும்தவத்து
ஆசை யால்உடை அகன்று மாசினை
அடைந்துஇல் வாழ்தரும் அறத்தினில்
பாச மானது தவிர்ந்து பண்டிபட
உண்டு பாயினொடு பீலிமேல்
நேச மாய்அவை தரித்து ளோர்களில்
நிகண்ட வாதியை நிகழ்த்துவாம்.

144. ஈறி லாதன அநந்த ஞானமுதல்
எண்கு ணங்கள்எனும் ஒண்குணம்
மாறி லாதமதி மேவு சீதம்என
மன்னி வானவர் வணங்கவே
வேறு லாவுகுண ஞான ஆவரணி
ஆதி எட்டினையும் விட்டசீர்
ஏறு பான்மையுடை நீடு வாழ்அருகன்
எங்க ளுக்குஇறைவன் என்றனன்.

145. கருவி கண்படு தொடக்குஒ ழிந்துவரு
காலம் மூன்றில்நிகழ் காரியம்
பெருக நின்றுஒரு கணத்தி லேயுணர்
பெரும் தவக்கடவுள் பீடினால்

மருவி நின்றுவழி பட்ட வர்க்கும் மலைவு
உற்ற வர்க்கும்மனம் ஒத்திடும்
குருசில் எங்கள்இறை என்று பின்னும்நிகழ்
குற்றம் இன்மையது கூறுவான்.

146. பசித்தல் தாகம்பயம் செற்ற மோடுஉவகை
மோக சிந்தனை பழித்தல் நோய்
நசித்தல் வேர்வினொடு கேத மோடுமதம்
வேண்டல் ஈண்டுஅதி சயித்தலும்
புசிப்பு வந்திடு பிறப்பு உறக்கம்இவை
விட்டொர் அட்டகுண பூதனாய்
வசித்த வன்உலகின் மேல்இருந்து ஒருசொல்
இகல னுக்குஅருளும் என்றனன்.

147. அந்த வாய்மொழியி னால் அவன்சரணம்
ஆதி யோகமுதல் ஆன நூல்
இந்த மாநிலம் மயங்கி டாதவகை
இங்கு இயம்பினன் இதன்பொருள்
வந்த காலம்உயிர் தன்ம தன்மிஅறம்
மற்றும் விண்மருவு புற்கலம்
பந்தம் வீட்டினோடு அநாதி யாய்இவை
படைப்பது இன்றிஉள பத்துமே.

148. நிற்ற லோடுதலை போதல் அன்னுவயம்
நிகழ்த்து நீடு எதி ரேகமும்
உற்ற தாம்இவை கணத்தி லேமருவி
உள்ள வாபுரியு மாறுதான்
கற்ற காலம்அளவு எய்தி வாழும்உயிர்
காய மேவிநிறைவு ஆனதே
பெற்று வேறுவரு தன்மை நேர்அறிவு
பெற்ற தாகியுள பேசிலே.

149. பரந்து மீதுதரு மாத்தி காயம் அழி
வித்த நித்தமது பண்ணிடும்
நிரந்து கீழ்அதரு மாத்தி காயம்அது
நித்த மாய்மிக நிறுத்திடும்
புரந்த புண்ணியம் இதற்கு நன்மைபுகல்
பாவம் ஆனஅது தீமையே
தரும்பொ ருட்குஇடமது ஆகும் வானமிகு
புற்க லன்கள் அவை சாற்றுவாம்.

150. ஏணும் ஒன்றுடைய வாகி எங்கும்அணு
வாய் இரும்புகல் மரங்களும்
பூணும் அங்குஉரு எலாமும் ஆகும்இவை
புற்க லப்பொருள்கள் என்னலாம்

காணும் அங்குஅறு வகைத்தொ ழில்கள்அவை
கட்டு விட்டநெறி கன்மம்மேல்
மாண நின்றுவரும் மாறி மாறிமுன்
வகைந்தது உண்டுவிட மாட்சியே.

நிகண்டவாதி மதம் மறுதலை

151. அருக னுக்கு அனந்தஞானம்
ஆதி யாதி யாகவே
பெருக நிற்றல் சீதமா
மதிக்கு அடைந்த பெற்றியேல்
ஒருவும் இட்ட ஒப்பவன்
உயிர்த் திறத்தின் உள்ளபின்
மருவு மிக்க குற்றமேல்
அறத்தின் மன்னி னான்எனில்.

152. அறத்தின் மன்னு வித்தவன்
ஒருத்தனாய் அவன் அறத்
திறத்தில் நிற்றல் மற்றொருத்த
னால்வி ளைந்த செய்தியாம்
மறத்தின் அற்ற வர்க்கெலாம்
வணக்கம் உன் இறைக்கு மேல்
பிறக்கும் இங்கு அவத்தைகொண்டது
ஆரை இன்று பேசிடே.

153. கருவி தன் தொடக்குஒழிந்து
கண்டு வாழும் என்றியேல்
உருவு கொண்டு நின்றதுஎன்னில்
உண்டு தான்ம னாதிகள்
ஒருவி நின்றது என்னில்அத்தம்
ஒன்றையும் உணர்ந்திடான்
பொருள்தெ ரிந்து போகைகாலம்
ஒன்றிலே புணர்ந்திடான்.

154. ஆர்வ கோப மானவை
அடைந்து ஒறுப்ப வர்க்குஎலாம்
சேர்வது இன்மை செப்பில்இன்று
சீவன் மேவு காயமால்
ஒரும் மன்னர் போலவே
உயிர்க்கு அளித்தல் இன்றியே
ஏர்கொள் பொன் எயிலிடத்து
இருத்தல் பெற்றது என்கொலோ.

155. சொல்லது ஒன்று கொண்டு
இகலின் ஆத்தன் நாட வேசொலின்
இல்லை யாம்ம னாதிதான்
இயம்பு மாறது எங்ஙனே

நல்ல வாம்ம னாதிதான்
அவர்க்கு நாட வேயிலை
ஒல்லை ஊமர் ஊமருக்கு
உரைத்த வாறுஅது ஒக்குமே.

156. இன்ப பூமி சேர்இகலில்
நாதன் இவ்வி ருநிலத்
துன்பம் அங்கு உணர்ந்திடாமை
இங்கு அறிந்து சொல்லிடான்
இன்ப பூமி யில்இருந்து
இருந்தி யாவும் எய்திடில்
துன்ப பூமி யாம்உணர்ந்து
சொல்ல வல்லது இல்லையே.

157. நிறைந்து காய மோடுசீவன்
நின்ற தாகில் இவ்வுடல்
குறைந்த போது தானும்இத்தொடு
ஒக்கவே குறைந்திடும்
இறந்து போகும் இக்கடம்
இறந்த போது நீர்க்குடத்து
உறைந்து உடைந்தி டக்குடம்
உலர்ந்த வாறுஅது ஒக்குமே.

158. கண்ட நூல்த ரும்தன்மாத்தி
காய மோடு அதன்மமும்
உண்டு மீது கீழ்உலாவி
உற்று நின்றி டப்பொருள்
கொண்டது என்னில் அத்தமிவ்
இரண்டு தன்மை கூடிடா
வண்டு புட்கள் போல்எனின்
வழங்கிடா கணத்திலே.

159. நீடு பாவ புண்ணியங்க
ளால் நிரய வானகம்
கூடு வோர்கள் இன்றுநின்று
கூட்டு வார்கள் இன்மையின்
ஓடும் மாகணைத் திறத்தின்
உற்ற வாறு உரைத்தியேல்
வீடு மாகணைக்கு நாடும்
வில்லி போல வேண்டுமே.

160. ஏணது ஒன்று புற்கலத்தின்
எய்தும் என்னின் நாசமே
காணல் ஆகும் அக்கடம்
கழிந்த தன்மை இல்லவை

10

பூண வேண்டும் மேலுறும்
    பொருத்தம் இன்மை ஒன்றினின்
மாண வே அணுப்பொருள்
    நிகண்ட வாதி வைத்ததே.

161. ஆறு காரி யங்கள்மாற
    வேத வங்க ளாம்எனின்
மாறி வாணி கம்செயாது
    இருக்க வந்திடா தனம்
மீறி லாத ஊழதுஎன்னின்
    எங்கும் உள்ளது ஊழதே
பேறு காரி யம்விடப்
    பிறப்பது இல்லை பேசிலே.

162. உடல்வ ருந்தல் மாதவங்கள்
    உறுதி என்று உரைத்திடில்
படவ ருந்து நோயினோர்கள்
    படர்வர் பொன்எயில் எனாய்
திடம்வ ருந்தல் இன்பம்இச்சை
    செய்தல் செய்தல் செய்தியேல்
கெடஅ ரிந்தி டாய்உன்நாசி
    கேடில் இன்பம் முன்னியே.

163. பூர்வ கன்மம் அற்றிடப்
    புசித்த பின்பு பொன்னெயில்
நேர்வது என்னின் அக்கன்மத்து
    நிச்சயம் இலாமையில்
தீர்வது இன்மை தீரின்வாயில்
    சேர்வது இன்மை தெண்கடல்
நீர்வ றந்த போதுபூளை
    மீன் அருந்த நின்றதே.

164. கூறு கூவல் மன்னும்அக்
    குடம்கு றித்து நீள்கரை
ஏறல் உற்ற தன்மைநீ
    ஒருத்தர் இன்றி ஏறுதல்
வேறொ ருத்தன் அக்குடத்தை
    மீது நின்று எடுக்கவே
ஏறல் உற்ற தன்மையில்
    சிவன் திறத்தில் நின்றிடே.

7. ஆசீவகன் மதம்

165. என்னுயிர் அதற்குப் போல
    எவர்க்கும் ஒத்து இருப்பன் என்று
தன்னுயிர் வருந்தத் தானும்
    தலையினைப் பறித்துப் பார்மேல்

மன்னுயிர் எவற்றி னுக்கும்
வருந்தவே அறங்கள் சொல்லும்
அன்னதோர் வாய்மை ஆசீ
வகன்அம ணர்களிற் கூறும்.

166. வரம்பிலா அறிவன் ஆதி
வைத்தநூற் பொருள்கள் தாமும்
நிரம்பவே அணுக்கள் ஐந்து
நிலம்புனல் அனல்கால் சீவன்
பரந்திவை நின்ற பான்மை
பாரது கடினம் சீதம்
தரும்புனல் சுடும்தீ வாயுச்
சலித்திடும் உயிர்போ தத்தாம்.

167. பார்புனல் பரக்கும் கீழ்மேல்
படர்ந்திடும் தேயு வாயுச்
சேர்வது விலங்கின் உள்ளம்
அவற்றொடு சேரும் வேறு
சார்வது பெற்ற போது
சார்ந்தஅப் பொருளின் தன்மை
நேர்வதும் ஆகி நிற்கும்
இதுபொருள் நிகழ்த்தும் ஆறே.

168. உணர்தரா அணுக்கள் நான்கும்
ஒன்றுகெட்டு ஒன்றது ஆகா
புணர்தரா ஒன்றில் புக்கொன்று
ஆயினும் பொருந்தி வாழும்
அணைதரா புதிய வந்திங்கு
அழிதரா பழைய வான
இணைதரா ஒன்றுஒன் றாகி
மாறுதல் ஒன்றும் இன்றே.

169. கொண்டுமுன் விரித்தல் நீட்டல்
குறுக்குதல் குவித்தல் ஊன்றல்
உண்டுதின்று உலர்த்தல் மீட்டல்
உடைத்திடல் ஒன்றும் ஒண்ணா
விண்டுபின் புறம்பும் போகும்
வேறுநின்று உள்ளும் மேவும்
பண்டும்இன்று என்றும் எங்கும்
பரந்துஒரு தன்மைப் பாலே.

170. கண்ணினில் காண ஒண்ணாச்
சனித்தஅந்தக் கன்மத் தாலே
நண்ணிடும் உருக்கள் ஆகி
நின்றபின் நரரோ காண்பார்

விண்ணினில் தேவர் காண்பர்
ஓரணு மிக்க நான்காய்
எண்ணிய பொருள்கள் எல்லாம்
இசைவதுஎன்று இயம்பு மின்னே.

171. ஒன்றினை ஒருவி மூன்றங்கு
உற்றிடா இரண்டு விட்டு
நின்றிடா இரண்டு கூடும்
நெறிநிலம் நான்கு நீர்மூன்று
இன்று இரண்டுஅழல்கால் ஒன்றாய்
இசைந்திடும் பூமி இவ்வாறு
என்றுநீர் தீகால் ஆதி
ஈண்டுவது என்று இயம்பும்.

172. வெண்மைநன் பொன்மை செம்மை
கழிவெண்மை நீலம் பச்சை
உண்மைஇவ் ஆறின் உள்ளும்
கழிவெண்மை ஓங்கு வீட்டின்
வண்மைய தாகச் சேரும்
மற்றிவை உருவம் பற்றி
உண்மைஇவ் வொட்டுத் தீட்டுக்
கலப்பினில் உணரும் என்றான்.

173. பேரிழவு இடையூறு இன்பம்
பிரிவிலாது இருக்கை மற்றும்
வேறொரு நாட்டில் சேறல்
விளைந்திடும் மூப்புச் சாதல்
கூறிய எட்டும் முன்னே
கருவின்உட் கொண்ட தாகும்
தேறிய ஊழிற் பட்டுச்
செல்வதுஇவ் உலகம் என்றான்.

174. புண்ணிய பாவம் என்னும்
இரண்டுஅணுப் பொருந்த வைத்தே
எண்ணிய இவற்றி னோடும்
ஏழ்என எங்க ளோடே
நண்ணிய ஒருவன் கூறும்
ஞானம்இவ் வாறது என்று
கண்ணிய கருத்தி னோர்கள்
கதியினைக் காண்பர் என்றான்.

ஆசீவகன் மதம் மறுதலை

175. வாராநெறி வீடானபின்
மண்மேல்அவன் வந்து
தாராமையின் நூலானது
தானோ உளது இன்றாம்

சேராமையில் அணுவானவை
ஐந்தும் ஒரு தேயத்து
ஓராணொரு காலத்தினில்
ஒன்றாம் உணர்வு இன்றாம்.

176. இருபான்மையர் இவர்மண்டலர்
செம்போதகர் என்றே
வருபான்மையர் இவர்மண்டலர்
மண்மேல்வரு நூலும்
தருபான்மையர் எனின்நீதலம்
அதில் வாழ்பவர் தம்போல்
ஒருபான்மையின் உளராகுவர்
உணராது உரை செய்தாய்.

177. உயிரானவை உடல் தீண்டிடல்
ஒட்டுக் கலப்பு எய்தும்
பயில்வால் உணர்வு எய்தும்எனும்
மொழியானவை பழுதாம்
துயிலார்தரும் அவர்பாலகர்
தொடரார்அறி வினைநீ
செயிரார்தரும் உரையேதரும்
இதுவோஉன செயலே.

178. அணுவானவை கீழ்மேல்உள
ஆனால்அவ யவமும்
நணுகாவென லாமேவரின்
நாசம்அவை எய்தும்
அணுகாஎனில் இவைதொள்ளைகொள்
ஆகம்உள வாகுந்
துணிவால்இவை கலவாபல
தொகையாம்வகை இலவாம்.

179. மிகையாம்அணு உளவாகையின்
அவையாம்மிக என்னில்
தொகைநாலிடை யறலால்அவை
தொகும்ஆறில ஆகும்
பகையாகையின் மிசைதாழ்மையின்
நிலையாவகை பண்ணும்
நகையாம்உரை கழிஆயிரம்
அவைதூணென நண்ணா.

180. கூடாஅணு அறியாமையின்
வளிகூட்டுதல் கூறின்
நாடாவளி அணுவானவை
நணுகச்செயும் அவரை

நீடாவினை தன்னால்எனின்
நினைவின்றது இன்றாம்
தேடாய்ஒரு வனைநீஇவை
செய்வான்உளன் என்றே.

8. பட்டாசாரியன் மதம்

181. வேதமே ஓதி நாதன்
இலைஎன்று விண்ணில் ஏறச்
சேதமாம் கன்மம் செய்யச்
செயிமினி செப்பும் நூலின்
நீதியே கொண்டு பட்டா
சாரியன் நிகழ்த்தும் நீர்மை
ஓதநீர் ஞாலத் துள்ளே
உள்ளவாறு உரைக்கல் உற்றாம்.

182. உற்றிடும் காமம் ஆதி
குணங்கள்தாம் உயிர்கட்கு உண்டாம்
மற்றிவை தருமே யாயின்
மறைமொழி வாய்மை இன்றாம்
கற்றிடு நூலால் போதம்
கலப்பது கல்வி இன்றேல்
பெற்றிடு மழவும் மூங்கை
என்னவே பேச லாமே.

183. உண்டுஒரு கடவுள் வேதம்
உரைத்திட உயிரின் தன்மை
கொண்டவன் அல்லன் என்றும்
கூறிடின் உருவம் கூடில்
பண்டைய உயிரே ஆகும்
படித்தநூல் அளவு ஞானம்
கண்டிடும் உருவம் இன்றேல்
கருதுவது இல்லை என்றான்.

184. தேவரும் முனிவர் தாமும்
சித்தரும் நரரும் மற்றும்
யாவரும் உரைப்பர் வேதம்
இயம்பினர் இன்னர் என்னப்
போவதுஅன்று என்று நாளும்
பரம்பரை புகல்வ தாகும்
கூவல்நீர் என்னில் கொள்ளேம்
மறுமையைக் குறித்த லாலே.

185. உன்னிய அங்கம் ஆறும்
மூன்றுஉப வேதம் தானும்
தன்னுளே அடக்கி வேறு
தங்கிடா வகையைச் சார்ந்து

முன்னமோர் தோற்றம் இன்றி
முடிவின்றி நித்தம் ஆகி
மன்னிஓர் இயல்பே யாகி
வழங்கிடும் மறையது என்றான்.

186. செய்தியும் நெறியும் மேவும்
தேவரும் பொருளும் எல்லாம்
எய்திய பன்மை யாலே
ஓர்இயல்பு இயம்பாது ஆகும்
ஐயமில் காலம் மூன்றும்
அறிந்தபின் நெஞ்ச கத்தாய்
மெய்யதாய் வந்து தோன்றி
விளங்கிடும் வேத நூலே.

187. தப்பிலா வாகும் தாதுப்
பிரத்தியம் தன்னி னோடே
ஒப்பிலா தாம்பி ராதி
பதிகமாம் உறுப்பும் கொண்டு
செப்புமாம் வேதம் சொன்ன
விதிப்படி செய்யச் சேம
வைப்பதாம் வீடு பாசம்
மருவலாம் ஒருவ லாமே.

188. போக்கொடு வரவு காலம்
ஒன்றினில் புணர்வது இன்றி
ஆக்கவேறு ஒருவர் இன்றி
அநாதியாய் அணுக்கள் ஆகி
நீக்கிடா வினையிற் கூடி
நிலம்முத லாக நீடி
ஊக்கமார் உலகம் என்றும்
உள்ளதுஎன்று உரைக்க லாமே.

189. நித்தமாய் எங்கும் உண்டாய்
நீடுயிர் அறிவு தானாய்ப்
புத்திதான் ஆதி யாய
கருவியின் புறத்தது ஆகிச்
சுத்தமாய் அருவம் ஆகித்
தொல்லைவல் வினையின் தன்மைக்கு
ஒத்ததோர் உருவம் பற்றிப்
புலன்வழி உணர்ந்து நிற்கும்.

190. செயல்தரும் வினைகள் மாய்ந்து
சிந்தையில் சேர்ந்து நின்று
பயனொடு பலியா நிற்கும்
பலாலமும் தழையும் எல்லாம்

வயல்தனின் மருவி நாசம்
வந்தபின் பலத்தை வந்துஇங்கு
இயல்பொடும் தந்தாற் போல
என்றும்பின் இயம்பு கின்றான்.

191. நீதியால் நித்த கன்மம்
நிகழ்த்திடச் சுபத்தை நீங்கார்
தீதிலா இச்சா கன்மம்
செந்தழல் ஓம்பிச் செய்ய
ஏதுதான் வேண்டிற்று எல்லாம்
எய்தலாம் சோம யாகம்
ஆதிதான் ஆசை வீசி
அமைத்திட வீடு அது ஆமே.

192. கருதிய கன்மம் ஞானம்
இரண்டும்கா லாகக் கொண்டு
மருவிடல் ஆகும் வீடு
மதிதனை மதித்துச் செய்தி
ஒருவிடில் பதிதன் ஆகும்
பதிதனைக் கதியில் உய்க்கத்
தருவதோர் நெறிதான் இல்லை
என்னவும் சாற்றி னானே.

193. பசுப்படுத்து இயாகம் பண்ணப்
புண்ணியம் ஆவது என்று
வசிப்பில்நான் மறைகள் சொன்ன
வழக்கினால் வாய்மை யாக
நசிப்பிலா மந்தி ரங்கள்
நவிற்றலின் இன்பம் ஆகும்
பசிப்புளான் ஒருவன் உண்ணப்
பசியது தீர்ந்த பண்பே.

பட்டாசாரியன் மதம் மறுதலை

194. வேதம் சுயம்புஎன வேதந்த வாய்மொழியில்
வேறும்பிர மாணம் உளதேல்
நீதந்து காண்இங்கு மாதுங்க பாரதமும்
நேர்கண்ட தாகும் அதுபோல்
ஓதும் சொலாய்வருத லானும் கடாதிபட
மோவந்தி டாஒ ருவரா
லேதந்த தாம்மறைக ளாய்வந்த வாய்மொழியும்
வேறுஇந்து சேக ரனதே.

195. உரைதந்தி டான்ஒருவன் எனில்இந்த வானின்இடை
ஒலிகொண்டு மேவி உளதாம்
புரைதந்த வாம்மறைகள் அபிவெஞ்ச மாயொளிர்கை
பொருள்தந்த தீபம் அதுவேல்

வரைதந்த தால்இவ்வுரை கபிலன்சொல் ஆகுமது
மறைகின்ற வாறும் வரவும்
விரைவின் சொலாய்இதனை எதுகொண்டு மேவுவது
விடைகொண்டதால் உன்உரையே

196. உருவின் கணேமருவி வரில்இன்று தேரர்உரை
உளதுஉங்கள் நூலின் மறையும்
தருகின்ற நாதர்அவர் இவர்என்று நாமமது
தரவந்திடாமை அதனால்
வரும்என்று நேடியெனில் வளர்கின்ற தீவதனில்
வருகின்ற ஆடை பலவால்
ஒருதந்து வாயன்அவன் இவனென்ற போதில்இவை
உளஎன்று நீடி யவையே.

197. மறைநின்று நாலுதிசை யவர்ஒன்ற தாகவரும்
உரைதந்த வாய்மை அதனால்
நிறைவென்று நீடும்எனில் வனையும் கடாதிபல
சொலவொன்றி நீடி உளதாம்
குறைவின்றி நாடும்மொழி அவைசென்று கூடுவதொர்
குணமுண்டது ஆகும் மலர்தான்
உறைகின்ற மாலைதனில் உளதென்றது ஆகுமெனில்
உணர்வின்றது ஆழி ஒலியே.

198. உடல்நின்று நாம்உணரும் அதுகண்ட வாறுஒருவன்
உலகங்க ளேஉ ருவமாய்
இடைநின்று மாமறைகள் அவைஅன்று வாய்மொழிய
இவைகொண்டு லோக நெறியின்
கடன்நின்று வாழும்அது கருதும்பின் ஆணைவழி
கருமம்செய் காசினி யுளோர்
திடமென்று சீர்அரசன் உரைதங்கும் ஓலைதிரு
முகம்என்று சூடு செயலே.

199. முடிவின்றி வேதியர்கள் முதல்வந்த மூவர்களும்
மொழியும்சொல் ஆரியம் எனில்
கடிவின்றி யேகணிதர் அவர்கண்ட வாறதுவென்
வடகண்ட சாதி கடியா
ஓடிவின்றி ஓதுவதுஎன் உரைதங்கு வேதமொழி
உளதென்று கூறும் அவர்தாம்
அடியின்று தான்எனும்அது அறிவின்றி ஈனுமவர்
இலையென்ற ஆதர வதே.

200. அறிகின்ற பான்மைஅவ யவம்நின்ற தாகில்அணு
அழியும் கடாதி யெனவே
செறிகின்ற வாறதுஇலை எனின்வந்து சேருமது
திடமன்று கூட ஒருவன்

குறிகொண்டு காரின்முளை வருகின்ற பீசம்அவை
குலையொன்றி வேனில் அழியும்
உறுகின்ற காலமவை உடன்நின்று போயழியும்
உலகென்றும் நீடி யிலதே.

201. நிறைவெங்கு மாகில்உயிர் நெறிநின்று போய்வருதல்
அணைவின்ற தாம் உடலிலே
குறைவின்று எலாமும்உள குடகந்த மாகில்அவை
விடநின்ற வாறு குறியா
உறைகின்ற மாதவர்கள் உடல்நின்று போய்வறிதொர்
உடல்கொண்டு மீள்வது உணராய்
மறைதந்த வாய்மையதில் நிறைவின்றி யேஉலகின்
மலைகின்ற தால்உன் உரையே.

202. அழிகின்ற தால்வினைகள் ஆகின்ற வாறுஎன்எரு
அதுமங்கி யான பரிசேல்
ஒழிவின்றி ஓதனமும் அறவுண்ண நாம்வினைகள்
உறுகின்ற வாறது எனலாம்
கழிகின்ற தால்அறிவு வினைதந் திடாவினைஞர்
கருமங்கள் நாடி உறுவோர்
பழுதின்றி யேஉதவும் அதுபண்ப தாகஅருள்
பரமன்கண் ஆகும் வினையே.

203. கருமங்கள் ஞானமது உடன்நின்ற லால்மருவ
கதிதங்கல் ஆவது எனின்நீ
தரும்அங்க ராகமுதல் அவைதங்க மேலறிவு
தவிரும்பின் வீடும் அணையா
பொருள்நின்று தேடிவரு பயன்உண்டு போகவினை
புரிகின்ற வாறது எனவே
திருநின்ற போகம்வளர் அவிசென்று மேவியது
செலவுண்டு சூழ்வ செயலே.

9. பிரபாகரன் மதம்

204. அருந்தவனாம் சைமினிபண்டு ஆரணநூல் ஆய்ந்தானாய்த்
திருந்தும்உல கினிற்கொண்டு செப்பியநூல் திறமதனைப்
பரிந்துபிர பாகரன்பட் டாசானில் வேறாகிப்
புரிந்துஉரைசெய் நெறியதனைப் புவனிமிசைப் புகன்றிடு
வாம்.

205. அருஞ்செயலின் அபாவத்தே அபூர்வம்எனும் அது
தோன்றித்
தருஞ்செயல்நின்று அழியில்பின் பலிப்பிப்பது ஆகுமது
வருஞ்செயல்ஒன்று இன்றியே மண்சிலைபோ லாம்முத்தித்
தருஞ்செயல்ஈது எனவுணர்ந்து தாரணிமேல் அவன்சாற்றும்.

பிரபாகரன் மதம் மறுதலை

206. வேறுபலன் தருவதுதான் வினையென்று வேதங்கள்
கூறவோர் அபூர்வம்தான் கொடுக்ும்எனக் கொண்டஉரை
மாறுதரும் மறையோடு முன்பின்றி வந்ததால்
தேறியவிண் பூமுடிமேல் சேர்ந்துமணந்து இகழ்ந்ததுவாம்.

207. ஆனந்தம் கதியென்ன அறிவுஅழிகை வீடுஎன்கை
ஊனம்பின் உணர்வழிந்தோர்க்கு உளதாகும் உயர்முத்தி
தானிங்குச் சிவப்பொழியத் தழல்நிற்கும் ஆறில்லை
ஞானங்கெட்டு உயிர்நிற்கும் எனும்உரைதான் நண்
ணாதால்.

10. சத்தப்பிரமவாதி மதம்

208. உரையா னதுமை யலினால் உலகாம்
புரையோர் உணரும் பொருள்பொய் இதனை
விரையாது உணரும் அதுவீடு எனவே
வரையாது உரைவா திவகுத் தனனே.

209. பரிணா மம்விவர்த் தனம்மா யம்அதில்
தருமாம் உலகுள் ளதுசத் தமதே
பொருளா வதுசொல் நலமல் லவெனின்
மருவா துபொருள் திறம்மற்று இலையே.

210. பூமா எனவே உரையும் பொருளும்
ஆமாம் பொருள்ஒன் றில்அணைந்து இலதால்
நாம்ஆ தரவெய்து சொல்நன் கருவாய்த்
தாமாம் பொருள்நெற் பொரிதான் எனவே.

211. சொல்வந்து எழலும் பொருள்தோன் றுதலால்
சொல்லே பொருள்என்று துணிந்திடும்நீ
சொல்லும் பொருளும் உடன்நின் றதெனின்
சொல்லும் பொருள்இன்று சொல்நின் றதுவே.

சத்தப்பிரமவாதி மதம் மறுதலை

212. உரையா னதுமை யலினால் உலகேல்
உரையாய் ஒருமை யலும்உள் ளதெனை
வரையாது உணரும் அதுவண் கதியேல்
வரையா மறையோடு மலைந் தனையே.

213. அருவம் உரையா தலின்அவ் வுருவாய்
மருவும் பரிணா மம்மறந் திடுமாம்
பருகும் ததியானது பாலது எனில்
உருவம் அதுவாய் அழியும் உரையே.

214. ஆயம் உடன்அந் தவிவர்த் தனமும்
மாயவ் வுளதென் றுசொல்எவ் விடமும்
ஆய்நின் றமையின் உரையின் நலமும்
ஆயும் பொருளுக்கு அறிநா மமதே.

215. உரைபோல் பொருளுக்கு உருவின் மையின்அவ்
உரையே பொருள்என் றனைஇன்று அரியென்
உரையே கவிமா லவனுக்கு உளதாம்
உரையாய் கவியா கவொர்மா வினையே.

216. நெல்லில் பொரியா வதுநீடு அழலில்
சொல்லில் பொருள்ஒன் றொடுதொக் கிடலால்
கல்வித் திறமாம் உரைகாட் சியினால்
மல்லல் பொருள்சா லவளம் தருமே.

217. முன்கண் டபொருள் பெயர் ஆதலினால்
பின்கண் டபிழம்பு உணரும் பெயரால்
நன்கண் டபொருட்கு ஒருநா சம்அதின்று
என்கண் டனைகாரணம் இன்று அழிவே.

218. பொருள்இந் திரியம் உணர்வோ டுபுமான்
இருளின் றியிடும் ஒளிஇத் தனையும்
மருவும் பொழுதில் வருஞா னமதின்
ஒருவும் பெயர்அர்த் தம்உதித் திடுமே.

219. அர்த்தம் தெளிதற்கு ஒளியா னதுபோல்
சத்தம் பொருள்தான் அறிதற்கு உளதாம்
நித்தம் அதுவன்று உரைநின்று அழியும்
சித்தன் ஒருவன் உரைசெய் தனனே.

11. மாயாவாதி மதம்

120. நானே பிரமம் என்றுரைத்து
ஞாலம் பேய்த்தேர் எனஎண்ணி
ஊனே புகுந்து நின்றுஉயிர்கட்கு
உபதே சங்கள் உரைத்துவரும்
மானா மதிகே டனுமாய
மாயா வாதி பேயாகித்
தானே உரைக்கும் அந்நூலின்
உண்மை தன்னைச் சாற்றுவாம்.

221. அறிவாய் அகில காரணமாய்
அனந்தா னந்தமாய் அருவாய்ச்
செறிவாய் எங்கும் நித்தமாய்த்
திகழ்ந்த சத்தாய்ச் சுத்தமதாய்க்

குறிதான் குணங்கள் ஒன்றின்றிக்
கூறும் வேதம் தனக்குஅளவாய்ப்
பிறியா அனுபூ திகம்தனக்காய்
நின்றது அந்தப் பிரமம்தான்.

222. ஒன்றாம் இரவி பலபாண்டத்து
உண்டாம் உதகத்து அங்கங்கே
நின்றாற் போல உடல்தோறும்
நிகழ்ந்து நிற்கும் பொருள்மேற்கண்
சென்றாற் போலப் புலன்களுக்கும்
சிந்தை தனக்கும் தெரிவரிதாம்
என்றால் காட்சி முதலாய
இருமூன்று அளவைக்கு எட்டாதால்.

223. இருளில் பழுதை அரவெனவே
இசைந்து நிற்கும் இருங்கதிர்கள்
அருளப் பழுதை மெய்யாகி
அரவும் பொய்யாம் அதுவேபோல்
மருளில் சகமும் சத்தாகி
மருவித் தோன்றும் மாசில்லாத்
தெருளில் சித்தே சத்தாகும்
பித்தாம் சகத்தின் செயல்எல்லாம்.

224. உலகம் தானும் நிருவசனத்து
உண்டாம் இன்றேல் உதியாது
நிலவி உண்டேல் அழியாது
நிற்ப தாகும் மித்தையால்
இலகு சுத்தி கனல்சேர
இன்றாம் வெள்ளி நின்றதாம்
குலவு சகமும் அவிகாரம்
பரமார்த் தத்தில் கொள்ளாதால்.

225. தாங்கும் உலகுக்கு உபாதானம்
சத்தாம் சிலம்பி நூல்தன்பால்
வாங்கி வைத்துக் காப்பதுபோல்
வையம் எல்லாம் தன்பக்கல்
ஓங்க உதிப்பித்து உளதாக்கி
நிறுத்தி ஒடுக்கத்து இலதாக்கும்
ஆங்கு வந்த வாறுஅதனால்
சத்தாம் சகத்தின் அமைவுஎல்லாம்.

226. மன்னும் பிரமம் தனில்வானாய்
வானின் வளியாய் அந்தவளி
தன்னில் அழலாய் அழலின்பால்
சலமாய்ச் சலத்தில் தாரணியாய்ச்

சொன்ன இதனின் மருந்தாகித்
தோற்றும் மருந்தில் அன்னமாய்
அன்னம் அதனில் துவக்குஆதி
ஆறு தாது ஆயினவால்.

227. ஆறு தாதுக் களும்கூடி
வந்த கோசம் அன்னமயம்
மாறில் பிராண கோசமயம்
மன்னும் அதனின் மனோமயம்தான்
வேறு வரும்விஞ் ஞானமயம்
மேவும் அதனின் அதுதன்னில்
கூறி வரும் ஆனந்தமயம்
கோச மயம்பின் கூடியதால்.

228. கோச உருவில் பிரமம்தான்
கூடித் தோன்றும் நீடும்ஒரு
காசம் மருவும் கடந்தோறும்
நின்றால் போலக் கதிரவன்தன்
வீசு கிரணம் உருவின்கண்
வெளிப்பட் டிடுவது அதிற்பற்றும்
பாசம் அதனுக்கு இன்றாகும்
என்றால் பரத்தில் பற்றுண்டோ.

229. அலகின் மணிகள் அவைகோவை
அடைந்த பொழுதின் அங்கங்கே
நிலவும் ஒருநூல் பலநிறமாய்
நின்றால் போல நீடுஉருவம்
பலவும் மருவும் பேதத்தால்
பன்மை யாகும் பிரமம்தான்
குலவு போக போக்கியங்கள்
கொள்ளும் போன்று கொள்ளாதால்.

230. போற்றும் செயலால் பலநாமம்
புனைந்து போக போக்கியத்தில்
தோற்றும் நனவு கனவினுடன்
சுழுத்தி துரியம் எய்தும்இதற்கு
ஏற்ற கரணம் நிரைநிரையே
ஈரேழ் நால்ஒன்று எல்லாமும்
மாற்றி நிற்கும் கேடின்றி
வந்த போகம் மாய்ந்திடவே.

231. கருவி எல்லாம் நான்எனவே
கருதல் பந்தம் அக்கருத்தை
ஒருவ முத்தி உண்டாகும்
உள்ளம் வித்தாம் செய்தியினால்

மருவும் மாயா காரியங்கள்
அவித்தை மாய வேமாயை
பிரியும் பிரிய ஞானம்அது
பிறக்கும் பிறவா பேதமே.

232. ஆன கன்ம அனுட்டயங்கள்
அந்தக் கரண சுத்திதரும்
ஊனம் இன்றி அச்சுத்தி
ஞானம் அதனை உண்டாக்கும்
ஞானம் அதுதான் பிரமத்தை
நானென்று உணர்த்தும் நான்பிறந்தால்
வான மதிநீர்த் துளக்கம்எனக்
காணும் தன்னை மாயையிலே.

233. தானே தானாய் அனுபோகம்
தன்னில் தன்னை அனுபவித்திட்டு
ஊனே உயிரே உணர்வேயென்று
ஒன்றும் இன்றி உரைஇறந்து
வானே முதலாம் பூதங்கள்
மாய மாயா தேமன்னி
நானே பிரமம் எனத்தெளியும்
ஞானம் பிரம ஞானமே.

234. சாற்றும் மறைதத் துவமசிமா
வாக்கி யங்கள் தமைஉணர்ந்தால்
போற்றி அதுநீ ஆனாய்என்று
அறைவது அல்லால் பொருள்இன்றே
தேற்றும் இதனைத் தெளியாதார்
தெளியப் பஞ்ச ஆதனமேல்
ஏற்ற இயம நியமாதி
யோகம் இருநான்கு இயற்றுவரால்.

மாயாவாதி மதம் மறுதலை

235. ஏகம் நானென இயம்பி இப்படி
அறிந்து முத்தியடை மின்என
மோக மானஉரை சோகம் இன்பொடு
முடிந்தி டாதுமலடு ஆகிய
காக மானது கருங்க லின்தசை
பறித்த மும்கரிய குஞ்சியின்
தாக மார்பசி தவிர்க்க வாயிடை
கொடுத்தது என்றுரைசெய் தன்மையே.

236. நீடு வேதம்அள வாக ஏகமெனும்
நீதி தான்நிகழ்வது ஆகுமேல்
நாடி ஞாதிருவும் ஞானம் ஞேயமுடன்
நாளும் நான்மறையும் ஓதலால்
ஓடும் ஆகும்உனது ஏகம் ஓதும்இவை
ஊன மாகிஉரை மாறுகோள்
கூடு மாகும்அனு பூதி தானும்அது
கூடி டாதுஅறிவி லாமையால்.

237. நீதி யால்ஒளிகொள் பானு வானதுஅகல்
நீரி லேநிகழு மாறுபோல்
ஆதி தான்உருவம் ஆய காயம்அதில்
மேவி ஆவதிலை யாகுமாம்
தீதி லாஅருவம் ஆத லால்நிழல்கள்
சேர வேறிடம் இலாமையால்
ஓதில் ஓர்அகலின் நீரிலே ஒருவர்
காண லால்இலதுஉன் ஏகமே.

238. வேறு வாயில்புல னோடு மேல்மனமும்
மேவி டாதுபிர மாணமும்
கூறிடாது அறிவு தான் எனாஉணர்தல்
கோடு நீமுயலின் நாடினாய்
ஈறி லாதபரம் ஏக மேஎன
இயம்பு நீஇசையும் ஞானமும்
பேறது ஆவதிலை பேத மானஇது
பேண வேஉளது பேசிலே.

239. இலகு சோதிமணி எனவும் ஏகம்எனின்
இதனில் ஏகமது விலகினாய்
குலவு காசும்ஒளி அதுவும் நீடிவளர்
குணமும் நாடுவதொர் குணியுமாம்
பலவு மானகுணம் ஒருவும் ஏகமது
எனவும் நீபகரின் நிகரிலா
உலக மானதனை உதவு மாறதிலை
உணர்வு தானுமிலை உணரிலே.

240. புற்றின் நேர்பழுதை தொக்க போதுமயிர்
புளக மாகஅர இரவிலே
உற்றதாம் அதனை ஒக்க வேஉலகு
உதிக்கு மாறும்ஒரு சத்திலே
பெற்ற தாகும்எனின் அப்பி ராந்தியுடை
யோரும் அப்பிரம பேதமாய்
நிற்பர் நீபகரின் முற்றும் ஐயநிலை
பெற்றும் இன்பதுஅது இலாததாம்.

241. ஓதி யேஉலகம் அதனை நீயும்நிரு
வசன மாகஉரை செய்வதுஎன்
பேதை யோய்உளதும் இலதும் அல்லபொருள்
பேசு வாரும்உள ரோசொலாய்
ஆதி யேஉளது வருத லால்இலதில்
ஆவது இன்மைஅது அழிந்துபோம்
நீதி யால்உளது இலாமை நேர்வதுஎனின்
நேர்மை ஆகியது நின்றதே.

242. வேறது ஆகிஅது போல் இருந்தமையில்
வெள்ளி சுத்திஎனில் ஐயமே
கூற லாம்ஒரு பரத்தொடு ஒத்தபொருள்
கொண்டு விண்டநிலை கண்டனம்
மாறி டாதுநிலம் நீர தாகிஅனல்
வாயு வாகிஅவை மாறியும்
சேறி லாதுவிவ காரம் அன்றுபர மார்த்த
மாய்அது செறிந்ததே.

243. மாய நூலது சிலம்பி வாயின்இடை
வந்த வாறுஅதனை மானவே
ஆய தேஉலக மான தும்பிரமம்
அதனி லேஎனில் அடங்கிநின்று
ஏயும் ஆகும்ஒரு சித்தும் அத்துடன்
நிலாதது என்றுபின் இயம்பின்நீ
பேய னேகடம் மிருத்தில் வந்தது
பிறப்பது ஆவதிலை பேசிலே.

244. வேற தாகும்உரு வத்தி லேபரம்
வெளிப்ப டும்என விளம்பில்நீ
ஊறிலா உரு அசத்தி லேபிரமம்
உண்டு தான்உணர்வு இலாததுஎன்
மாறி வாயுவும் அனாதி யானவையும்
வந்தி டாமையினில் இன்றெனில்
ஈறு தான்உடைய தாய தோபிரமம்
என்கொ லோஇவை இறப்பதே.

245. பற்றது இன்றிஉடல் நின்றி டும்பரம்
எனப்ப கர்ந்தனை பரிந்துடன்
உற்றுஉடம்பு நரை திரைகள் நோய்சிறை
உறுப்பு அழிந்துஇவையும் உள்ளபின்
குற்றம் என்றுஇதனை விட்டி டாதுவிட
என்ற லும்குலைவு கொண்டிடும்
பெற்றி கண்டும்ஒரு பற்று அறும்பரிசு
பேச வேஉளது உன்ஆசையே.

246. சோதி மாமணிகள் ஊடு போனதொரு
நூலும் ஆனநிலை சொல்லிடும்
நீதியால் மணிகள்பேத மாகியொரு
நூலில் நின்றமை நிகழ்த்தினாய்
ஆதி தான்ஒருவ னாகி யேபல
அனந்த யோனியில் அமர்ந்தவன்
பேதி யாதநிலை பேசி னாய்உலகு
பேத மேஇலது அபேதமே.

247. ஒத்து நின்றுடலின் இன்ப துன்பமவை
உற்றும் உற்றிடுவது இன்றெனும்
பித்த உன்னுரையில் உற்றதே இலது
பெற்றது இன்இலது பெற்றதேல்
துய்த்தல் என்றுனுறுதல் சீவ பாவமது
சொல்லின் ஒன்றினுந்தோய்வு இலாமைநீ
வைத்து நித்தமன வாக்கு இறந்தபரம்
என்ன மானம்இலை இன்னமே.

248. எங்கும் நின்றிடில் அவத்தை இன்றிடும்
இசைந்திடும் கரணம் என்னில்நீ
அங்கு நின்றபரம் எங்கு ஒளித்ததுஅது
நின்ற தேல்அவை அடங்கிடா
இங்கு நின்றதொரு காந்த மானகல்
இரும்பு சந்நிதி இயங்குநேர்
தங்கி நின்றதுஎனில் நீங்கி மீளும்வகை
தங்கிடாது உன்உரை தப்பதே.

249. இருள்பொ திந்ததுஒரு பரிதி இவ்வுலகில்
இசையில் இன்றுஉடலம் நான்எனும்
மருள்பொ திந்ததொரு பிரமம் இங்குஉளது
மருவி நின்றஉரு ஒருவியே
தெருள்பொ திந்துபரன் நான் எனும்தெளிவு
சென்ற போதுகதி என்றிடும்
பொருள்பொ திந்ததுஎனில் அமல னுக்குமலம்
வருத லால்உளது புன்மையே.

250. சுத்தம் ஆனது பரத்தி னுக்குஅணைவது
இன்று சுத்தமது அநாதிநீ
வைத்த மாயம்உறு சித்து அசுத்தம்உற
மற்று அதற்குமலம் வைத்தனை
ஒத்த சீவன்மலம் கன்மம் மாயைஉறு
கின்ற காரணம் உணர்ந்திடாய்
பித்த னேவிறகி னில்பி றப்பதுஎரி
என்னில் வேறுபொருள் பெற்றதே.

251. உன்னில் நீயும்அனு போகம் என்றபொழுது
உற்றிடும் துவிதம் மற்றுஅதுஇங்கு
என்னில் இல்லைஎனில் இல்லை நீயும்அறி
வின்மை கண்டஇடம் உண்மையேல்
மன்னும் ஓர்உணர்வு வந்திடும் உணர்வு
எலாமும் மாயையெனில் மாயையே
சொன்னது ஓர்பிரமம் ஆயிடும் பிரமம்
மாயை யாய்அறிவு சோருமே.

252. ஆர ணங்கள்தரு தத் துவம்அசிப
தங்க ளின்பொருள் அறிந்திடாய்
காரணம் அதுவும் நீயும் என்றுஇருமை
கண்டு வேறதுஇன்மை கருதிடாய்
நார ணன்பிரம னாலும் நாடரிய
நாய கன்கழல்கள் நண்ணிநீ
ஏர் அணைந்துபொலி சாத னங்கள்கொடு
யோக ஞானமும் இயற்றிடே.

12. பாற்கரியன் மதம்

253. மன்னும் மறையின் முடிவுஎன்று
மாயா வாதி உடன்மலைந்து
பின்னம் ஆகிப் பிரமத்தைப்
பேதா பேதம் சாதித்துப்
பன்னும் ஒருநூல் அதுவாகப்
பாரின் மீது பாற்கரியன்
சொன்ன இதனை இந்நூலின்
அகத்தே தோன்றச் சொல்லிடுவாம்.

254. சித்தே உலகாய்ப் பரிணமித்துச்
சீவ னாகித் திகழ்ந்தமையால்
சத்தே எல்லாம் முத்தியினைச்
சாரக் கண்ட ஞானங்கள்
வைத்தே மொழியும் மாமறைகள்
சொன்ன மரபே வந்தக்கால்
ஒத்தே கெட்டுப் பிரமத்தோடு
ஒன்றாய்ப் போம்என்று உரைத்தனனே.

பாற்கரியன் மதம் மறுதலை

255. இயம்பு கின்றதுஉலகு ஆயி டாதுசடம்
இன்றி நின்றுசட மாகியே
முயங்கு கின்றமையில் இலவணத்து இரதம்
முழுது மேகனதை முயல்கைபோல்

பயந்தது என்னில்அறி யப்ப டும்பொருளும்
அறிவும் என்றுபல ஆகுமோ
தியங்கு கின்றதுஎன் உரைத்தி டாய்கடினம்
ஆதி யாகிவரு சித்தனே.

256. உன்னு கின்றபிர மத்தி லேசிறிதுஇவ்
உலகம் ஆனதென ஓதின்நீ
மன்னு கின்றசில கால மோடுஅழியும்
அழிய வந்துஉதவு மாயையால்
தன்னில் ஒன்றும்எனில் வருத லோடுஇறுதி
தருத லால்அதுச டத்ததாம்
உன்னொடு அச்சகமும் உண்மை யன்றுசடம்
என்ன வேஉறுதி மன்னுமே.

257. வித்தெ ழுந்துமர மாய்வி ளைந்தமை
விளம்பி னாய்உவமை வேறுநீ
நித்தம் என்றஉரை பொய்த்து நீடுசட
மாய் எழுந்துஅழியும் நின்பரம்
ஒத்து எழும்பொழுது வித்தி னுக்குஅவனி
உண்டு தாரகம் உனக்குஎனா
பித்தன் என்றுஉலகு உரைத்தி டும்பிரமம்
ஆயி னாய்இவைபி தற்றியே.

258. சூட கம்கடகம்மோதி ரம்சவடி
தொடரொடு ஆரம்முடி தோடுநாண்
ஆட கம்தருவ தாகும் இப்படி
அனைத்தும் அப்பிரமம் ஆகுமேல்
நீடும் அப்பணிகள் செய்து ளோர்அவை
புனைந்து ளோர்களை நிகழ்த்திடும்
நாடி டும்சகம் இயற்று வோர்கொடு
நடத்து வோர்உளர்ந விற்றிலே.

259. அறிவி னோடுசெயல் மாறில் வீடுஅதனை
அணுக ஒணாதுஅவை இரண்டினால்
உறுதி யானபிர மத்தி னோடுஅழிய
ஒன்ற லாம்என உரைத்திகாண்
இறுதி யேல்அதனொடு இசைவது இன்றுஇசைவது
உள்ள தாயிடின்அவ் இன்பமே
பெறுதி நீஉடலொடு உயிர்க ளாய்அறிவு
பிரியு மாறுசெயல் பெறுவதென்.

13. நிரீச்சுரசாங்கியன் மதம்

260. மூலம் புரியட் டகம்விகிர்தி
ஆகி மூன்றாய்ப் பிரகிருதி
தூலம் சூக்கம் பரமாய் அச்
சுத்த புருடன் சன்னிதியில்

பாலன் சேட்டை புரிந்துஉலகம்
யோனி பலவாய்ப் பரந்துஓடுங்கும்
சால என்று நிரீச்சுவர
சாங்கி யன்தான் சாற்றிடுமே.

நிரீச்சுரசாங்கியன் மதம் மறுதலை

261. சுத்தன் அறிவன் புருடன்எனில்
சூழா தாகும் பிரகிருதி
பெத்தம் நீங்கி னாலும்பின்
பெத்தன் ஆவன் பேரறிவால்
கத்தம் மேவும் பிரகிருதி
கண்டு கழிக்க மாட்டானேல்
முத்தன் ஆகான் சுத்தனுக்கு
மூலப் பிரகி ருதிஇலையாம்.

262. புருடன் பிரகி ருதிபெற்றால்
போதம் சிறிதுஅங்கு உண்டாகிக்
குருடன் முதுகில் முடவனிருந்து
ஊர்ந்தாற் போலப் பிரகிருதி
இருள்தன் னிடத்தே இருந்துஇயங்கும்
கன்மால் இறையன்று இரண்டினையும்
மருள்தன் உருவாய்ச் சேட்டிப்பித்து
அறியும் அமலன் அரனேயாம்.

263. அறியான் புருடன் பிரகிருதி
அசேத னம்கா ரியத்தினுக்குக்
குறியாய் நாதன் உளன்என்று
கூறும் முத்தி விவேகம்எனில்
செறிவாம் தளைபோ காதுஅறியில்
சேர்த்தோன் வேண்டும் செயலிற்போம்
நெறியால் பணிசெய்து உடல்பாசம்
நீக்கிக் கொள்நீ நின்மலனால்.

14. பாஞ்சராத்திரி மதம்

264. ஆதியாய் அருவம் ஆகி
அகண்டபூ ரணமாய் ஞானச்
சோதியாய் நின்ற மாயன்
சுவேச்சையால் உருவு கொண்டு
நீதியார் கருணை யாலே
நீள்கடல் துயின்று நூலும்
ஓதினான் என்று பாஞ்ச
ராத்திரி உரைப்பன் உற்றே.

265. உந்தியில் அயனை ஈன்றும்
அவனைக்கொண்டு உலகு உண்டாக்கி
அந்தநல் உலகு அழிக்க
அரனையும் ஆக்கு வித்துத்
தந்திடும் சகத்தி னுக்குத்
திதிகர்த்தா தானே யாகி
வந்திடும் தோற்றம் ஈறு
நிலைமையும் பண்ணும் மாயன்.

266. மீன்ஆமை கேழல் நார
சிங்கம்வா மனனாய் வென்றி
ஆனாத இராமர் மூவர்
ஆயனாய் அளித்தான் கற்கி
தானாயும் வருவன் இன்னம்
என்றுஅவன் சாற்றித் தேவர்
கோனாயும் நிற்பன் என்று
கூறுவன் குறிப்பி னோடே.

267. ஏழ்கடல் செலுவில் ஏற்றும்
இருங்கிரி முதுகில் ஏற்றும்
தாழ்தலம் முழுதும் கண்டும்
தபனியன் உடல்பி ளந்தும்
வாழுலகு அளந்தும் மன்னாய்
மன்னர்க்கு மன்ன ராயும்
பாழ்பட உழறிப் பாரும்
நோக்கும்பின் பரியும் ஆயே.

268. பொய்கைவாய் முதலை வாயில்
போதகம் போத மாட்டாது
ஐயனே நாதா ஆதி
மூலமே என்று அழைப்ப
உய்ய யாம் பணிமால் ஓலம்
ஓலமென்று ஓடிச் சென்று
வெய்யவாய் முதலை வீட்டிக்
கரிக்கும்வீடு அருளி னானே.

269. அலைகடல் கடைந்தும் வானோர்க்கு
அமுதினை அளித்தும் தீய
கொலைபுரி அசுரர் தம்மைக்
கொன்றுஉல கங்கள் காத்தும்
கலைமலி பொருள்அன் பர்க்குக்
கருணையால் உரைத்தும் மிக்க
தலைமையில் நிற்பன் மாயன்
என்றும்பின் சாற்றி னானே.

270. மாயையாய் உயிராய் மாயா
காரியம் ஆகி மன்னி
மாயையால் பந்தம் செய்து
வாங்கிடும் அவனால் அன்றி
மாயைபோ காதுஎன்று எண்ணி
மாயனை வணங்கப் பின்னை
மாயைபோம் போனால் மாயன்
வைகுண்டம் வைப்பன் அன்றே.

பாஞ்சராத்திரி மதம் மறுதலை

271. ஆதிதான் ஆகில் ஆதிக்கு
அந்தம்உண் டாகும் அந்தக்
கோதிலான் இறைவன் என்று
கூறிடும் வேதம் ஞானச்
சோதியாய் நின்றான் ஆகில்
தோய்ந்திடான் மாயை ஞானத்
தீதிலா உருவம் என்னில்
சேர்ந்திடான் தாதுச் சென்றே.

272. தாதுவா னதுஏது என்னில்
சங்கரன் பலிக்குச் செல்லத்
தீதிலாக் கோதண் டத்தைத்
திறந்துஅவன் விட்ட போது
போதுவது உதிரம் அன்றோ
போந்துமூர்ச் சித்து வீழ்ந்தான்
நாதனார் எழுப்பப் பின்னே
நடந்தனன் கிடந்த வன்தான்.

273. இச்சையால் உருவம் கொள்வன்
அரிஎனில் இகழ்வேள் விக்கண்
எச்சனாய் உண்ணப் புக்குஅங்கு
இருந்தஅன்று ஈச னாலே
அச்சமார் தலை அறுப்பு உண்டு
ஆன்தலை ஆக்கிக் கொள்ளான்
நச்சினார் போற்ற நாதன்
நாரணன் தலைகொ டுத்தான்.

274. நூலினை உரைத்து வேத
நூலினை நுவலும் வண்ணம்
மால்அருள் செய்தான் என்றாய்
மறைநீதி உலகி யற்கை
சாலவே தெரியா தாகிக்
கிடந்தநாள் சகத்து யார்க்கும்
ஆலின்கீழ் இருந்து வேதம்
அருளினான் அறைந்தான் நூலே.

275. அயன்தனைப் பயந்தான் என்றாய்
அரிஅயன் சிரம்சே திப்பப்
பயந்திடான் தலை மால் தானும்
படைத்திடான் சிரத்தைக் கிள்ளும்
சயம்தரும் அரனைத் தந்தான்
அயன்என்கை தப்பே அன்றோ
தியங்கிடாது உணராய் எல்லாம்
சிவன்செயல் என்று தேர்ந்தே.

276. சீவர்கள் சனனம் போலச்
சிலர்வயிற்று உதித்த மாலைத்
தேவுஎன்றே வையம் காக்கச்
சுவேச்சையால் செனித்தான் என்பாய்
பூவன் பின் படைக்க மாட்டாது
அரனடி போற்ற வேதக்
கோவந்து முகத்தில் தோன்றிச்
சிருட்டியைக் கொடுத்தல் கூறும்.

277. நாரணன் அயனை ஈன்றும்
அயனும்நா ரணனை ஈன்றும்
காரணம் ஒருவ ருக்குஅங்கு
ஒருவர்தாம் இருவ ருக்கும்
வாரணம் உரித்த வள்ளல்
காரணன் என்று மன்ற
ஆரணம் உரைக்கும் பக்கத்து
அவர்களும் அடைந்தார் அன்றே.

278. அழிப்புஅரி ஏவல் என்றாய்
அரிதனை அழிக்கும் அன்றுஅங்கு
அழிப்பது தவிர்க்க மாட்டான்
அங்கமும் அழித்தே பூண்டான்
அழிப்புஅரி ஏவல் என்றுஅங்கு
அறைந்ததும் அழிந்தது அன்றோ
அழித்திடும் அரனே ஆக்கம்
நோக்கமும் ஆக்கு வானே.

279. வானம்கீழ் மண்ணும் எல்லாம்
மாயனே காப்பான் என்றாய்
தான்அஞ்சும் சலந்த ரன்றன்
உடல்கீண்ட சக்க ரத்தை
ஆன்அஞ்சும் ஆடு வான்பால்
பெற்றுஉலகு அளித்த வார்த்தை
தானெங்கும் ஆகும் எல்லாம்
சங்கரன் காப்பே ஆமே.

280. மாலினார் சேலி னாராய்
வாரிகள் அடக்கிக் கொண்டு அன்று
ஆலியா உலகம் எல்லாம்
அழிப்பவன் நானே என்னச்
சேலினார் தமைப் பிடித்துச்
செலுவினை இடந்து கண்ணைச்
சூலியார் மேல் அணிந்தான்
சூலிதான் ஆகும் அன்றே.

281. ஆமையாய் மேருத் தாங்கி
அடைகலாய்க் கிடந்த போது
நாம்எனா உலகு ஆதார
நாதன்என்று அகந்தை பண்ண
ஆம்எனார் அன்றும் என்னார்
அமரரும் அரனார் பார்த்துத்
தாம்அநாள் ஆமை யாரைத்
தகர்த்துஓடு தரித்தார் அன்றே.

282. எழுதலம் இடந்து பன்றி
யாய்இருங் கொம்பில் ஏற்றுத்
தொழுதுஉலகு இறைஞ்ச நின்ற
சோதிநான் என்ற போதுஅன்று
அழுதுஅல மந்து வீழ
அருங்கோடு பறித்து அணிந்தான்
கழுதுஅல மந்த காட்டில்
ஆடிடும் கடவுள் அன்றே.

283. இங்குஅடா உளனோ மால்என்று
இரணியன் தூணை எற்ற
உங்கள்தா மோத ரன்தான்
உருநர சிங்க மாகி
எங்கடா போவது என்னா
உடல்பிளந்து இறை யான் என்ன
அங்கடா சிம்பு ளாகி
எடுத்துஅடர்த் தான் அரன்தான்.

284. தானம்என்று இரந்து செல்லத்
தனக்குழு வடிகொ டுப்ப
வானமும் அளந்து கொண்டு
மாவலி தன்னைப் பின்னை
ஈனமாம் சிறையில் இட்டான்
இறையன்றுஒன்று ஈந்தோர் தங்கட்கு
ஊனம்செய் திடுவோர் தாங்கள்
உத்தமர் அல்லர் ஆகும்.

285. மாயமான் தன்னைப் பொய்ம்மான்
எனஅறி யாது அரக்கன்
மாயையில் அகப்பட் டுத்தன்
மனைவியைக் கொடுத்தான் தன்னை
மாயைக்குக் கர்த்தா என்பை
மதிகெட்டுஅங்கு அவனைக் கொன்று
நாயனார் தமைப்பூ சித்தான்
கொலைப்பாவம் நணுகி டாமே.

286. பரசுடன் பிறந்தான் தானும்
பத்தனாய்ப் பரசி னாலே
அரசுஅறுத்து அரனை நோக்கி
அருந்தவம் புரிந்தான் அன்று
பரசிய பரசு ராமன்
பலதேவன் உலகம் எல்லாம்
உரைசெயும் உமையாள் கோனை
உள்நினைந்து யோகில் நின்றான்.

287. ஓதிய வாசு தேவர்
தமைஉப மனியு தேவர்
தீதிலா நோக்கம் செய்து
சிவகரம் சிரத்தில் சேர்த்தி
ஆதிபால் அடிமை ஆக்க
அரிஉடல் பிராணன் அத்தம்
ஈதெலாம் கொள்நீ என்றுஅங்கு
இறைஞ்சினார் அறிந்தி டாயே.

288. பின்வரும் பரிதான் ஆகி
அரிஎன்றாய் பின்பு வந்தால்
என்வரும் ஈச னால்என்று
அறிகிலோம் இவுளி யார்க்கு
முன்வரும் அவதா ரங்கள்
முடிந்தமை அறிந்தாய் அன்றே
பொன்வரும் சடையி னான்தன்
புகழ்எங்கும் புக்கது அன்றே.

289. கைவரை மூல மேயோ
எனக்கரிக்கு உதவும் காட்டின்
மொய்வரை எடுத்தான் மூலம்
ஆயிட வேண்டு மோதான்
ஐயனே முறையோ என்றால்
அரசனோ அங்குச் செல்வான்
வையகம் காப்பான் செல்கை
வழக்குஅன்றோ ஊர்காப் பான்போல்.

290. அன்றியும் யானை மாலுக்கு
அடிமையாய் மூல மேயோ
என்றிடும் அதனால் மால்தான்
இறைவன்என்று இயம்ப வேண்டா
உன்றனக்கு அடிமை ஆனார்
உன்னைஎம் பெருமான் என்றால்
இன்றுநீ வணங்கும் உன்றன்
எம்பெரு மானோ நீயே.

291. ஞாலம்உண் டவனால் உண்டார்
நல்லமுது அமரர் என்றாய்
வேலைநஞ்சு எழமா லாதி
விண்ணவர் வெந்து சென்ற
காலம்இன்று எமக்குக் காவாய்
கடவுளே என்ன நாதன்
ஆலம்உண் டிலனேல் தேவர்
அமுதம்உண் டிடுவது எங்கே.

292. அஞ்சிஅன்று அரிதான் ஓட
அசுரனைக் குமர னாலே
துஞ்சுவித்து ஒருபெண் ணாலே
தாரகன் உடல்து ணிப்பித்து
அஞ்சிடப் புரம்தீ யூட்டிச்
சலந்தரன் உடல்கீண்டு ஓத
நஞ்சினை உண்டும் அன்றோ
நாயகன் உலகம் காத்தான்.

293. பார்த்தனார் இரதம் ஏறிப்
படைதனைப் பார்த்துச் சார்பைக்
கூர்த்தஅம் பாலே எய்து
கொன்றுஅர சாளேன் என்னத்
தேர்த்தனில் இருந்து மாயை
செய்துமால் கொல்லச் செப்பும்
வார்த்தைநூல் ஆக்கிக் கொண்டாய்
புரங்கொல்நூல் மதித்தி டாயே.

294. மாயைதான் உயிர்கள் ஆகாது
உயிர்கள்தாம் மாயை ஆகா
மாயவன் இவைதான் ஆகான்
இவைதானும் மாயன் ஆகா
ஏயுமாம் அனாதி யாக
இறைபசு பாசம் என்றே
தூயவன் கலப்பி னாலே
எல்லாமாய்த் தோன்று வன்காண்.

295. பாசத்தைப் பசுக்கள் விட்டுப்
பதியினை அடைய முத்தி
ஆசற்ற ஆக மங்கள்
அறைந்திட அறிவின்று இங்கே
மாசற்ற மால்மா சாகி
மாயையும் உறுவன் என்னில்
கூசிப்பின் கொள்ளார் நல்லோர்
உனக்காம்இக் குழப்பு நூலே.

296. பிரமம்நான் என்ற போது
பிரமனோடு அரியும் கூடி,
பரமனார் இகலி டாமல்
பார்த்துஇடர் பண்ணி நின்ற
உரமனார் அழல் உருபம்
தன்னையும் உணர மாட்டான்
கரம்மன் ஆள் திகிரி ஏற்றான்
கடவுள்என்று அறைவது என்னே.

297. தேர்அரி இறையன்று என்றே
சிவமுனி ததீசி யோடே
போர்புரிந்து இகல மாலைப்
புக்கவன் பிடித்து அடித்து
மார்பினில் உதைத்து மால்தன்
சக்கரம் வயிற்றில் வைத்திட்டு
ஏர்மலி படைப டைத்திட்டு
அரிபட எறிந்தான் அன்றே.

298. சூலிகாண் இறை, மால் அல்லன்
சூலியைத் தொழும்துர் வாசன்
மாலினார் மார்மி திப்பத்
திருமறு மார்பன் ஆகி
நூலினார் மார்பன் நோன்தாள்
பட்டிடம் சுத்தம் என்று
பாலினார் கடலான் ஆங்கே
பரிவொடும் திருவை வைத்தான்.

299. தவகுண னாய்மால் சென்று
தீவியைச் சக்க ரத்தால்
அவகுணம் செய்துஅன்று ஓடப்
பிருகுவந்து அவளைப் பார்த்துச்
சிவன்அலது அறியேன் ஆகில்
இதுசெய்தோன் செறிக பத்துப்
பவம்என மொழிய மாலும்
பயப்பட்டுப் பதறி வீழ்ந்தான்.

300. பயப்பட்டுப் பரனை நோக்கித்
    தவம்பண்ணப் பரனும் தோன்றி
நயத்துஅஞ்சல் என்று வேண்டிற்று
    என்னென நார ணன்தான்
பெயர்த்தருள் பிருகு சாபம்
    எனஅன்பன் பிருகு என்ன
உயக்கொள்நீ பவம்தோறு என்ன
    ஓம்என்றான் உலக நாதன்.

301. இப்படிப் பிருகு சாபத்து
    ஈரைந்து பிறப்பில் வீழ்ந்து
மெய்ப்படு துயரம் உற்று
    வருபவன் விமலன் அல்லன்
எப்படி யானுஞ் சொன்னேன்
    இறைஅரி அல்லன் என்றே
மைப்படி கண்டன் அண்டன்
    மலரடி வணங்கி டாயே.

சிவஞான சித்தியார் பரபக்கம்

முற்றிற்று.

சைவசித்தாந்த சந்தானாசாரியர்கள்

அகச்சந்தானம்

(1) திருநந்திதேவர் (2) சனற்குமாரமுனிவர்
(3) சத்தியஞான தரிசனிகள் (4) பரஞ்சோதி முனிவர்

புறச்சந்தானம்

(1) மெய்கண்டார் (2) அருணந்தி சிவாசாரியார்
(3) மறைஞான சம்பந்தர் (4) உமாபதி சிவாசாரியார்

சிவஞான சித்தியார்ப் பரபக்கத்தில் அடங்கிய கொள்கையும் மறுப்பும்

1.	உலகாயதன் கொள்கை	12–32
	உலகாயதன் கொள்கை மறுப்பு	33-63
2.	சௌத்திராந்திகன் கொள்கை	64–94
	சௌத்திராந்திகன் கொள்கை மறுப்பு	95–134
3.	யோகாசாரன் கொள்கை	135
	யோகாசாரன் கொள்கை மறுப்பு	136–137
4.	மாத்தியமிகன் கொள்கை	138
	மாத்தியமிகன் கொள்கை மறுப்பு	139–140
5.	வைபாடிகன் கொள்கை	141
	வைபாடிகன் கொள்கை மறுப்பு	142
6.	நிகண்டவாதிக் கொள்கை	143–150
	நிகண்டவாதிக் கொள்கை மறுப்பு	151–164
7.	ஆசீவகன் கொள்கை	165–174
	ஆசீவகன் கொள்கை மறுப்பு	175–180
8.	பட்டாசாரியன் கொள்கை	181–193
	பட்டாசாரியன் கொள்கை மறுப்பு	194–203
9.	பிரபாகரன் கொள்கை	204–205
	பிரபாகரன் கொள்கை மறுப்பு	206–207
10.	சத்தப் பிரமவாதிக் கொள்கை	208–211
	சத்தப்பிரமவாதிக் கொள்கை மறுப்பு	212–219
11.	மாயாவாதிக் கொள்கை	220–234
	மாயாவாதிக் கொள்கை மறுப்பு	235–252
12.	பாற்கரியன் கொள்கை	253–254
	பாற்கரியன் கொள்கை மறுப்பு	255–259
13.	நிரீச்சுர சாங்கியன் கொள்கை	260
	நிரீச்சுர சாங்கியன் கொள்கை மறுப்பு	261–263
14.	பாஞ்சராத்திரிக் கொள்கை	264–270
	பாஞ்சராத்திரிக் கொள்கை மறுப்பு	271–301

உ

திருச்சிற்றம்பலம்

திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியார்

அருளிய

சிவஞான சித்தியார்

சுபக்கம்

காப்பு

1. ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தரும்ஒருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டுஅன் பொடும்வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகுஒட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்
றோஎன்னச் செய்யும் தேவே.

பாயிரம்

மங்கல வாழ்த்து

சிவபெருமான்

2. அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய் வேறாம்
குறியது உடைத்தாய் வேதஆ
கமங்களின் குறி இறந்துஅங்கு
அறிவினில் அருளால் மன்னி
அம்மையோடு அப்பன் ஆகிச்
செறிவுஒழி யாது நின்ற
சிவனடி சென்னி வைப்பாம்.

முன்னூல் சிறப்பு

3. என்னைஇப் பவத்தில் சேரா
வகைஎடுத்து என்சித் தத்தே
தன்னைவைத்து அருளி னாலே
தாள்இணை தலைமேல் சூட்டும்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய்
மேவிவாழ் மெய்கண் டான்நூல்
சென்னியில் கொண்டு சைவத்
திறத்தினைத் தெரிக்கல் உற்றாம்.

நுதலியபொருள் முதலியன

4. பண்டைநல் தவத்தால் தோன்றிப்
பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய
கதியினில் தொகுப்பன் மார்க்கர்
கண்டநூல் ஓதி வீடு
காதலிப் பவர்கட்கு ஈசன்
புண்டரி கத்தாள் சேரும்
பரிசினைப் புகலல் உற்றாம்.

அவையடக்கம்

5. மறையினால் அயனால் மாலால்
மனத்தினால் வாக்கால் மற்றும்
குறைவிலா அளவி னாலும்
கூறொணா தாகி நின்ற
இறைவனார் கமல பாதம்
இன்றுயான் இயம்பும் ஆசை
நிறையினார் குணத்தோர்க்கு எல்லாம்
நகையினை நிறுத்தும் அன்றே.

ஆசங்கை நீக்கல்

6. அருளினால் ஆக மத்தே
அறியலாம் அளவி னாலும்
தெருளலாம் சிவனை ஞானச்
செய்தியால் சிந்தை உள்ளே
மருளெலாம் நீங்கக் கண்டு
வாழலாம் பிறவி மாயா
இருளெலாம் இரிக்கல் ஆகும்
அடியரோடு இருக்க லாமே.

பாயிரம் முடிந்தது

அளவை இயல்

7. அளவை காண்டல் கருதல் உரை
அபாவம் பொருள்ஒப்பு ஆறுஎன்பர்
அளவை மேலும் ஒழிபு உண்மை
ஐதிகத்தோடு இயல்புஎனநான்கு
அளவை காண்பர் அவையிற்றின்
மேலும் அறைவர் அவையெல்லாம்
அளவை காண்டல் கருதல் உரை
என்றுஇம் மூன்றின் அடங்கிடுமே.

8. மாசறு காட்சி ஐயம்
திரிவுஇன்றி விகற்பம் முன்னா
ஆசற அறிவது ஆகும்
அனுமானம் அவினா பாவம்
பேசுறும் ஏதுக் கொண்டு
மறைபொருள் பெறுவது ஆகும்
காசறும் உரைஇம் மானத்து
அடங்கிடாப் பொருளைக் காட்டும்.

9. கண்ட பொருளை இரட்டுறவே
கருதல் ஐயம் திரியவே
கொண்டல் திரிவாம் பெயர் சாதி
குணமே கன்மம் பொருள்எனஐந்து
உண்டுஅவ் விகற்ப உணர்வினுக்குப்
பொருளின் உண்மை மாத்திரத்தின்
விண்டல் இல்லா அறிவாகும்
விகற்பம் இல்லாக் காட்சியே.

10. காண்டல் வாயில் மனம் தன்வே
தனையோடு யோகக் காட்சிஎன
ஈண்டு நான்காம் அனுமானம்
தனக்கும் பிறர்க்கும் என்று இரண்டாம்
மாண்ட உரை தந்திரம் மந்திரத்தோடு
உபதே சச்சொல் எனமூன்றாம்
பூண்ட அளவைக்கு எதிர்புலன்தன்
இயல்பு பொது என்று இரண்டாமே.

11. அன்னிய சாதி யும்தன்
சாதியும் அகன்று நிற்றல்
தன்னியல்பு அன்னி யத்தைத்
தவிர்ந்துதன் சாதிக்கு ஒத்தல்
துன்னிய பொது இயற்கை
சொன்னஇவ் இரண்டின் உள்ளே
மன்னிய பொருள்கள் யாவும்
அடங்கிடும் மானம் உற்றால்.

12. உயிரின்ஓடு உணர்வு வாயில்
ஒளிஉரு ஆதி பற்றிச்
செயிர்உறு விகற்பம் இன்றித்
தெரிவதுஇந் திரியக் காட்சி
அயர்வில்இந் திரிய ஞானம்
ஐம்புலன் சார்ந்து உயிர்க்கண்
மயர்வுஅற வந்த ஞானம்
மானதக் காண்ட லாமே.

13. அருந்துஇன்பத் துன்பம் உள்ளத்து
அறிவினுக்கு அராகம் ஆதி
தரும்தன்வே தனையாம் காட்சி
சமாதியால் மலங்கள் வாட்டிப்
பொருந்திய தேச கால
இயல்புஅகல் பொருள்கள் எல்லாம்
இருந்து உணர்கின்ற ஞானம்
யோகநற் காண்டல் ஆமே.

14. பக்கம் மூன்றின் மூன்றுஏது
உடைய பொருளைப் பார்த்துஉணரத்
தக்க ஞானம் தன்பொருட்டாம்
பிறர்தம் பொருட்டாம் அனுமானம்
தொக்க இவற்றால் பிறர்தெளியச்
சொல்லல் ஆகும் அச்சொல்லும்
மிக்க அன்னு வயத்தினொடு
வெதிரே கச்சொல் எனஇரண்டாம்.

15. மூன்று பக்கம் பக்கம் நிகர்
பக்கம் நிகரில் பக்கம்எனத்
தோன்றும் பக்கம் துணிபொருளுக்கு
இடமாம் உவமை நிகர்பக்கம்
ஆன்ற பொருள்சென்று அடையாத
இடமாம் நிகரில் பக்கம்முதல்
ஏன்ற இரண்டும் பொருள்உண்மைக்கு
இடமாம் ஒன்று பொருள்இன்றாம்.

16. ஏது மூன்றாம் இயல்புகா
    ரியத்தோடு அநுப லத்திஇவை
ஓதின் இயல்பு மாமரத்தைக்
    காட்டல் உறுகா ரியம்புகைதன்
ஆதி யாய அனல்காட்டல்
    ஆகும் அநுப லத்திஅது
சீதம் இன்மை பனிஇன்மை
    காட்டல் போலும் செப்பிடினே.

17. புகையால் அனல்உண்டு அடுக்களைபோல்
    என்னப் புகறல் அந்நுவயம்
வகையாம் அனல் இலாஇடத்துப்
    புகையின்று ஆகும் மலரினொடு
முகையார் நீரில் போல்என்று
    மொழிதல் வெதிரே கச்சொல்இவை
தொகையார் உறுப்புஐந் தொடும்கூடச்
    சொல்லு வாரும் உளர்துணிந்தே.

18. போது நாற்றத் தால்அறிதல்
    பூர்வக் காட்சி அனுமானம்
ஓதும் உரையால் அறிவின்அளவு
    உணர்தல் கருதல் அனுமானம்
நீதி யால்முற் கன்மபலம்
    நிகழ்வது இப்போது இச்செய்தி
ஆதி யாக வரும்பயன்என்று
    அறிதல் உரையால் அனுமானம்.

19. அநாதியே அமலன் ஆய
    அறிவன் நூல்ஆக மம்தான்
பின்ஆதிமாறு இன்றிப் பேணல்
    தந்திரம் மந்தி ரங்கள்
மனாதிகள் அடக்கித் தெய்வம்
    வழிபடும் வாய்மை ஆகும்
தன்ஆதிஈறு இலாதான் தன்மை
    உணர்த்துதல் உபதே சம்தான்.

20. ஈண்டு பக்கப் போலிநான்கு
    ஏதுப் போலி ஒருமூன்றாய்
வேண்டும் எழுமூன்று ஆகும்விளங்கு
    உவமைப் போலி ஈர்ஒன்பான்
காண்டும் தோல்வித் தானம்இரண்டு
    இருபத்து இரண்டாம் கருதில்இவை
யாண்டும் மொழிவர் அவையெல்லாம்
    அளக்கில் அறுபத்து ஐந்தாகும்.

பிரமாண இயல்

முதல் சூத்திரம்

21. ஒருவனோடு ஒருத்தி ஒன்றுஎன்று
உரைத்திடும் உலகம் எல்லாம்
வருமுறை வந்து நின்று
போவதும் ஆத லாலே
தருபவன் ஒருவன் வேண்டும்
தான்முதல் ஈறும் ஆகி
மருவிடும் அநாதி முத்த
சித்துஉரு மன்னி நின்றே.

முதல் அதிகரணம்

22. உதிப்பதும் ஈறும் உண்டுஎன்று
உரைப்பதுஇங்கு என்னை முன்னோர்
மதித்துஉலகு அநாதி யாக
மன்னியது என்பர் என்னின்
இதற்குயான் அனுமான ஆதி
எடேன்இப்பூ தாதி எல்லாம்
விதிப்படி தோற்றி மாயக்
காணலால் மேதி னிக்கே.

23. இயல்புகாண் தோற்றி மாய்கை
என்றிடின் இயல்பி னுக்குச்
செயலதுஇன்று இயல்பு செய்தி
செய்தியேல் இயல்பது இன்றாம்
இயல்பதாம் பூதம் தானே
இயற்றிடும் செய்தி என்னில்
செயல்செய்வான் ஒருவன் வேண்டும்
செயற்படும் அசேத னத்தால்.

24. நிலம்புனல் அனல்கால் காண
நிறுத்திடும் அழிக்கும் ஆக்கும்
பலம்தரும் ஒருவன் இங்குப்
பண்ணிட வேண்டாம் என்னில்
இலங்கிய தோற்றம் நிற்றல்
ஈறுஇவை இசைத லாலே
நலம்கிளர் தோற்றம் நாசம்
தனக்குஇலா நாதன் வேண்டும்.

25. சார்பினில் தோன்றும் எல்லாம்
தருபவன் இல்லை என்னில்
தேரின்இல் லதற்கோ தோற்றம்
உள்ளதற் கோநீ செப்பாய்
ஓரின்இல் லதுவும் தோன்றாது
உள்ளதேல் உதிக்க வேண்டா
சோர்வுஇலாது இரண்டும் இன்றி
நிற்பது தோன்றும் அன்றே.

26. உள்ளதும் இலதும் இன்றி
நின்றதுஒன்று உளதேல் உண்டாம்
இல்லதேல் இல்லை ஆகும்
தோற்றமும் இசையா தாகும்
உள்ளகா ரணத்தில் உண்டாம்
காரியம் உதிக்கும் மண்ணில்
இஃலதாம் படம்க டாதி
எழில்தரும் இயற்று வானால்.

27. ஒருபொருள் ஒருவன் இன்றி
உளதுஇல துஆகும் என்னில்
தருபொருள் உண்டேல் இன்றாம்
தன்மைஇன்று இன்றேல் உண்டாய்
வருதல்இன்று இலது காரியம்
முதல்உளது ஆகும் என்னில்
கருதுகா ரியமும் உண்டாய்த்
தோற்றமும் கருத்தா வால்ஆம்.

28. காயத்தின் அழிவு தோற்றம்
கண்டனம் உலகில் காணாம்
நீஇத்தை உரைத்த வாறுஇங்கு
என்னெனில் நிகழ்த்தும் உண்மை
மாயத்த உலகம் பூநீர்
தீவளி வானம் ஆதி
ஆயஇத்தால் ஒன்றின் ஒன்று
தோன்றிநின்று அழிதல் ஆமே.

29. ஓரிடம் அழியப் பின்னும்
ஓரிடம் நிற்கும் ஒக்கப்
பாரிடம் அழிவது இன்றாம்
என்றிடில் பயில்வித்து எல்லாம்
காரிடம் அதனில் காட்டும்
அங்குரம் கழியும் வேனில்
சீருடைத்து உலகு காலம்
சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்.

30. காலமே கடவுள் ஆகக்
கண்டனம் தொழிலுக்கு என்னில்
காலமோ அறிவுஇன்று ஆகும்
ஆயினும் காரி யங்கள்
காலமே தரவே காண்டும்
காரணன் விதியி னுக்குக்
காலமும் கடவுள் ஏவ
லால் துணைக் காரணம்காண்.

31. அழிந்தபின் அணுக்கள் தாமே
அகிலமாய் வந்து நின்று
கழிந்திடும் கன்மத்து என்னில்
கன்மமும் அணுவும் கூட
மொழிந்திடும் சடமே யாகி
முடிதலால் முடியா செய்தி
ஒழிந்திடும் அணுரு பங்கள்
உலகெலாம் ஒடுங்கும் அன்றே.

32. காரண அணுக்கள் கெட்டால்
காரிய உலகுஇன்று என்னில்
காரணம் மாயை ஆகக்
காரியம் காணல் ஆகும்
காரணம் மாயை என்னை
காண்பதுஇங்கு அணுவே என்னில்
காரணம் மாயை யேகாண்
காரியம் அணுவில் கண்டால்.

33. காரியம் என்பது என்னை
காரண அணுவை என்னில்
காரியம் அவய வத்தால்
கண்டனம் கடாதி போலக்
காரிய உருவம் எல்லாம்
அழிதரும் கார ணத்தால்
காரிய உறுப்புஇல் மாயை
தரும்எனக் கருதி டாயே.

34. தோற்றமும் நிலையும் ஈறும்
மாயையின் தொழிலது என்றே
சாற்றிடும் உலகம் வித்துச்
சாகாதி அணுக்க ளாக
ஏற்றதேல் ஈண்டு நிற்கும்
இல்லதேல் இயைவது இன்றாம்
மாற்றம்நீ மறந்தாய் இத்தால்
மாயையை மதித்தி டாயே.

35. மாயையின் உள்ள வஞ்சம்
வருவது போவ தாகும்
நீஅதுஇங்கு இல்லை என்னில்
நிகழ்ந்திடும் முயலில் கோடு
போய்உகும் இலைகள் எல்லாம்
மரங்களில் புக்குப் போதின்
ஆயிடும் அதுவும் என்னில்
காரணம் கிடக்க ஆமே.

36. கருதுகா ரணம்உண் டாகக்
காரியம் உள்ளது ஆகி
வருதலால் அநாதி வையம்
மற்றுஒரு கடவுள் இத்தைத்
தருதலால் ஆதி யாகச்
சாற்றலும் ஆகும் மாயைக்கு
ஒருவன்ஆர் என்இங்கு என்னில்
உள்ளவாறு உரைப்பக் கேள்நீ.

37. புத்திமன் காரி யத்தால்
பூதாதி புருடன் தானும்
அத்தனு கரணம் பெற்றால்
அறிதலால் அவற்றை மாயை
உய்த்திடும் அதனால் மாயைக்கு
உணர்வுஒன்றும் இல்லை என்றே
வைத்திடும் அதனால் எல்லாம்
வருவிப்பான் ஒருவன் வேண்டும்.

38. காரிய கார ணங்கள்
முதல்துணை நிமித்தம் கண்டாம்
பாரின்மண் திரிகை பண்ணும்
அவன்முதல் துணைநி மித்தம்
தேரின்மண் மாயை ஆகத்
திரிகைதன் சக்தி ஆக
ஆரியன் குலாலன் ஆய்நின்று
ஆக்குவன் அகிலம் எல்லாம்.

39. விந்துவின் மாயை ஆகி
மாயையின் அவ்வி யத்தம்
வந்திடும் விந்துத் தன்பால்
வைகரி ஆதி மாயை
முந்திடும் அராகம் ஆதி
முக்குணம் ஆதி மூலம்
தந்திடும் சிவன் அவன்தன்
சந்நிதி தன்னில் நின்றே.

40. வைகரி செவியில் கேட்ப
தாய்அத்த வசனம் ஆகி
மெய்தரும் உதான வாயு
மேவிட விளைந்த வன்னம்
பொய்யற அடைவு உடைத்தாய்ப்
புந்திகா ரணம்அது ஆகி
ஐயமில் பிராண வாயு
அடைந்துஎழுந்து அடைவு உடைத்தாம்.

41. உள்ளுணர் ஓசை யாகிச்
செவியினில் உறுதல் செய்யாது
ஒள்ளிய பிராண வாயு
விருத்தியை உடையது அன்றித்
தெள்ளிய அக்க ரங்கள்
சிந்திடும் செயலது இன்றி
மெள்ளவே எழுவது ஆகும்
மத்திமை வேறுஅது ஆயே.

42. வேற்றுமைப் பட்ட வன்னம்
வெவ்வேறு விபாகம் ஆகித்
தோற்றுதல் அடைவு ஒடுக்கிச்
சொயம்பிர காச மாகிச்
சாற்றிய மயிலின் அண்டம்
தரித்திடும் சலமே போன்றுஅங்கு
ஆற்றவே உடை யதுஆகிப்
பைசந்தி அமர்ந்து நிற்கும்.

43. சூக்கும வாக்கது உள்ஓர்
சோதியாய் அழிவது இன்றி
ஆக்கிடும் அதிகா ரத்திற்கு
அழிவினை தன்னைக் கண்டால்
நீக்கமில் அறிவு ஆனந்த
முதன்மை நித்தியம் உடைத்தாய்ப்
போக்கொடு வரவு இளைப்பும்
விகாரமும் புருடன் இன்றாம்.

44. நிகழ்ந்திடும் வாக்கு நான்கும்
நிவிர்த்தாதி கலையைப் பற்றித்
திகழ்ந்திடும் அஞ்சு அதுஆகச்
செயல்பரி ணாமம் அன்று
புகழ்ந்திடும் விருத்தி யாகும்
படம்குடில் ஆனால் போல
மகிழ்ந்திடும் பிரமம் அன்று
மாமாயை என்பர் நல்லோர்.

45. வித்தைகள் வித்தை ஈசர்
சதாசிவர் என்று இவர்க்கு
வைத்துறும் பதங்கள் வன்னம்
புவனங்கள் மந்தி ரங்கள்
தத்துவம் சரீரம் போகம்
கரணங்கள் தாம் எலாமும்
உய்த்திடும் வைந்த வம்தான்
உபாதானம் ஆகி நின்றே.

46. மூவகை அணுக்க ளுக்கும்
முறைமையின் விந்து ஞானம்
மேவினது இல்லை யாகில்
விளங்கிய ஞானம் இன்றாம்
ஓவிட விந்து ஞானம்
உதிப்பதுஓர் ஞானம் உண்டேல்
சேவுயர் கொடியி னான்தன்
சேவடி சேரல் ஆமே.

47. அருவினில் உருவம் தோன்றி
அங்கஅங்கி பாவம் ஆகி
உருவினில் உருவ மாயே
உதித்திடும் உலகம் எல்லாம்
பெருகிடும் சுருங்கும் பேதா
பேதமோடு அபேதம் ஆகும்
ஒருவனே எல்லாம் ஆகி
அல்லவாய் உடனும் ஆவன்.

48. அருவுரு ஈனா தாகும்
விகாரமும் அவிகா ரத்தின்
வருவதும் இல்லை என்னில்
வான்வளி ஆதி பூதம்
தருவது தன்னின் மேக
சலன சத்தங்க ளோடும்
உருவமின் உரும்ஏறு எல்லாம்
உதித்திடும் உணர்ந்து கொள்ளே.

இரண்டாம் அதிகரணம்

49. மண்ணினில் கடாதி எல்லாம்
வருவது குலால னாலே
எண்ணிய உருவம் எல்லாம்
இயற்றுவன் ஈசன் தானும்
கண்ணுகா ரியங்கள் எல்லாம்
காரணம் அதனில் காண்பன்
பண்ணுவது எங்கே நின்றுஇங்கு
என்றிடில் பகரக் கேள்நீ.

15

50. சீலமோ உலகம் போலத்
தெரிப்புஅரிது அதனால் நிற்கும்
கோலமும் அறிவார் இல்லை
ஆயினும் கூறக் கேள்நீ
ஞாலம் ஏழினையும் தந்து
நிறுத்திப்பின் நாசம் பண்ணும்
காலமே போலக் கொள்நீ
நிலைசெயல் கடவுள் கண்ணே.

51. கற்றநூல் பொருளும் சொல்லும்
கருத்தினில் அடங்கித் தோன்றும்
பெற்றியும் சாக்கி ராதி
உயிரினில் பிறந்து ஒடுக்கம்
உற்றதும் போல எல்லா
உலகமும் உதித்து ஒடுங்கப்
பற்றொடு பற்றது இன்றி
நின்றனன் பரனும் அன்றே.

52. உயிர்அவை ஒடுங்கிப் பின்னும்
உதிப்பதென் அரன்பால் என்னில்
செயிர்உறும் மலத்தின் ஆகும்
சிதைந்தது ஏது என்னில்
அயர்வுஒழி காரி யங்கள்
அழியும் காரணம் கிடக்கும்
பயில்தரு காரி யம்பின்
பண்டுபோல் பண்ணும் ஈசன்.

53. தோற்றுவித்து அளித்துப் பின்னும்
துடைத்துஅருள் தொழில்கள் மூன்றும்
போற்றவே உடையன் ஈசன்
புகுந்தது விகாரம் என்னில்
சாற்றிய கதிரோன் நிற்கத்
தாமரை அலரும் காந்தம்
காற்றிடும் கனலை நீரும்
கரந்திடும் காசி னிக்கே.

54. உரைத்தஇத் தொழில்கள் மூன்றும்
மூவருக்கு உலகம் ஓத
வரைத்து ஒருவனுக்கே ஆக்கி
வைத்ததுஇங்கு என்னை என்னில்
விரைக்கம லத்தோன் மாலும்
ஏவலான் மேவி னோர்கள்
புரைத்தஅதி கார சத்தி
புண்ணியம் நண்ண லாலே.

55. இறுதியாம் காலம் தன்னில்
ஒருவனே இருவ ரும்தம்
உறுதியின் நின்றார் என்னில்
இறுதிதான் உண்டா காதாம்
அறுதியில் அரனே எல்லாம்
அழித்தலால் அவனால் இன்னும்
பெறுதும்நாம் ஆக்கம் நோக்கம்
பேர்அதி கரணத் தாலே.

56. சொன்னஇத் தொழில்கள் என்ன
காரணம் தோற்ற எண்ணில்
முன்னவன் விளையாட்டு என்று
மொழிதலும் ஆம் உயிர்க்கு
மன்னிய புத்தி முத்தி
வழங்கவும் அருளால் முன்னே
துன்னிய மலங்கள் எல்லாம்
துடைப்பதும் சொல்ல லாமே.

57. அழிப்புஇளைப்பு ஆற்றல் ஆக்கம்
அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திடல் நுகரச் செய்தல்
காப்பது கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம்
மறைப்புஅருள் செய்தி தானும்
பழிப்புஒழி பந்தம் வீடு
பார்த்திடின் அருளே எல்லாம்.

58. அருவமோ உருவா ரூபம்
ஆனதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா
வடிவுஎனக்கு உணர்த்திங்கு என்னில்
அருவமும் உருவா ரூபம்
ஆனதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன
ஒருவனுக்கு உள்ள வாமே.

59. நண்ணிடும் உருவம் என்னில்
நமக்குஉள உருவம் போலப்
பண்ணிட ஒருவன் வேண்டும்
இச்சையேல் பலரும் இச்சை
கண்ணிய உருவம் கொள்ளேம்
யாம்பெரும் கடவுள் தானும்
எண்ணிய யோக சித்தர்
போல்உரு இசைப்பன் காணே.

60. வித்தக யோக சித்தர்
வேண்டுஉருக் கொள்ளு மாபோல்
உத்தமன் கொள்வன் என்னில்
அவர்களில் ஒருவன் ஆவன்
அத்தகை யவர்கள் எல்லாம்
ஆக்குவது அருளால் ஆங்கு
வைத்தது மாயை என்னில்
வடிவுஎலாம் மாயை ஆமே.

61. மாயைதான் மலத்தைப் பற்றி
வருவதோர் வடிவம் ஆகும்
ஆய ஆணவம் அகன்ற
அறிவொடு தொழிலை ஆர்க்கும்
நாயகன் எல்லா ஞானத்
தொழில்முதல் நண்ண லாலே
காயமோ மாயை அன்று
காண்பது சத்தி தன்னால்.

62. சத்தியே வடிவு என்றாலும்
தான்பரி ணாமம் ஆகும்
நித்தமோ அழியும் அத்தால்
நின்மலன் அருவே என்னில்
அத்துவா மார்க்கத்து உள்ளான்
அலன்இவன் அருமை தன்னைப்
புத்திதான் உடையை போல்
இருந்தனை புகலக் கேள் நீ.

63. உலகினில் பதார்த்தம் எல்லாம்
உருவமோடு அருவம் ஆகி
நிலவிடும் ஒன்றுஒன்று ஆகா
நின்றஅந் நிலையே போல
அலகுஇலா அறிவன் தானும்
அருவமே என்னில் ஆய்ந்து
குலவிய பதார்த்தத்து ஒன்றாய்க்
கூடுவன் குறித்தி டாயே.

64. பந்தமும் வீடும் ஆய
பதபதார்த் தங்கள் அல்லான்
அந்தமும் ஆதி இல்லான்
அளப்பிலன் ஆத லாலே
எந்தைதான் இன்னன் என்றும்
இன்னதாம் இன்னது ஆகி
வந்திடான் என்றும் சொல்ல
வழக்கொடு மாற்றம் இன்றே.

65. குறித்ததுஒன்று ஆக மாட்டாக்
குறைவிலன் ஆத லானும்
நெறிப்பட நிறைந்த ஞானத்
தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பால்
மேவுதல் இலாமை யானும்
நிறுத்திடும் நினைந்த மேனி
நின்மலன் அருளி னாலே.

66. ஆரணம் ஆக மங்கள்
அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளான் ஆகில்
கதிப்பவர் இல்லை யாகும்
நாரணன் முதலாய் உள்ள
சுரர்நரர் நாகர்க்கு எல்லாம்
சீரணி குருசந் தானச்
செய்தியும் சென்றி டாவே.

67. உருஅருள் குணங்க ளோடும்
உணர்வுஅருள் உருவில் தோன்றும்
கருமமும் அருள் அரன்தன்
கரசர ணாதி சாங்கம்
தரும்அருள் உபாங்கம் எல்லாம்
தான்அருள் தனக்குஒன்று இன்றி
அருள்உரு உயிருக்கு என்றே
ஆக்கினன் அசிந்தன் அன்றே.

68. உலகினை இறந்து நின்றது
அரன்உரு என்பது ஓரார்
உலகுஅவன் உருவில் தோன்றி
ஒடுங்கிடும் என்றும் ஓரார்
உலகினுக்கு உயிரும் ஆகி
உலகுமாய் நின்றது ஓரார்
உலகினில் ஒருவன் என்பர்
உருவினை உணரார் எல்லாம்.

69. தேவரில் ஒருவன் என்பர்
திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்றது ஓரார்
முதல்உரு பாதிமாதர்
ஆவதும் உணரார் ஆதி
அரிஅயற்கு அறிய ஒண்ணா
மேவுஉரு நிலையும் ஓரார்
அவன்உரு விளைவும் ஓரார்.

70. போகியாய் இருந்து உயிர்க்குப்
போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோக முத்தி
உதவுதல் அதுவும் ஓரார்
வேகியா னால்போல் செய்த
வினையினை வீட்டல் ஓரார்
ஊகியா மூடர் எல்லாம்
உம்பரில் ஒருவன் என்பர்.

71. ஒன்றொடுஒன்று ஒவ்வா வேடம்
ஒருவனே தரித்துக் கொண்டு
நின்றலால் உலகம் நீங்கி
நின்றனன் என்றும் ஓரார்
அன்றிஅவ் வேடம் எல்லாம்
அருள்புரி தொழில்என்று ஓரார்
கொன்றது வினையைக் கொன்று
நின்றஅக் குணம்என்று ஓரார்.

72. நாயகன் கண்ந யப்பால்
நாயகி புதைப்ப எங்கும்
பாய்இருள் ஆகி மூடப்
பரிந்துஉல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே
சுடரொளி கொடுத்த பண்பில்
தேயம்ஆர் ஒளிகள் எல்லாம்
சிவன்உருத் தேசுஅது என்னார்.

73. கண்ணுதல் யோகு இருப்பக்
காமன்நின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவர் ஆதி
மெலிந்தமை ஓரார் மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ
எரிவிழித்து இமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து உயிர்க்குப்
பேரின்பம் அளித்தது ஓரார்.

74. படைப்புஆதித் தொழிலும் பத்தர்க்கு
அருளும்பா வனையும் நூலும்
இடப்பாக மாத ராளோடு
இயைந்துஉயிர்க்கு இன்பம் என்றும்
அடைப்பானாம் அதுவும் முத்தி
அளித்திடும் யோகும் பாசம்
துடைப்பானாம் தொழிலும் மேனி
தொடக்கானேல் சொல்லொ ணாதே.

75. உருமேனி தரித்துக் கொண்டது
என்றலும் உருவு இறந்த
அருமேனி அதுவும் கண்டோம்
அருஉரு ஆன போது
திருமேனி உபயம் பெற்றோம்
செப்பிய மூன்றும் நம்தம்
கருமேனி கழிக்க வந்த
கருணையின் வடிவு காணே.

76. அத்துவா மூர்த்தி யாக
அறைகுவது என்னை என்னின்
நித்தனாய் நிறைந்து அவற்றின்
நீங்கிடா நிலைமை யானும்
சித்துடன் அசித்திற்கு எல்லாம்
சேட்டிதன் ஆத லானும்
வைத்ததாம் அத்து வாவும்
வடிவுஎன மறைகள் எல்லாம்.

77. மந்திரம் அத்து வாவின்
மிகுத்துஒரு வடிவ மாகத்
தந்ததுஎன் அரனுக்கு என்னில்
சகத்தினுக்கு உபாதா னங்கள்
விந்துமோ கினிமான் மூன்றாம்
இவற்றின்மே லாகி விந்துச்
சிந்தையார் அதீதம் ஆன
சிவசத்தி சேர்ந்து நிற்கும்.

78. சுத்தமாம் விந்துத் தன்னில்
தோன்றிய ஆத லானும்
சத்திதான் பிரேரித் துப்பின்
தான்அதிட் டித்துக் கொண்டே
அத்தினால் புத்தி முத்தி
அளித்தலால் அரனுக்கு என்றே
வைத்தவாம் மந்தி ரங்கள்
வடிவுஎன மறைகள் எல்லாம்.

79. மந்திரம் அதனில் பஞ்ச
மந்திரம் வடிவம் ஆகத்
தந்திரம் சொன்ன வாறுஇங்கு
என்னெனில் சாற்றக் கேள்நீ
முந்திய தோற்றத் தாலும்
மந்திர மூலத் தாலும்
அந்தமில் சத்தி ஆதிக்கு
இசைத்தலும் ஆகும் அன்றே.

மூன்றாம் அதிகரணம்

80. அயன்தனை ஆதி ஆக
அரன்உரு என்பது என்னை
பயந்திடும் சத்தி ஆதி
பதிதலால் படைப்பு மூலம்
முயன்றனர் இவரே யாயின்
முன்னவன் தன்னை முற்றும்
நயந்திடும் அவன் இவர்க்கு
நண்ணுவது ஒரோஒன்று ஆமே.

81. சத்திதான் பலவோ என்னில்
தான்ஒன்றே அநேகம் ஆக
வைத்திடும் காரி யத்தால்
மந்திரி ஆதிக்கு எல்லாம்
உய்த்திடும் ஒருவன் சத்தி
போல்அரன் உடையது ஆகிப்
புத்திமுத் திகளை எல்லாம்
புரிந்துஅவன் நினைந்த வாறுஆம்.

82. சத்திதன் வடிவுஏது என்னில்
தடையிலா ஞான மாகும்
உய்த்திடும் இச்சை செய்தி
இவைஞானத்து உளவோ என்னில்
எத்திறம் ஞானம் உள்ளது
அத்திறம் இச்சை செய்தி
வைத்தலால் மறைப்புஇல் ஞானால்
மருவிடும் கிரியை எல்லாம்.

83. ஒன்றதாய் இச்சை ஞானக்
கிரியையென்று ஒருமூன்று ஆகி
நின்றிடும் சத்தி இச்சை
உயிர்க்குஅருள் நேசம் ஆகும்
நன்றுஎலாம் ஞான சத்தி
யால்நயந்து அறிவன் நாதன்
அன்றுஅருட் கிரியை தன்னால்
ஆக்குவன் அகிலம் எல்லாம்.

84. சீவனும் இச்சா ஞானக்
கிரியையால் சிவனை ஒப்பன்
ஆவன்என் றிடில் அநாதி
மலம்இவற் றினைம றைக்கும்
காவலன் இவன்செய் கன்மத்து
அளவினில் கொடுப்பக் காண்பன்
பாவியாம் புத்தி முத்திப்
பயன்கொளும் பண்பிற்று ஆகும்.

85. ஞானமே ஆன போது
சிவன்தொழில் ஞானம் ஒக்கின்
ஈனம்இல் சதா சிவன்பேர்
ஈசனாம் தொழில்அது ஏறின்
ஊனமேல் கிரியை வித்தை
உருத்திரன் இலயம் போகம்
ஆனபேர் அதிகா ரத்தோடு
அதிகர ணத்தன் ஆமே.

86. வித்தையோடு ஈசர் சாதாக்
கியம்சத்தி சிவங்கள் ஐந்தும்
சுத்ததத்துவம் சிவன்தன்
சுதந்திர வடிவம் ஆகும்
நித்தம்என்று உரைப்பர் காலம்
நீங்கிய நிலைமை யாலே
வைத்திலர் முற்பிற் பாடு
வருவித்தார் கருமத் தாலே.

87. ஒருவனே இராவ ணாதி
பாவகம் உற்றால் போலத்
தருவன்இவ் உருவம் எல்லாம்
தன்மையும் திரியான் ஆகும்
வரும்வடிவு எல்லாம் சத்தி
சத்திதான் மரமும் காழ்ப்பும்
இருமையும் போல மன்னிச்
சிவத்தினோடு இயைந்து நிற்கும்.

88. பொன்மை நீலாதி வன்னம்
பொருந்திடப் பளிங்கு அவற்றின்
தன்மையாய் நிற்கு மாபோல்
சத்திதன் பேதம் எல்லாம்
நின்மலன் தானாத் தோன்றி
நிலைமைஒன்று ஆயே நிற்பன்
முன்அருட் சத்தி தன்பால்
முகிழ்க்கும்தான் முளையான் அன்றே.

89. சத்தியும் சிவமும் ஆய
தன்மைஇவ் உலகம் எல்லாம்
ஒத்துஒவ்வா ஆணும் பெண்ணும்
உணர்குண குணியும் ஆகி
வைத்தனன் அவளால் வந்த
ஆக்கம்இவ் வாழ்க்கை எல்லாம்
இத்தையும் அறியார் பீட
லிங்கத்தின் இயல்பும் ஓரார்.

90. சிவன்அரு உருவும் அல்லன்
சித்தினோடு அசித்தும் அல்லன்
பவம்முதல் தொழில்கள் ஒன்றும்
பண்ணிடு வானும் அல்லன்
தவம்முதல் யோக போகம்
தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும்
இயைந்திடா இயல்பி னானே.

இரண்டாம் சூத்திரம்

91. உலகுஎலாம் ஆகி வேறாய்
உடனும்ஆய் ஒளியாய் ஓங்கி
அலகுஇலா உயிர்கள் கன்மத்து
ஆணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை
தனக்குஎய்தல் இன்றித் தானே
நிலவுசீர் அமலன் ஆகி
நின்றனன் நீங்காது எங்கும்.

முதல் அதிகரணம்

92. ஒன்றுஎன மறைகள் எல்லாம்
உரைத்திட உயிர்கள் ஒன்றி
நின்றனன் என்று பன்மை
நிகழ்த்துவது என்னை என்னில்
அன்றுஅவை பதிதான் ஒன்றுஎன்று
அறையும்அக் கரங்கள் தோறும்
சென்றிடும் அகரம் போல
நின்றனன் சிவனும் சேர்ந்தே.

93. உருவொடு கருவி எல்லாம்
உயிர்கொடு நின்று வேறாய்
வருவது போல ஈசன்
உயிர்களின் மருவி வாழ்வன்
தரும்உயிர் அவனை ஆகா
உயிரவை தானும் ஆகான்
வருபவன் இவைதான் ஆயும்
வேறும்ஆய் மன்னி நின்றே.

இரண்டாம் அதிகரணம்

94. இருவினை இன்பத் துன்பத்து
இவ்உயிர் பிறந்து இறந்து
வருவது போவது ஆகும்
மன்னிய வினைப் பலன்கள்

தரும்அரன் தரணி யோடு
தராபதி போலத் தாமே
மருவிடா வடிவும் கன்ம
பயன்களும் மறுமைக் கண்ணே.

95. இருவினை என்னை இன்பத்
துன்பங்கள் இயல்புஅது என்னில்
ஒருதன்மை இயல்புக்கு உள்ளது
ஒருவனுக்கு இரண்டு செய்தி
வருவதுஎன் மலரும் தீயும்
மருவலின் வாசம் வெம்மை
தருவதுஎன் நீர்என் செய்து
தான்இயல்பு ஆகும் அன்றே.

96. தன்இயல்பு ஒழியப் பூவும்
தழலும்வந்து அணைய நீரின்
மன்னியது இரண்டு செய்தி
வரும்இரு வினையி னாலும்
உன்னிய இன்பத் துன்பம்
உறும்உயிர் உணர்வு இல்லாத
துன்னிய அசித்தை இன்பத்
துன்பங்கள் சூழ்ந்தி டாவே.

97. இம்மையின் முயற்சி யாலே
இருநிதி ஈட்டி இன்பம்
இம்மையே நுகர்வர் செய்தி
இலாதவர் பொருளும் இன்றி
இம்மையே இடர் உழப்பர்
வேறுஇரு வினையது உண்டேல்
இம்மையின் முயற்சி இன்றி
எய்திட வேண்டும் இங்கே.

98. இருவினைச் செயல்காண் இம்மை
இரும்பொருள் இன்பம் வேண்டி
வருவினை செய்யும் காலை
மடிவரும் மடியும் இன்றித்
தருவினை அதனில் அத்தம்
தான்அறும் துயரும் தங்கும்
ஒருவினை செய்யா தோரும்
உடையர்இவ் உலகத்து உள்ளே.

99. பேறுஇழவு இன்ப மோடு
பிணிமூப்புச் சாக்காடு என்னும்
ஆறும்முன் கருவுட் பட்டது
அவ்விதி அனுப வத்தால்

ஏறிடும் முன்பு செய்த
கன்மம்இங்கு இவற்றிற்கு ஏது
தேறுநீ இனிச்செய் கன்மம்
மேல்உடல் சேரும் என்றே.

100. உடல்செயல் கன்மம் இந்த
உடல்வந்த வாறு ஏதுஎன்னில்
விடப்படும் முன் உடம்பின்
வினைஇந்த உடல் விளைக்கும்
தொடர்ச்சியால் ஒன்றுக்கு ஒன்று
தொன்றுதொட்டு அநாதி வித்தின்
இடத்தினின் மரம் மரத்தின்
வித்தும்வந்து இயையுமா போல்.

101. முற்செயல் விதியை இந்த
முயற்சியோடு அனுப வித்தால்
இச்செயல் பலிக்கும் ஆறுஎன்
இதம்அகி தங்கள் முன்னர்
அச்செயல் ஆனால் இங்கும்
அவைசெயில் மேலைக்கு ஆகும்
பிற்செயாது அனுப விப்பது
இன்றுபின் தொடரும் செய்தி.

102. மேலைக்கு வித்தும் ஆகி
விளைந்தவை உணவும் ஆகி
ஞாலத்து வருமா போல
நாம்செயும் வினைகள் எல்லாம்
ஏலத்தான் பலமாச் செய்யும்
இதம்அகி தங்கட்கு எல்லாம்
மூலத்தது ஆகி என்றும்
வந்திடும் முறைமை யோடே.

103. இதம்அகி தங்கள் என்பது
இகல்மன வாக்குக் காயத்து
இதம்உயிர்க்கு உறுதி செய்தல்
அகிதம்மற்று அதுசெய் யாமை
இதம்அகி தங்கள் எல்லாம்
இறைவனே ஏற்றுக் கொண்டிங்கு
இதம்அகி தத்தால் இன்பத்
துன்பங்கள் ஈவன் அன்றே.

104. இறைவன்இங்கு ஏற்பது என்னை
இதம்அகி தங்கள் என்னில்
நிறைபரன் உயிர்க்கு வைத்த
நேசத்தின் நிலைமை ஆகும்

அறம்மலி இதம்செய் வோருக்கு
அனுக்கிர கத்தைச் செய்வன்
மறம்மலி அகிதம் செய்யின்
நிக்கிர கத்தை வைப்பன்.

105. நிக்கிர கங்கள் தானும்
நேசத்தால் ஈசன் செய்வது
அக்கிர மத்தால் குற்றம்
அடித்துத்தீர்த்து அச்சம் பண்ணி
இக்கிர மத்தி னாலே
ஈண்டு அறம் இயற்றிடு என்பன்
எக்கிர மத்தி னாலும்
இறைசெயல் அருளே என்றும்.

106. தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின் உறுக்கி
வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம்
பார்த்திடில் பரிவே ஆகும்
இந்தநீர் முறைமை அன்றோ
ஈசனார் முனிவும் என்றும்.

107. செயல்களே பலத்தைச் செய்யும்
தெய்வம்வேண்டா இங்கு என்னில்
முயலும்இச் செயல்கள் இங்கே
முழுவதும் அழியும் எங்கே
பயன்அளிப்பன அழிந்தே
பலன்களைப் பண்ணும் கெட்டே
வயல்இடும் தழையும் தின்னும்
மருந்தும்பின் பலிக்கு மாபோல்.

108. செய்க்கிடும் தழையும் தின்னும்
திரவியம் அதுவும் போல
உய்த்திடும் செய்தி கெட்டே
உறுவிக்கும் பலத்தை என்னில்
வைத்திடும் சோறும் பாக்கும்
அருந்தினர் வயிற்றின் மாய்ந்தால்
மெய்த்திடும் பலன் உனக்கு
மலம்அலால் வேறும் உண்டோ.

109. திரவியம் உவமை அன்று
செய்திக்கண் திரவி யங்கள்
விரவிய இடத்தே வீந்து
பலம்தரும் இம்மை அம்மை

பரவிநீ பார்நீர் அங்கி
பாத்திரத்து இட்ட எல்லாம்
கரவிடும் இங்கே எங்கே
பலன்கொளக் கருதி னாயே.

110. செய்தவர் மனத்தே எல்லாச்
செய்தியும் கிடந்து பின்னர்
எய்தவே பலன்கள் ஈனும்
என்றிடில் இரும் சுவர்க்கம்
பொய்யர்வாழ் நரகம் பூமி
புந்தியில் கிடந்து போந்தது
ஐயனே அழகிது உன்சொல்
இந்திர சாலம் ஆய்த்தே.

111. தானம்செய் பொருள் தரித்தோர்
செய்தவர் தக்க செய்தி
ஊனம்பின் உறவே காண்டும்
பலம்உறு விப்பான் வேண்டும்
ஈனம்இல் செய்தி ஈசன்
இடும்பணி இவைநாம் செய்தால்
நூனங்கள் அதிகம் நோக்கி
நுகர்விப்பன் வினைநோய் தீர.

112. உலகுஉடல் கரணம் காலம்
உறுபலம் நியதி செய்தி
பலஇவை கொண்டு கன்மம்
பண்ணுவது உண்பது ஆனால்
நிலவிடாது இவைதாம் சென்று
நினைந்துஉயிர் நிறுத்திக் கொள்ளாது
அலகுஇலா அறிவன் ஆணை
அணைத்திடும் அருளி னாலே.

113. ஒழுக்கம்அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்குஇலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்குஇலாத் துறவு அடக்கம்
அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்குஇலா அறங்கள் ஆனால்
இரங்குவான் பணி அறங்கள்.

114. மனம்அது நினைய வாக்கு
வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையில் கொண்டுஅங்கு
இச்சித்த தெய்வம் போற்றிச்

சினம்முதல் அகற்றி வாழும்
செயல்அறம் ஆனால் யார்க்கும்
முனம்ஒரு தெய்வம் எங்கும்
செயற்குமுன் நிலையாம் அன்றே.

115. யாதுஒரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வம் ஆகி ஆங்கே
மாதுஒரு பாக னார்தாம்
வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படும் இறக்கும்
பிறக்கும்மேல் வினையும் செய்யும்
ஆதலால் இவை இலாதான்
அறிந்துஅருள் செய்வன் அன்றே.

116. இங்குநாம் சிலர்க்குப் பூசை
இயற்றினால் இவர்களோ வந்து
அங்குவான் தருவார் அன்றேல்
அத்தெய்வம் அத்தனைக் காண்
எங்கும்வாழ் தெய்வம் எல்லாம்
இறைவன் ஆணையினால் நிற்பது
அங்குநாம் செய்யும் செய்திக்கு
ஆணை வைப்பால் அளிப்பன்.

117. காண்பவன் சிவனே ஆனால்
அவன்அடிக்கு அன்பு செய்கை
மாண்புஅறம் அரன்தன் பாதம்
மறந்துசெய் அறங்கள் எல்லாம்
வீண்செயல் இறைவன் சொன்ன
விதிஅறம் விருப்புஒன்று இல்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும்
பூசனை புரிந்து கொள்ளே.

118. தாபர சங்க மங்கள்
என்றுஇரண்டு உருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு
மன்உயிர்க்கு அருளை வைப்பன்
நீபரன் தன்னை நெஞ்சில்
நினைவையேல் நிறைந்த பூசை
ஆய்பரம் பொருளை நாளும்
அர்ச்சிநீ அன்பு செய்தே.

119. அரன்அடிக்கு அன்பர் செய்யும்
பாவமும் அறம்அது ஆகும்
பரன்அடிக்கு அன்பு இலாதார்
புண்ணியம் பாவம் ஆகும்

வரமுடைத் தக்கன் செய்த
மாவேள்வி தீமை ஆகி
நரரினில் பாலன் செய்த
பாதகம் நன்மை ஆய்த்தே.

120. மறைகள் ஈசன்சொல் அச்சொல்
வழிவாரா உயிரை வைக்கும்
சிறைகள்மா நிரயம் இட்ட
பணிசெய்வோர் செல்வத் தோடும்
உறையும்மா பதிகள் உம்பர்
உலகங்கள் யோனிக்கு எல்லாம்
இறைவன் ஆணையினால் இன்பத்
துன்பங்கள் இயைவது ஆகும்.

121. ஆணையால் அவனி மன்னன்
அருமறை முறைசெய் யாரை
ஆணையின் தண்டம் செய்தும்
அரும்சிறை இட்டும் வைப்பன்
ஆணையின் வழிசெல் வோருக்கு
அரும்பதி செல்வம் நல்கி
ஆணையும் வைப்பன் எங்கும்
ஆணையே ஆணையே காண்.

122. அரசனும் செய்வது ஈசன்
அருள்வழி அரும் பாவங்கள்
தரையுளோர் செய்யில் தீய
தண்டலின் வைத்துத் தண்டத்து
உரைசெய்து தீர்ப்பன் பின்பு
சொல்வழி நடப்பர் தூயோர்
நிரயமும் சேரார் அந்த
நிரயம்முன் நீர்மை ஈதாம்.

123. அருளினால் உரைத்த நூலின்
வழிவாராது அதன்மம் செய்யில்
இருள்உலா நிரயத் துன்பத்து
இட்டுஇரும் பாவம் தீர்ப்பன்
பொருள்உலாம் சுவர்க்கம் ஆதி
போகத்தால் புணியம் தீர்ப்பன்
மருள்உலாம் மலங்கள் தீர்க்கும்
மருந்துஇவை வயித்திய நாதன்.

124. மருத்துவன் உரைத்த நூலின்
வழிவரில் பிணிகள் வாரா
வருத்திடும் பிணிகள் தப்பின்
தப்பிய வழியும் செய்யத்

திருத்தினன் மருந்து செய்யாது
உறும்பிணி சென்றும் தீர்ப்பன்
உரைத்தநூல் சிவனும் இன்னே
உறும்கன்மம் ஊட்டித் தீர்ப்பன்.

125. மண்ணுளே சில வியாதி
மருத்துவன் அருத்தி யோடும்
திண்ணமாய் அறுத்துக் கீறித்
தீர்த்திடும் சிலநோய் எல்லாம்
கண்ணிய கட்டி பாலும்
கலந்துஉடன் கொடுத்துத் தீர்ப்பன்
அண்ணலும் இன்பத் துன்பம்
அருத்தியே வினை அறுப்பன்.

126. பூதனா சரீரம் போனால்
புரியட்ட ரூபம் தானே
யாதனா சரீரம் ஆகி
இன்பத் துன்பங்கள் எல்லாம்
நாதனார் ஆணை உய்க்க
நரகொடு சுவர்க்கம் துய்த்துத்
தீதிலா அணுவாய் யோனி
சேர்ந்திடும் சீவன் எல்லாம்.

127. உடல்விடா யோனி பற்றி
உதிப்பினும் உதிக்கும் ஒன்றில்
படர்வுஉறாது உறும் பாவத்தால்
பாடாணம் போல் கிடந்து
கடன்அதாம் காலம் சென்றால்
கடுநரகு அதனில் வீழ்ந்துஅங்கு
இடர்உறும் உருவம் கன்மத்து
அளவினில் எடுக்கும் அன்றே.

128. பன்னகம் அண்ட சங்கள்
பரகாயம் தன்னில் பாய்வோர்
துன்னுதோல் முட்டை யாக்கை
துறந்து செல்வதுவே போல
உன்னிய உயிர்கள் தூல
உடல்விட்டு வானின் ஊடு
மன்னிடும் நனவு மாறிக்
கனவினை மருவு மாபோல்.

129. தன்மமோடு அதன்மம் ஆகித்
தான்இரு பயனும் தந்து
நன்மை தீமையினும் இன்பத்
துன்பினும் நாடிக் காண

முன்னமே ஆன்மா வின்தன்
மும்மலத்து ஒன்றது ஆகிக்
கன்மமும் மூலம் காட்டிக்
காமிய மல்மாய் நிற்கும்.

130. இருவினை அநாதி ஆதி
இயற்றலால் நுகர்வால் அந்தம்
வருமலம் சார்ந்து மாயா
உருவுகள் மருவி ஆர்த்துத்
தருசெயல் முறைமை யாலே
தான்பல பேதம் காட்டி
அருஅதாய் நின்று அரன்தன்
ஆணையின் அமர்ந்து செல்லும்.

131. சங்கமம் தாப ரங்கள்
தத்தம் கன்மத்துக்கு ஈடா
அங்குஉரு யோனி மாறும்
அச்சு மாறாது இங்கு என்னில்
இங்கு மானுடர் இயற்றும்
புண்ணியத்து இன்ப ஈட்டம்
அங்குவான் சுரர்க ளாயோ
நரர்களாய் அருந்து வாரோ.

132. நரர்களாய்த் துய்ப்பர் என்னில்
நரர்பதி சுரர் உலோகம்
சுரர்களாய்த் துய்ப்பர் என்னில்
சொன்னஅச்சு அழியும் ஆகும்
சுரர்களாய்ப் பலன்கள் துய்த்துத்
தாம்இங்குத் தோன்றும் போது
நரர்களாய்ப் பிறப்பர் ஞாலத்து
அமரராய் நண்ணி டாரே.

133. வண்டுகள் ஆகி மாறும்
மயிர்க்குட்டி மற்றோர் செந்துப்
பண்டைய உருவம் தானே
வேட்டுவனாய்ப் பிறக்கும்
கண்டுகொள் யோனி எல்லாம்
கன்மத்தால் மாறும் என்றே
கொண்டன சமயம் எல்லாம்
இச்சொல்நீ கொண்டது எங்கே.

134. அகலியை கல்அது ஆனாள்
அரிபல பிறவி ஆனான்
பகலவன் குலத்தில் தோன்றிப்
பாரெலாம் முழுதும் ஆண்டு

நிகரிலா அரசன் ஆகும்
    சிலந்தி நீடு உலகம் போற்றச்
சகம்அதில் எலிதான் அன்றே
    மாவலி ஆய்த்துத் தானே.

135. செப்பினாய் மாற வேறு
    சிலர்விதி யாலே கன்மால்
வைப்புஉறும் யோனி எல்லாம்
    மாறிவந் திடாஇங்கு என்னில்
எப்படி யானும் செய்திக்கு
    இறைகரி யாவன் என்றே
முற்பட மொழிந்தேன் எல்லாம்
    முதல்வன்தன் விதியே ஆகும்.

136. அவ்வவ யோனி தோறும்
    அவ்வவ உலகம் தோறும்
செவ்விதின் அறிந்து கன்மம்
    சேர்ந்திடா சீவன் சேரா
இவ்வகை தம்மில் சேர்வும்
    இறைசெயல் ஆனால் செய்த
எவ்உரு வும்தம் கன்மால்
    மாற்றுவன் இறைவன் தானே.

137. மாறிஇவ் உருவம் எல்லாம்
    வருவது எங்கேநின்று என்னில்
கூறிய சூக்குமத்து ஆம்
    உருஎனில் குறிஒன்று என்னில்
வேறுஒரு குறியாம் ஆரம்
    வீர சங்கிலியும் ஆகும்
தேறுநீ ஒருவனால் இச்
    செயல்எலாம் சிவனால் ஆகும்.

138. சூக்குமம் கெட்டுத் தூலம்
    தோன்றிடா சூக்கு மத்தின்
ஆக்கிஓர் உடல் கிடப்பது
    இன்றுஉடல் ஆக்கும் தன்மைக்கு
ஒக்கிய சத்தி உண்டாய்
    உடல்தரும் காலம் உற்று
நீக்கிட மரம்பின் வேர்ஓர்
    நீள்மரம் நிகழ்த்து மாபோல்.

139. விதிப்படி சூக்கு மத்தே
    உருவரும் வினையால் இங்கே
உதித்திடா உருவம் ஆக
    உருவரும் மரங்கள் வித்தில்

கதித்துஎழு மரமும் வித்தும்
கழியும்பின் அழியும் சூக்கம்
மதிக்குஎழு கலைகள் போல
வருவது போவது ஆமே.

140. தூலமாம் உருவி னுக்குச்
சூக்குமம் முதல் அதற்கு
மூலமான் அதற்கு மூலம்
மோகினி அதன் முதல்தான்
மேலதாம் விந்து சத்தி
சிவம்இவை மிசையாம் எல்லாம்
சாலஇன்று ஆகும் ஆன்மாச்
சிவத்தினைச் சார்ந்த போது.

மூன்றாம் அதிகரணம்

141. அரன்விதி அருள்அது என்றே
அறைந்தனன் அதுவும் முன்னே
தரைநரகு அரும் துறக்கம்
தனுகர ணாதி எல்லாம்
வருவதும் செய்து அநாதி
மலங்கள் இம்மருந்தால் தீர்த்துப்
பரகதி அதுவும் தந்து
பாதபங் கயமும் சூட்டும்.

142. எழும்உடல் கரணம் ஆதி
இவைமலம் மலம் மலத்தால்
கழுவுவன் என்று சொன்ன
காரணம் என்னை என்னில்
செழுநவை அறுவை சாணி
உவர் செறிவித்து அழுக்கை
முழுவதும் கழிப்பன் மாயை
கொடுமலம் ஒழிப்பன் முன்னோன்.

143. நித்தமாய் அருவாய் ஏக
நிலையதாய் உலகத் திற்குஓர்
வித்துமாய் அசித்தாய் எங்கும்
வியாபியாய் விமல னுக்குஓர்
சத்தியாய்ப் புவன போகம்
தனு கரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை
மயக்கமும் செய்யும் அன்றே.

144. மாயையில் கால மோடு
நியதிபின் கலாதி தோன்றும்
ஆயஅக் காலம் மூன்றாய்
ஆக்கியும் அளித்தும் போக்கிக்

காயமோடு உலகுக்கு எல்லாம்
கால சங்கையினைப் பண்ணி
நாயகன் ஆணை யாலே
நடத்திடும் சகத்தை எல்லாம்.

145. நியதிபின் தோன்றிக் கன்ம
நிச்சயம் பண்ணி நிற்கும்
அயர்வுஇலாக் கலைபின் தோன்றி
ஆணவம் ஒதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியா சத்தி
தெரிவிக்கும் சிறிதே வித்தை
உயர்கலை அதனில் தோன்றி
அறிவினை உதிக்கப் பண்ணும்.

146. விச்சையில் அராகம் தோன்றி
வினைவழி போகத் தின்கண்
இச்சையைப் பண்ணி நிற்கும்
தொழில்அறிவு இச்சை மூன்றும்
வைச்சபோது இச்சா ஞானக்
கிரியைமுன் மருவி ஆன்மா
நிச்சயம் புருடன் ஆகிப்
பொதுமையின் நிற்பன் அன்றே.

147. வரும்குண வடிவாய் மூலப்
பிரகிருதி கலையில் தோன்றித்
தரும்குணம் மூன்றாய் ஒன்றில்
தான்மூன்றாய் மும்மூன்று ஆகும்
இரும்குண ரூபம் ஆகி
இயைந்திடும் எங்கும் ஆன்மாப்
பெரும்குண வடிவாய்ப் போக
சாதனம் பெந்தம் ஆமே.

148. சித்தமாம் அவ்வியத்தம்
சிந்தனை அதுவும் செய்யும்
புத்தி அவ்வியத்தில் தோன்றிப்
புண்ணிய பாவம் சார்ந்து
வத்து நிச்சயமும் பண்ணி
வரும்சுக துக்க மோகப்
பித்தினில் மயங்கி ஞானக்
கிரியையும் பேணி நிற்கும்.

149. ஆங்காரம் புத்தி யின்கண்
உதித்து அகந்தைக்கு வித்தாய்
ஈங்குஆர்தான் என்னோடு ஒப்பார்
என்றுயான் என்னது என்றே

நீங்காதே நிற்கும் தானும்
　　மூன்றதாய் நிகழும் என்பர்
பாங்குஆர் பூதாதி வைகா
　　ரிகம் தைசதம்தான் என்றே.

150. மனம்அது தைசதத்தின்
　　வந்துஒரு பொருளை முந்தி
நினைவதும் செய்துஅங்கு ஐய
　　நிலைமையில் நிற்கும் ஆங்கே
இனம்மலி சோத்தி ராதி
　　கன்மஇந் திரியம் எல்லாம்
முனம்உரை செய்த வைகா
　　ரிகம்தரும் என்பர் முன்னோர்.

151. நற்செவி துவக்குக் கண்நா
　　நாசிஐந் தினையும் நல்லோர்
புத்திஇந் திரியம் என்று
　　புகன்றனர் இவை தமக்குச்
சத்தநற் பரிச ரூப
　　இரதகந் தங்கள் ஐந்தும்
வைத்தனர் விடயம் ஆக
　　அடைவினில் மருவும் என்றே.

152. வாக்கொடு பாதம் பாணி
　　பாயுவோடு உபத்தம் ஐந்தும்
நீக்கினார் முன்னே கன்மேந்
　　திரியங்கள் என நினைந்தே
ஆக்கிய வசன கமன
　　தானமும் விசர்க்க ஆனந்தம்
ஊக்கம்ஆர் ஐந்தும் ஐந்தின்
　　தொழில்என ஓதி னாரே.

153. வாயாதி சோத்தி ராதி
　　புறத்துவாழ் கருவி ஆகும்
ஓயாத மனாதி காயத்து
　　உணரும்உட் கருவி ஆகும்
ஆய்வார்கட்கு அராகம் ஆதி
　　அவற்றின்உட் கருவி என்பர்
மாயாள்தன் வயிற்று இவற்றால்
　　துடக்குண்டு வாழும் ஆன்மா.

154. ஓசைநற் பரிச ரூப
　　இரத கந்தங்கள் என்று
பேசும்மாத் திரைகள் ஐந்தும்
　　பிறக்கும் பூதாதி கத்தின்

நேசஇந் திரியங் கட்கு
நிகழ்அறிவு இதனால் காண்டும்
ஆசைசேர் மனாதி தன்மாத்
திரைபுரி யட்ட கம்தான்.

155. சாற்றிய பஞ்ச தன்மாத்
திரைகளில் சத்தம் முன்னாத்
தோற்றும்வான் வளிதீ நீர்மண்
தொடக்கியே ஒன்றுக்கு ஒன்றுஅங்கு
ஏற்றமாம் ஓசை ஆதி
இருங்குணம் இயைந்து நிற்கும்
ஆற்றவே விடய பூதம்
அங்காங்கி பாவத்து ஆமே.

156. இரந்தரம் ஆகி வான்தான்
இடம் கொடுத்திடும் சலித்துப்
பரந்தவை திரட்டும் கால்தீச்
சுட்டு ஒன்றுவித்தல் பண்ணும்
நிரந்தரம் குளிர்ந்து நின்று
பதம்செயும் நீர்மண் தானும்
உரம்தரு கடினம் ஆகித்
தரித்திடும் உணர்ந்து கொள்ளே.

157. மண்புனல் அனல்கால் வான்பால்
வடிவுநாற் கோணம் ஆகும்
தண்பிறை மூன்று கோணம்
தகும்அறு கோணம் வட்டம்
வண்பொன்மை வெண்மை செம்மை
கறுப்பொடு தூம வன்னம்
எண்தரும் எழுத்துத் தானும்
லவரய அவ்வும் ஆமே.

158. குறிகள் வச்சிரத்தி னோடு
கோக னதம் சுவத்தி
அறுபுள்ளி அமுத விந்து
அதிதெய்வம் அயன்மால் ஆதி
செறிபுகழ் ஈச னோடு
சதாசிவம் பூத தெய்வம்
நெறிதரு கலை ஐந்திற்கும்
நிகழ்த்துவர் இந்த நீர்மை.

159. சுத்ததத் துவங்கள் என்று
முன்னமே சொன்ன ஐந்தும்
இத்தகை மையின் இயம்பும்
இவைமுப்பத்து ஒன்றும் ஆகத்

தத்துவம் முப்பத்து ஆறாம்
சைதன்னி யங்கள் ஐந்தும்
சித்தசித்து ஆன்மா ஒன்று
முப்பதும் அசித்தே செப்பில்.

160. ஐந்துசுத் தத்தின் கீழ்ஏழ்
சுத்தாசுத்தம் அசுத்தம்
தந்திடும் புமான் கீழ்எண்மூன்று
ஆய தத்துவம், சீவர்க்கு
வந்திடும் பிரேர காண்டம்
மருவுபோக சயித்திரத் தோடு
அந்தமில் அணுக்களுக்குப்
போக்கிய காண்டம் ஆமே.

161. தத்துவ ரூபம் ஆகும்
தரும்அரு உருவம் எல்லாம்
தத்துவம் தூல சூக்க
பரங்களும் ஆகி நிற்கும்
தத்துவம் தன்னில் சாரும்
அணுக்கள் சாதாக்கி யத்தில்
தத்துவ சத்தம் சாரும்
சகலமும் தத்துவம் காண்.

162. தத்துவம் எண்மூன்றும் சென்று
ஆன்ம த த்துவத்து ஒடுங்கும்
வித்தையின் ஒடுங்கும் ஆறும்
சிவத்தினின் ஒடுங்கும் மூன்றும்
நித்தத் துவம்இம் மூன்றும்
என்பர்கள் இரண்டும் நின்ற
சுத்தமாம் சிவத்து ஒடுங்கும்
தோற்றமும் இதுபோல் ஆகும்.

நான்காம் அதிகரணம்

163. மொய்தரு பூதம் ஆதி
மோகினி அந்தம் ஆகப்
பொய்தரு சமயம் எல்லாம்
புக்கு நின்றிடும் புகன்று
மெய்தரு சைவம் ஆதி
இருமூன்றும் வித்தை ஆதி
எய்து தத்துவங்கள் ஏயும்
ஒன்றும் இன்று எம்இறைக்கே.

164. சிவம்சக்தி நாதம் விந்து
சதாசிவன் திகழும் ஈசன்
உவந்துஅருள் உருத்திரன் தான்
மால்அயன் ஒன்றின் ஒன்றாய்ப்

பவம்தரும் அருவம் நால்இங்கு
உருவம்நால் உபயம் ஒன்றாய்
நவம்தரு பேதம் ஏக
நாதனே நடிப்பன் என்பர்.

165. சத்தியாய் விந்து சத்தி
யாய் மனோன்மணிதான் ஆகி
ஒத்துஉறும் மகேசை ஆகி
உமை திருவாணி ஆகி
வைத்துஉறும் சிவாதிக்கு இங்ஙன்
வரும்சத்தி ஒருத்தி ஆகும்
எத்திறம் நின்றான் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பள்.

166. சத்திதான் நாதம் ஆதி
தான்ஆகும் சிவமும் அந்தச்
சத்திதான் ஆதி ஆகும்
தரும்வடிவு ஆன எல்லாம்
சத்தியும் சிவமும் ஆகும்
சத்திதான் சத்தனுக்கு ஓர்
சத்தியாம் சத்தன் வேண்டிற்று
எல்லாம்ஆம் சத்தி தானே.

167. சிவம்சத்தி தன்னை ஈன்றும்
சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்து இருவரும்புணர்ந்து இங்கு
உலகுஉயிர் எல்லாம் ஈன்றும்
பவன்பிரம சாரி ஆகும்
பால்மொழி கன்னி ஆகும்
தவம்தரு ஞானத் தோர்க்குஇத்
தன்மைதான் தெரியும் அன்றே.

168. தனுகரண புவன போகம்
தற்பரம் பந்தம் வீடுஎன்று
அணுவினோடு எல்லாம் ஆகி
அடைந்திடும் தத்து வங்கள்
இனிதுஅறிந்து இவை நிவிர்த்தி
முதல்கலை இடத்தே நீக்கி
நனிபரம் உணர்ந்தோன் அந்தத்
தத்துவ ஞானி ஆவன்.

169. எல்லாமாய்த் தத்துவங்கள்
இயைந்ததுஎன் அணுவுக்கு என்னில்
தொல்லாய கன்மம் எல்லாம்
துய்ப்பித்துத் துடைத்தற்கும் பின்

நில்லாமை முற்று வித்து
நீக்கவும் கூடி நின்ற
பொல்லாத ஆணவத்தைப்
போக்கவும் புகுந்தது அன்றே.

170. ஒன்றதாய் அநேக சத்தி
உடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மா வின்தன்
அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்றுபோத் திருத்து வத்தை
நிகழ்த்திச் செம்பினில் களிம்புஏய்ந்து
என்றும் அஞ்ஞானம் காட்டும்
ஆணவம் இயைந்து நின்றே.

171. மலம்என வேறுஒன்று இல்லை
மாயா காரியம் அதுஎன்னில்
இலகுஉயிர்க்கு இச்சா ஞானக்
கிரியைகள் எழுப்பும் மாயை
விலகிடும் மலம் இவற்றை
வேறும்அன்று அதுவேறு ஆகி
உலகுஉடல் கரணம் ஆகி
உதித்திடும் உணர்ந்து கொள்ளே.

172. மாயையே ஆன்ம ஞானக்
கிரியையை மறைத்து நிற்கும்
தூயஅப் பரிதி தன்னைச்
சுடர்முகில் மறைத்தால் போலப்
போய்முகில் அகலச் சோதி
புரிந்திடும் அதுவே போலக்
காயமும் அகல ஞானத்
தொழில்பிர காச மாமே.

173. பரிதியை முகில் மறைப்பப்
பாய்ஒளி பதுங்கினால் போல்
உருஉயிர் மறைக்கில் ஞானக்
கிரியைகள் ஒழிக்கும் ஆகும்
கருதிடும் இச்சா ஞானக்
காரியம் காயம் பெற்றால்
மருவிடும் உயிர்க்குக் காயம்
வந்திடா விடில் மறைப்பே.

174. போத காரியம் மறைத்து
நின்றது புகல் மலம்காண்
ஓதலாம் குணமும் ஆக
உயிரினுள் விரவ லாலே

காதலால் அவித்தை சிந்தத்
தரும்கலை ஆதி மாயை
ஆதலால் இரண்டும் சோதி
இருள்என வேறாம் அன்றே.

175. புருடன்தன் குணம் அவித்தை
எனில்சடம் புருடன் ஆகும்
குருடன்தன் கண்ணின் குற்றம்
கண்ணின்தன் குணமோ கூறாய்
மருள்தன்தன் குணம்அது ஆகி
மலம்அசித்து ஆகி நிற்கும்
தெருள்தன்தன் குணம்அது ஆகிச்
சித்துஎன நிற்கும் சீவன்.

176. மும்மலம் நெல்லி னுக்கு
முளையொடு தவிடு உமிப்போல்
மம்மர்செய்து அணுவின் உண்மை
வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த
போத்திருத் துவங்கள் பண்ணும்
இம்மலம் மூன்றி னோடும்
இருமலம் இசைப்பன் இன்னும்.

177. மாயையின் காரி யத்தை
மாயேய மலம்அது என்றும்
ஏயும்மும் மலங்கள் தத்தம்
தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் தனதுஓர் சத்தி
திரோதான கரிஅது என்றும்
ஆய்வர்இம் மலங்கள் ஐந்தும்
அணுக்களை அணைந்து நிற்கும்.

178. மலம்மாயை கன்மம் மாயே
யம் திரோ தாயி மன்னிச்
சலம்ஆரும் பிறப்பு இறப்பில்
தங்கிஇத் தரைகீழ் மேலும்
நிலையாத கொள்ளி வட்டம்
கறங்குஎன நிமிடத் தின்கண்
அலமாரும் இறைவன் ஆணை
யால் உயிர் நடக்கும் அன்றே.

179. அண்டசம் சுவேத சங்கள்
உற்பிச்சம் சராயுசத் தோடு
எண்தரு நால்எண் பத்து
நான்குநூறு ஆயி ரத்தாய்

உண்டுபல் யோனி எல்லாம்
 ஒழித்து மானுடத்து உதித்தல்
கண்டிடில் கடலைக் கையால்
 நீந்தினன் காரியம் காண்.

180. நரர்பயில் தேயம் தன்னில்
 நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல்
 மிக்க புண்ணியத்தால் ஆகும்
தரையினில் கீழை விட்டுத்
 தவம்செய் சாதியினில் வந்து
பரசம யம்கண் செல்லாப்
 பாக்கியம் பண்ணொ ணாதே.

181. வாழ்வுஎனும் மையல் விட்டு
 வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வுஎனும் தன்மை யோடும்
 சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது சால
 உயர்சிவ ஞானத் தாலே
போழ்இள மதியி னானைப்
 போற்றுவார் அருள்பெற் றரே.

182. மானுடப் பிறவி தானும்
 வகுத்தது மனவாக் காயம்
ஆன்இடத்து ஐந்தும் ஆடும்
 அரன்பணிக்கு ஆக அன்றோ
வானிடத் தவரும் மண்மேல்
 வந்து அரன்தனை அர்ச்சிப்பர்
ஊன்எடுத்து உழலும் ஊமர்
 ஒன்றையும் உணரார் அந்தோ.

183. கருவினுள் அழிவ தாயும்
 கழிந்திடாது அழிவ தாயும்
பரிணமித்து அழிவ தாயும்
 பாலனாய் அழிவ தாயும்
தருணனாய் அழிவ தாயும்
 தான்நரைத்து அழிவ தாயும்
உருவமே அழிவே ஆனால்
 உள்ளபோதே பார் உய்ய.

184. ஒருபுலன் நுகரும் போதுஅங்கு
 ஒன்றுஇல்லை ஒன்றின் பாலும்
வருபயன் மாறி மாறி
 வந்திடும் எல்லாம் மாறும்

ஒருபொழுது உணரின் உண்டாம்
அல்லதுஇவ் அல்லல் வாழ்க்கை
மருள்கனவு அதுவும் போல
மாயும்பின் மாயும் அன்றே.

185. அரிசனம் பூசி மாலை
அணிந்துபொன் ஆடை சாத்திப்
பரிசனம் பின்பு செல்லப்
பாரகர் பரிக்கக் கொட்ட
வரிசின்னம் ஊதத் தொங்கல்
வந்திட உணர்வு மாண்டு
பெரியவர் பேச்சும் இன்றிக்
கிடத்தலால் பிணத்தோடு ஒப்பர்.

186. பிணத்தினை ஒத்து வாழ்வோர்
பின் நடைப் பிணங்கள் போல
உணக்கியே உழல்வீர் உங்கள்
உடல்உயிர் உணர்வும் எல்லாம்
கணத்திடைத் தோன்றி மாயும்
காயம்என்று அறிந்து ஒருக்கால்
வணக்குறீர் அரனை என்றும்
வானவர் வணங்க வைப்பன்.

மூன்றாம் சூத்திரம்

187. உயிர்எனப் படுவது இந்த
உடலின்வேறு உளதாய் உற்றுச்
செயிர்உறும் இச்சா ஞானச்
செய்திகள் உடையது ஆகிப்
பயில்வுறும் இன்பத் துன்பப்
பலன்களும் நுகரும் பார்க்கில்
துயிலொடும் அஞ்சு அவத்தைப்
படும் உண்மை துரியாதீதம்.

188. உடலின் வேறு உயிர்ஏன் இந்த
உடல்அன்றோ உணர்வது என்னில்
உடல்சவம் ஆன போதும்
உடலினுக்கு உணர்வு உண்டோதான்
உடலினின் வாயுப் போனால்
உணர்ச்சிஇன்று உடலுக்கு என்னில்
உடலினின் வாயுப் போகாது
உறக்கத்தும் உணர்வது இன்றே.

189. அறிவது ஐம்பொறியே என்னில்
உறக்கத்தின் அறியா ஆகும்
அறிவது ஒன்றுஒன்று ஆக
ஒன்றுஒன்றாய் அறியும் என்னில்
அறிவுகள் ஒன்றை ஒன்றுஅங்கு
அறிந்திடா ஐந்தையும் கொண்டு
அறிவது ஒன்று உண்டு அதுஆன்மா
ஐம்பொறி அறிந்தி டாவே.

190. அறிந்திடும் பிராண வாயு
அடங்குதல் விடுதல் செய்தால்
அறிந்திடாது உடல் உறக்கத்து
அறிவுஇன்மை கரணம் இன்மை
அறிந்திடும் முதலி ஆகில்
அதுநிற்கக் கரணம் போகா
அறிந்திடும் பிராணன் தன்னை
அடக்கியும் விட்டும் ஆன்மா.

இலக்கண இயல்

நான்காம் சூத்திரம்

191. உணர்வன கரணம் என்னில்
ஒன்றைஒன்று உணரா வெவ்வேறு
அணைதரும் செயல்கள் நான்கும்
அறிந்துஅவை அடக்கி ஆக்கிப்
புணரும்உட் கருவி ஆக்கிப்
புறக் கருவியினும் போக்கி
இணைதரும் இவற்றின் வேறாய்
யான்எனது என்பது ஆன்மா.

முதல் அதிகரணம்

192. கருவிஆம் மனமும் புத்தி
அகங்காரம் சித்தம் நான்கும்
மருவி ஆன்மாவே என்ன
வரும்தீபம் எனத்தெரிந்து அங்கு
ஒருவி ஆன்மாவின் உண்மை
உணர்ந்தவர் தமை உணர்ந்தோர்
தரும்இது பசுஞானம் பின்
சிவஞானம் தனக்கு மேலாம்.

193. அவ்வுடன் உவ்வும் மவ்வும்
மனம்புத்தி அகங்காரங்கள்
செவ்விய விந்து நாதம்
சித்தமோடு உள்ளம் ஆகும்
ஒவ்வெனும் எழுத்தாம் ஐந்து
உணர்வுஉதித்து ஒடுங்கும் ஆறும்
பவ்வமும் திரையும் போலும்
பார்க்கில்இப் பண்பும் தோன்றும்.

194. அயன்அரி அரனும் ஈசர்
சதாசிவம் அதிதெய்வங்கள்
உயவரும் அவ்வோடு உவ்வும்
மவ்விந்து நாதங் கட்குப்
பயன்உறும் அஞ்சில் ஆன்மாப்
பரவிடில் அசித்தாம் பார்க்கில்
சயம்உறு வளி இரண்டும்
தவிர்த்துஉறில் தானும் தோன்றும்.

195. ஆன்மாவின் வடிவு தானே
அநேகஅர்த்தக் கூட்டம் என்னில்
பார்ப்பார்கட்கு ஆன்மா இன்றாய்
பலபொருள் உண்மை ஆகும்
சேர்ப்பாய பலவே உண்மை
என்றிடில் சென்று இவற்றை
ஓர்ப்பான்வேறு உணர்வோர்க்கு எல்லாம்
உணர்பொருள் வேறுஅது ஆமே.

இரண்டாம் அதிகரணம்

196. அறிவுஇச்சை செயல்கள் எல்லாம்
அடைந்துஅனல் வெம்மை யும்போல்
குறிஉற்று அங்குஏக அநேக
குணகுணி பாவம் ஆகி
நெறியுற்று நிற்கும் என்னில்
நிகழ்புலன் கரணம் எல்லாம்
செறிவு உற்று அங்கு அறிவுகொள்ள
வேண்டுமோ சீவ னார்க்கே.

197. குணங்களை இன்றி ஒன்றுஆம்
குறியுடைத்து ஆன்மா என்னில்
இணங்கிடா இச்சா ஞானக்
கிரியைகள் இவை உடல்கண்
பிணங்கிடும் சந்நிதிக் கண்
எனில் பிணத்து உறக்கத்து இன்றாம்
உணங்கிடும் கரணம் என்னில்
சந்நிதி ஒழிந்தது அன்றே.

198. சந்நிதி குணம்அது ஆகும்
தான்என்போல் என்னில் காந்தம்
முன்இரும்பு என்றாய் ஈர்க்கும்
முறைமைஉண்டு அகற்றல் இன்றாம்
உன்னுதல் ஒடுங்கல் ஓடல்
இருத்தலே கிடத்தல் நிற்றல்
என்னும்இத் தொழில்கள் மற்றும்
இயற்றுவது ஆன்மா என்னே.

199. உருஉயிர் என்னில் இந்த
உடலினுள் காண வேண்டும்
வருவது பரிணா மத்தாய்
அநித்தமாம் பூதம் ஆகும்
கருவினில் நுழையும் ஆறும்
காட்டிட வேண்டும் கண்ணில்
மருவிடாது என்னில் உன்தன்
வாயினால் உருஅன்று என்னே.

200. சூக்கும உருஅது என்னில்
தூலகாரணம் அது ஆகும்
ஆக்கிய மனாதி தன்மாத்
திரை வடிவு அசேதனம் பின்
நீக்கிய சூக்கு மத்தே
நிற்பதோர் உருஉண்டு என்னில்
ஆக்கிடும் உருவம் எல்லாம்
அசித்துமாய் அநித்தம் ஆமே.

201. அருவுரு என்னில் ஆன்மா
அருஉரு ஆவது இன்றாம்
உருஅரு ஆகா தாகும்
ஒருபொருட்கு இரண்டு தன்மை
வருவதும் இல்லை காட்ட
வன்னிபோல் மருவும் என்னில்
உருவமும் காண வேண்டும்
உண்மையும் ஒழிந்து போமே.

202. சந்திரன் வடிவு போலத்
தான்அரு உருவம் என்னில்
வந்துநம் கண்ணில் தோன்றும்
வடிவு உளதாம் உயிர்க்கும்
இந்தஊன் உருவம் தானாய்
எழுவதும் உயிரே என்னில்
பந்தமாய் அசித்தாய் ஆன்மாப்
பவுதிகம் ஆகும் அன்றே.

203. அரு அவிகாரி ஆன்மா
ஆகாயம் போல என்னில்
உருவினைக் கட்டி ஆட்டி
ஓட்டிமீட்டு உலாவப் பண்ணி
மருவி நிற்பித்து இருத்திக்
கிடத்திமண் புரட்டி மற்றும்
பெருவிகா ரங்கள் எல்லாம்
தருவதுஎன் பேசி டாயே.

204. அசித்துஎனின் உணராது ஆன்மா
அசித்துச்சித்து ஆகும் என்னில்
அசித்துச்சித்து ஆகாது ஆகும்
சித்துஅசித்து ஆவது இல்லை
அசித்துஒரு புறமாய் ஒன்றில்
சித்துஒரு புறமாய் நில்லாது
அசித்துஉறாச் சித்தே என்னில்
அசித்துஅடைந்து அறிவது இன்றாம்.

205. உயிரினை அணுஅது என்னில்
உடல்பல துவாரம் ஓடும்
பயில்வுஉறக் கட்டுணாது
பாரமும் தரித்துச் செல்லாது
அயர்வுஉறும் அசித்தாய்ப் பூத
அணுக்களில் ஒன்றுஅது ஆகும்
இயல்புஉறும் அவயவத்தால்
அணுஉரு இறக்கும் அன்றே.

206. உடலினின் ஏக தேசி
உயிர்எனின் உருவாய் மாயும்
படர்வுஉறும் அறிவுஇன்று எங்கும்
சுடரொளிப் பண்புஅது என்னில்
சுடர்தொடில் சுடுவது எங்கும்
தொட்டுஇடம் அறிவு உண்டாகும்
அடர்புலன் இடத்தும் ஒக்க
அறிவுஎழ வேண்டும் அன்றே.

207. உருவினில் நிறைந்து நின்றுஅங்கு
உணர்ந்திடும் உயிர்அது என்னில்
மருவிடாது உறக்கம் வாயில்
அறிவுஒக்க வழங்க வேண்டும்
பெருகிடும் சுருங்கும் போதம்
பேர்உடல் சிற்றுடல் கண்
வரும்உடல் குறைக்க ஒக்கக்
குறைந்துபின் மாயும் அன்றே.

208. எங்கும்தான் வியாபியாய் நின்று
உணரும்இவ் ஆன்மா என்னில்
தங்கிடும் அவத்தை போக்கு
வரவுகள் சாற்றல் வேண்டும்
பங்கம்ஆர் புலன்ஒன்று ஒன்றாப்
பார்த்திடல் பகரல் வேண்டும்
இங்குஎலாம் ஒழிந்தால் நிற்பது
எங்ஙனம் இயம்பல் வேண்டும்.

209. சுத்தமாம் ஆன்ம சித்தைத்
துகள்உடல் மறைத்தது என்னில்
வைத்துஉறாது உடல்கண் வாயில்
கரணங்கள் வழியால் ஞானம்
ஒத்துஉறும் மலம் அற்றாலும்
உறும்மலம் வீடும் இன்றாம்
பெத்தமும் அடையான் முத்த
னாய்ப் பிரகாசன் ஆமே.

210. அசித்துஅரு வியாபகம் போல்
வியாபகம் அருவம் இன்றாய்
வசித்திட வரும் வியாபி
எனும்வழக்கு உடையன் ஆகி
நசித்திடா ஞானச் செய்தி
அநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவம் உடையன் ஆகிப்
பசுஎன நிற்கும் ஆன்மா.

211. மாயையின் வயிற்றுள் மன்னி
வரும்செயல் ஞானம் இச்சை
ஏயும்அக் கலாதி மூன்றால்
ஏக தேசத்தின் ஏய்ந்துஇங்கு
ஆயும்முக் குணங்கள் அந்தக்
கரணங்கள் ஆதி எல்லாம்
காயம் பெத்தங்கள் ஆகிக்
கலந்துஉடன் நிற்கும் ஆன்மா.

212. சூக்கும தேகி ஆகித்
தூல ரூபத்தில் மன்னிச்
சாக்கிரம் முதலாய் உள்ள
அவத்தையுள் தங்கி எங்கும்
போக்கொடு வரவும் எல்லாம்
புரிந்து புண்ணியங்கள் பாவம்
ஆக்கியும் பலன்கள் எல்லாம்
அருந்தியும் நிற்கும் ஆன்மா.

213. மருவு ஆனந்தம் விஞ்ஞான
மனோ பிராணன் அன்னமயம்
உருவாம் தன்மை உண்டாய்முன்
ஒன்றுக்கு ஒன்று சூக்குமமாய்
வருமாம் அன்னமயம் பற்றி
மாயை முதற்காரணம் ஆகும்
அருவாய் ஆன்மா ஐங்கோசத்து
ஆர்ப்புஉண்டு அவற்றின் அகம்புறமாம்.

214. தோற்பாவைக் கூத்தும் தொல்லை
மரப்பாவை இயக்கமும் சீர்த்
தேர்ப்பாரில் செலவும் வேறாய்ச்
செலுத்துவோர் செய்தி தானும்
பார்ப்பாய வேடம் கட்டி
ஆடுவோர் பரிசு போலும்
ஆர்ப்பாய காயம் தன்னை
ஆன்மாநின்று ஆட்டும் ஆறே.

215\. என்உடல் பொறி பிராணன்
கரணம்என் உணர்வு என்றக்கால்
தன்னின் வேறாகும் நீஎன்
தன்மனை என்ற எல்லாம்
நின்னின்வேறு ஆகும் என்னில்
நீங்கிடா இவைஇங்கு என்னில்
உன்னின ஆகும் நீயாம்
உகிர்மயிர் உகவும் காண்டி.

216\. பொன்அணி ஆடை மாலை
போதுமேல் ஆன போதுஇங்கு
என்அணி யான்என்று உன்னி
இருந்தனை பிரிந்த போது
நின்அணி நீயும் அல்ல
ஆயினை காயம் நின்னின்
அன்னியம் ஆகும் உன்னை
அறிந்துநீ பிரிந்து பாரே.

217\. உடல்இயான் அல்லேன் இந்த
உணர்வுயான் அல்ல ஆன
கடன்இயாது என்னில் வேறு
கண்டுஉணர்வு என்னது என்கை
இடர்இலா என்றன் ஆன்மா
என்றபோது ஆன்மா வேறோ
திடனதா உயிரை வேறு
கண்டிடார் செப்பலே காண்.

218\. புந்தியை மனம் அதுஎன்றும்
மனம்அது புந்தி என்றும்
சிந்தையைச் சீவன் என்றும்
சீவனைச் சிந்தை என்றும்
முந்தனை ஆன்மா என்றும்
ஆன்மாவை முந்தன் என்றும்
வந்திடும் என்தன் ஆன்மா
என்றது மற்று ஒன்றைக் காண்.

219\. அறிவுஉடல் சிந்தை ஆன்மா
அணைதலால் ஆன்மா என்பர்
எறிசுடர் விளக்கு இருக்கும்
இடத்தையும் விளக்கு என்றால்போல்
பொறிபுலன் கரணம் எல்லாம்
புலப்படும் அபேதம் ஆகிப்
பிறிதராது அறிவது ஆன்மா
அறிபொருள் பின்னம் ஆமே.

220. கண்டுஉணர் புருடன் வேறு
கனவுகண்டு ஒடுங்கிக் காயம்
உண்டியும் வினையும் இன்றிக்
கிடந்து உயிர்த்திட உணர்ந்து
கண்டிடும் கனவும் சொல்லி
ஒடுக்கமும் கருதி வேறாய்
உண்டியும் வினையும் உற்றுஇங்கு
உணர்த்திட உணரா நிற்கும்.

221. புருடனே அறிவன் ஆகில்
பொறிபுலன் ஆதி போதம்
தருவதுஎன் அறிவு மாயா
தனுகர ணாதி பற்றி
வருவது இங்கு அநாதி ஆக
மலத்தினின் மறைந்து நிற்பன்
அருவனாய் இவற்றோடு ஆளும்
அமைச்சரும் அரசும் போல்வன்.

மூன்றாம் அதிகரணம்

222. படைகொடு பவனி போதும்
பார்மன்னன் புகும்போது இல்லில்
கடைதொறும் விட்டு விட்டுக்
காவலும் இட்டுப் பின்னர்
அடைதரும் தனியே அந்தப்
புரத்தினில் அதுபோல் ஆன்மா
உடலினில் அஞ்சு அவத்தை
உறும்உயிர் காவல் ஆக.

223. சாக்கிரம் முப்பத்து ஐந்து
நுதலினில் கனவு தன்னில்
ஆக்கிய இருபத்து ஐந்து
களத்தினில் சுழுனை மூன்று
நீக்கிய இதயம் தன்னில்
துரியத்தில் இரண்டு நாபி
நோக்கிய துரியா தீதம்
நுவலில் மூலத்தில் ஒன்றே.

224. இருவகை சாக்கி ராதி
அவத்தைகள் இயல்பு தானும்
ஒருவகை கீழே நூக்கி
உற்பவம் காட்டும் ஒன்று
பெருகமேல் நோக்கித் தீய
பிறப்பு அறுத்திடும் இயோகில்
தருவதுஓர் சமாதி தானும்
தாழ்ந்துபின் சனனம் சாரும்.

225. அறிதரு முதல் அவத்தை
அடைதரும் இடத்தே ஐந்தும்
செறிதரும் கரணம் தன்னில்
செயல்தொறும் கண்டு கொள்நீ
பிறிவுஇலா ஞானத்தோரும்
பிறப்புஅற அருளால் ஆங்கே
குறியொடு அஞ்சு அவத்தை
கூடுவர் வீடு கூட.

226. ஐந்துசாக் கிரத்தில் நான்கு
கனவினில் சுழுனை மூன்று
வந்திடும் துரியம் தன்னில்
இரண்டுஒன்று துரியா தீதம்
தந்திடும் சாக்கி ராதி
அவத்தைகள் தானம் தோறும்
உந்திடும் கரணம் தன்னில்
செயல்தொறும் உணர்ந்து கொள்ளே.

227. கேவலம் சகலம் சுத்தம்
என்றுமூன்று அவத்தை ஆன்மா
மேவுவன் கேவலம் தன்
உண்மை மெய் பொறிகள் எல்லாம்
காவலன் கொடுத்த போது
சகலனாம் மலங்கள் எல்லாம்
ஓவின போது சுத்தம்
உடையன் உற்பவம் துடைத்தே.

228. அறிவுஇலன் அமூர்த்தன் நித்தன்
அராகாதி குணங்க ளோடும்
செறிவுஇலன் கலாதி யோடும்
சேர்வுஇலன் செயல்கள் இல்லான்
குறியிலன் கருத்தா அல்லான்
போகத்தில் கொள்கை இல்லான்
பிறிவுஇலன் மலத்தி னோடும்
வியாபி கேவலத்தில் ஆன்மா.

229. உருவினைக் கொண்டு போக
போக்கியத்து உன்னல் செப்பல்
வருசெயல் மருவிச் சத்தம்
ஆதியாம் விடயம் தன்னில்
புரிவதும் செய்துஇங்கு எல்லா
யோனியும் புக்கு உழன்று
திரிதரும் சகல மான
அவத்தையில் சீவன் சென்றே.

230. இருவினைச் செயல்கள் ஒப்பில்
ஈசன்தன் சத்தி தோயக்
குருஅருள் பெற்று ஞான
யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமலம் அறுத்துப் பண்டைச்
சிற்றறிவு ஒழிந்து ஞானம்
பெருகி நாயகன்தன் பாதம்
பெறுவது சுத்தம் ஆமே.

ஐந்தாம் சூத்திரம்

231. பொறிபுலன் கரணம் எல்லாம்
புருடனால் அறிந்து ஆன்மாவை
அறிதரா அவையே போல
ஆன்மாக்கள் அனைத்தும் எங்கும்
செறிதரும் சிவன் தனாலே
அறிந்திடும் சிவனைக் காணா
அறிதரும் சிவனே எல்லாம்
அறிந்தும் அறிவித்தும் நிற்பன்.

இரண்டாம் அதிகரணம்

232. இறைவனே அறிவிப்பானேல்
ஈண்டுஅறிவு எவர்க்கும் ஒக்கும்
குறைவு அதிகங்கள் தத்தம்
கன்மமேல் கோமான் வேண்டா
முறைதரு செயற்குப் பாரும்
முளிரிகட்கு இரவியும் போல்
அறைதரு தத்தம் கன்மத்து
அளவினுக்கு அளிப்பன் ஆதி.

233. அறிந்திடும் ஆன்மா ஒன்றை
ஒன்றினால் அறித லானும்
அறிந்தவை மறத்த லானும்
அறிவிக்க அறித லானும்
அறிந்திடும் தன்னையும் தான்
அறியாமை யானும் தானே
அறிந்திடும் அறிவன் அன்றாம்
அறிவிக்க அறிவன் அன்றே.

234. கருவியால் பொருளால் காட்டால்
காலத்தால் கருமம் தன்னால்
உருவினால் அளவால் நூலால்
ஒருவரால் உணர்த்த லானும்
அருவனாய் உண்மை தன்னில்
அறியாது நிற்ற லானும்
ஒருவனே எல்லாம் தானும்
உணர்த்துவன் அருளி னாலே.

235. கருவியும் பொருளும் காட்டும்
காலமும் கருமம் தானும்
உருவமும் அளவு நூலும்
ஒருவரும் உணர்த்தல் இன்றி
அருவனாய் உலகம் எல்லாம்
அறிந்து அவை ஆக்கி வேறாய்
ஒருவனே உயிர்கட்கு எல்லாம்
உயிருமாய் உணர்த்தி நிற்பன்.

236. இறைவன்தன் சந்நிதிக்கண்
உலகின்தன் சேட்டை என்னும்
மறைகளும் மறந்தாய் மாயை
மருவிடான் சிவன் அவன்கண்
உறைதராது அசேதனத்தால்
உருவுடை உயிர்கட்கு எல்லாம்
நிறைபரன் சந்நிதிக்கண்
நீடுஉணர்வு உதிக்கும் அன்றே.

237. உலகமே உருவம் ஆக
யோனிகள் உறுப்பது ஆக
இலகுபேர் இச்சா ஞானக்
கிரியை உட்கரணம் ஆக
அலகுஇலா உயிர்ப் புலன்கட்கு
அறிவினை ஆக்கி ஐந்து
நலம்மிகு தொழில்களோடும்
நாடகம் நடிப்பன் நாதன்.

238. தெரிந்துகொண்டு ஒரோஒன்று ஆகச்
சென்றுஐந்து புலனும் பற்றிப்
புரிந்திடும் உணர்வினோடும்
போகமும் கொடுத்து யோனி
திரிந்திடும் அதுவும் செய்து
செய்திகண்டு உயிர்கட்கு எல்லாம்
விரிந்திடும் அறிவும் காட்டி
வீட்டையும் அளிப்பன் மேலோன்.

239. அருளது சத்தி ஆகும்
அரன்தனக்கு அருளை இன்றித்
தெருள்சிவம் இல்லை அந்தச்
சிவம்இன்றிச் சத்தி இல்லை
மருளினை அருளால் வாட்டி
மன்உயிர்க்கு அளிப்பன் கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும்
இரவியைப் போல ஈசன்.

ஆறாம் சூத்திரம்

240. அறிவுறும் பொருளோ ஈசன்
அறிவுறா தவனோ என்னில்
அறிபொருள் அசித்து அசத்தாம்
அறியாதது இன்றாம் எங்கும்
செறிசிவம் இரண்டும் இன்றிச்
சித்தொடு சத்தாய் நிற்கும்
நெறிதரு சத்தின் முன்னர்
அசத்துஎலாம் நின்றி டாவே.

முதல் அதிகரணம்

241. ஆவதாய் அழிவது ஆகி
வருதலால் அறிவு தானும்
தாவலால் உலகு போகம்
தனுகர ணாதி ஆகி
மேவலால் மலங்கள் ஆகி
விரவலால் வேறும் ஆகி
ஓவலால் அசத்தாம் சுட்டி
உணர்பொருள் ஆன எல்லாம்.

242. மண்தனில் வாழ்வும் வானத்து
அரசுஅயன் மாலார் வாழ்வும்
எண்தரு பூத பேத
யோனிகள் யாவும் எல்லாம்
கண்ட இந்திரமா சாலம்
கனாக்கழுது இரதம் காட்டி
உண்டுபோல் இன்றாம் பண்பில்
உலகினை அசத்தும் என்பர்.

இரண்டாம் அதிகரணம்

243. உணராத பொருள்சத்து என்னில்
ஒருபயன் இல்லை தானும்
புணராது நாமும் சென்று
பொருந்துவது இன்றாம் என்றும்
தணவாத கருமம் ஒன்றும்
தருவதும் இல்லை வானத்து
இணர்ஆர்பூந் தொடையும் யாமைக்கு
எழும்மயிர்க் கயிறும் போலும்.

மூன்றாம் அதிகரணம்

244. தத்துவம் சத்து அசத்துச்
சதசத்தும் அன்று என்றால்என்
உய்த்துஉணர்ந்து உண்டோ இன்றோ
என்றவர்க்கு உண்டுஎன்று ஓதில்

வைத்திடும் சத்தே யாகும்
மனத்தொடு வாக்கு இறந்த
சித்துரு அது அசித்தாம்
மனத்தினால் தேர்வது எல்லாம்.

245. அறிபொருள் அசித்தாய் வேறாம்
அறிவுறாப் பொருள்சத்து என்னில்
அறிபவன் அறியான் ஆகில்
அதுஇன்று பயனும் இல்லை
அறிபவன் அருளி னாலே
அனன்னியம் ஆகக் காண்பன்
அறிபொருள் அறிவாய் வேறாய்
அறிவு அருள்உருவாய் நிற்கும்.

246. பாவிப்பது என்னில் பாவம்
பாவகம் கடக்கில் பாவம்
பாவிக்கும் அதுநான் என்னில்
பாவகம் பாவம் கெட்டுப்
பாவிப்பது என்னில் பாவம்
பாவனை இறந்து நின்று
பாவிக்கப் படுவது ஆகும்
பரம்பரன் அருளி னாலே.

247. அன்னியம் இலாமை யானும்
அறிவினுள் நிற்ற லானும்
உன்னிய எல்லாம் உள்நின்று
உணர்த்துவன் ஆத லானும்
என்னது யான்என்று ஓதும்
இருஞ்செருக்கு அறுத்த லானும்
தன்அறிவு அதனால் காணும்
தகைமையன் அல்லன் ஈசன்.

248. ஒன்றுஎனும் அதனால் ஒன்றுஎன்று
உரைப்பது உண்டு ஆகையாலே
நின்றனன் வேறாய்த் தன்னின்
நீங்கிடா நிலைமை யாலே
பின்றிய உணர்வுக்கு எட்டாப்
பெருமையன் அறிவின் உள்ளே
என்றும் நின்றிடுத லாலே
இவன்அவன் என்னல் ஆமே.

சாதன இயல்

ஏழாம் சூத்திரம்

249. அனைத்தும் சத்துஎன்னில் ஒன்றை
அறிந்திடாது அசத்தால் என்னில்
முனைத்திடாது அசத்துச் சத்தின்
முன்இருள் இரவி முன்போல்
நினைப்பது இங்கு அசத்தே என்னில்
சத்தின்முன் நிலாமை யானும்
தனைக்கொடு ஒன்று உணர்தலானும்
தான்அசத்து உணராது அன்றே.

மூன்றாம் அதிகரணம்

250. சத்துஅசத்து அறிவது ஆன்மாத்
தான்சத்தும் அசத்தும் அன்று
நித்தனாய்ச் சதசத் தாகி
நின்றிடும் இரண்டன் பாலும்
ஒத்துஉடன் உதித்து நில்லாது
உதியாதும் நின்றி டாது
வைத்திடும் தோற்றம் நாற்றம்
மலரினில் வருதல் போலும்.

251. சுத்தமெய்ஞ் ஞான மேனிச்
சோதிபால் அசத்து அஞ்ஞானம்
ஒத்துஉறா குற்றம் எல்லாம்
உற்றிடும் உயிரின் கண்ணே
சத்துஉள போதே வேறாம்
சதசத்தும் அசத்தும் எல்லாம்
வைத்திடும் அநாதி ஆக
வாரிநீர் லவணம் போலும்.

252. அறிவிக்க அறித லானும்
அழிவுஇன்றி நிற்ற லானும்
குறிபெற்ற சித்தும் சத்தும்
கூறுவது உயிருக்கு ஈசன்
நெறிநித்த முத்த சுத்த
சித்து என நிற்பன் அன்றே
பிறிவிப்பன் மலங்கள் எல்லாம்
பின்உயிர்க்கு அருளி னாலே.

எட்டாம் சூத்திரம்

253. மன்னவன்தன் மகன்வேடர் இடத்தே தங்கி
வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்அவனும் என்மகன்நீ என்றுஅவரின் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப் பேணுமா போல்
துன்னியஐம் புலவேடர் சுழலில் பட்டுத்
துணைவனையும் அறியாது துயர்உறும்தொல் உயிரை
மன்னும்அருள் குருவாகி வந்துஅவரின் நீக்கி
மலம்அகற்றித் தானாக்கி மலர்அடிக்கீழ் வைப்பன்.

முதல் அதிகரணம்

254. உரைதரும்இப் பசுவர்க்கம் உணரில் மூன்றாம்
உயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்
நிரையில்மலம் மலம்கன்மம் மலம்கன்மம் மாயை
நிற்கும்முதல் இருவர்க்கும் நிராதாரம் ஆகிக்
கரையில்அருட் பரன்துவிதா சத்திநி பாதத்தால்
கழிப்பன்மலம் சகலர்க்குக் கன்ம ஒப்பில்
தரையில்ஆ சான்மூர்த்தி ஆதாரம் ஆகித்
தரித்துஒழிப்பன் மலம்சதுர்த்தா சத்திநிபா தத்தால்.

255. பலவிதம் ஆசான்பாச மோசனம்தான் பண்ணும்
படி நயனத்து அருள்பரிசம் வாசகம் மானதமும்
அலகில்சாத் திரம்யோகம் அவுத்தி ராதி
அநேகம்உள அவற்றின் அவுத்திரி இரண்டு திறனாம்
இலகுஞானம் கிரியை என ஞானம் மனத்தால்
இயற்றுவது கிரியைஎழில் குண்டம் மண்டலாதி
நிலவுவித்துச் செய்தல் கிரியாவதிதான் இன்னும்
நிர்ப்பீசம் சபீசம்என இரண்டுஆகி நிகழும்.

256. பாலரொடு வாலீசர் விருத்தர்பணி மொழியார்
பலபோகத்தவர் வியாதிப் பட்டவர்க்குப் பண்ணும்
சீலம்அது நிர்ப்பீசம் சமயா சாரம்
திகழ்சுத்தி சமயி புத்திரர்க்கு நித்தத்து
ஏலும்அதி காரத்தை இயற்றித் தானும்
எழில்நிரதி காரைஎன நின்றுஇரண்டாய் விளங்கும்
சாலநிகழ் தேக பாதத்தி னோடு
சத்தியநிர் வாணம்எனச் சாற்றும் காலே.

257. ஓதிஉணர்ந்து ஒழிக்கநெறி இழுக்கா நல்ல
உத்தமர்க்குச் செய்வதுஉயர் பீசம்இவர் தம்மை
நீதியினால் நித்திய நைமித்திக காமியத்தில்
நிறுத்திநிரம்பு அதிகாரம் நிகழ்த்துவதும் செய்து
சாதகா சாரியரும் ஆக்கி வீடு
தருவிக்கும் உலோகசிவ தருமிணிஎன்று இரண்டாம்
ஆதலினால் அதிகாரையாம் சமயம் விசேடம்
நிருவாணம் அபிடேகம் இவற்றுஅடங்கும் அன்றே.

258. அழிவுஇலாக் கிரியையினால் ஆதல்சத்தி மத்தால்
ஆதல் அத்துவாசுத்தி பண்ணிமலம் அகற்றி
ஒழிவிலாச் சிவம் பிரகாசித்தற்கு ஞானம்
உதிப்பித்து உற்பவம்துடைப்பன் அரன்ஒரு மூவர்க்கும்
வழுவிலா வழிஆறாம் மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்
கழிவிலாது உரைத்தமுறை ஒன்றின்ஒன்று வியாத்தி
கருதுகலை சத்தியின்கண் சத்திசிவன் கண்ணாம்.

259. மந்திரங்கள் முதல்ஐந்தும் கலைஐந்தின் வியாத்தி
மருவுமந் திரம்இரண்டு பதங்கள் நால்ஏழ்
அந்தநிலை எழுத்துஒன்று புவனம் நூற்றெட்டு
அவனி தத்துவம்ஒன்று நிவிர்த்திஅயன் தெய்வம்
வந்திடும் மந்திரம்இரண்டு பதங்கள் மூவேழ்
வன்னங்கள் நால்ஆறு புரம்ஐம்பத்து ஆறு
தந்திடும் தத்துவங்கள் இருபத்து மூன்று
தருபிரதிட்டா கலைமால் அதிதெய்வம் தானாம்.

260. வித்தையில்மந் திரம்இரண்டு பதம்நால் ஐந்து
விரவும்எழுத்து ஏழுபுரம் இருபத்து ஏழு
தத்துவமும் ஓர்ஏழு தங்கும்அதி தெய்வம்
தாவில்உருத் திரன்ஆகும் சாந்தி தன்னில்
வைத்தனமந் திரம்இரண்டு பதங்கள் பதினொன்று
வன்னம்ஒரு மூன்றுபுரம் பதினெட் டாகும்
உத்தமமாம் தத்துவமும் ஒருமூன்று ஆகும்
உணரில்அதி தேவதையும் உயர்ஈசன் ஆமே.

261. சாந்தியா தீதகலை தன்னில்மந் திரங்கள்
தாம்மூன்று பதம்ஒன்று அக்கரங்கள் பதினாறு
வாய்ந்தபுரம் மூவைந்து தத்துவங்கள் இரண்டு
மருவும்அதி தேவதையும் மன்னுசதா சிவராம்
ஏய்ந்தமுறை மந்திரங்கள் பதினொன்று பதங்கள்
எண்பத்தொன்று அக்கரங்கள் ஐம்பத்தொன்று ஆகும்
ஆய்ந்தபுரம் இருநூற்றோடு இருபத்து நாலாம்
அறிதருதத் துவம்முப்பத்து ஆறுகலை ஐந்தே.

262. மூன்றுதிறத்து அணுக்கள்செயும் கன்மங் கட்கு
முன்னிலையாம் மூவிரண்டாம் அத்து வாவின்
ஆன்றமுறை அவைஅருத்தி அறுத்துமலம் முதிர்வித்து
அரும்பருவம் அடைதலுமே ஆசான் ஆகித்
தோன்றிநுக ராதவகை முற்செய் கன்மத்
துகள் அறுத்து அங்கு அத்துவாத் துடக்குஅறவே
சோதித்து
ஏன்றஉடல் கன்மம்அனு பவத்தினால் அறுத்துஇங்கு
இனிச்செய்கன்மம் மூலமலம் ஞானத்தால் இடிப்பன்.

இரண்டாம் அதிகரணம்

263. புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழிஉழன்றும் புகலும்ஆச் சிரம
அறத்துறைகள் அவைஅடைந்தும் அரும்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதில்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவன்அடியைச் சேர்வர்.

264. இம்மையே ஈரெட்டாண்டு எய்திஎழில் ஆரும்
ஏந்துஇழையார் முத்திஎன்றும் இருஞ்சுவர்க்க முத்தி
அம்மையே என்றும்முத்தி ஐந்து கந்தம்
அறக்கெடுகை என்றும்அட்ட குணம்முத்தி என்றும்
மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி என்றும்
விவேகம்முத்தி என்றும்தன் மெய்வடிவாம் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி என்றும் செப்புவர்கள்
சிவன்அடியைச் சேரும்முத்தி செப்புவதுஇங்கு யாமே.

265. ஓதுசம யங்கள்பொருள் உணரும் நூல்கள்
ஒன்றொடு ஒன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசமயம் பொருள்நூல் யாதுஇங்கு என்னின்
இதுஆகும் அதுஅல்லது எனும்பிணக்கு அது இன்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதுயாது ஒருசமயம் அதுசமயம் பொருள்நூல்
ஆதலினால் இவைஎல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும் இவைஇரண்டும் அரன்அடிக்கீழ்
அடங்கும்.

266. அருமறை ஆகமம்முதல்நூல் அனைத்தும்உரைக்கையினால்
அளப்புஅரிதாம் அப்பொருளை அரன்அருளால் அணுக்கள்
தருவர்கள்பின் தனித்தனியே தாம்அறிந்த அளவில்
தர்க்கமொடு உத்தரங்களினால் சமயம் சாதித்து
மிருதிபுரா ணம்கலைகள் மற்றும் எல்லாம்
மெய்ந்நூலின் வழிபுடையாம் அங்கம் வேதாங்கம்
சுருதிசிவா கமம்ஒழியச் சொல்லுவது ஒன்றுஇல்லை
சொல்லுவார் தமக்குஅறையோ சொல் ஒணாதே.

267. வேதநூல் சைவநூல் என்றுஇரண்டே நூல்கள்
வேறுஉரைக்கும் நூல்இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதிஅமலன் தரும்நூல் இரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அரும்சிறப்பு நூலாம்

நீதியினால் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீள்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதுஇல்பொருள் கொண்டுஉரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்.

268. சித்தாந்தத்தே சிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
சென்னம் ஒன்றிலே சீவன்முத்தர் ஆக
வைத்துஆண்டு மலம்கழுவி ஞான வாரி
மடுத்துஆனந்தம் பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும் உலகர்எல்லாம் மூர்க்கர் ஆகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இதுஎன்ன பிராந்தி.

269. இறைவன்ஆவான் ஞானம் எல்லாம் எல்லா
முதன்மை அனுக்கிரகம்எல்லாம் இயல்புடையான்
இயம்பும்
மறைகள் ஆகமங்களினால் அறிவுஎல்லாம் தோற்றும்
மரபின்வழி வருவோர்க்கும் வாரா தோர்க்கும்
முறைமையினால் இன்பத்துன்பம் கொடுத்த லாலே
முதன்மைஎல்லாம் அறிந்தும்முயங்கு இரண்டு போகத்
திறம்அதனால் வினைஅறுக்கும் செய்தி யாலே
சேரும் அனுக்கிரகம் எலாம் காணுதும்நாம் சிவற்கே.

270. சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதமார்க்கம் என்றும் சங்கரனை அடையும்
நன்மார்க்கம் நால்அவைதாம் ஞான யோக
நற்கிரியா சரியைஎன நவிற்றுவதும் செய்வர்
சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய
சாரூப்பிய சாயுச்சியம் என்றுசதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தால் எய்தும் முத்தி
முடிவுஎன்பர் மூன்றினுக்கும் முத்திபதம் என்பர்.

271. தாதமார்க்கம் சாற்றில் சங்கரன்தன் கோயில்
தலம்அலகிட்டு இலகுதிரு மெழுக்கும் சாத்திப்
போதுகளும் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில்திரு விளக்குஇட்டுத் திருநந்த வனமும்
செய்துதிரு வேடம்கண்டால் அடியேன் செய்வது
யாதுபணி யீர்என்று பணிந்துஅவர்தம் பணியும்
இயற்றுவதுஇச் சரியைசெய்வோர் ஈசன்உலகு
இருப்பர்.

272. புத்திரமார்க் கம்புகலில் புதியவிரைப் போது
புகைஒளி மஞ்சனம்அமுது முதல்கொண்டு ஐந்து
சுத்திசெய்து ஆசனம்மூர்த்தி மூர்த்தி மான்ஆம்
சோதியையும் பாவித்து ஆவாகித்துச் சுத்த
பத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினொடும் எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும்அக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகுஇருப்பர் நினையும் காலே.

273. சகமார்க்கம் புலன்ஒடுக்கித் தடுத்துவளி இரண்டும்
சலிப்புஅற்று முச்சதுரம் முதல்ஆதா ரங்கள்
அகமார்க்கம் அறிந்துஅவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்துஅங்கு
அணைந்துபோய் மேல்ஏறி அலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க அமுதுஉடலம் முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோகம் முற்றும்
உழத்தல் உழந்தவர் சிவன்தன் உருவத்தைப் பெறுவர்.

274. சன்மார்க்கம் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவும் உணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவும் கீழாக மேலாம்
பதிபசுபாசம் தெரித்துப் பரசிவனைக் காட்டும்
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவும் நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவன்உடனாம் பெற்றி ஞானப்
பெருமைஉடையோர் சிவனைப் பெறுவர் காணே.

275. ஞானநூல் தனைஓதல் ஓது வித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈனம்இலாப் பொருள்அதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவன்அடி அடைவிக்கும் எழில்ஞான பூசை
ஊனம்இலாக் கன்மங்கள் தபம்செபங்கள் தியானம்
ஒன்றுக்குஒன்று உயரும்இவை ஊட்டுவது போகம்
ஆனவையால் மேலான ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடுஎய்த அறிந்தோர் எல்லாம்.

276. கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை
கிளத்தல்என ஈர்இரண்டாம் கிளக்கில் ஞானம்
வீட்டை அடைந்திடுவர் நிட்டை மேவினோர்கள்
மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்கு
ஈட்டியபுண் ணியநாதர் ஆகி இன்பம்
இனிதுநுகர்ந்து அரன்அருளால் இந்தப் பார்மேல்
நாட்டியநற் குலத்தினில்வந்து அவதரித்துக் குருவால்
ஞானநிட்டை அடைந்துஅடைவர் நாதன் தாளே.

277. தானம்யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள்
சாந்திவிரதம் கன்ம யோகங்கள் சரித்தோர்
ஈனம்இலாச் சுவர்க்கம்பெற்று இமைப்பளவில் மீள்வர்
ஈசன்யோ கக்கிரியா சரியையினில் நின்றோர்
ஊனம்இலா முத்திபதம் பெற்றுஉலகம் எல்லாம்
ஒடுங்கும்போது அரன்முன்நிலாது ஒழியில் உற்பவித்து
ஞானநெறி அடைந்துஅடைவர் சிவனை அங்கு
நாதனே முன்நிற்கில் நணுகுவர்நல் தாளே.

278. சிவஞானச் செயலுடையோர் கையில் தானம்
திலம்அளவே செய்திடினும் நிலமலைபோல் திகழ்ந்து
பவமாயக் கடலில்அழுந் தாதவகை எடுத்துப்
பரபோகம் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கத்
தவம்ஆரும் பிறப்புஒன்றில் சாரப் பண்ணிச்
சரியைகிரி யாயோகம் தன்னிலும் சாராமே
நவமாகும் தத்துவ ஞானத்தை நல்கி
நாதன்அடிக் கமலங்கள் நணுகுவிக்கும் தானே.

279. ஞானத்தால் வீடுஎன்றே நான்மறைகள் புராணம்
நல்ல ஆகமம் சொல்ல அல்லவாம் என்னும்
ஊனத்தார் என்கடவர்அஞ்ஞா னத்தால்
உறுவதுதான் பந்தம்உயர் மெய்ஞ்ஞா னம்தான்
ஆனத்தால் அதுபோவது அலர்கதிர்முன் இருள்போல்
அஞ்ஞானம் விடப்பந்தம் அறும்முத்தி ஆகும்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவன்அடி ஞானமே ஞானம் என்பர்.

280. சூரியகாந்தக் கல்லின் இடத்தே செய்ய
சுடர் தோன்றியிடச் சோதி தோன்று மாபோல்
ஆரியனாம் ஆசான்வந்து அருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும் தோன்றத்
தூரியனாம் சிவன்தோன்றும் தானும் தோன்றும்
தொல்உலகம் எல்லாம்தன் உள்ளே தோன்றும்
நேரியனாய்ப் பரியனுமாய் உயிர்க்குஉயிராய் எங்கும்
நின்றநிலை எல்லாம்முன் நிகழ்ந்து தோன்றும்.

281. மிக்கதொரு பக்குவத்தில் மிகுசத்திநி பாதம்
மேவுதலும் ஞானம்விளைந்து ஓர்குருவின் அருளால்
புக்கு அநுட்டித்தே நிட்டை புரிந்துளோர்கள்
பூதலத்தில் புகழ்சீவன் முத்தர் ஆகித்
தக்கபிரிய அப்பிரியம் இன்றி ஓட்டில்
தபனியத்தில் சமபுத்தி பண்ணிச்சங் கரனோடு
ஒக்கஉறைந்து இவர்அவனை அவன்இவரை விடாதே
உடந்தையாய்ச் சிவன்தோற்றம் ஒன்றுமே காண்பர்.

282. அறியாமை அறிவுஅகற்றி அறிவின் உள்ளே
அறிவுதனை அருளினால் அறியாதே அறிந்து
குறியாதே குறித்துஅந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்துஇருப்பை ஆகில்
பிறியாத சிவன்தானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதம்எல்லாம் தானாய்த் தோன்றி
நெறியாலே இவையெலாம் அல்ல வாகி
நின்றுஎன்றும் தோன்றிடுவன் நிராதாரன் ஆயே.

283. புண்ணியம்மேல் நோக்குவிக்கும் பாவம்கீழ் நூக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே
நண்ணிய ஞானத்தினால் இரண்டினையும் அறுத்து
ஞாலமொடு கீழ்மேலும் நண்ணான் ஆகி
எண்ணும்இக லோகத்தே முத்திபெறும் இவன்தான்
எங்குஎழில்என் ஞாயிறுஎமக்கு என்று குறைவு இன்றிக்
கண்ணுதல்தன் நிறைவுதனில் கலந்து காயம்
கழிந்தக்கால் எங்குமாய்க் கருதுஅரன்போல் நிற்பன்.

284. ஞாலம்அதில் ஞான நிட்டை உடையோ ருக்கு
நன்மையொடு தீமைஇலை நாடுவதுஒன்று இல்லை
சீலம்இலை தவம்இல்லை விரதமொடு ஆச்சிரமச்
செயல்இல்லை தியானம்இலை சித்தமலம் இல்லை
கோலம்இலை புலன்இல்லை கரணம் இல்லை
குணம்இல்லை குறிஇல்லை குலமும் இல்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் மருவிப்
பாடலினொடு ஆடல்இவை பயின்றிடினும் பயில்வர்.

285. தேசம்இடம் காலம்திக்கு ஆசனங்கள் இன்றிச்
செய்வதொன்று போல் செய்யாச் செயல்அதனைச்
செய்து அங்கு
ஊசல்படும் மனம்இன்றி உலாவல் நிற்றல்
உறக்கம்உணர்வு உண்டிபட்டினி இருத்தல் கிடத்தல்
மாசுஅதனில் தூய்மையினில் வறுமை வாழ்வின்
வருத்தத்தில் திருத்தத்தில் மைதுனத்தில் சினத்தில்
ஆசையினில் வெறுப்பில்இவை அல்லாதும் எல்லாம்
அடைந்தாலும் ஞானிகள்தாம் அரன்அடியை அகலார்.

286. இந்நிலைதான் இல்லையேல் எல்லாம் ஈசன்
இடத்தினிலும் ஈசன்எல்லா இடத்தினிலும் நின்ற
அந்நிலையை அறிந்துஅந்தக் கரணங்கள் அடக்கி
அறிவதுஒரு குறிகுருவின் அருளினால் அறிந்து
மன்னுசிவன் தனைஅடைந்து நின்றுஅவன் தனாலே
மருவுபசு கரணங்கள் சிவகரணம் ஆகத்
துன்னியசாக் கிரம்அதனில் துரியா தீதம்
தோன்றமுயல் சிவாநுபவம் சுவாநுபூதிகமாம்.

287. சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகில்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள் இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுஎன் இம்மையிலே உயிரின்
பற்றுஅறுத்துப் பரத்தைஅடை பராவுசிவர் அன்றோ
ஆக்குமுடி கவித்துஅரசு ஆண்டவர்கள் அரிவையரோடு
அனுபவித்துஅங்கு இருந்திடினும் அகப்பற்றற்று
இருப்பர்
நோக்கிஇது புரியாதோர் புறப்பற்று அற்றாலும்
நுழைவர் பிறப்பினில் வினைகள் நுங்கி டாவே.

மூன்றாம் அதிகரணம்

288. கருவி கழிந்தால் காணார் ஒன்றும்எனில் காணார்
காணாதார் கன்னிகைதான் காமரதம் காணாள்
மருவி இருவரும் புணர வந்த இன்பம்
வாயினால் பேசுஅரிது மணந்தவர்தாம் உணர்வர்
உருவின்உயிர் வடிவுஅதுவும் உணர்ந்திலர்காண் சிவனை
உணராதார் உணர்வினால் உணர்வது கற்பனை காண்
அருள்பெறின்அவ் இருவரையும் அறிவு இறந்து அங்கு
அறிவர்
அறியாரேல் பிறப்பும்விடாது ஆணவமும் அறாதே.

நான்காம் அதிகரணம்

289. பல்நிறங்கள் அவைகாட்டும் படிகம்போல் உள்ளம்
பலபுலன்கள் நிறம்காட்டும் பரிசு பார்த்திட்டு
இந்நிறங்கள் என்நிறம்அன்று என்று தன்தன்
எழில்நிறங்கண்டு அருளினால் இந்நிறத்தின் வேறாய்ப்
பொய்ந்நிறஐம் புலநிறங்கள் பொய்யெனமெய் கண்டான்
பொருந்திடுவன் சிவத்தினொடும் போதான் பின்னை
முன்நிறைநீர் சிறைமுறிய முடுகி ஓடி
முந்நீர்சேர்ந்து அந்நீராய்ப் பின்நீங்கா முறைபோல்.

290. எங்கும்தான் என்னில் நாம்எய்த வேண்டா
எங்கும்இலன் என்னில்வேறு இறையும் அல்லன்
அங்கம்சேர் உயிர்போல்வன் என்னில் அங்கத்து
அவயவங்கள் கண்போலக் காணா ஆன்மா
இங்குநாம் இயம்பும் தத்துவங்களில் வைத்து அறிவது
இறைஞானம் தந்துதாள் ஈதல்சுடர் இழந்த
துங்கவிழிச் சோதியும்உட் சோதியும் பெற்றால் போல்
சோதிக்குள் சோதியாய்த் தோன்றிடுவன் காணே.

291. பாசிபடு குட்டத்தில் கல்லினைவிட்டு எறியப்
படும்பொழுது நீங்கிஅது விடும்பொழுதில் பரக்கும்
ஆசுபடு மலம்மாயை அரும்கன்மம் அனைத்தும்
அரன்அடியை உணரும்போது அகலும்பின் நணுகும்

நேசமொடும் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்
நினைவுஉடையோர் நின்றிடுவர் நிலைஅதுவே ஆகி
ஆசையொடும் அங்கும்இங்கும் ஆகிஅல மருவோர்
அரும்பாசம் அறுக்கும்வகை அருளின்வழி உரைப்பாம்.

ஒன்பதாம் சூத்திரம்

292. பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்புஅரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாத
நீழல்கீழ் நில்லாதே நீங்கிப் போதின்
ஆசைதரும் உலகம்எலாம் அலகைத் தேராம் என்று
அறிந்துஅகல அந்நிலையே ஆகும் பின்னும்
ஓசைதரும் அஞ்சுஎழுத்தை விதிப்படி உச்சரிக்க
உள்ளத்தே புகுந்துஅளிப்பன் ஊனம்எலாம் ஓட.

முதல் அதிகரணம்

293. வேதசாத் திரம்மிருதி புராணகலை ஞானம்
விரும்புஅசபை வைகரிஆதித் திறங்கள் மேலாம்
நாதமுடிவு ஆனஎல்லாம் பாச ஞானம்
நணுகிஆன்மா இவைகீழ் நாட லாலே
காதலினால் நான்பரமம் என்னும் ஞானம்
கருதுபசு ஞானம்இவன் உடல் கட்டுண்டு
ஓதிஉணர்ந்து ஒன்றுஒன்றா உணர்ந்திடலால் பசுவாம்
ஒன்றாகச் சிவன்இயல்பின் உணர்ந்திடுவன் காணே.

294. கரணங்கள் கெடஇருக்கை முத்தியாம் என்னில்
கதியாகும் சினைமுட்டை கருமரத்தின் உயிர்கள்
மரணம்கொண் டிடஉறங்க மயங்கி மூர்ச்சிக்க
வாயுத் தம்பனைபண்ண வல்விடத்தை அடையச்
சரணங்கள் புகுநிழல்போல் தனைஅடையும் சமாதி
தவிராது மலம்இதுவும் பசுஞானம் ஆகும்
அரணங்கள் எரித்தவன்தன் அடியைஅறிவு இறந்துஅங்கு
அறிந்திடீர் செறிந்ததுகள் அகற்றி டீரே.

295. சிவனைஅவன் திருவடிஞா னத்தால் சேரச்
செப்புவது செயல்வாக்குச் சிந்தை எல்லாம்
அவனைஅணுகா என்றும் ஆத லாலும்
அவன்அடிஅவ் ஒளிஞானம் ஆத லாலும்
இவனும்யான் துவக்குஉதிரம் இறைச்சி மேதை
என்புமச்சை சுக்கிலமோ இந்திரியக் கொத்தோ
அவம்அகல எனைஅறியேன் எனும்ஐயம் அகல
அடிகாட்டி ஆன்மாவைக் காட்ட லாலும்.

296. கண்டிடும்கண் தனைக்காணா கரணம் காணா
கரணங்கள் தமைக்காணா உயிரும் காணா
உண்டிஅமர் உயிர்தானும் தன்னைக் காணாது
உயிர்க்குஉயிராம் ஒருவனையும் காணாது ஆகும்
கண்டசிவன் தனைக்காட்டி உயிரும் காட்டிக்
கண்ணாகிக் கரணங்கள் காணாமல் நிற்பன்
கொண்டுஅரனை உளத்தில்கண்டு அடிகூடில் பாசம்
கூடாது கூடிடினும் குறித்துஅடியில் நிறுத்தே.

இரண்டாம் அதிகரணம்

297. குறித்துஅடியில் நின்றுஅட்ட குணம்எட்டுச் சித்தி
கோகனதன் முதல்வாழ்வு குலவுபதம் எல்லாம்
வெறுத்துநெறி அறுவகையும் மேலோடுகீழ் அடங்க
வெறும்பொய்என நினைந்து இருக்க மேலோடுகீழ் இல்லான்
நிறுத்துவதோர் குணமில்லான் தன்னை ஒருவர்க்கும்
நினைப்புஅரியான் ஒன்றும்இலான் நேர்படவந்து உள்ளே
பொறுப்புஅரிய பேரன்பை அருளிஅதன் வழியே
புகுந்திடுவன் எங்கும்இலாப் போகத்தைப் புரிந்தே.

மூன்றாம் அதிகரணம்

298. கண்டஇவை அல்லேன்நான் என்றுஅகன்று காணாக்
கழிபரமும் நான்அல்லேன் எனக்கருதிக் கசிந்த
தொண்டினொடும் உளத்துஅவன்தான் நின்ற கலப்பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வேறு இன்றி
விண்டுஅகலும் மலங்கள்எல்லாம் கருட தியானத்தால்
விடம்ஒழியும் அதுபோல விமலதையும் அடையும்
பண்டைமறைகளும் அதுநான் ஆனேன் என்று
பாவிக்கச் சொல்லுவது இப் பாவகத்தைக் காணே.

299. அஞ்சுஎழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரன்உருவும் அஞ்சுஎழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு
அஞ்சுஎழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
ஆன்மாவின் அஞ்சுஎழுத்தால் இதயத்து அர்ச்சித்து
அஞ்சுஎழுத்தால் குண்டலியில் அனலை ஓம்பி
அணைவுஅரிய கோதண்டம் அணைந்துஅருளின் வழிநின்று
அஞ்சுஎழுத்தை விதிப்படி உச்சரிக்க மதி அருக்கன்
அணைஅரவம் போல்தோன்றும் ஆன்மாவில் அரனே.

300. நாட்டும்இதயம் தானும் நாபியினில் அடியாய்
ஞாலம்முதல் தத்துவத்தால் எண்விரல் நாளத்தாய்
மூட்டுமோகினி சுத்த வித்தைமலர் எட்டாய்
முழுஇதழ்எட்டு அக்கரங்கள் முறைமையினில்
உடைத்தாய்க்
காட்டுகம லாசனம்மேல் ஈசர்சதா சிவமும்
கலாமூர்த்தம் ஆம்இவற்றின் கண்ணாகும் சத்தி
வீட்டைஅருள் சிவன்மூர்த்தி மான்ஆகிச் சத்தி
மேலாகி நிற்பன்இந்த விளைவுஅறிந்து போற்றே.

301. அந்தரியாகம் தன்னை முத்தி சாதனமா
அறைந்திடுவர் அதுதானும் ஆன்மசுத்தி ஆகும்
கந்தம்மலர் புகைஒளி மஞ்சனம் அமுது முதலாக்
கண்டன எலாம்மனத்தால் கருதிக் கொண்டு
சிந்தைதனில் அர்ச்சிக்கச் சிவனை ஞானத்தால்
சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க
வந்திடும்அவ் ஒளிபோல மருவிஅரன் உளத்தே
வரவர வந்திடுவன்பின் மலம்ஆனது அறுமே.

302. புறம்பேயும் அரன்கழல்கள் பூசிக்க வேண்டில்
பூமரத்தின் கீழ்உதிர்ந்த போதுகளும் கொண்டு
சிறந்துஆருஞ் சீர்ச்சிவனை ஞானத்தால் அங்குச்
சிந்திக்கும் படிஇங்குச் சிந்தித்துப் போற்றி
அறம்பாவங் கட்குநாம் என்கடவேம் என்றும்
ஆண்டவனைக் கண்டக்கால் அகம்புறம் என்னாதே
திறம்பாதே பணிசெய்து நிற்கை அன்றோ
சீர்அடியார் தம்முடைய செய்தி தானே.

303. இந்தனத்தில் எரிபாலில் நெய்பழத்தில் இரதம்
எள்ளின்கண் எண்ணெயும்போல் எங்கும்உளன்
இறைவன்
வந்தனைசெய்து எவ்விடத்தும் வழிபடவே அருளும்
மலம்அறுப்போர் ஆன்மாவின் மலர்அடி ஞானத்தால்
சிந்தனைசெய்து அர்ச்சிக்கச் சிவன்உளத்தே தோன்றித்
தீஇரும்பைச் செய்வதுபோல் சீவன் தன்னைப்
பந்தனையை அறுத்துத்தான் ஆக்கித்தன் உருவப்
பரப்புஎல்லாங் கொடுபோந்து பதிப்பன்இவன் பாலே.

பயன் இயல்

பத்தாம் சூத்திரம்

304. இவன்உலகில் இதம்அகிதம் செய்த எல்லாம்
இதம்அகிதம் இவனுக்குச் செய்தார்பால் இசையும்
அவன்இவனாய் நின்றமுறை ஏகன் ஆகி
அரன்பணியில் நின்றிடவும் அகலும் குற்றம்
சிவனும்இவன் செய்திஎல்லாம் என்செய்தி என்றும்
செய்ததுஎனக்கு இவனுக்குச் செய்தது என்றும்
பவம்அகலம் உடனாகி நின்றுகொள்வன் பரிவால்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே.

முதல் அதிகரணம்

305. யான்செய்தேன் பிறர்செய்தார் என்னதுயான் என்னும்
இக்கோணை ஞானஎரியால் வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடஅத் தத்துவன்தான் நேரே
தனைஅளித்து முன்நிற்கும் வினைஒளித்திட்டு ஓடும்
நான்செய்தேன் எனும்அவர்க்குத் தான்அங்கு இன்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்கும் கன்மம்
ஊன்செய்யா ஞானம்தான் உதிப்பின் அல்லால்
ஒருவர்க்கும் யான்எனது இங்குஒழியாது அன்றே.

இரண்டாம் அதிகரணம்

306. இந்திரியம் எனைப்பற்றி நின்றேஎன் வசத்தின்
இசையாதே தன்வசத்தே எனைஈர்ப்பது இவற்றைத்
தந்தவன்தன் ஆணைவழி நின்றிடலால் என்றும்
தான்அறிந்திட்டு இவற்றினொடும் தனையுடையான் தாள்கள்
வந்தனைசெய்து இவற்றின்வலி அருளினால் வாட்டி
வாட்டம்இன்றி இருந்திடவும் வரும்செயல்கள் உண்டேல்
முந்தனுடைச் செயல்என்று முடித்துஒழுக வினைகள்
மூளாஅங்கு ஆளாகி மீளான் அன்றே.

307. சலம்இலனாய் ஞானத்தால் தனைஅடைந்தார் தம்மைத்
தானாக்கித் தலைவன்அவர் தாம்செய்வினை தன்னால்
நலமுடனே பிறர்செய்வினை ஊட்டிஒழிப் பானாய்
நணுகாமல் வினைஅவரை நாடிக் காப்பன்

உலகினில்என் செயல்எல்லாம் உன்விதியே நீயே
உள்நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும்
நிலவுவதோர் செயல்எனக்கு இன்று உன்செயலே என்றும்
நினைவார்க்கு வினைகள்எல்லாம் நீங்கும் தானே.

308. நாடுகளில் புக்குஉழன்றும் காடுகளில் சரித்தும்
நாகமுழை புக்குஇருந்தும் தாகம்முதல் தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும்
நின்மல ஞானத்தைஇல்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பில்
ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்இறை ஞானம்
கூடும்அவர் கூடரிய வீடும் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பர்.

309. அங்கித் தம்பனை வல்லார்க்கு அனல்சுடாது ஆகும்
ஔடதம் மந்திரம் உடையார்க்கு அருவிடங்கள் ஏறா
எங்கித்தைக் கன்மம்எலாம் செய்தாலும் ஞானிக்கு
இருவினைகள் சென்றுஅணையா முற்செய்வினை இங்குத்
தங்கிப்போம் பாத்திரமும் குலாலன்வினை தவிர்ந்த
சக்கரமும் கந்தித்துச் சுழலு மாபோல்
மங்கிப்போய் வாதனையால் உழல்விக்கும் எல்லா
மலங்களும்பின் காயமொடு மாயும் அன்றே.

பதினோராம் சூத்திரம்

310. காயம்ஒழிந் தால்சுத்தன் ஆகி ஆன்மாக்
காட்டக் கண்டிடும் தன்மை உடைய கண்ணுக்கு
ஏயும்உயிர் காட்டிக் கண்டிடுமா போல
ஈசன்உயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன் இத்தை
ஆயும்அறிவு உடையனாய் அன்பு செய்ய
அந்நிலைமை இந்நிலையில் அடைந்தமுறை யாலே
மாயம்எலாம் நீங்கிஅரன் மலர்அடிக்கீழ் இருப்பன்
மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே.

311. பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞானம் அஞ்ஞான விகற்பம்
வாச்சிய வாசகஞானம் வயிந்தவத்தின் கலக்கம்
தருஞானம் போக ஞாதிரு ஞான ஞேயம்
தங்கியஞானம் சங்கற்பனை ஞானம் ஆகும்
திருஞானம் இவை எல்லாம் கடந்தசிவ ஞானம்
ஆதலால் சீவன்முத்தர் சிவமேகண்டு இருப்பர்.

312. அநாதிஉடல் ஒன்றினைவிட்டு ஒன்றுபற்றிக் கன்மால்
ஆய்அழிந்து வருதலால் அந்தம் இல்லை
பின்ஆதிஅருள் பெற்றவர்கள் நித்த உருவத்தைப்
பெற்றிருக்கை முத்திஎனில் பெறும்பதமே இதுவும்
இனாதுநிலை இதுதானும் காயம் உண்டேல்
இரும்கன்மம் மாயைமலம் எல்லாம் உண்டாம்
மனாதிதரும் உடல்ஆதி காரியத்தால் அநாதி
மலம்அறுக்கும் மருந்துஅற்றால் உடன்மாயும் காணே.

313. தெரிவுஅரிய மெய்ஞ்ஞானம் சேர்ந்த வாறே
சிவம்பிரகாசிக்கும் இங்கே சீவன்முத்தன் ஆகும்
உரியமலம் ஔடதத்தால் தடுப்புஉண்ட விடமும்
ஒள்எரியின் ஒளிமுன்னர் இருளும் தேற்றின்
வருபரல்சேர் நீர்மருவு கலங்கலும்போல் ஆகி
மாயாதே தன்சத்தி மாய்ந்து காயம்
திரியும்அளவும் உளதாய்ப் பின்பு காயம்
சேராத வகைதானும் தேயும் அன்றே.

314. ஆணவம்தான் அனாதிஅந்தம் அடையாது ஆகும்
அடையின்அந்த ஆன்மாவும் அழியும்எனில் செம்பில்
காணல்உறும் களிம்புஇரத குளிகை பரிசிக்கக்
கழியும்செம்பு உருநிற்கக் கண்டோம் அன்றே
தாணுவின்தன் கழல்அணையத் தவிரும்மலம் தவிர்ந்தால்
தான்சுத்தனாய் இருக்கை முத்திஅரன் தாளைப்
பூணவேண்டுவது ஒன்றும் இல்லைஎனில் அருக்கன்
புகுதஇருள் போம்அடியில் பொருந்தமலம் போமே.

315. நெல்லினுக்குத் தவிடுஉமிகள் அநாதி யாயே
நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர்
சொல்லியிடில் துகள்அற்ற அரிசியின்பால் இல்லை
தொக்குஇருந்து மற்றொருநெல் தோன்றிடாவாம்
மெல்லஇவை விடும்அறவே இவைபோல அணுவை
மேவும்மலம் உடல்கன்மம் அநாதிவிட்டே நீங்கும்
நல்லசிவ முத்தியின்கண் பெத்தான் மாவை
நணுகிநிற்கும் ஆதலால் நாசமும்இன்று ஆமே.

முதல் அதிகரணம்

316. எவ்விடத்தும் இறைஅடியை இன்றியமைந்து ஒன்றை
அறிந்து இயற்றியிடா உயிர்கள் ஈசன் தானும்
செவ்விதினில் உளம்புகுந்து செய்திஎலாம் உணர்ந்து
சேட்டிப்பித்து எங்குமாய்ச் செறிந்து நிற்பன்
இவ்உயிர்கள் தோற்றும்போது அவனைஇன்றித் தோற்றா
இவற்றினுக்குஅம் முதல்எழுத்துக்கு எல்லாமாய் நிற்கும்
அவ்உயிர்போல் நின்றிடுவன் ஆத லால்நாம்
அரன்அடியை அகன்றுநிற்பது எங்கே யாமே.

இரண்டாம் அதிகரணம்

317. எங்கும்தான் நிறைந்துசிவன் நின்றான் ஆகில்
எல்லாரும் காணவே வேண்டும்தான் என்னில்
இங்கும்தான் அந்தகருக்கு இரவிஇருள் ஆகும்
ஈசன்அருட் கண்இல்லார்க்கு ஒளியாயே இருளாம்
பங்கம்தான் எழும்பதுமம் பக்குவத்தை அடையப்
பரிதிஅலர்த் திடுவதுபோல் பருவம்சேர் உயிர்க்குத்
துங்கஅரன் ஞானக்கண் கொடுத்து அருளினாலே
சோதிக்குள் சோதியாய்த் தோன்றிடுவன் காணே.

318. சென்றுஅணையும் நிழல்போலச் சிவன்நிற்பன் என்னில்
சென்றுஅணையும் அவன்முதலி சிவத்தைஅணைந்து
ஒன்றாய்
நின்றதுஉயிர் கெட்டுஎன்னில் கெட்டதுஅணைவு இன்றாம்
நின்றதேல் கேடில்லை அணைந்துகெட்டது என்னில்
பொன்றினதுஏன் முத்தியினைப் பெற்றவர்ஆர் புகல்நீ
பொன்றுகையே முத்திஎனில் புருடன்நித்தன் அன்றாம்
ஒன்றியிடும் நீரொடுநீர் சேர்ந்தால்போல் என்னில்
ஒருபொருளாம் அதிபதியோடு உயிர்பொருள்ஒன்று
அன்றே.

319. செம்புஇரத குளிகையினால் களிம்புஅற்றுப் பொன்னாய்ச்
செம்பொன்உடன் சேரும்மலம் சிதைந்தால் சீவன்
நம்பன்உடன் கூடும்எனில் பொன்போல் அல்லன்
நற்குளிகை போலஅரன் நணுகுமலம் போக்கி
அம்பொன்அடிக் கீழ்வைப்பன் அரும்களங்கம் அறுக்கும்
அக்குளிகை தானும்பொன் ஆகாது ஆகும்
உம்பர்பிரான் உற்பத்தி ஆதிகளுக்கு உரியன்
உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே.

320. சிவன்சீவன் என்றுஇரண்டும் சித்துஒன்றாம் என்னில்
சிவன்அருட்சித்து இவன்அருளைச் சேருஞ்சித்து
அவன்தான்
பவம்கேடு புத்திமுத்தி பண்ணும்சித்து அவற்றில்
படியும்சித்து அறிவிக்கப் படும்சித்தும் இவன்தான்
அவன்தானே அறியும்சித்து ஆதலினால் இரண்டும்
அணைந்தாலும் ஒன்றுஆகாது அனன்னியமாய்
இருக்கும்
இவன்தானும் புத்தியும்சித்து இவன்ஆமோ புத்தி
இது அசித்து என்றிடில் அவனுக்கு இவனும் அசித்தாமே.

321. இரும்பைக் காந்தம் வலித்தால்போல் இயைந்துஅங்கு
உயிரை
எரிஇரும்பைச் செய்வதுபோல் இவனைத்தான் ஆக்கி
அரும்புஇத்து இந்தனத்தை அனல்அழிப்பதுபோல் மலத்தை
அறுத்துஅமலன் அப்புஅணைந்த உப்பேபோல்
அணைந்து

விரும்பிப் பொன்னினைக் குளிகை ஒளிப்பதுபோல் அடக்கி
மேளித்துத் தான்எல்லாம் வேதிப்பான் ஆகிக்
கரும்பைத் தேனைப்பாலைக் கனிஅமுதைக் கண்டைக்
கட்டியைஒத்து இருப்பன்அந்த முத்தியினில் கலந்தே.

பன்னிரண்டாம் சூத்திரம்

322. செங்கமலத் தாள்இணைகள் சேரல் ஒட்டாத்
திரிமலங்கள் அறுத்துஈசன் நேசரொடும் செறிந்திட்டு
அங்குஅவர்தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம்
அரன்எனவே தொழுதுஇறைஞ்சி ஆடிப் பாடி
எங்கும்யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம்
யாவர்க்கும் மேலானோம் என்றுஇறுமாப்பு எய்தித்
திங்கள்முடியார் அடியார் அடியோம் என்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தி உடையோரே.

இரண்டாம் அதிகரணம்

323. ஈசனுக்கு அன்புஇல்லார் அடியவர்க்கு அன்புஇல்லார்
எவ்உயிர்க்கும் அன்புஇல்லார் தமக்கும் அன்புஇல்லார்
பேசுவதுஎன் அறிவுஇல்லாப் பிணங்களைநாம் இணங்கில்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ
ஆசையொடும் அரன்அடியார் அடியாரை அடைந்திட்டு
அவர்கருமம் உன்கருமம் ஆகச் செய்து
கூசிமொழிந்து அருள்ஞானக் குறியில் நின்று
கும்பிட்டுத் தட்டம்இட்டுக் கூத்தாடித் திரியே.

மூன்றாம் அதிகரணம்

324. அறிவுஅரியான் தனைஅறிய யாக்கை ஆக்கி
அங்குஅங்கே உயிர்க்குஉயிராய் அறிவுகொடுத்து
அருளால்
செறிதலினால் திருவேடம் சிவன்உருவே ஆகும்
சிவோகம் பாவிக்கும்அத்தால் சிவனும் ஆவர்
குறிஅதனால் இதயத்தே அரனைக் கூடும்
கொள்கையினால் அரன்ஆவர் குறியொடுதாம் அழியும்
நெறிஅதனால் சிவமேயாய் நின்றிடுவர் என்றால்
நேசத்தால் தொழுதிடுநீ பாசத்தார் விடவே.

325. திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவன்எனவே கண்டவர்க்குச் சிவன்உறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தால் எனநினையும் அவர்க்கும்
உளன்எங்கும் இலன்இங்கும் உளன் என்பார்க்கும்

விருப்பாய வடிவாகி இந்தனத்தில் எரிபோல்
மந்திரத்தில் வந்துஉதித்து மிகும்சுரபிக்கு எங்கும்
உருக்காண ஒண்ணாத பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவதுபோல் வெளிப்பட்டு அருளுவன்
அன்பர்க்கே.

326. ஞானயோகக் கிரியா சரியை நான்கும்
நாதன்தன் பணிஞானி நாலினுக்கும் உரியன்
ஊனம்இலா யோகம்முதல் மூன்றினுக்கும் உரியன்
யோகி கிரியாவான்தான் ஒண்கிரியை ஆதி
ஆனஇரண் டினுக்குஉரியன் சரியையினில் நின்றோன்
அச்சரியைக்கே உரியன் ஆகலினால் யார்க்கும்
ஈனம்இலா ஞானகுருவே குருவும் இவனே
ஈசன்இவன் தான்என்றும் இறைஞ்சி ஏத்தே.

327. மந்திரத்தால் மருந்துகளால் வாய்த்த யோகத்தால்
மணிஇரத குளிகையினால் மற்றும் மற்றும்
தந்திரத்தே சொன்னமுறை செய்ய வேத
சகலகலை ஞானங்கள் திரிகால ஞானம்
அந்தம்இலா அணிமாதி ஞானங்கள் எல்லாம்
அடைந்திடும் ஆசான்அருளால் அடிசேர் ஞானம்
வந்திடும்மற்று ஒன்றாலும் வாராது ஆகும்
மற்றவையும் அவன்அருளால் மருவும் அன்றே.

328. பரம்பிரமம் இவன்என்றும் பரசிவன்தான் என்றும்
பரஞானம் இவன்என்றும் பராபரன்தான் என்றும்
அரன்தரும்சீர் நிலைஎல்லாம் இவனே என்றும்
அருள்குருவை வழிபடவே அவன்இவன்தான் ஆயே
இரங்கியவாரணம் யாமை மீன்அண்டம் சினையை
இயல்பினொடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்துஇவைதாம் ஆக்குமா போல்சிவமே ஆக்கும்
பரிசித்தும் சிந்தித்தும் பார்த்தும் தானே.

சிவஞான சித்தியார் சுபக்கம்

முற்றிற்று

உ
திருச்சிற்றம்பலம்

5

அருணந்தி சிவாசாரியார்

அருளிய

இருபா இருபது

1. கண்நுதலும் கண்டக் கறையும் கரந்துஅருளி
மண்இடையில் மாக்கள் மலம்அகற்றும்—வெண்ணெய்
நல்லூர்
மெய்கண்டான் என்றுஒருகால் மேவுவரால் வேறுஇன்மை
கைகண்டார் உள்ளத்துக் கண்.

2. கண்அகல் ஞாலத்துக் கதிரவன் தான்என
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ!
காரா கிரகக் கலிஆழ் வேனைநின்
பேரா இன்பத்து இருத்திய பெரும!
வினவல் ஆனாது உடையேன் எனதுஉளம்
நீங்கா நிலைமை ஊங்கும் உளையால்
அறிவின்மை மலம் பிரிவுஇன்மை எனின்
ஒராலினை உணர்த்தும் விராய் நின்றனையேல்
திப்பியம் அந்தோ பொய்ப்பகை ஆகாய்
சுத்தன் அமலன் சோதி நாயகன்
முத்தன் பரம்பரன் எனும்பெயர் முடியா
வேறுநின்று உணர்த்தின் வியாபகம் இன்றாய்ப்
பேறும் இன்றாகும் எமக்குஎம் பெரும!
இருநிலம் தீநீர் இயமானன் கால்எனும்
பெருநிலைத் தாண்டவம் பெருமாற்கு இலாதலின்
வேறோ உடனோ விளம்பல் வேண்டும்
சீறி அருளல் சிறுமை உடைத்தால்
அறியாது கூறினை அபக்குவ பக்குவக்
குறிபார்த்து அருளினம் குருமுதலாய் எனின்
அபக்குவம் அருளினும் அறியேன் மிகத்தகும்
பக்குவம் வேண்டில் பயன்இலை நின்னால்

பக்குவம் அதனால் பயன்நீ வரினே
நின்னைப் பருவம் நிகழ்த்தாது அன்னோ
தன்ஒப் பார்இலி என்பதும் தகுமே
மும்மலம் சடம்அணு மூப்பு இளமையில்நீ
நின்மலன் பருவம் நிகழ்த்தியது யார்க்கோ
உணர்வுஎழும் நீக்கத்தை ஓதியது எனினே
இணைஇலி ஆயினை என்பதை அறியேன்
யானே நீக்கினும் தானே நீங்கினும்
கோனே வேண்டா கூறல் வேண்டும்
"காண்பார் யார்கொல் காட்டாக் கால்"எனும்
மாண்புஉரை உணர்ந்திலை மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்கும் மெய்ஞ்ஞானத்தின்
"ஆட்பால் அவர்க்குஅருள்" என்பதை அறியே.

3. அறிவு அறியாமை இரண்டும் அடியேன்
செறிதலால் மெய்கண்ட தேவே! — அறிவோ
அறியேனோ யாதுஎன்று கூறுகேன் ஆய்ந்து
குறிமாறு கொள்ளாமல் கூறு.

4. கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கில் விகற்பம் கற்பம்
குரோதம் மோகம் கொலைஅஞர் மதம்நகை
விராய்எண் குணனும் ஆணவம்என விளம்பினை
அஞ்ஞா னம்பொய் அயர்வே மோகம்
பைசால சூனியம் மாச்சரியம் பயம்
ஆயஏழ் குணனும் மாயைக்கு அருளினை
இருத்தலும் கிடத்தலும் இருவினை இயற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவல்என்று எடுத்த
அறுவகைக் குணனும் கருமத்து அருளினை
ஆங்குஅவை தாமும் நீங்காது நின்று
தம்வழிச் செலுத்தித் தானே தானாய்
என்வழி என்பதுஒன்று இன்றாம், மன்ன!
ஊரும் பேரும் உருவும் கொண்டுஎன்
ஊரும் பேரும் உருவும் கெடுத்த
பெண்ணை சூழ்ந்த வெண்ணெய்அம் பதியில்
சைவ சிகாமணி! மெய்யர் மெய்ய!
மும்மலம் சடம்என மொழிந்தனை அம்ம
மாறுகோள் கூறல் போலும் தேறும்
சடம்செயல் அதனைச் சார்ந்திடும் எனினே
கடம்படம் அதனுள் கண்டிலம் விடப்படும்
ஊன்திரள் போன்றது ஆயில் தோன்றி
அணைந்துஆங்கு அகறல் வேண்டும் குணங்களும்
பன்மைஇன்று ஆகும் எம்மைவந்து அணையத்
தானோ மாட்டாது யானோ செய்கிலன்

நீயோ செய்யாய் நின்மலன் ஆயிட்டு
இயல்புஎனில் போகாது என்றும் மயல்கெடப்
பந்தம் வந்தவாறு இங்கு
அந்தம் ஆதி இல்லாய்! அருளே.

5. அருள்முன்பு நில்லாது அடியேற்குக் கண்ணின்று
இருள்கொண்டவாறு என்கொல் எந்தாய்! — மருள்கொண்ட
மாலையாய்! வெண்ணெய்வாழ் மன்னவா! என்னுடைய
மால்ஐயா மாற்ற மதி.

6. மதிநுதல் பாகன் ஆகிக் கதிதர
வெண்ணெய்த் தோன்றி நண்ணிஉள் புகுந்துஎன்
உளம்வெளி செய்துஉன் அளவில் காட்சி
காட்டிஎன் காட்டினை எனினும் நாட்டிஎன்
உண்மையும் பெருமையும் நுவலில் அண்ணல்
பாதாள சத்தி பரியந்தம் ஆக
ஓதி உணர்ந்த யானே ஏக
முழுதும் நின்றனனே, முதல்வ! முழுதும்
புலன்கடைப் பூழை நுழைந்தனன் கலங்கி
ஆங்குஐந்து அவத்தையும் அடைந்தனன் நீங்கிப்
போக்கு வரவு புரிந்தனன் தூக்கி
எவ்விடத்து உண்மையும் இவ்விடத்து ஆதலும்
செல்இடத்து எய்தலும் தெரித்த மூன்றினும்
ஒன்றுஎனக்கு அருளல் வேண்டும் என்றும்
இல்லது இலதாய் உள்ளது உளதுஎனும்
சொல்லே சொல்லாய்ச் சொல்லும் காலைச்
சிறுத்தலும் பெருத்தலும் இலவே நிறுத்தி
யானை எறும்பின் ஆனது போல்எனில்
ஞானம் அன்றுஅவை காய வாழ்க்கை
மற்றவை அடைந்தன உளவெனின் அற்றன்று
விட்ட குறையின் அறிந்து தொன்று
தொட்டு வந்தனஎன வேண்டும் நட்ட
பெரியதில் பெருமையும் சிறியதில் சிறுமையும்
உரியது நினக்கே உண்மை, பெரியோய்!
எனக்குஇன்று ஆகும் என்றும்
மனக்குஇனி யாய்!இனி மற்றுஅது மொழியே.

7. மொழிந்த அவத்தை முதல்அடியேன் நின்றாங்கு
ஒழிந்தன நான்கும் உணர — இழிந்துஅறிந்து
ஏறிற்றுஇங்கு இல்லை எழில்வெண்ணெய் மெய்த்தேவே!
தேறிற்றுஎன் கொண்டு தெரித்து.

8. தெரித்ததுஎன் கொண்டுஎனை உருத்திர பசுபதி!
செடிய னேனையும் அடிமை செய்யப்
படிவம் கொண்டு வடிவுகாட்டு இல்லாப்
பெண்ணை ஆளும் வெண்ணெய் மெய்ய!

அவத்தையில் தெரித்தனன் ஆயின் அவத்தை
தெரித்தாங்கு இருத்தலும் இலனே திருத்தும்
காலம் முதலிய கருவி ஆயின்
மாலும் பிரமனும் வந்துஎனை அடையார்
ஓதும் காலை ஒன்றைஒன்று உணரா
சேதனம் அன்றுஅவை பேதைச் செயலும்இச்
சேதன ஆனால் செயல்கொள வேண்டும்
போதம் அவற்றைப் புணர்வதை அறியேன்
கருவித் திரளினும் காண்பதுஓர் ஒன்றாய்
ஒருவுதல் அறியேன் உணர்வுஇலன் ஆதலின்
நிற்கொடு கண்டனன் ஆயின் எற்குக்
கருவி ஆயினை பெருமையும் இலவே
யானே பிரமம் கோனே வேண்டா
இன்னும் கேண்மோ, மன்ன! நின்னின்
முன்னம் என்றன் உணர்வுஇலன் ஆதலின்
என்னைக் காண்பினும் காண்பல காணாது
உன்னைக் கான்பினும் காண்பல உன்னோடு
ஒருங்கு காண்பினும் காண்பல அரும்துணை
கண்டவாறு ஏது எனது கண்ணே!
அண்ட வாண! அருட்பெரும் கடலே!

9. கடல்அமுதே! வெண்ணெய்க் கரும்பே! என் கண்ணே!
உடலகத்து மூலத்து ஒடுங்கச் – சடலக்
கருவியாது ஆங்குஉணர்த்தக் காண்பதுதான் என்னை
மருவியாது என்றுஉரைக்க மன்.

10. மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
அன்னியம் ஆக்கி அருள்வழி அதனால்
என்னுள் புகுந்தனை எனினே முன்னைத்
திரிமலம் தீர்த்த தேசிக! நின்னோடு
ஒருவுதல் இன்றி உடந்தையே ஆகும்
பெருநிலை ஆகல் வேண்டும் மருவிடும்
மும்மலம் அதனால் எம்முள்நின் றிலைஎனில்
அம்மலத் திரிவும் செம்மலர்த் தாள்நிழல்
சேர்தலும் இலவாய்ச் சார்பவை பற்றிப்
பெயர்வுஇலன் ஆகும், பெரும! தீர்வுஇன்று
அமைந்த கருமத்து இயைந்ததை அல்லது
சமைந்தன இலஎனச் சாற்றில் அமைந்த
மாயேயம் கன்மம் மாமலம் மூன்றும்
மாயாது ஆகவே ஆர்ச்சன மாயையின்
உற்பவம் தீராது ஒழுகும்ஒன்று ஒன்று
நிற்சமம் ஆயின் அல்லது நிற்பெறல்
இல்என மொழிந்த தொல்அறம் தனக்கும்
ஏயாது ஆகும் நாயேன் உளத்து

நின்றனை என்பனோ நின்றிலை என்பனோ
பொன்றிய பொன்றிற்றில மலம் என்பனோ
ஒன்றினை உரைத்துஅருள் மன்ற குன்றாப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணெய்க்கு அதிபதி!
கைகண் தலைவாய் கால்செவி மூக்குஉயர்
மெய்கொண்டு என்வினை வேர்அறப் பறித்த
மெய்கண்ட தேவ! வினையிலி!
மைகொண்ட கண்ட! வழுவில்என் மதியே!

11. மதிநின்பால் இந்த மலத்தின்பால் நிற்க
விதிஎன்கொல் வெண்ணெய்வாழ் மெய்ய! - பதிநின்பால்
வந்தால் இதில்வரத்தில் வந்துஇரண்டும் பற்றுகிலேன்
எந்தாய் இரண்டு ஆம்ஆறு என்.

12. எண்திசை விளங்க இருட்படாம் போக்கி
முண்டகம் மலர்த்தி மூதறிவு அருளும்
மேதினி உதய மெய்கண்ட தேவ!
கோதுஇல் அமுத! குணப்பெரும் குன்ற!
என்னின் ஆர்தலும் அகறலும் என்னைகொல்
உன்னில் துன்னி உனாவிடில் பெயர்குவம்
என்னும் அதுவே நின்இயல்பு எனினே
வியங்கோள் ஆளனும் ஆகி இயங்கலும்
உண்டுஎனப் படுவை எண்தாள் முக்கண்
யாங்கணும் பிரியாது ஓங்குநின் நிலையின்
யான்வந்து அணைந்து மீள்குவன் ஆயின்
ஆற்றுத்துயர் உற்றோர் அணிநிழல் நசைஇ
வீற்றுவீற்று இழிதர வேண்டலும் வெறுத்தலும்
இன்றிச் சாயைக்கு நன்றுமன் இயல்பே
அனையை ஆகுவை நினைவுஅரும் காலை
இந்நிலை அதனில் ஏழையேற்கு இரங்கி
நின்னை வெளிப்படுத்து ஒளிப்பை நீயேல்
அருள்மாறு ஆகும், பெரும! அஃது அன்றியும்
நிற்பெற்ற அவர்க்கும் உற்பவம் உண்டுஎனும்
சொற்பெறும் அஃதுஇத் தொல்உலகு இல்லை
அவ்வவை அமைவும் சோர்வும் மயர்வுஅறச்
சொல்லில் சொல்லெதிர் சொல்லாச்
சொல்லே சொல்லுக சொல்இறந் தோயே!

13. இறந்தோய் கரணங்கள் எல்லாம் எனக்குச்
சிறந்தோய் எனினும்மெய்த் தேவே! - பிறந்துஉடனாம்
காயம் கொளவும் கொளாமலும் கண்டதுநீ
ஆயன்கொல் பாதவத்து அற்று.

14. அற்றதுஎன் பாசம் உற்றதுஉன் கழலே
அருள்துறை உறையும் பொருள்சுவை நாத!

வேறுஎன்று இருந்த என்னை யான்பெற
வேறுஇன்மை கண்ட மெய்கண்ட தேவ!
இருவினை என்பது என்னைகொல் அருளிய
மனமே காயம் வாக்குஎனும் மூன்றின்
இதமே அகிதம் எனும்இவை ஆயில்
கணத்திடை அழியும் தினைத்துணை ஆகா
காரணம் சடம்அதன் காரியம் அஃதால்
ஆர்அணங்கு ஆம்வழி அடியேற்கு என்னைகொல்
செயல்எனது ஆயினும் செயலே வாராது
இயமன் செய்தி இதற்குஎனில் அமைவும்
பின்னைஇன்று ஆகும் அன்னதும் இங்குச்
செய்திக்கு உள்ள செயல்அவை அருத்தின்
மையல்தீர் இயமற்கு வழக்குஇல்லை, மன்ன!
ஒருவரே அமையும் ஒருவா ஒருவற்கு
இருவரும் வேண்டா இறைவனும் நின்றனை
நின்னது கருணை சொல்அளவு இன்றே
அமைத்தது துய்ப்பின் எமக்குஅணைவு இன்றாம்
உள்ளது போகாது இல்லது வாராது
உள்ளதே உள்ளது எனும்உரை அதனால்
கொள்ளும் வகையால் கொளுத்திடும் ஆயின்
வள்ளன்மை எலாம் உள்ளிட அமையும்
ஈய வேண்டும் எனும்விதி இன்றாம்
ஆயினும் என்னை அரும்துயர்ப் படுத்தல்
நாயி னேற்கு நன்றுமன் மாயக்
கருமமும் கரும பந்தமும்
தெருள அருளும் சிவபெரு மானே!

15. மான்அமரும் செங்கை மதில்வெண்ணெய் வாழ்மன்ன!
போனவினை தானே பொருந்துமோ — யான்அதனில்
ஆவனோ ஆக்காய் அமலனாம் நின்அருள்தான்
தேவனே! யாதுக்கோ தேர்.

16. தேராது உரைப்பன் தெருமரல் உளத்தொடு
பேராது அருளுதல் பெரியோர் கடனே
நின்னைக் கலப்பது என்உண்மை எனில்
நின்னது நேர்மை சொல்மனத்து இன்றே
எழுவகைத் தாதுவின் ஏழ்துளை இரண்டும்
பெருமுழைக் குரம்பையில் பெய்துஅகத்து அடக்கி
நீக்கி என்றனைப் போக்குஅற நிறுத்தி
இச்சை முதலிய எழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்புஅது நிற்க
வாக்கும் மனமும் போக்குஉள தனுவும்
சொல்லும் நினைவும் செய்யும் செயலும்
நல்லவும் தீயவும் எல்லாம் அறிந்து
முறைபிற ழாமல் குறைவுநிறைவு இன்றாய்க்

காலமும் தேசமும் மால்அற வகுத்து
நடுவுநின்று அருத்தலின் நடுவன் ஆகுதியே
சான்றோர் செய்தி மான்றுஇருப்பு இன்றே
சாலார் செயலே மால் ஆகுவதே
அத்துவா மெத்தி அடங்கா வினைகளும்
சுத்திசெய் தனையே ஒத்தகன் மத்திடை
நீங்கின என்னை ஊங்குஊழ் வினைகளும்
ஆங்குஅவை அருத்துவது ஆரைகொல் அதனால்
கருமம் அருத்தும் கடன்அது இன்றாம்
தருமம் புரத்தல் பெருமையது அன்றே
கண்ணினுள் மணிய! கருத்தினுள் கருத்த!
வெண்ணெய் வேந்த! மெய்கண்ட தேவ!
இடர்ப்படு குரம்பையுள் இருத்தித்
துடைப்பதுஇல்லா அருள் தோன்றிடச் சொல்லே.

17. சொல்தொழும்பு கொள்ளநீ சூழ்ந்ததுவும் நின்செயல்கள்
மற்றவர்கள் நின்நோக்கில் மாய்ந்தஉயிர்க் — குற்றம்
ஒளித்தி யாங்கு,ஐய! உயர்வெண்ணெய் நல்லூர்க்
குளித்தமதுக் கொன்றை எம் கோ!

18. கோலம் கொண்ட ஆறுஉண ராதே
ஞாலம் காவலன் யான்எனக் கொளீஇப்
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்து
ஓடாப் பூட்கை நாடி நாடா
என்னுள் கரந்துஎன் பின்வந்து அருளி
என்னையும் தன்னையும் அறிவின்று இயற்றி
என்னது யான்எனும் அகந்தையும் கண்டு
யாவயின் யாவையும் யாங்கணும் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்டு
என்பணி ஆளாய் எனைப்பிரி யாதே
ஓடி மீள்குஎன ஆடல் பார்த்திட்டு
என்வழி நின்றனன் எந்தை அன்னோ
அருள்மிக உடைமையில் அருள்துறை வந்து
பொருள்மிக அருள்தலும் பொய்ப்பகை ஆதலும்
கைகண்டு கொள்ளெனக் கடல்உலகு அறிய
மெய்கண்ட தேவன் எனப்பெயர் விரீஇத்
தன்னுள் கரந்து தான்முன் ஆகித்
தன்னதும் தானுமாய் என்னை இன்றாக்கித்
தன்னையும் என்னையும் தந்து தனது
செய்யாமையும் என்செயல் இன்மையும்
எம்மான் காட்டி எய்தல்
அம்மா எனக்கே அதிசயம் தருமே.

19. தருமா தருமத் தலைநின்று ஆழ்வேனைக்
கருமா கடல்விடம்உண் கண்டப் — பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தான்
உருஎன்ன வந்து எடுத்தான் உற்று.

20. உற்றவர் பெற்றவர் அற்றவர் முற்றும்
அற்றவர்க்கு அற்றவன் அல்லவர்க்கு அல்லவன்
அந்தம் ஆதி இல்லவன் வந்து
குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்டு
இருள்வெளி ஆகும் மருளினை அறுத்து
வந்து புகுதலும் சென்று நீங்கலும்
இன்றி ஒன்றாய் நின்றஅந் நிலையில்
ஒன்று ஆகாமல் இரண்டா காமல்
ஒன்றும் இரண்டும் இன்றா காமல்
தன்னது பெருமை தாக்கான் ஆயினும்
என்னது பெருமை எல்லாம் எய்தித்
தன்னை எனக்குத் தருவதை அன்றியும்
என்னையும் எனக்கே தந்து தன்னது
பேர் ஆனந்தப் பெரும்கடல் அதனுள்
ஆரா இன்பம் அளித்துத் தீரா
உள்ளும் புறம்பும் ஒழிவுஇன்றி நின்ற
வள்ளன்மை காட்டி மலர்அடி அருளிய
மன்னன் எங்கோன் வார்புனல் பெண்ணை
வெண்ணெய் காவலன் மெய்கண்ட தேவன்
அண்ணல் அருள் ஆலயத்தன் நண்ணிய
மலம்முத லாயின மாய்க்கும்
உலக உயிர்க்கு எல்லாம்ஒரு கண்ணே.

★

இருபா இருபது

முற்றிற்று

உ

திருச்சிற்றம்பலம்

6

திருவதிகை மனவாசகம்கடந்தார்

அருளிய

உண்மை விளக்கம்

காப்பு

1. வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா
உண்மை விளக்கம் உரைசெய்யத் — திண்மதம்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற்று ஐங்கரனைப்
பந்தம்அறப் புந்தியுள்வைப் பாம்.

நூல்

2. பொய்காட்டிப் பொய்அகற்றிப் போதானந் தப்பொருளாம்
மெய்காட்டும் மெய்கண்டாய்! விண்ணப்பம் — பொய்காட்டா
மெய்யா! திருவெண்ணெய் வித்தகா! சுத்தவினா
ஐயாநீ தான்கேட்டு அருள்.

3. ஆறாறு தத்துவம்ஏது ஆணவம்ஏது அன்றேதான்
மாறா வினைஏது மற்றுஇவற்றின் — வேறுஆகா
நான்ஏது நீஏது நாதன்நடம் அஞ்செழுத்துத்
தான்ஏது, தேசிகனே! சாற்று.

4. உள்ளபடி இத்தை உரைக்கக்கேள் உன்தனக்கு
வள்ளல்அரு ளால்அன்று வாய்மலர்ந்து — தெள்ளியசீர்
ஆகமங்கள் சொன்ன அடைவிலே ஆனந்த
யோகம் நிகழ்புதல்வா! உற்று.

5. நாற்கோணம் பூமிபுனல் நண்ணும்மதி யின்பாதி
ஏற்கும்அனல் முக்கோணம் எப்போதும் — ஆக்கும்
அறுகோணம் கால்வட்டம் ஆகாயம் ஆன்மா
உறுகாயம் ஆம்இவற்றால் உற்று.

6. பொன்பார் புனல்வெண்மை பொங்கும் அனல்சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்தூமம் — என்பார்
எழுத்து லவரயஅப் பாராதிக்கு என்றும்
அழுத்தமதாய் நிற்கும் அது.

7. குறிகுலிசம் கோகனதம் கொள்சுவத்தி குன்றா
அறுபுள்ளி ஆர்அமுத விந்துப் — பிறிவுஇன்றி
மண்புனல்தீக் கால்வானம் மன்னும் அடைவேஎன்று
ஒண்புதல்வா! ஆகமம் ஓதும்.

8. பார்ஆதி ஐந்தும் பன்னும்அதி தெய்வங்கள்
ஆர்ஆர் அயன்ஆதி ஐவராம் — ஓர்ஓர்
தொழில்அவர்க்குச் சொல்லும்கால் தோற்றம்முதல் ஐந்தும்
பழுதுஅறவே பண்ணுவர்காண் பார்.

9. படைப்பன் அயன்அளிப்பன் பங்கயக்கண் மாயன்
துடைப்பன் உருத்திரனும் சொல்லில் — திடப்பெறவே
என்றும் திரோபவிப்பர் ஈசர் சதாசிவரும்
அன்றே அநுக்கிரகர் ஆம்.

10. மண்கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந்தே பதம்ஆம்
ஒண்கனல்சுட்டு ஒன்றுவிக்கும் ஓவாமல் — வண்கால்
பரந்துசலித்துத் திரட்டும் பார்க்கில் ஆகாயம்
நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து.

11. உள்ளபடி மாபூதம் ஓதினோம் உன்றனக்குக்
கள்ளம்மிகும் ஐம்புலனும் கட்டுரைக்கில் — மெள்ளவே
ஓசை பரிசம் உருவம் சுவைநாற்றம்
ஆசைதரும் ஐம்புலனே ஆம்.

12. ஞானேந் திரியங்கள் நன்றாய் உரைக்கக்கேள்
ஊனம் மிகுபூதம் உற்றிடமா — ஈனமாம்
சத்தாதியை அறியும் தானம் செவிதோல்கண்
அத்தாலு மூக்குஎன்று அறி.

13. வானிடமாய் நின்றுசெவி மன்னும் ஒலியதனை
ஈனமிகும் தோல்கால் இடமாக — ஊனப்
பரிசம் தனைஅறியும் பார்வையில்கண் அங்கி
விரவி உருவம் காணுமே.

14. நன்றாக நீர்இடமா நாஇரதம் தான்அறியும்
பொன்றா மணம்மூக்கும் பூஇடமா — நின்றுஅறியும்
என்றுஓதும் அன்றே இறைஆகமம் இதனை
வென்றார் சென்றார் இன்ப வீடு.

15. கண்நுதல்நூல் ஓதியிடும் கன்மேந் திரியங்கள்
எண்ணும் வசனாதிக்கு இடமாக — நண்ணியிடும்
வாக்குப் பாதம்பாணி மன்னு குதம்உபத்த
மாக்கருதும் நாளும் அது.

16. வாக்குஆகாயம் இடமா வந்து வசனிக்கும்கால்
போக்குஆரும் காற்றுஇடமாப் புல்கிஅனல் — ஏற்கும்
இடும்கை குதம்நீர் இடமா மலாதி
விடும்பார் இடம்உபத்தம் விந்து.

17. அந்தக் கரணம் அடைவே உரைக்கக்கேள்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் — சிந்தைஇவை
பற்றியது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்து அங்கு
உற்றது சிந்திக்கும் உணர்.

18. ஓதிஇடும் நால்ஆறும் உற்றுஆன்ம தத்துவம்என்று
ஆதி அருள்நூல் அறையும்காண் — தீதுஅறவே
வித்தியா தத்துவங்கள் தம்மை விளம்பக்கேள்
உத்தமனே! நன்றாய் உனக்கு.

19. காலம்நியதி கருதும் கலைவித்தை
ஏலஇராகம் புருடனே மாயை — மால்அறவே
சொன்னோம் அடைவாகச் சொன்னஇவை தம்உண்மை
உன்னி உரைக்கநாம் உற்று.

20. எல்லை பலம்புதுமை எப்போதும் நிச்சயித்தல்
அல்லல் தரும்கிரியை ஆன்மாவுக்கு — ஒல்லை
அறிவுஆசை ஐம்புலனும் ஆரவரும் காலம்
குறியா மயக்குஎன்று கொள்.

21. வித்தியா தத்துவங்கள் ஏழும் விளம்பினோம்
சுத்தமாம் தத்துவங்கள் சொல்லக்கேள் — நித்தமாம்
சுத்தவித்தை ஈசுரம்பின் சொல்லும் சதாசிவம்நல்
சத்திசிவம் காண்அவைகள் தாம்.

22. சுத்தவித்தை ஞானம்மிகும் தொன்மையாம் ஈசுரம்தான்
அத்தன் தொழில்அதிகம் ஆக்கிஇடும் — ஒத்தஇவை
சாதாக்கியம் என்றும் சத்தி சிவம்கிரியை
ஆதார ஞானஉரு ஆம்.

23. ஆறாறு தத்துவமும் சொன்னோம் அடைவாக
மாறா மலம்இரண்டும் வாசொல்லக் — கூறில்
அறியாமை ஆணவம்நீ ஆனசுக துக்கம்
குறியா வினைஎன்று கொள்.

24. ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
மாறா அருளால் வகுத்துரைத்தீர் — வேறுஆகா
என்னை எனக்குஅறியக் காட்டீர் இவைகண்டேன்
உன்னரிய தேசிகரே! உற்று.

25. நன்றா உரைக்கக்கேள் நல்லசித்தின் முன்அசித்துஇங்கு
ஒன்றாது சித்துஅசித்தை ஓராது — நின்றுஇவற்றை
அன்றே பகுத்துஅறிவது ஆன்மாவே என்றுமறை
குன்றாமல் ஓதும் குறித்து.

26. தத்துவங்கள் ஆறாறும் தம்மைத்தாம் என்றுஅறியா
எத்தன்மை என்னில் இயம்பக்கேள் — சுத்தமாம்
ஆறு சுவையும் அறியாவே தம்மைத்தாம்
கூறில் அவைஇவைபோல் கொள்.

27. ஆறு சுவையும் அருந்தி அவைதம்மை
வேறுஒருவன் கூறியிடும் மேன்மைபோல் — ஆறாறும்
ஒன்றுஒன்றாய் நாடிஉணர்ந்து ஓதில்அதில் உற்றுஅறிவாய்
நின்றபொருள் தானேகாண் நீ.

28. குன்றா அருளாலே கூறினீர் என்வடிவு
பொன்றாத நும்உருவம் போதியீர் — நின்றுஅருக்கன்
கண்ணுக்குக் காட்டுமாப் போலே உனதுஅறிவில்
நண்ணிஅறி வித்திடுவோம் நாம்.

29. அன்றியும்கேள் ஆன்மாவால் ஆய்ந்துஅறியும் ஐம்பொறிகள்
இன்றி அறியா இவைஎன்ன — நின்றதுபோல்
ஓவாமல் உன்னை உணர்த்துவோம் உன்அறிவில்
மேவாமல் மேவி நாமே.

30. அக்கரங்கட்கு எல்லாம் அகரஉயிர் நின்றால்போல்
மிக்க உயிர்க்குஉயிராய் மேவினோம் — எக்கண்ணும்
நில்லா இடத்துஉயிர்க்கு நில்லாது அறிவுஎன்று
நல்ஆகமம் ஓதும் நாடு.

31. நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத்து அஞ்சுஎழுத்தால்
உற்றுஉருவாய் நின்றுஆடல் உள்ளபடி — பெற்றிடநான்
விண்ணார் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே!
தண்ணார் அருளாலே சாற்று.

32. எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் — சிட்டன்
சிவாயநம என்னும் திருஎழுத்து அஞ்சாலே
அவாயம்அற நின்றுஆடு வான்.

33. ஆடும் படிகேள் நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம் — கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரும்முகம் வாமுடியப் பார்.

34. சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் — பார்க்கில்இறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரம்அது தான்.

35. ஓங்கார மேநல் திருவாசி உற்றுஅதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் — ஆங்காரம்
அற்றார் அறிவர்அணி அம்பலத்தான் ஆடல்இது
பெற்றார் பிறப்புஅற்றார் பின்.

36. தோற்றம் துடிஅதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

37. மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தான்எடுத்து — நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான்அழுத்தல்
தான்எந்தை யார்பரதம் தான்.

38. மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தான்அந்த மான்இடத்தே தங்கியிடும் — ஆனந்தம்
மொண்டுஅருந்தி நின்றுஆடல் காணும்அருள் மூர்த்தியாக்
கொண்டதிரு அம்பலத்தான் கூத்து.

39. பரைஇடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரைஉணர்வுக்கு எட்டா ஒருவன் — வரைமகள்தான்
காணும் படியே கருணைஉருக் கொண்டுஆடல்
பேணும்அவர்க்கு உண்டோ பிறப்பு.

40. நாதாந்த நாடகத்தை நன்றாய் அருள்செய்தீர்
ஓதீர் எழுத்துஅஞ்சும் உள்ளபடி — தீதுஅறவே
அஞ்சுஎழுத்து ஈது ஆகில் அழியும்எழுத்து ஆய்விடுமோ
தஞ்ச அருள்குருவே சாற்று.

41. உற்ற குறிஅழியும் ஓதும்கால் பாடைகளில்
சற்றும் பொருள்தான் சலியாது — மற்றுஅதுகேள்
ஈசன்அருள் ஆவி எழில்ஆர் திரோதமலம்
ஆசுஇல்எழுத்து அஞ்சின்அடைவு ஆம்.

42. சிவன்அருள் ஆவி திரோதம்மலம் ஐந்தும்
அவன்எழுத்து அஞ்சின் அடைவாம் — இவன்நின்று
நம்முதலா ஓதில்அருள் நாடாது நாடும்அருள்
சிம்முதலா ஓதுநீ சென்று.

43. அண்ணல் முதலா அழகுஆர் எழுத்துஐந்தும்
எண்ணில் இராப்பகல்அற்று இன்பத்தே — நண்ணி
அருளானது சிவத்தே ஆக்கும் அணுவை
இருளானது தீர இன்று.

44. ஆதி மலம்இரண்டும் ஆதியாய் ஓதினால்
சேதியா மும்மலமும் தீர்வுஆகா — போதம்
மதிப்புஅரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படி ஓதுஅஞ்சு எழுத்து மே.

45. அஞ்சுஎழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்சுஎழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் — அஞ்சு
எழுத்தே
ஆனந்த தாண்டவமும் ஆறாறுக்கு அப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்.

46. முத்தி தனைஅடைந்தோர் முந்துபழம் போதுஅங்கி
வித்தகமாம் வீணை இவையிற்றின் — ஒத்த
இரதம்மணம் வெம்மை எழில்நாதம் போல
விரவுவர்என்று ஓதும் விதி.

47. தத்துவங்கள் எல்லாம் சகசமாய் ஆன்மாவில்
பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல் — முத்திதனில்
சித்தமலம் அற்றார் செறிந்திடுவர் என்றுமறை
சத்தியமா ஓதியிடும் தான்.

48. ஆதவன்தன் சன்னிதியில் அம்புலியின் ஆர்சோதி
பேதம்அற நிற்கின்ற பெற்றிபோல் — நாதாந்தத்து
அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்துஇன்பக்
கண்ணில் அழுந்தியிடும் காண்.

49. சென்றுஇவன்தான் ஒன்றில் சிவபூரணம் சிதையும்
அன்றுஅவன்தான் ஒன்றுமெனில் அன்னியமாம் — இன்று
இரண்டும்
அற்றநிலை ஏதுஎன்னில் ஆதித்தன் அந்தன்விழிக்
குற்றம்அற நின்றதுபோல் கொள்.

50. வாக்கு மனம்இறந்த வான்கருணை யாளன்உருத்
தாக்குஅறவே நிற்கும் தனிமுதல்வா! — நீக்காப்
பதியினைப்போல் நித்தம் பசுபாசம் என்றாய்
கதியிடத்தும் மூன்றினையும் காட்டு.

51. முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்தஅனு போகத்தைத் துய்த்தல்அணு — மெத்தவே
இன்பம் கொடுத்தல்இறை இத்தை விளைவித்தல் மலம்
அன்புடனே கண்டுகொள், அப்பா!

52. அப்பா! இம்முத்திக்கு அழியாத காரணம்தான்
செப்பாய் அருளாலே செப்பக்கேள் — ஒப்புஇல்
குருலிங்க வேடம்எனக் கூறில்இவை கொண்டார்
கருஒன்றி நில்லார்கள் காண்.

53. கற்றா மனம்போல் கசிந்துகசிந்தே உருகி
உற்றுஆசான் லிங்கம் உயர்வேடம் — பற்றுஆக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார்.

54. வாழ்ந்தேன் அருட்கடலே! வற்றாப் பவக்கடலில்
வீழ்ந்தே அலையாமல் மேதினியில் — சூழ்ந்துவிடா
வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே!
உண்மைத் தவப்பயனே உற்று.

உண்மை விளக்கம்

முற்றிற்று

நூலாசிரியர் சிறப்பு

மன்அதிகை வாழும் மனவாசகம் கடந்தான்
மின்அனையார் வாழ்வில்உறா மெய்கண்டான் —
பன்மறைகள்
வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா
உண்மைவிளக்கம் செய்தான் உற்று.

பொருள் அடைவு

பொருள்	செய்யுள் எண்
காப்பு	1
நூல் நுவலும் பொருள்	2— 4
ஆன்ம தத்துவம்	5—18
வித்தியா தத்துவம்	19—20
சிவ தத்துவம்	21—22
ஆணவம், கன்மம்	23
ஆன்ம ரூபம்	24—27
சிவ ரூபம்	28—30
திருவைந்தெழுத்துத் திருக்கூத்து	31—39
திருவைந்தெழுத்து ஓதும் முறை	40—45
அத்துவித முத்தி	46—51
குரு லிங்க சங்கம வழிபாடு	52—54

உ
திருச்சிற்றம்பலம்

7

உமாபதி சிவாசாரியார்
அருளிய

சிவப்பிரகாசம்

காப்பு

ஒளியான திருமேனி உமிழ்தானம் மிகமேவு
களியார வரும்ஆனை கழல்நாளும் மறவாமல்
அளிஆளும் மலர்தூவும் அடியார்கள் உளம்ஆன
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே.

பாயிரம்

கூத்தர்

1. ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தி ஆகி
உலகம்எலாம் அளித்துஅருளும் உமையம்மை காணத்
தேங்கமழும் மலர்இதழி திங்கள் கங்கை
திகழ்அரவம் வளர்சடைமேல் சேர வைத்து
நீங்கல்அரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்றுஇமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினும் உறவணங்கிப் போற்றல் செய்வாம்.

சிவகாமி அம்மை

2. பரந்தபரா பரைஆதி பரனது இச்சை
பரஞானம் கிரியைபர போக ரூபம்
தரும்கருணை உருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவன போகங்கள் தாங்க
விரிந்தஉபா தானங்கள் மேவி ஒன்றாய்
விமலமாய் ஐந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்து
அரந்தைகெட மணிமன்றுள் ஆடல் காணும்
அன்னைஅருள் பாதமலர் சென்னி வைப்பாம்.

விநாயகர்

3. நலம்தரல்நூல் இரும்தமிழின் செய்யுள் குற்றம்
நண்ணாமை இடையூறு நலியாமை கருதி
இலங்கும்இரு குழைஅருகு பொருதுவரி சிதறி
இணைவேல்கள் இகழ்ந்தகயல் கண்ணியொடும் இறைவன்
கலந்துஅருள வரும்ஆனை முகத்தான் மும்மைக்
கடம்அருவி எனநிலவு கணபதியின் அருளால்
அலந்துமது கரமுனிவர் பரவவளர் கமலம்
அனையதிரு அடியிணைகள் நினைதல் செய்வாம்.

முருகக்கடவுள்

4. வளம்நிலவு குலம்அமரர் அதிபதியாய் நீல
மயில்ஏறி வரும்ஈசன் அருள்ஞான மதலை
அளவில்பல கலைஅங்கம் ஆரணங்கள் உணர்ந்த
அகத்தியனுக்கு ஒத்துஉரைக்கும் அண்ணல்விறல் எண்ணாது
உளம்மருவு சூரன்உரம் எனதுஇடும்பை ஓங்கல்
ஒன்றுஇரண்டு கூறுபட ஒளிதிகழ்வேல் உகந்த
களபம்மலி குறமகள்தன் மணிமுலைகள் கலந்த
கந்தன்மலர் அடியிணைகள் சிந்தை செய்வாம்.

சந்தான பரம்பரை

5. தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திருநந்தி அவர்கணத்தோர் செல்வர் பாரில்
பாவியசத் தியஞான தரிசனிகள் அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியாம் வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலான் மாறா
விரவுபுகழ் அருணந்தி விறலார் செல்வத்
தாவில்அருள் மறைஞான சம்பந்தர் இவர்இச்
சந்தானத்து எமையாளும் தன்மை யோரே.

குருவணக்கம்

6. பார்திகழ வளர்சாம வேதம் மல்கப்
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்துஅருளி எம்மை ஆண்ட
சைவசிகா மணிமருதத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில்புடைசூழ் மதில்மீதே மதியம்
கடவாமை நெடும்கொடியின் கரம்தகையும் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரும் மலரடிகள் சென்னி வைப்பாம்.

நுதலிய பொருள்

7. புறச்சமயத் தவர்க்குஇருளாய் அகச்சமயத்து ஒளியாய்ப்
புகல்அளவைக்கு அளவாகிப் பொன்பணிபோல்
அபேதப்
பிறப்புஇலதாய் இருள்வெளிபோல் பேதமும்சொற் பொருள்
போல்
பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய் உடல்உயிர் கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவுஅரும் அத்துவிதம் ஆகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்கல் உற்றாம்.

தீக்கை முறை

8. மூவகைஆர் உயிர்வர்க்கம் மலத்தார் கன்ம
மூலமலத்தார் மூன்றும் உடையார் அன்றே
தீவகமாம் எனஉருவாய் வந்து நாதன்
திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால்
பாவனையால் மிகுநூலால் யோகப் பண்பால்
பரவிவரும் ஔத்திரியால் பாச நாசம்
மேவஅருள் உதவும் அவுத்திரி இரண்டு திறனாம்
வியன்கிரியை ஞானம்என விளம்பும் ஆறே.

9. விரும்பியமந் திராதிகாரம் அர்ச்சனா திகாரம்
மேவும் யோகாதிகாரம் எனச்சமய விசேடம்
வரும்பொருவில் நிருவாண மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்
இரங்குஅடைவில் தொகைபதினொன்று எண்பத்தொன்று
ஐம்பத்தொன்று
இருநூற்றோடு இருபத்து நால் ஆறாறு ஐந்தில்
பரந்தநெறி அறுவகையும் ஒருவிநினைவு அரிதாம்
பரபதத்துள் உயிர்விரவப் பயிற்றும் அன்றே.

10. கிரியைஎன மருவும்அவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தம்எனக் கிளக்கும் உண்மைச்
சரியை கிரியா யோகத் தன்மை யோர்க்குச்
சாலோக சாமீப சாரூபங்கள்
மருவியிடும் உயர்ஞானம் இரண்டாம் மாறா
மலம்அகல அகலாத மன்னு போதத்
திருவருள்ஒன்று ஒன்றுஅதனைத் தெளிய வோதும்
சிவாகமம்என்று உலகறியச் செப்பும் நூலே.

நூல்வழியும் நூற்பெயரும்

11. தெரித்தகுரு முதல்வர்உயர் சிவஞான போதம்
செப்பினர்பின்பு அவர்புதல்வர் சிவஞான சித்தி
விரித்தனர்மற்று அவர்கள்திரு அடிகள் போற்றி
விளம்பியநூல் அவைஇரண்டும் விரும்பி நோக்கிக்
கருத்தில்உறை திருவருளும் இறைவன் நூலும்
கலந்துபொது உண்மைஎனக் கருதி யானும்
அருத்திமிக உரைப்பன்வளர் விருத்தம் நூறும்
ஆசில்சிவப் பிரகாசம் ஆகும் அன்றே.

அவையடக்கம்

12. தொன்மையவாம் எனும்எவையும் நன்றுஆகா இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதுஆகா துணிந்த
நன்மையினார் நலங்கொள்மணி பொதியும்அதன் களங்கம்
நவைஆகாது எனஉண்மை நயந்திடுவர் நடுவாம்
தன்மையினார் பழைமைஅழகு ஆராய்ந்து தரிப்பர்
தவறுநலம் பொருளின்கண் சார்வுஆராய்ந்து அறிதல்
இன்மையினார் பலர்புகழில் ஏத்துவர் ஏதிலர்உற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்குஎன ஒன்று
இலரே.

பொது அதிகாரம்

முதல் சூத்திரம்

பதி இலக்கணம்

13. பலகலை ஆகமம்வேதம் யாவையினும் கருத்துப்
பதிபசுபாசம் தெரித்தல் பதிபரமே அதுதான்
நிலவும்அரு உருஇன்றிக் குணம்குறிகள் இன்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தம் ஆகி
அலகில்உயிர்க்கு உணர்வாகி அசலம் ஆகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்
செலவுஅரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவம்என்பர் தெளிந்து ளோரே.

14. நீடுபரா சத்திநிகழ் இச்சா ஞானம்
நிறைகிரியை தரஅதனை நிமலன் மேவி
நாடுஅரிய கருணைதிரு உருவம் ஆகி
நவின்றுபல கலைநாத விந்து ஆதி
கூடும்ஒளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொள் தனுகரணம் புவனம் போகம்
பீடுபெற நிறுவிஅவை ஒடுக்கும் மேனி
பிறங்கிய நிட்கள சகளப்பெற்றி ஆமே.

15. ஈங்குஇதுஎன்றது கடந்த இயல்பி னாலும்
ஈறுமுதல் நடுஒன்றும் இலாமை யாலும்
ஓங்கிவளர் ஞானமயன் ஆத லாலும்
உண்மைபிறர்க்கு அறிவரிய ஒருமை யாலும்
தாங்குஅரிய வெறுப்பினொடு விருப்பும் எல்லாம்
சார்வுஅரிய தனிமுதல்வன் ஆத லாலும்
நீங்கல்அரும் உயிர்க்கு உயிராய் நிற்ற லாலும்
நிறுத்திடுவன் நினைந்தஉரு நிமலன் தானே.

16. உலகம்எலாம் ஒருவனோடு ஒருத்தி ஒன்றுஎன்று
உளதாகி நின்றுஅளவில் ஒடுங்கும் பின்னும்
மலம்அதனால் உளதாகும் உருவம் மாறி
வருவதுபோவது செல்வது ஆத லாலும்
அலைவில் அசேதனம் மாயை ஆத லாலும்
அணுக்கள்உரு அடையும்அறிவு இலாமையாலும்
நிலவுதொழில் மருவிஉரு நிற்ற லாலும்
நின்றுஎவையும் அளித்திடுவன் நிமலன் தானே.

17. கந்தமலர் அயன்படைக்கும் உலகம் எல்லாம்
கண்ணன்அளித்திடும் அவைஎம் கடவுள் தானே
அந்தம்உற அழித்திடுவன் ஆத லாலே
அயன்அரியும் அவனதுஉயர் அதிகா ரத்து
வந்தமுறை தன்தொழிலே மன்னுவிப்பன் எல்லாம்
வருவிப்பன் விகாரங்கள் மருவான் வானில்
முந்துஇரவி எதிர்முளரி அலர்வுறும்ஒன்று அலர்வான்
முகையாம்ஒன்று ஒன்றுஉலரும் முறையின் ஆமே.

18. ஏற்றஇவை அரன்அருளின் திருவிளையாட்டு ஆக
இயம்புவர்கள் அணுக்கள்இடர்க் கடல்நின்றும் எடுத்தே
ஊற்றம்மிக அருள்புரிதல் ஏது ஆக
உரைசெய்வர் ஒடுக்கம்இளைப்பு ஒழித்தல் மற்றைத்
தோற்றம்மல பாகம்வரக் காத்தல் போகம்
துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்தல் ஆகும்
போற்றல்அரும் அருள்அருளே அன்றி மற்றுப்
புகன்றவையும் அருள்ஒழியப் புகல் ஒணாதே.

இரண்டாம் சூத்திரம்

பசு இலக்கணம்

19. எண்அரிதாய் நித்தமாய் இருள்மலத்தில் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை
அண்ணல்அருளால் நண்ணி அவைஅவராய் அதனால்
அலகில்நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்

புண்ணியபாவம் புரிந்து போக்குவரவு உடைத்தாய்ப்
புணரும்இருள் மலபாகம் பொருந்தியக்கால் அருளால்
உள்நிலவும் ஒளியதனால் இருள்அகற்றிப் பாதம்
உற்றிடும்நற் பசுவருக்கம் எனஉரைப்பர் உணர்ந்தோர்.

பாச இலக்கணம்

20. ஏகமாய்த் தம்கால எல்லைகளில் மீளும்
எண்அரிய சத்தியதாய் இருள்ஒளிர இருண்ட
மோகமாய்ச் செம்பில்உறு களிம்புஏய்ந்து நித்த
மூலமலமாய் அறிவு முழுதினையும் மறைக்கும்
பாகமாம் வகைநின்று திரோதாயி சத்தி
பண்ணுதலால் மலம்எனவும் பகர்வர்அது பரிந்து
நாகம்மா நதிமதியம் பொதிசடையான் அடிகள்
நணுகும்வகை கருணைமிக நயக்கும் தானே.

21. உன்னல்அரும் பரசிவன்தன் அருளாலே நாதம்
உதிக்கும்மிகும் குடிலைதனில் விந்துவரும் நாதம்
தன்னில்அதின் ஒளிவளரும் சதாசிவராம் அவரில்
தயங்கவரும் ஈசர்வித்தை தனைஅளிப்பர் அதனால்
மன்னுவர்இவ் வகைஐவர் வாய்மையினால் முன்னே
வந்திடும்என்று உரைசெய்த விந்துவழா வகையே
முன்உதவும் சூக்குமாதி ஒருநான்கும் என்று
மொழிந்திடுவர் அரும்கலைகள் முதிர்ந்துளோரே.

22. உருவாதி சதுர்விதமாய் ஒன்று ஒன்று ஒவ்வா
உண்மையதாய் நித்தமாய் ஒன்றாய் என்றும்
அருவாகிக் கன்மம்ஆர் அணுக்கள் யார்க்கும்
ஆவாரமாய் அசித்தாய் அசலம்ஆகி
விரிவாய தன்செயலின் வியாபியாய் எல்லாம்
விரிந்தவகை புரிந்துஅடைவில் மேவிஅவை ஒடுங்க
வருகாலம் உயிர்கள் எல்லாம் மருவுஇடமாய் மலமாய்
மன்னியிடும் அரன்அருளால் மாயை தானே.

23. என்னைஇது எனில்உலகுக்கு உபாதானம் இல்லை
இறைவன்அலது எனில்அசித்துச் சித்தினிடத்து உதியா
மன்னிஉளதேல் முதல்வன் என்கொல் என்னில்
மாயைதான் அசித்து உருவாய் மருவ மாட்டாது
அன்னவனும் இதுவொழிய ஆக்க மாட்டான்
அசத்தனாம் எனில் அதுவும் அவன்போல் நித்தம்
முன்னவன்அவ் அசித்தைவிரித்து எவையும் ஆக்கும்
முதன்மைஅது கொடுத்ததுஎன மொழிந்திடாரே.

24. படைத்ததுஒரு படிஇன்றிப் பறவைபசு நரராய்ப்
பண்ணியதுஎன் முன்னைவினைப் பான்மை என்பர்
அடுத்தவினை உளதாயின் இறைஏன் என்னில்
அசேதனம் மற்று அவைஆவிக்கு அமைத்தது ஆகும்

எடுத்தவினை உருஉறுவது உயிரேல் தானே
இருவினைக்குத் தக்கஉடல் எய்தும் என்னில்
சடத்திரளும் அகர்த்தாவாய் அறிவு ஒன்று இல்லாத்
தன்மையனும் கூடஒரு சங்கை இன்றே.

25. அல்லல்மிக உயிர்க்குஇவைதான் அணைத்தது ஈசன்
அருவினைகள் அருந்துதற்கோ வினையோ அன்றிச்
சொல்லிவரும் மாயையோ அணுவை முந்தச்
சூழ்ந்ததுஎனும் உரைமுதல்ஓர் தொடக்கு இலார்பால்
ஒல்லைவரும் எனில்உளதாம் உயிர் உண்டாவே
உளதுமலம் மலம்உளதாய் ஒழிந்த எல்லாம்
நெல்லின்முளை தவிடுஉமிபோல் அனாதி யாக
நிறுத்திடுவர் இதுசைவம் நிகழ்த்தும் ஆறே.

26. அருத்திமிகும் கலைகாலம் நியதியுடன் வித்தை
அராகம்இவை அனந்தரால் மாயைதனில் ஆகும்
உருத்திரரால் கலைஅதனில் பிரகிருதி குணங்கள்
உளவாகும் ஆங்காரம் புந்திதனில் உதிக்கும்
தெரித்தஇது திரிவிதமாம் தைசத வைகாரி
திகழ்தரு பூதாதிஎனத் திருந்திய சாத்துவிதம்
விரித்தகுணம் மனம்புத்தி இந்திரியம் என்று
விளம்பிய சோத்திராதிமுதல் விளங்கியிடும் விரிந்தே.

27. மன்னியகன் மேந்திரியம்ஆன இராசதம்சேர்
வாக்குஆதி வைகாரி மருவிவரும் சத்தம்
தன்னைமுதல் ஆகிய தாமதம் மிகுமாத்திரை பின்
தரும்இதனில் வான்அநிலம் அனல்புனல் மண்சத்தம்
முன்னதனில்வெளி ஆதிஒன்றுஒன்று ஆகும்
முறையில்உறும் இருமைஅயன் முடிவாம் முன்னே
உன்னுசதா சிவர்ஆதி அதிபதிகள் ஒடுக்கம்
உதித்தஅடைவு என உரைப்பர் உணர்ந்துளோரே.

28. நண்ணியிடும்உரு அதனுக்கு ஏது ஆகி
நானா போகங்களாய் நாசோற்பத்தி
பண்ணிவரும் ஆதலால் அனாதி ஆகிப்
பலவாகி அணுக்கள்தொறும் படர்வது ஆகி
எண்ணிவரும் மனம்வாச கன்மத்தால் இயற்றும்
இயல்பினதாய் மதிகதமாய் இருபயனாம் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
பொருந்தும்இது கன்மமலம் புகலும் ஆறே.

29. கன்மநெறி திரிவிதம்நற் சாதிஆயுப் போகக்
கடன்அதுஎன வரும்மூன்றும் உயிர்ஒன்றில் கலத்தல்
தொன்மையது ஊழ்அல்லது உணவுஆகா தானும்
தொடங்குஅடைவில் அடையாதே தோன்றும் மாறித்

தன்மைதரு தெய்விகம் முற்பௌதிகம் ஆன்மிகமாம்
தகையில்உறும் அசேதன சேதனத்தாலும் சாரும்
நன்மையொடு தீமைதரு சேதனனுக்கு இவண்ஊண்
நாடில்அதன் ஊழ்வினையாய் நணுகும் தானே.

30. மேலைக்கு வருவினைஏது என்னில் அங்கண்
விருப்புவெறுப்பு எனஅறி அவ்விளைவும் எல்லாம்
மூலத்த வினைப்பயில்வாம் என்னில் நாம்மேல்
முற்றிஅதன் பயன்உனக்கு முளைக்கும் என்பர்
ஞாலத்து வினைகள் இருதிறன் ஆகும் புந்தி
நண்ணாத வினைநணுகும் வினைஎன ஒன்று இரண்டாம்
ஏலத்தான் இதம்அகிதமாம் இதனால் வழுவாது
எய்தியிடும் புண்ணிய பாவங்கள் என்றே.

31. உற்றதொழில் நினைவுஉரையின் இருவினையும் உளவாம்
ஒன்றுஒன்றால் அழியாது ஊண்ஒழியாது உன்னில்
மற்றுஅவற்றில் ஒருவினைக்குஓர் வினையால் வீடு
வைதிக சைவம்பகரும் மரபில் ஆற்றப்
பற்றியது கழியும்இது விலையால் ஏற்கும்
பான்மையுமாம் பண்ணாது பலிக்கும் முன்னம்
சொற்றருநூல் வழியில்வரில் மிகுதி சோரும்
சோராதுஅங்கு அதுமேலைத் தொடர்ச்சி ஆமே.

32. மோகம்மிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்
மூலஆணவம் ஒன்று முயங்கி நின்று
பாகம்மிக உதவுதிரோ தாயி ஒன்று
பகர்மாயை ஒன்றுபடர் கன்மம் ஒன்று
தேகம்உறு கரணமொடு புவன போகச்
செயல்ஆரும் மாமாயைத் திரட்சி ஒன்று என்று
ஆகமலம் ஐந்துஎன்பர் ஐந்தும் மாறாது
அருளென்பது அரிதுஎன்பர் அறிந்து ளோரே.

அவத்தை இலக்கணம்

கேவல அவத்தை

33. ஓங்கிவரும் பலஉயிர்கள் மூன்றுஅவத்தை பற்றி
உற்றிடும் கேவலம்சகலம் சுத்தம்என உணர்க
ஈங்குவரும் கலாதியொடு குறிஉருவம் ஒன்றும்
இன்றிமலம் அன்றிஒன்றும் இல்லைஎனும் இயல்பாய்
ஆங்குஅறிவை அறிவுஅரியன் அறிகருவி அணையா
ஆதலினால் இருள்மருவு மலர்விழிபோல் அதுவாய்
நீங்கும்வகை இன்றிநித்த வியாபகமாய் அங்கண்
நிற்பது கேவலம்என்று நிகழ்த்தும் நூலே.

34. இன்மைமலம் மாயைகன்மம் என்றுஇரண்டே இறைதான்
இலங்குபல உயிர்களும்முன் புரிந்த இருவினையின்
தன்மைகளால் எவர்களுக்கும் தனுகரணம் புவனம்
தந்திடும்இங்கு அதனாலே இருபயனும் சார்ந்து
கன்மம்எலாம் நேராக நேர்ஆதல் மருவக்
கடவுள்அருளால் எவையும் கழித்திடுவன் அதனால்
பின்மலம் ஆனவை அணுகா பெருகுஒளிமுன்பு உளதே
பெற்றிடும்என்று இத்திறம்என் பேசும் ஆறே.

35. மாயைமுதல் எனவினையின் பான்மைமுதல் எனவே
மன்னுபனை விதைமரபின் மயங்கும்மலம் சுத்தற்கு
ஏயும்நெறி என்கொல்அதன் இயல்புஆயின் முத்தி
என்பதுஎன் மற்று இவைநிற்க இரும்கலாதி உணர்வாய்
மேயபினர்த் தன்உருவம் விளங்காமை விளக்கும்
மிகும்உலகம் தனில்என்னில் இவைவிடுங்கால்
உணர்வுள்
தோயும்நெறி இலதாதல் அறியாமை எனநீ
சொல்லியது மலம்என்பர் துணிந்துளோரே.

36. அன்னியம்ஆனவை உணர்த்தி அனன்னியமாய் நிறைந்த
அறிவு அறியாமையினாலும் அருள்நிலவும் காலம்
தன்னில் அவனே யாவுமாய் நின்ற தொன்மை
தாம்உணர்த‌லாலும்உயிர் தான்எனஒன்று இலதாய்
மன்னியிடும் மலம்மாயை கன்மங்கள் மாறி
வந்திடும்இங்கு இதுவழுவாது ஆதலினால் மனத்தால்
உன்னரிய திருவருளை ஒழியமலம் உளதுஎன்று
உணர்வுஅரிதால் அதன்உண்மை தெரிவுஅரிதாம்
உனக்கே.

சகல அவத்தை

37. புகலும்மலம் ஒழித்தற்குக் கலாதிமுதல் மாயை
பொருந்தியிடும் அரன்அருளால் போதம் தீபம்
சகலம்எலாம் உடன்ஆய வாறு போலத்
தரும்அருளை மலம்உயிர்கள் சாராமல் மறைக்கும்
இகல்இவரும் இவைஉணரில் இருள்வெளியாம் தன்மை
எய்தும்இவை தன்செய்தி இலங்கும் விந்து
பகர்வுஅரிய உணர்வாகி ஒளியாய் உள்ளப்
பான்மையினால் ஒருநாதம் படரும் தானே.

38. வந்துஅடைந்து பின்னமாய் வன்னங்கள் தோற்றம்
வரும்அடைவு படஒடுக்கி மயில்அண்ட சலம்நேர்
சிந்தைதனில் உணர்வாகும் பைசந்தி உயிரில்
சேர்ந்துவரும் அவைமருவும் உருஎவையும் தெரித்து
முந்தியிடும் செவியில்உறா உள்உணர்வாய் ஓசை
முழங்கியிடும் மத்திமைதான் வைகரியில் உதானன்
பந்தம்உறும் உயிர்அணைந்து வந்தமொழி செவியின்
பால்அணைய நினைந்தபொருள் பகரும் தானே.

39. இத்தகைமை இறைஅருளால் உயிர்அறியும் அறிவுக்கு
ஈடாக வாடாதே ஈர்இரண்டில் உரைத்த
வித்தைமுதல் ஐவரால் விளங்கும் ஞானம்
மேவியிடும் எனஉரைப்பர் அசுத்த மாயை
வைத்தகலை தான்மூல மலம்சிறிதே நீக்கி
மருவும்வகை தெரிவிக்கும் வாயில்களின் பயனைப்
புத்திதர வித்தைஇடை நின்றுஅறிவை உயிர்க்குப்
பொருந்தியிடும் வகைபுணரும் புனிதசத்தி புணர்ந்தே.

40. பேசரிய அராகம்தன் கன்மத்துக்கு ஈடாய்ப்
பெற்றதனில் ஆசைதனைப் பெருகுவிக்கும் நியதி
தேசம்மிகும் அரசர்தரும் ஆணை செய்தி
செய்தவரைத் துய்ப்பிக்கும் செய்கை போல
நேசம்உறும் தம்கன்மம் நிச்சயித்து நிறுத்தும்
நிகழ்காலம் கழிகாலம் எதிர்காலம் என்றே
ஓசைதர வரும்காலம் எல்லைபலம் புதுமை
உறுவிக்கும் இறைசத்தி உடனாய் நின்றே.

41. ஐவகையால் உறுபயன்கள் நுகரவரும் காலம்
அதுபுருட தத்துவம் என்று அறைந்திடுவர் அறிந்தோர்
மெய்வகைய கலாசுத்தி தனில்இதற்கும் சுத்தி
மேவியிடும் வகைதானும் விரும்பியநூல் விளம்பும்
செய்வகையின் தொடர்ச்சி இங்குத் தோன்றுவிக்கும் குணத்தின்
சேர்வுபுரி பிரகிருதி திரிகுணமாம் அவைதாம்
இவ்வகையில் சாத்துவித ராசத தாமதமாய்
இயம்புவர்கள் ஒன்றுஇரண்டு குணம்ஏற்க உடைத்தே.

42. அலகில்குணம் பிரகாசம் லகுதை வியாபிருதி
அடர்ச்சிமிகும் கௌரவம் அநியமம் இவை அடைவே
நிலவியிடும் மும்மூன்றும் உயிர்ஒன்றில் கலந்தே
நிற்கும்இவை நிறைபுலனின் பயன்எவையும் கவரும்
குலவிவரு போகங்கள் இடமாய் மாறாக்
குறைவில் ஒளியாம் அலகில் புலனிடத்தின் ஒருமை
பலவகையும் உடையதாய்ப் பரன்அருளால் புந்தி
பஞ்சாசற் பாவகமும் பண்ணுவிக்கும் தானே.

43. ஆனதனு அதனில்உறும் அநிலனையும் இயக்கி
ஆங்காரம் நீங்காத அகந்தைக்கு வித்தாய்
யான்அலது பிறர்ஒருவர் எனைஒப்பார் புவியில்
இல்லைஎனும் இயல்பினதாய் இந்திரியம் புலன்கள்
தான்நுகரும் அளவில் அதில் முந்திஉறும் இச்சை
தான்உருவாய்ச் சங்கற்ப சதாகதியும் தந்து
மானதம் ஆனதுநிற்கும் சிந்தைநினைவு ஐயம்
வந்துதரும் மனம் ஒழிய வகுப்பு ஒணாதே.

44. சொன்னமுறை செவிதுவக்கு நோக்கு நாக்குத்
துண்டம்இவை ஐந்திற்கும் தொகுவிடயம் ஆக
மன்னிய சத்தப்பரிச ரூபரச கந்தம்
மருவியிடும் இவை அடைவே வாக்குப் பாதம்
பின்னர்வரு பாணிமிகு பாயுவினோடு உபத்தம்
பேசல்உறும் ஐந்திற்கும் பிறங்குஒலிகொள் வசனம்
உன்னரிய கமனதான விசர்க்க ஆனந்தம்
உற்றதொழில் பெற்றிடுவது உண்மை ஆமே.

45. முந்திய ஐம்பூதங்கள் வான்ஆதி யாக
முயங்கியநற் செவிநாசி கண்ணாம்மெய்ம் முறையால்
இந்தவயின் நின்றுவரும் ஐம்புலனும் உயிர்தாம்
எய்தும்வகை தம்உருவில் இலங்கியிடும் புறத்தும்
வந்துஅடைய இடம்கொடுக்கும் நிரந்தரமாய் வானும்
வாயுமிகச் சலித்து எவையும் திரட்டும் தீ வெம்மை
தந்தவைசுட்டு ஒன்றுவிக்கும் நீர்குளிர்ந்து பதமே
தரும்உரத்துத் தரிக்கும்மிகு தரணி தானே.

46. இந்நிரையில் ஐந்துசுத்தம் ஏழ்சுத்தா சுத்தம்
எண்மூன்றும் அசுத்தம்எனும் இவைமுப்பத்து ஆறாம்
மன்னிய தத்துவங்கள்இடை மயங்கிநெடும் துயர்தாம்
மருவும் உருநிலைஅழிய வரும்பொழுது வரியார்
பன்னகம் அண்டசம் கனவு படர்வகையே முன்னம்
பகரவரும் கலாதிநிலை பரவிய சூக்குமம் ஆம்
தன்உருவில் அணைந்துபயன் அருந்தி அரன் அருளால்
தரையின்இடை வரும்என்று சாற்றும் நூலே.

47. தோற்றியிடும் அண்டசங்கள் சுவேதசங்கள் பாரில்
துதைந்துவரும் உற்பீசம் சராயுசங்கள் நான்கில்
ஊற்றமிகு தாபரங்கள் பத்தொன்பது என்றும்
ஊர்வ பதினைந்து அமரர் பதினொன்றோடு உலவா
மாற்றருநீர் உறைவனநற் பறவைகள் நாற்காலி
மன்னியிடும் பப்பத்து மானுடர் ஒன்பதின்மர்
ஏற்றிஒரு தொகை அதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்குநூறாயிரம் என்று எடுத்தே.

சுத்த அவத்தை

48. இனையபல பிறவிகளில் இறந்து பிறந்து அருளால்
இருவினைகள் பிரிந்து அருந்தும் இதுசகலம் அகலா
முனம்மருவும் இருபயனும் ஒருகாலத்து அருந்த
முந்துநுகர் உந்துபயன் அந்தம்உற வந்த
வினையும் எதிர்வினையும் முடிவினைஉதவு பயனால்
நேராக நேர்ஆதல் மேவும் கால்முன்
சினம்மருவு திரோதாயி கருணை ஆகி
திருந்திய சத்திநிபாதம் திகழும் அன்றே.

49. நாடிய சத்திநிபாதம் நாலு பாதம்
நண்ணும்வகை எண்ணரிய ஞான பாதம்
கூடுமவர் தமக்குஉணர்வாய் நின்ற ஞானக்
கூத்தன்ஒரு மூர்த்திகொடு குறுகி மோக
நீடிய கேவலசகலம் நிகழா வாறு
நிறுத்திமலம் அறுக்கும்அது நிலையார் சுத்தம்
கேடில்புகழ் தரும்சரியை கிரியா யோகக்
கேண்மையரேல் இவைஉணர்த்தக் கிளக்கும் நூலே.

முத்தி பேதங்களின் இயல்பு

50. அரிவையர்இன் புறும்முத்தி கந்தம் ஐந்தும்
அறும்முத்தி திரிகுணமும் அடங்கும் முத்தி
விரிவுவினை கெடும்முத்தி மலம்போம் முத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி
பரவும்உயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
பாடாண முத்திஇவை பழிசேர் முத்தி
திரிமலமும் அகலஉயிர் அருள்சேர் முத்தி
திகழ்முத்தி இதுமுத்தித் திறத்தது ஆமே.

உண்மை அதிகாரம்

51. இங்குஇவை பொது இயல்பு
என்பர்கள் இதன்மேல் ஆன்மாத்
தங்கிய அஞ்சு அவத்தை
தன்உண்மை உணர்த்தும் தன்மை
பொங்குஒளி ஞான வாய்மை
அதன்பயன் புனிதன் நாமம்
அங்குஅதில் அணைந்தோர் தன்மை
அறைகுவன் அருளி னாலே.

மூன்றாம் சூத்திரம்

ஆன்ம இலக்கணம்

52. செறிந்திடும் உடலுள் மன்னிச்
சேர்புலன் வாயில் பற்றி
அறிந்துஅதில் அழுந்தும் ஒன்றும்
அறிந்திடா அறியும் தன்மை
பிறிந்துஅடை அஞ்சு அவத்தை
பெருகிய மலத்தால் பேணி
உறும்தனி அதீதம் உண்மை
உயிர்க்குஎன உணர்த்தும் அன்றே.

53. உருஉணர்வு இலாமை யாலும்
ஓர்ஒரு புலன்கள் ஆக
மருவிநின்று அறித லாலும்
மனாதிகள் தம்மில் மன்னித்
தருபயன் நுகர்த லாலும்
உயிர்சடம் ஆத லாலும்
அருவினை உடலுள் ஆவி
அறிவினால் அறியும் அன்றே.

54. அறிவுஎனில் வாயில் வேண்டா
அன்றுஎனில் அவைதாம் என்னை
அறிவதை உதவும் என்னில்
அசேதனம் அவைதாம் எல்லாம்
அறிபவன் அறியும் தன்மை
அருளுவன் என்னில் ஆன்மா
அறிவுஇலது ஆகும் ஈசன்
அசேதனத்து அளித்தி டானே.

55. அறிவினால் அறிந்த யாவும்
அசத்துஆதல் அறிதி என்றும்
அறிவினால் அறியொணாதேல்
ஆவதொன்று இன்மை தொன்மை
அறிவுதான் ஒன்றை முந்தி
அதுஅது ஆகக் காணும்
அறிவுகாண் அசத்து மற்றுஅது
அறிவினுக்கு அறியொண்ணாதே.

56. எவ்அறிவு அசத்து அறிந்தது
எனில் உயிர் அறியாது ஈசன்
அவ்அறிவு அறியான் அல்லது
அசேதனம் அறியாது ஆவி
செவ்விய கருவி கூடித்
தெரிவுறாது அருளில் சேரா
ஒவ்இரு வகையது என்னில்
ஒளிஇருள் ஒருங்கு உறாவே.

57. சத்து இதுஎன்று அசத்துத்
தான் அறியாது அசத்தைச்
சத்து அறிந்து அகல வேண்டா
அசத்து இது சத்துஇது என்று ஓர்
சத்து இருள் ஒளி அலாக்கண்
தன்மைய தாம் அசத்தைச்
சத்துடன் நின்று நீக்கும்
தன்மையால் சதசத்து ஆமே.

58. கண்ணொளி விளக்கு அளித்துக்
காட்டிடும் என்னில் முன்னம்
கண்ணொளி ஒன்றும் இன்றாம்
விளக்கொளி கலந்து அவற்றைக்
கண்ணொளி அகல நின்றே
கண்டிடும் வேறு காணா
கண்ணொளி விளக்கின் சோதி
கலந்திடும் கருத்து ஒன்று அன்றே.

59. ஓர்இடத்து இருத்தல் மாயா
உருநிறைந் திடுதல் ஒன்றாம்
பேர்இடத்து உறைதல் தானே
பிறங்கு அறிவாகி நிற்றல்
சோர்வுடைச் சடம் நிகழ்த்தல்
எனும் இவை சொல்லார் நல்லோர்
ஓர்விடத்து உணரும் உண்மை
ஒளிதரும் உபலம் போலும்.

நான்காம் சூத்திரம்

அவத்தைத் தன்மை

60. எண்ண ஒன்று இலாது அதீதம்
எய்திய துரியத்து ஒன்று
நண்ணிடும் சுழுத்தி தன்னில்
நயந்துளது ஒன்று பின்னும்
அண்ணிடும் கனவு தன்னில்
ஆறேழாம் சாக்கி ரத்தில்
கண்உறும் அஞ்சு ஆறாய
கருவிகள் காணும் தானே.

61. இவ்வகை அவத்தை தன்னில்
எய்திடும் கரணம் எல்லாம்
மெய்வகை இடத்தில் உற்று
மேவுமா கண்டு மிக்க
பொய்வகைப் பவம் அகற்றப்
புரிந்திடில் அருளால் ஆங்கே
ஐவகை அவத்தை உய்க்கும்
அறிவினால் அறிந்து கொள்ளே.

62. நீக்கம்இல் அதீத மாசு
நிறைந்த கேவலமாம் நீர்மை
சாக்கிரம் கலாதி சேர்ந்த
சகலமாம் தன்மை யாகும்

நீக்கமில் இரண்டும் கூடாது
ஒழிய ஓர் நிலையில் நீடும்
சாக்கிர அதீதம் சுத்தத்
தகைமையது ஆகும் தானே.

ஐந்தாம் சூத்திரம்

உணர்த்தும் முறைமை

63. மருவிய பொறியில் ஒன்றும்
மாபூதம் ஐந்தில் ஒன்றும்
கருவிகள் நான்கும் நீங்காக்
கலாதிகள் ஐந்தும் கூடி
ஒருபுலன் நுகரும் இந்த
ஒழுங்கு ஒழிந்து உயிரும் ஒன்றைத்
தெரிவுறாது அவன் ஒழிந்து அத்
திரள்களும் செயல் இலாவே.

64. தனக்குஎன அறிவு இலாதான்
தான்இவை அறிந்து சாரான்
தனக்கு அறிவுஇலாத வாயில்
தான் அறியாது சார;
தனக்குஎன அறிவு இலாதான்
தத்துவ வன்ன ரூபன்
தனக்குஎன அறிவானால் இச்
சகலமும் நுகரும் தானே.

65. கண்டுஅறி புலன்கள் காணும்
கருத்தினால் ஒருத்தன் ஞானம்
கொண்டுஉளம் அறியும் என்னில்
கொள்பவன் முதலி ஆகும்
மண்டிய உணர்வு உயிர்க்கா
மன்னிநின்று அறியும் என்னில்
உண்டிட வேண்டு வானுக்கு
ஒருவன்வேறு உண்டல் ஆமே.

66. இருள்நனி இரவி தான்வந்து
இரித்தலும் இரவில் எண்ணும்
பொருள்நிலை கண்டு மாந்தர்
பொருந்திடு மாறு போல
மருள்நிலை எங்கும் நீங்க
மகிழ்ந்துஉயிர் தன்னுள் மன்னும்
அருளையும் ஒழிய ஞாலத்து
அறிந்தவாறு அறியும் அன்றே.

67. அறிந்திடும் மனாதி வாயில்
ஆனவை அவன் தனாலே
அறிந்திடும் என்றும் ஒன்றும்
அறிந்திடா அவைபோல் யாவும்
அறிந்திடும் அறியும் தன்மை
அறிந்திடா கன்மத் தொன்மை
அறிந்து அவை நுகருமாறும்
அருளுவன் அமலன் தானே.

ஆறாம் சூத்திரம்

தன் உண்மை உணர்த்தும் தன்மை

68. காட்டிடும் கரணம் ஒன்றும்
இல்லையேல் காண் ஒணாதாம்
நாட்டிய இவற்றால் ஞானம்
நணுகவும் ஒண்ணா முன்னம்
ஈட்டிய தவத்தி னாலே
இறைஅருள் உருவாய் வந்து
கூட்டிடும் இவற்றை நீக்கிக்
குரைகழல் குறுகும் ஆறே.

ஏழாம் சூத்திரம்

ஞான வாய்மை

69. பல்நிறம் கவரும் தொன்மைப்
படிகநீடு ஒளியும் பன்மை
மன்இலங்கு இயல்பும் தந்த
வளர்ஒளி போல வையம்
தன்னகம் பயிலும் நற்சிற்
சடங்களின் தன்மை தாவா
நன்னலம் பெற நிறைந்த
ஞானமே ஞானம் என்பர்.

70. மாயைமா மாயை மாயா
வரும்இரு வினையின் வாய்மை
ஆயஆர் உயிரில் மேவும்
மருள்எனில் இருளாய் நிற்கும்
மாயைமா மாயை மாயா
வரும்இரு வினையின் வாய்மை
ஆயஆர் உயிரில் மேவும்
அருள்எனில் ஒளியாய் நிற்கும்.

எட்டாம் சூத்திரம்

ஞானவாய்மையின் பயன்

71. தேசுற மருவும் ஆன்ம
தெரிசனம் ஆன்ம சுத்தி
ஆசிலா ஆன்ம லாபம்
ஆகமூன்று ஆகும் மூன்றும்
பாசம் அதுஅகல ஞானம்
பற்றல்தான் பணியை நீத்தல்
ஏசில் நேயத்து அழுந்தல்
எனும்இவற்று அடங்கும் அன்றே.

ஆன்ம தரிசனம்

72. தன்அறிவு அதனால் ஏதும்
தனக்குஅறிவு இல்லையேனும்
தன்அறி வாக எல்லாம்
தனித்தனி பயன் அருந்தும்
தன்னறிவு அறியும் தன்மை
தன்னாலே தனை அறிந்தால்
தன்னையும் தானே காணும்
தான்அது ஆகி நின்றே.

73. தத்துவம் ஆன வற்றின்
தன்மைகள் உணரும் காலை
உய்த்து உணர்ந்திட உதிப்பது
ஒளிவளர் ஞானம் ஆகும்
அத்தன்மை அறியும் ஆறும்
அகன்றிட அதுவாய் ஆன்மா
சுத்தமாம் சுத்த ஞானத்து
ஒருமுதல் தோன்றும் அன்றே.

74. உறைதரும் உணர்வும் அன்றி
அதன்முதல் உள்ளது என்றுஇங்கு
அறைவது என்என்னில் அண்ணல்
அருள்எனும் அதுவே அன்றி
நிறைஒளி முதல்அது அன்றி
நின்றிடா நிமலன் ஆகும்
இறையவன் முதல் அவன்தன்
இலங்குஅருள் சத்தி ஆமே.

75. சுத்தமாம் சத்தி ஞானச்
சுடர்ஆகும் சிவம் ஒழிந்துஅச்
சத்திதான் இன்றாம் முன்னைத்
தகவுஇலா மலங்கள் வாட்டி

அத்தனை அருளும் எங்கும்
அடைந்திடும் இருள் அகற்றி
வைத்திடும் இரவி காட்டும்
வளர்ஒளி போல் மகிழ்ந்தே.

ஒன்பதாம் சூத்திரம்

ஆன்ம சுத்தி

76. புகல்அரும் அசத்தர் தம்பால்
பொருந்திய அலகையே போல்
அகிலமும் உணரும் ஈசன்
அருள்உயிர் மேவ லாலே
சகலமும் நிகழ வேண்டும்
தலைவன்ஐந் தொழிலும் தானே
இகல்அற இயற்றல் வேண்டும்
என்றது நன்றி இன்றே.

77. இன்றுநோக்கு உரை நடக்கும்
இயல்புஇலோர்க்கு இனைய வாய்ந்து
நின்றதோர் அலகை நேர்ந்தால்
நிகழ்வதுஎன் அதுபோல் உள்ளத்து
ஒன்றிய உணர்வு தம்பால்
உள்ளது நிகழ்த்தும் ஈசன்
தன்தொழில் நடத்தும் மேனி
தனக்குஎனக் கொண்டு தானே.

78. இந்நிலை தன்னில் மன்னி
எய்திடும் கலாதி போதம்
தன்அளவு அறிந்து நிற்கும்
தகவுஇலா மலங்கள் நீத்த
அந்நிலை கரணம் ஆகா
வகைஅதில் அறிவு அடங்கி
மன்னிட வியாபி யாய
வான்பயன் தோன்றும் அன்றே.

79. அடைபவர் சிவமே ஆகும்
அதுஅன்றித் தோன்றும் என்ற
கடன்அதுஏன் என்னில் முன்னம்
கண்டிடார் தம்மைப் பின்னும்
தொடர்வுஅரும் அருளி னாலும்
தோன்றுமா காணார் ஆயின்
உடையவன் அடிசேர் ஞானம்
உணர்தல்இன்று அணைதல் இன்றே.

பத்தாம் சூத்திரம்

ஆன்ம லாபம்

80. பொற்புறு கருவி யாவும்
புணராமே அறிவிலாமல்
சொற்பெறும் அதீதம் வந்து
தோன்றாமே தோன்றி நின்ற
சிற்பரம் அதனால் உள்ளச்
செயல் அறுத்திட உதிக்கும்
தற்பரம் ஆகி நிற்றல்
சாக்கிராதீதம் தானே.

81. ஒடுங்கிடா கரணம் தாமே
ஒடுங்குமாறு உணர்ந்து ஒடுக்க
ஒடுங்கிடும் என்னில் நின்றது
ஒடுங்கிடா கரணம் எல்லாம்
ஒடுங்கிட ஒடுங்க உள்ள
உணர்வுதான் ஒழியும் வேறாய்
ஒடுங்கிடில் அன்றி மற்ற
உண்மையை உணரொணாதே.

82. பற்றிடும் கருவி யாவும்
படர்ந்து உணர்வு அளிக்கும் காலை
உற்றுஅறிந் திடுவது ஒன்றின்
உணர்வினின் உண்மை ஆகும்
மற்றது பகல் விளக்கின்
மாய்ந்திட வருவது உண்டேல்
பெற்றிடும் அதனை மாயப்
பிறப்பனை அறுக்க லாமே.

83. முந்திய ஒருமை யாலே
மொழிந்தவை கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்தல் உண்மை
தெளிந்திடல் அது தானாக
வந்தவாறு எய்தல் நிட்டை
மருவுதல் என்று நான்காம்
இந்தவாறு அடைந்தோர் முத்தி
எய்திய இயல்பி னோரே.

84. பாசமா ஞானத் தாலும்
படர்பசு ஞானத் தாலும்
ஈசனை உணர ஒண்ணாது
இறைஅருள் ஞானம் நண்ணித்

தேசுறும் அதனால் முன்னைச்
சிற்றறிவு ஒழிந்து சேர்ந்து
நேசமோடு உயர் பரத்து
நிற்பது ஞான நிட்டை.

உபாய நிட்டை

85. விளம்பிய வகையில் நிட்டை
மேவிடல் அரிதேல் முன்னம்
அளந்துஅறிவு அளித்து அவற்றின்
அளவும்மற்று அவற்றி னாலே
உளம்கொளும் தனையும் உள்ள
படியும்உற்று உணர்ந்து செவ்வே
தளர்ந்திடாது உவப்ப மற்றுஅத்
தன்மையது ஆகும் தானே.

86. பாவிக்கில் மனாதி வேண்டும்
பயன்இலை கரணம் நீத்துப்
பாவிப்பன் என்னில் என்ன
பழுதுஉள பாவகத்தால்
பாவிக்க ஒண்ணான் என்று
பாவிப்பன் என்னில் நீஎன்
பாவிக்க வேண்டா ஆண்ட
பரன்அருள் பற்றி னோர்க்கே.

87. ஒன்றுஇரண்டு ஆகி ஒன்றின்
ஒருமையாம் இருமை ஆகி
ஒன்றில்ஒன்று அழியும் ஒன்றாது
என்னில்ஒன்று ஆகா தீயில்
ஒன்றுஇரும்பு உறழின் அன்றாம்
உயிரின்ஐந் தொழிலும் வேண்டும
ஒன்றிநின்று உணரும் உண்மைக்கு
உவமை ஆணவத்தோடு ஒன்றே.

88. அழிந்திடும் பாசம் என்னில்
நித்தம்என்று' உரைத்தல் வேண்டா
அழிந்திடாது என்னில் ஞானம்
அடைவது கருதல் வேண்டா
அழிந்திடும் சத்தி நித்தம்
அழிந்திடா ஒளியின் முன்னர்
அழிந்திடும் இருளும் நாசம்
அடைந்திடா மிடைந்திடாவே.

89. எல்லைஇல் பிறவி நல்கும்
இருவினை எரிசேர் வித்தின்
ஒல்லையில் அகலும் ஏன்ற
உடல்பழ வினையது ஊட்டும்
தொல்லையில் வருதல் போலத்
தோன்றுஇரு வினையது உண்டேல்
அல்ஒளி புரையும் ஞானத்
தழலுற அழிந்து போமே.

ஐந்தெழுத்து அருள் நிலை

90. பந்தம் ஆனவை அறுத்துப்
பவுதிகம் உழலும் எல்லைச்
சந்தியாது ஒழியாது இங்குத்
தன்மைபோல் வினையும் சாரும்
அந்தம் ஆதிகள் இலாத
அஞ்சுஎழுத்து அருளி னாலே
வந்தவாறு உரைசெய் வாரை
வாதியா பேதி யாவே.

91. திருவெழுத்து ஐந்தில் ஆன்மா
திரோதம்மாசு அருள் சிவம்சூழ்
தரநடு நின்றது ஒன்றாம்
தன்மையும் தொன்மை ஆகி
வரும்மந மிகுதி யாலே
வாசியில் ஆசை இன்றிக்
கருவழிச் சுழலும் மாறும்
காதலார்க்கு ஓத லாமே.

92. ஆசுறு திரோதம் மேவாது
அகலுமா சிவ முன்னாக
ஓசைகொள் அதனில் நம்மேல்
ஒழித்துஅருள் ஓங்கும் மீள
வாசியை அருளும் மாயா
மற்றுஅது பற்றா உற்றுஅங்கு
ஈசனில் ஏகம் ஆகும்
இதுதிரு எழுத்தின் ஈடே.

பதினோராம் சூத்திரம்

அணைந்தோர் தன்மை

93. தீங்குறு மாயை சேரா
வகைவினை திரிவிதத்தால்
நீங்கிட நீங்கா மூல
நிறைஇருள் இரிய நேயத்து

ஓங்குஉணர்வு அகத்து அடக்கி
உளத்துள்இன்பு ஒடுங்க நேரே
தூங்குவர் தாங்கி ஏகத்
தொன்மையில் துகள் இலோரே.

94. குறிப்பிடம் காலம் திக்கு
ஆசனம்கொள்கை குலம் குணம்சீர்
சிறப்புறு விரதம் சீலம்
தபம்செபம் தியானம் எல்லாம்
மறுத்துஅற ஒழிதல் செய்தல்
மருவிடா மன்னு செய்தி
உறக்கு உறுபவர்போல் வாய்மை
ஒழிந்தவை ஒழிந்து போமே.

95. அகம்புறம் என்று இரண்டால்
அர்ச்சனை புரியும் இந்தச்
சகம்தனில் இரண்டும் இன்றித்
தமோமயம் ஆகி எல்லாம்
நிகழ்ந்திட மகிழ்ந்து வாழும்
நீர்மையார் போல ஞானம்
திகழ்ந்துஅகம் புறம் எனாத
செம்மையார் நன்மை யாரே.

ஞானயோகம்

96. அண்டம் மேவிட அனைத்தும்
அனைத்தையும் அண்டம் மேவிக்
கொண்டல்போல் எவையும் ஞானம்
குறைவுஇலா நிறைதலாலே
கண்டதோர் பொருளை அந்தக்
கருத்தினால் காணில். தானே
அண்ட நாயகனார் மேனி
ஆனதேல் ஐயம் இன்றே.

ஞானக் கிரியை

97. மண்முதல் கரணம் எல்லாம்
மறுஅசத்து ஆக்கி ஞானக்
கண்ணினில் ஊன்றி அந்தக்
கருத்தினால் எவையும் நோக்கி
எண்ணிஅஞ்சு எழுத்தும் மாறி
இறைநிறைவு உணர்ந்து போற்றல்
புண்ணியன் தனக்கு ஞான
பூசையாய்ப் புகலும் அன்றே.

பன்னிரண்டாம் சூத்திரம்

ஞானச் சரியை

98. தொண்டர்கள் இடத்தும் வானோர்
தொழும்திரு மேனி தானும்
அண்டரும் கண்டி லாத
அண்ணலே என வணங்கி
வெண்தர ளங்கள் சிந்த
விழிமொழி குழற மெய்யே
கண்டுகொண்டு இருப்பர் ஞானக்
கடல்அமுது அருந்தி னோரே.

நூல்கருத்து

99. நிலவு உலகாயத ஆதி
நிகழ் சிவாத்துவித அந்தத்துக்
குலவினர் அளவு அளாவாக்
கொள்கையது ஆகி வேதத்
தலைதரு பொருளாய் இன்பாய்த்
தாவில் சற்காரியத்தாய்
மலைவுஅறும் உணர்வால் பெத்த
முத்திகள் மதித்தாம் அன்றே.

நூல் உபதேச முறைமை

100. திருவருள் கொடுத்து மற்றுஇச்
சிவப்பிர காச நன்னூல்
விரிவது தெளியும் ஆற்றால்
விளம்பிய ஏது நோக்கிப்
பெருகிய உவமை நான்கின்
பெற்றியில் நிறுவிப் பின்முன்
தரும்மலைவு ஒழியக் கொள்வோன்
தன்மையில் சாற்றல் ஆமே.

சிவப்பிரகாசம் முற்றிற்று

சிவப்பிரகாசப் பொருள் அடைவு

பொருள்	செய்யுள் எண்
காப்பு	1
பாயிரம்	2–7
தீக்கை முறை	8–12
பொது அதிகாரம்	**13–50**
பதி இலக்கணம்	13–18
பசு இலக்கணம்	19
பாச இலக்கணம்	20–32
அவத்தை இலக்கணம்	33–49
முத்தி பேதங்கள்	50
உண்மை அதிகாரம்	**51–100**
ஆன்ம இலக்கணம்	51–59
அவத்தைத் தன்மை	60–62
உணர்த்தும் முறை	63–67
ஞானவாய்மையும் பயனும்	68–71
ஆன்ம தரிசனம்	72–75
ஆன்ம சுத்தி	76–79
ஆன்ம லாபம்	80–83
ஞான நிட்டை	84
உபாய நிட்டை	85–89
ஐந்தெழுத்து அருள்நிலை	90–92
அணைந்தோர் தன்மை	93–95
ஞான யோகம்	96
ஞானக் கிரியை	97
ஞானச் சரியை	98
நூலின் கருத்தும் உபதேச முறையும்	99–100

உ
திருச்சிற்றம்பலம்

8

உமாபதி சிவாசாரியார்

அருளிய

திருவருட் பயன்

கணபதி வணக்கம்

நற்குஞ்சரக் கன்று நண்ணில் கலைஞானம்
கற்கும் சரக்கு அன்று காண்.

1. பதிமுது நிலை

1. அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து.

2. தன்நிலைமை மன்உயிர்கள் சாரத் தரும்சத்தி
பின்னம்இலான் எங்கள் பிரான்.

3. பெருமைக்கும் நுண்மைக்கும் பேர்அருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்புஇன்மை யான்.

4. ஆக்கிஎவையும் அளித்து ஆசுடன் அடங்கப்
போக்கும்அவன் போகாப் புகல்.

5. அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவம் உடையான் உளன்.

6. பல் ஆர்உயிர் உணரும் பான்மைஎன மேல்ஒருவன்
இல்லாதான் எங்கள் இறை.

7. ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வான்நாடர் காணாத மன்.

8. எங்கும் எவையும் எரிஉறு நீர்போல் ஏகம்
தங்கும்அவன் தானே தனி.

9. நலம்இலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலம்இலன் பேர் சங்கரன்.

10. உன்னும்உளது ஐயம்இலது உணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து.

2. உயிரவை நிலை

11. பிறந்தநாள் மேலும் பிறக்கும்நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை.

12. திரிமலத்தார் ஒன்றுஅதனில் சென்றார்கள் அன்றி
ஒருமலத்தார் ஆயும் உளர்.

13. மூன்றுதிறத்து உள்ளாரும் மூலமலத்து உள்ளார்கள்
தோன்றலர்தொத்து உள்ளார் துணை.

14. கண்டவற்றை நாளும் கனவில் கலங்கியிடும்
திண்திறலுக்கு என்னோ செயல்.

15. பொறிஇன்றி ஒன்றும் புணராதே புந்திக்கு
அறிவுஎன்ற பேர்நன்று அற.

16. ஒளியும் இருளும் உலகும் அலர்கண்
தெளிவு இல்எனில் என்செய.

17. சத்துஅசத்தைச் சாராது அசத்துஅறியாது அங்கண்இவை
உய்த்தல் சதசத்தாம் உயிர்.

18. இருளில் இருளாகி எல்இடத்தில் எல்லாம்
பொருள்கள் இலதோ புவி.

19. ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே
யாம்மன்கண் காணாதவை.

20. அன்றுஅளவும் ஆற்றும்உயிர் அந்தோ அருள்தெரிவது
என்றுஅளவு ஒன்றுஇல்லா இடர்.

3. இருள்மல நிலை

21. துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப்பொருளும்
இன்றுஎன்பது எவ்வாறும் இல்.

22. இருள்ஆனது அன்றி இலது எவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்.

23. ஒருபொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்
இருபொருளும் காட்டாது இது.

24. அன்றுஅளவி உள்ளொளியோடு ஆவி இடைஅடங்கி
இன்றளவும் நின்றது இருள்.

25. பலரைப் புணர்ந்தும் இருள்பாவைக்கு உண்டு என்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு.

26. பன்மொழிகள் என்உணரும் பான்மை தெரியாத
தன்மை இருளார் தந்தது.

27. இருள்இன்றேல் துன்புஎன் உயிர்இயல்பேல் போக்கும்
பொருள்உண்டேல் ஒன்றாகப் போம்.

28. ஆசுஆதியேல் அணைவ காரணம்என் முத்திநிலை
பேசாது அகவும் பிணி.

29. ஒன்று மிகினும் ஒளிகவராதேல் உள்ளம்
என்றும் அகலாது இருள்.

30. விடிவாம் அளவும் விளக்குஅனைய மாயை
வடிவுஆதி கன்மத்து வந்து.

4. அருளது நிலை

31. அருளில் பெரியது அகிலத்தில் வேண்டும்
பொருளில் தலைஇலது போல்.

32. பெருக்க நுகர்வினை பேர்ஒளியாய் எங்கும்
அருக்கன்என நிற்கும் அருள்.

33. ஊன்அறியாது என்றும் உயிர்அறியாது ஒன்றும்இவை
தான்அறியாதார் அறிவார் தான்.

34. பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்து அருள்உயிர்கள்
மால்ஆழி ஆளும் மறித்து.

35. அணுகும் துணைஅறியா ஆற்றோனில் ஐந்தும்
உணர்வை உணராது உயிர்.

36. தரையை அறியாது தாமே திரிவோர்
புரையை உணரார் புவி.

37. மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர் ஞானம்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம்.

38. வெள்ளத்துள் நாவற்றி எங்கும்விடிந்து இருளாம்
கள்ளத் தலைவர் கடன்.

39. பரப்புஅமைந்து கேண்மின்இது பால்கலன்மேல் பூஞை
கரப்புஅருந்த நாடும் கடன்.

40. இற்றைவரை இயைந்தும் ஏதும் பழக்கம்இலா
வெற்றுஉயிர்க்கு வீடு மிகை.

5. அருள் உரு நிலை

41. அறியாமை உள்நின்று அளித்ததே காணும்
குறியாக நீங்காத கோ.

42. அகத்துஉறு நோய்க்கு உள்ளினரை அன்றி அதனைச்
சகத்தவரும் காண்பரோ தான்.

43. அருளா வகையால் அருள்புரிய வந்த
பொருள்ஆர் அறிவார் புவி.

44. பொய்இருண்ட சிந்தைப் பொறிஇலார் போதமாம்
மெய்இரண்டும் காணார் மிக.

45. பார்வைஎன மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வைஎனக் காணார் புவி.

46. எமக்குஎன் எவனுக்கு எவைதெரியும் அவ்வத்
தமக்குஅவனை வேண்டத் தவிர்.

47. விடம்நகுலம் மேவினும் மெய்ப்பாவகனின் மீளும்
கடனில்இருள் போவதுஇவன் கண்.

48. அகலத் தரும்அருளை ஆக்கும் வினைநீக்கும்
சகலர்க்கு வந்துஅருளும் தான்.

49. ஆர்அறிவார் எல்லாம் அகன்ற நெறிஅருளும்
பேர்அறிவான் வாராத பின்.

50. ஞானம் இவன்ஒழிய நண்ணியிடும் நற்கல்அனல்
பானு ஒழியப் படின்.

6. அறியும் நெறி

51. நீடும் இருவினையும் நேராக நேர்ஆதல்
கூடும் இறைசத்தி கொளல்.

52. ஏகன் அநேகன் இருள்கருமம் மாயை இரண்டு
ஆகஇவை ஆறுஆதி இல்.

53. செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன்என்று உணர்.

54. ஊன்உயிரால் வாழும் ஒருமைத்தே ஊனொடுஉயிர்
தான்உணர்வோடு ஒன்றாம் தரம்.

55. தன்நிறமும் பல்நிறமும் தானாம்கல் தன்மைதரும்
பொன்நிறம்போல் மன்நிறம்இப் பூ.

56. கண்தொல்லை காணும்நெறி கண்உயிர் நாப்பண்நிலை
உண்டுஇல்லை அல்லது ஒளி.

57. புன்செயலி னோடு புலன்செயல்போல் நின்செயலை
மன்செயலது ஆக மதி.

58. ஓராதே ஒன்றையும்உற்று உன்னாதே நீமுந்திப்
பாராதே பார்த்த தனைப் பார்.

59. களியே மிகுபுலனுமாய்க் கருதி ஞான
ஒளியே ஒளியாய் ஒளி.

60. கண்டபடியே கண்டு காணாமை காணாமல்
கொண்டபடியே கொண்டு இரு.

7. உயிர் விளக்கம்

61. தூநிழல் ஆர்தற்கு ஆரும் சொல்லார் தொகும் இதுபோல்
தன்அதுவாய் நிற்கும் தரம்.

62. தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடும்நாப்
பித்தத்தில் தான்தவிர்ந்த பின்.

63. காண்பான் ஒளிஇருளில் காட்டிடவும் தான்கண்ட
வீண்பாவம் எந்நாள் விழும்.

64. ஒளியும் இருளும் ஒருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்.

65. கிடைக்கத் தகுமேநற் கேண்மையார்க்கு அல்லால்
எடுத்துச் சுமப்பானை இன்று.

66. வஞ்சமுடன் ஒருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினனோ போயினனோ சொல்.

67. தனக்குநிழல் இன்றாம் ஒளிகவரும் தம்பம்
எனக் கவர நில்லாது இருள்.

68. உற்கைதரும் பொற்கை உடையவர்போல் உண்மைப்பின்
நிற்க அருளார் நிலை.

69. ஐம்புலனால் தாம்கண்டது என்றால் அதுவொழிய
ஐம்புலன்ஆர் தாம்ஆர் அதற்கு.

70. தாமே தருபவரைத் தம்வலியினால் கருதல்
ஆமே இவன்ஆர் அதற்கு.

8. இன்புறு நிலை

71. இன்புறுவார் துன்பார் இருளில் எழும்சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின்.

72. இருவர் மடந்தையருக்கு என்பயன் இன்பு உண்டாம்
ஒருவன் ஒருத்தி உறின்.

73. இன்புஅதனை எய்துவார்க்கு ஈயும் அவர்க்குஉருவம்
இன்பகனம் ஆதலினால் இல்.

74. தாடலைபோல் கூடிஅவை தான்நிகழா வேற்றுஇன்பக்
கூடலைநீ ஏகம்எனக் கொள்.

75. ஒன்றாலும் ஒன்றாது இரண்டாலும் ஓசைஎழாது
என்றாலும் ஓர்இரண்டும் இல்.

76. உற்றாரும் பெற்றாரும் ஓவாது உரைஒழியப்
பற்றாரும் அற்றார் பவம்.

77. பேய்ஒன்றும் தன்மை பிறக்கும் அளவும்இனி
நீஒன்றும் செய்யாது நில்.

78. ஒண்பொருட்கண் உற்றார்க்கு உறுபயனே அல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போல் காண்.

79. மூன்றாய தன்மைஅவர் தம்மில் மிகமுயங்கித்
தோன்றாத இன்பம்அதுஎன் சொல்.

80. இன்பில் இனிதுஎன்றல் இன்றுஉண்டேல் இன்றுஉண்டாம்
அன்பு நிலையே அது.

9. ஐந்தெழுத்து அருள் நிலை

81. அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகின்.

82. இறைசத்தி பாசம் எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத்து உள்.

83. ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞானநடம் தான்நடுவே நாடு.

84. விரியமந மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரில் பெறும்.

85. மால்ஆர் திரோதம் மலம்முதலாய் மாறுமோ
மேல்ஆகி மீளா விடின்.

86. ஆராதி ஆதாரம் அந்தோ அதுமீண்டு
பாராதுமேல் ஓதும் பற்று.

87. சிவமுதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம்இதுநீ ஓதும் படி.

88. வாசி அருளியவை வாழ்விக்கும் மற்றுஅதுவே
ஆசுஇல் உருவமும்ஆம் அங்கு.

89. ஆசில்நவா நாப்பண் அடையாது அருளினால்
வாசிஇடை நிற்கை வழக்கு.

90. எல்லா வகையும் இயம்பும் இவன்அகன்று
நில்லா வகையை நினைந்து.

10. அணைந்தோர் தன்மை

91. ஓங்குஉணர்வின் உள்அடங்கி உள்ளத்துள் இன்புஒடுங்கத்
தூங்குவர்மற்று ஏதுஉண்டு சொல்.

92. ஐந்தொழிலும் காரணர்களாம் தொழிலும் போகம்நுகர்
வெந்தொழிலும் மேவார் மிக.

93. எல்லாம் அறியும் அறிவுஉறினும் ஈங்குஇவர்ஒன்று
அல்லாது அறியார் அற.

94. புலன்அடக்கித் தம்முதல்கண் புக்குறுவார் போதார்
தலம்நடக்கும் ஆமை தக.

95. அவனைஅகன்று எங்குஇன்றாம் ஆங்குஅவனாம் எங்கும்
இவனைஒழிந்து உண்டாதல் இல்.

96. உள்ளும் புறம்பும் ஒருதன்மைக் காட்சியருக்கு
எள்ளும் திறம்ஏதும் இல்.

97. உறும்தொழிற்குத் தக்க பயன்உலகம் தத்தம்
வறும்தொழிற்கு வாய்மை பயன்.

98. ஏன்ற வினைஉடலோடு ஏகும்இடை ஏறும்வினை
தோன்றில் அருளே சுடும்.

99. மும்மை தரும்வினைகள் மூளாவாம் மூதுஅறிவார்க்கு
அம்மையும் இம்மையே ஆம்.

100. கள்ளத் தலைவர் துயர்கருதித் தம்கருணை
வெள்ளத்து அலைவர் மிக.

திருவருட்பயன் முற்றிற்று

உ

திருச்சிற்றம்பலம்

9

உமாபதி சிவாசாரியார்

அருளிய

வினா வெண்பா

1. நீடும் ஒளியும் நிறைஇருளும் ஓர்இடத்துக்
கூடல் அரிது கொடுவினையேன்—பாடுஇதன்முன்
ஒன்றவார் சோலை உயர்மருதச் சம்பந்தா!
நின்றவாறு எவ்வாறு நீ.

2. இருளில் ஒளிபுரையும் எய்தும் கலாதி
மருளின் நிலைஅருளும் மானும்—கருவிஇவை
நீங்கில் இருளாம் நிறைமருதச் சம்பந்தா!
ஈங்குஉன் அருளால் என்பெற.

3. புல்அறிவு நல்உணர்வது ஆகா பொதுஞானம்
அல்லது இலது உள்ளது எனில் அன்னியமாம்—தொல்லை இருள்
ஊனம் மலையாவாறு உயர்மருதச் சம்பந்தா!
ஞானமலை ஆவாய்! நவில்.

4. கனவு கனவு என்று காண்புஅரிதாம் காணில்
நனவில் அவை சிறிதும் நண்ணா—முனைவன்அருள்
தான்அவற்றில் ஒன்றா, தடமருதச் சம்பந்தா!
யான்அவத்தை காணுமாறு என்.

5. அறிவுஅறிந்தது எல்லாம் அசத்து ஆகும் ஆயின்
குறிஇறந்த நின் உணர்வில் கூடா—பொறிபுலன்கள்
தாமாய் அறியா, தடமருதச் சம்பந்தா!
யாம் ஆர் அறிவார் இனி.

6. சிற்றறிவு முன்சிதையில் சேர்வார் இன்றாம் சிறிது
மற்றுஅதனில் நிற்கில் அருள் மன்னாவாம்—துற்றமுகில்
மின்கொண்ட சோலை வியன்மருதச் சம்பந்தா!
என்கொண்டு காண்பேன் யான்.

7. உன்னரிய நின்உணர்வுஅது ஓங்கியக்கால் ஒண்கருவி
தன்அளவும் நண்ணரிது தான்ஆகும்—என் அறிவு
தான்அறிய வாரா தடமருதச் சம்பந்தா!
யான்அறிவது எவ்வாறு இனி.

8. அருவேல் உருஅன்று உருவேல் அரு அன்று
இருவேறும் ஒன்றிற்கு இசையா—உருஓரில்
காணில் உயர்கடந்தைச் சம்பந்தா! கண்டஉடல்
பூணும் இறைக்கு என்னாம் புகல்.

9. இருமலத்தார்க்கு இல்லை உடல்வினை என்செய்யும்
ஒருமலர்த்தார்க்கு ஆராய் உரைப்பேன்—திரிமலத்தார்
ஒன்றாக உள்ளார், உயர்மருதச் சம்பந்தா!
அன்றாகில் ஆமாறு அருள்.

10. ஒன்று இரண்டாய் நின்று ஒன்றில் ஓர்மையதாம் ஒன்றாக
நின்று இரண்டாம் என்னில் உயிர் நேராகும்—துன்றுஇருந்தார்
தாங்கியவாழ் தண்கடந்தைச் சம்பந்தா! யானாகி
ஓங்கியவாறு எவ்வாறு உரை.

11. காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துஉண்மை
காண்பார்கள் நன்முத்தி காணார்கள்—காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டும் நெறி வாராதவர்.

12. ஒன்றி நுகர்வது இவன் ஊனும் உறுதொழிலும்
என்றும் இடையில் இடம் இல்லை—ஒன்றித்
தெரியா அருள் மருதச் சம்பந்தா! சேர்ந்து
பிரியாவாறு எவ்வாறு பேசு.

13. அருளால் உணர்வார்க்கு அகலாத செம்மைப்
பொருளாகி நிற்கும் பொருந்தித்—தெருளா
வினாவெண்பா உண்மை வினாவாரேல் ஊமன்
கனாவின்பால் எய்துவிக்கும் காண்.

வினாவெண்பா முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

10

உமாபதி சிவாசாரியார்

அருளிய

போற்றிப் பஃறொடை

பூமன்னும் நான்முகத்தோன் புத்தேளிர் ஆங்குஅவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்பன் — நாமன்னும்
வேதம் வேதாந்தம் விளக்கம்செய் விந்துவுடன்
நாதம் நாதாந்தம் நடுவேதம் — போதத்தால்
ஆமளவும் தேட அளவுஇறந்த அப்பாலைச்
சேம ஒளிஎவரும் தேறும்வகை — மாமணிசூழ்
மன்றுள் நிறைந்து பிறவி வழக்குஅறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி — குன்றாத
5. பல்உயிர் வெவ்வேறு படைத்தும் அவைகாத்தும்
எல்லை இளைப்புஒழிய இட்டுவைத்தும் — தொல்லைஉறும்
அந்தம் அடிநடுஎன்று எண்ண அளவுஇறந்து
வந்த பெரிய வழிபோற்றி — முந்துஉற்ற
நெல்லுக்கு உமிதவிடு நீடுசெம்பில் காளிதமும்
தொல்லைக் கடல்தோன்றத் தோன்றுஉவரும் — எல்லாம்
ஒருபுடை ஒப்பாய்த்தான் உள்ளவாறு உண்டாய்
அருவமாய் எவ்உயிரும் ஆர்த்தே — உருஉடைய
மாமணியை உள்அடக்கும் மாநாகம் வன்னிதனைத்
தான்அடக்கும் காட்டத் தகுதியும்போல் — ஞானத்தின்
10. கண்ணை மறைத்த கடியதொழில் ஆணவத்தால்
எண்ணும் செயல்மாண்ட எவ்உயிர்க்கும் — உள்நாடிக்
கட்புலனால் காணார்தம் கைக்கொடுத்த கோலேபோல்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் — முற்பால்
தனுகரணமும் புவனமும் தந்து அவற்றால்
மனம்முதலா வந்த விகாரத்தால் — வினைஇரண்டும்
காட்டி அதனால் பிறப்புஆக்கிக் கைக்கொண்டு
மீட்டுஅறிவு காட்டும் வினைபோற்றி — நாட்டுகின்ற

எப்பிறப்பும் முற்செய் இருவினையால் நிச்சயித்துப்
பொற்புடைய தந்தைதாய் போகத்துள் — கர்ப்பமாய்ப்
புல்லில் பனிபோல் புகும்திவலைக்கு உட்படும்கால்
எல்லைப் படாஉதரத்து ஈண்டியதீப் — பல்வகையால்
அங்கே கிடந்த அநாதிஉயிர் தம்பசியால்
எங்கேனும் ஆக எடுக்கும்என — வெங்கும்பிக்
காயக் கருக்குழியில் காத்துஇருந்தும் காமியத்துக்
கே அக்கை கால்முதலாய் எவ்உறுப்பும் — ஆசுஅறவே
செய்து திருத்திப்பின்பு யோகுஇருத்தி முன்புக்க
ஐயவழியே கொண்டு அணைகின்ற —பொய்யாத
வல்லவமே போற்றிஅம் மாயக்கால் தான்மறைப்ப
நல்ல அறிவொழிந்து நன்குதீது — ஒல்லைஉறா
அக்காலம் தன்னில் பசியைஅறிவித்து அழுவித்து
உக்கு ஆவிசோரத் தாய் உள்நடுங்கி — மிக்குஓங்கும்
சிந்தை உருக முலைஉருகும் தீம்சுவைப்பால்
வந்துமடுப்பக் கண்டு வாழ்ந்துஇருப்பப் — பந்தித்த
பாசப் பெரும்கயிற்றால் பல்உயிரும் பாலிக்க
நேசத்தை வைத்த நெறிபோற்றி — ஆசுஅற்ற
பாளைப் பசும்பதத்தும் பாலனாம் அப்பதத்தும்
நாளுக்கு நாள்சகல ஞானத்து — முள்வித்துக்
கொண்டுஆள ஆளக் கருவிகொடுத்து ஒக்கநின்று
பண்டாரி ஆன படிபோற்றி — தண்டாத
புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையில்
அன்புசேர்கின்ற கட்டு ஐந்துஆக்கி — முன்புள்ள
உண்மை நிலைமை ஒருகால் அகலாது
திண்மை மலத்தால் சிறைஆக்கிக் — கண்மறைத்து
மூலஅரும் கட்டில்உயிர் மூடமாய் உள்கிடப்பக்
காலம் நியதி அதுகாட்டி — மேலோங்கும்
முந்திவியன் கட்டில்உயிர் சேர்த்துக் கலைவித்தை
அந்த அராகம் அவைமுன்பு — தந்த
தொழில்அறிவு இச்சை துணையாக மானின்
எழில்உடைய முக்குணமும் எய்தி — மருளோடு
மன்னும் இதயத்தில் சித்தத்தால் கண்டபொருள்
இன்ன பொருள்என்று இயம்பஒண்ணா — அந்நிலைபோய்க்
கண்டவியன் கட்டில் கருவிகள் ஈர்ஐந்துஒழியக்
கொண்டு நியமித்துஅற்றை நாள்கொடுப்பப் — பண்டை
இருவினையால் முன்புள்ள இன்பத்துன் பங்கள்
மருவும் வகைஅங்கே மருவி — உருவுடன்நின்று
ஓங்கு நுதலாய ஓலக்க மண்டபத்தில்
போம்கருவி எல்லாம் புகுந்துஈண்டி — நீங்காத
முன்னை மலத்துஇருளுள் மூடா வகைஅகத்துள்
துன்னும்இருள் நீக்கும் சுடரேபோல் — அந்நிலையே
சூக்கம் சுடர்உருவில் பெய்து தொழிற்குஉரியர்
ஆக்கிப் பணித்த அறம்போற்றி — வேட்கைமிகும்

உண்டிப் பொருட்டால் ஒருகால் அவியாது
மண்டிஎரியும் பெரும்தீ மாற்றுதற்குத் — திண்திறல்சேர்
வல்லார்கள் வல்ல வகையால் தொழில்புரிதல்
எல்லாம் உடனே ஒருங்குஇசைந்து — செல்காலை
முட்டாமல் செய்வினைக்கும் முற்செய்வினைக்கும் செலவு
பட்டோலை தீட்டும் படிபோற்றி — நட்டுஓங்கும்
இந்நிலைமை மானுடருக்கே அன்றி எண் இலா
மன்னுயிர்க்கும் இந்த வழக்கேயாய் — முன்னுடைய
நாள்நாள் வரையில் உடல்பிரித்து நல்வினைக்கண்
வாழ்நாளின் மாலாய் அயன்ஆகி — நீள்நாகர்
வான்நாடர் கோமுதலாய் வந்த பெரும்பதத்து
நானா விதத்தால் நலம்பெறுநாள் — தான்மாள
வெற்றிக் கடும்தூதர் வேகத்துடன் வந்து
பற்றித்தம் வெம்குருவின் பால்காட்ட — இற்றைக்கும்
இல்லையோ பாவி பிறவாமை என்றுஎடுத்து
நல்லதோர் இன்சொல் நடுவாகச் — சொல்லிஇவர்
செய்திக்குத் தக்க செயல் உறுத்துவீர் என்று
வெய்துற்று உரைக்க விடைகொண்டு — மையல்தரும்
செக்கின் இடைத்திரித்தும் தீவாயில் இட்டுஎரித்தும்
தக்க நெருப்புத் தூண் தழுவுவித்தும் — மிக்குஓங்கு
நாராசம் காய்ச்சிச் செவிமடுத்தும் நாஅரிந்தும்
ஈராஉன் ஊனைத்தின் என்றுஅடித்தும் — பேராமல்
அங்குஆழ் நரகத்து அழுத்துவித்தும் பின்னும்தம்
வெங்கோபம் மாறாத வேட்கையராய் — இங்குஒருநாள்
எண்ணிமுதல் காணாத இன்னல் கடுநரகம்
பன்நெடுநாள் செல்லும் பணிகொண்டு — முன்நாடிக்
கண்டு கடன்கழித்தல் காரியமாம் என்றுஎண்ணிக்
கொண்டுவரு நோயின் குறிப்புஅறிவார் — மண்டுஎரியில்
காய்ச்சிச் சுடஅறுக்கக் கண்உரிக்க நன்நிதியம்
ஈத்துத்தாய் தந்தைமர் இன்புறுதல் — வாய்த்தநெறி
ஓடிய தேரின்கீழ் உயிர்போன கன்றாலே
நீடுபெரும் பாவம்இன்றே நீங்கும்என — நாடித்தன்
மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்காக
நஞ்சுஅனைய சிந்தை நமன்தூதர் — வெஞ்சினத்தால்
அல்லல் உறுத்தும் அருநரகம் கண்டுநிற்க
வல்ல கருணை மறம்போற்றி — பல்உயிர்க்கும்
இன்ன வகையால் இருவினைக்கண் நின்றுஅருத்தி
முன்னைமுதல் என்ன முதல் இல்லோன் — நல்வினைக்கண்
எல்லா உலகும் எடுப்புண்டு எடுப்புண்டு
செல்காலம் பின்நரகம் சேராமே — நல்லநெறி
எய்துவதோர் காலம்தன் அன்பரைக்கண்டு இன்புறுதல்
உய்யும் நெறிசிறிதே உண்டாக்கிப் — பையவே
மட்டாய் மலராய் வருநாளில் முன்னைநாள்
மொட்டாய் உருவாம் முறைபோலக் — கிட்டியதுஓர்

நல்ல பிறப்பில் பிறப்பித்து நாடும்வினை
எல்லை இரண்டும் இடைஒப்பில் — பல்பிறவி
அத்தம்அதில் அன்றோ அளவுஎன்று பார்த்திருந்து
சத்தி பதிக்கும் தரம்போற்றி — முத்திதரு
60. நன்னெறி விஞ்ஞானகலர் நாடுமலம் ஒன்றினையும்
அந்நிலையே உள்நின்று அறுத்துஅருளிப் — பின்அன்பு
மேவா விளங்கும் பிரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மம் தீர்த்துஅருளிப் — பூவலயம்
தன்நின்று நீங்காச் சகலர்க்கு அவர்போல
முன்நின்று மும்மலம்தீர்த்து ஆட்கொள்கை — அன்னவனுக்கு
ஆதிகுணம் அதலினால் ஆடும் திருத்தொழிலும்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் — பாதியாம்
பச்சை இடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியும் மதிக்கொழுந்தும் — அச்சம்அற
65. ஆடும் அரவும் அழகார் திருநுதல்மேல்
நீடுஉருவ வன்னி நெடும்கண்ணும் — கேடு இல் லயம்
கூட்டும் தமருகமும் கோல எரிஅகலும்
பூட்டுஅரவக் கச்சும் புலிஅதளும் — வீட்டுஇன்ப
வெள்ளத்து அழுத்திவிடும் தாளினும் அடியார்
உள்ளத்தினும் பிரியா ஒண்சிலம்பும் — கள்ளவினை
வென்று பிறப்புஅறுக்கச் சாத்திய வீரக்கழலும்
ஒன்றும்உருத் தோன்றாமல் உள்அடக்கி — என்றும்
இறவாத இன்பத்து எமைஇருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து — நறவுஆரும்
70. தார்உலாவும் புயத்துச் சம்பந்த நாதன்என்று
பேர்இலா நாதன்ஒருபேர் புனைந்து — பாரோர்தம்
உண்டி உறக்கம் பயம்இன்பம் ஒத்துஒழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம்போற்றி — மிண்டாய
ஆறு சமயப் பொருளும் அறிவித்து அவற்றில்
பேறுஇன்மை எங்களுக்கே பேறுஆக்கித் — தேறாத
சித்தம் தெளியத் திருமேனி கொண்டுவரும்
அத்தகைமை தானே அமையாமல் — வித்தகமாம்
சைவ நெறியில் சமயம் முதலாக
எய்தும் அபிடேகம் எய்துவித்துச் — செய்யதிருக்
75. கண்அருளால் நோக்கிக் கடியபிறப் பால்பட்ட
புண்ணும் இருவினையும் போய்அகல — வண்ணமலர்க்
கைத்தலத்தை வைத்துஅருளிக் கல்லாய நெஞ்சுருக்கி
மெய்த்தகைமை எல்லாம் விரித்துஓதி — ஒத்துஒழுகும்
சேண்ஆர் இருள்வடிவும் செங்கதிரோன் பால்நிற்பக்
காணாது ஒழியும் கணக்கேபோல் — ஆணவத்தின்
ஆதி குறையாமல் என்பால் அணுகாமல்
நீதி நிறுத்தும் நிலைபோற்றி — மேதக்கோர்
செய்யும் சரியை கிரியா யோகத்தால்
எய்தும்சீர் முத்திபதம் எய்துவித்து — மெய்யன்பால்

80. காணத் தகுவார்கள் கண்டால் தமைப்பின்பு
நாணத் தகும்ஞான நன்னெறியை — வீணே
எனக்குத் தரவேண்டி எல்லாப் பொருட்கும்
மனக்கும் மலர்அயன்மால் வானோர் — நினைப்பினுக்கும்
தூரம்போலே அணிய சுந்தரத்தாள் என்தலைமேல்
ஆரும் படிதந்து அருள்செய்த — பேராளன்
தந்தபொருள் ஏதுஎன்னில் தான்வேறு நான்வேறாய்
வந்து புணரா வழக்குஆக்கி — முந்திஎன்றன்
உள்ளம்என்றும் நீங்காது ஒளித்திருந்து தோன்றிநிற்கும்
கள்ளம்இன்று காட்டும் கழல்போற்றி — வள்ளன்மையால்
85. தன்னைத் தெரிவித்துத் தன்தாளின் உட்கிடந்த
என்னைத் தெரிவித்த எல்லையின்கண் — மின்ஆரும்
வண்ணம் உருவம் மருவும் குணமயக்கம்
எண்ணும் கலைகாலம் எப்பொருளும் — முன்னம்எனக்கு
இல்லாமை காட்டிப்பின்பு எய்தியவா காட்டிஇனிச்
செல்லாமை காட்டும் செயல்போற்றி — எல்லாம்போய்த்
தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருளாகி
எம்மைப் புறங்கூறி இன்புற்றுச் — செம்மை
அவிகாரம் பேசும் அகம்பிரமக் காரர்
வெளியாம் இருளில் விடாதே — ஒளியாய்நீ
90. நின்ற நிலையே நிகழ்த்தி ஒருபொருள்வேறு
இன்றி அமையாமை எடுத்துஓதி — ஒன்றாகச்
சாதித்துத் தம்மைச் சிவமாக்கி இப்பிறவிப்
பேதம் தனில்இன்பப் பேதம்உறாப் — பாதகரோடு
ஏகமாய்ப் போகாமல் எவ்விடத்தும் காட்சிதந்து
போகமாம் பொன்தாளின் உள்புணர்த்தி — ஆதியுடன்
நிற்க அழியா நிலைஇதுவே என்றுஅருளி
ஒக்க வியாபகம் தன்னுள்காட்டி — மிக்குஓங்கும்
ஆனந்த மாக்கடலில் ஆரா அமுதுஅளித்துத்
தான்வந்து செய்யும் தகுதியினால் — ஊன்உயிர்தான்
95. முன்கண்ட காலத்து நீங்காத முன்னோனை
என்கொண்டு போற்றிசைப்பேன் யான்.

★

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றிஅவன் மெய்ஞ்ஞானப் புண்ணியநூல் — போற்றிஎங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட வேறாய்வந்து உள்நின்ற
சம்பந்த மாமுனிபொன் தாள்.

போற்றிப் பஃறொடை முற்றிற்று

போற்றிப் பஃறொடை—கருத்து அடைவு

குருவின் திருமேனியையே சிவபெருமானின் திருமேனியாகக் கண்டு குருவே சிவம் எனப் போற்றும் இந்நூலில் சித்தாந்த உண்மைகளை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ள போற்றிகள் பதினான்கு.

போற்றிகள்	கண்ணிகள்
1. நிருத்த நிலை	1- 4
2. பெரிய வழி	5- 6
3. அறிவு காட்டும் வினை	7–13
4. பொய்யாத வல்லபம்	14–19
5. நேசத்தை வைத்த நெறி	19–22
6. பண்டாரி ஆகும் படி	23–24
7. தொழிற்கு உரியராக்கிப் பணிக்கும் அறம்	25–35
8. பட்டோலை தீட்டும் படி	36–38
9. கருணைமறம்	39–53
10. சத்தி பதிக்கும் தரம்	54-59
11. கொண்டு மகிழும் குணம்	60–71
12. நீதி நிறுத்தும் நிலை	72–78
13. கள்ளம் காட்டும் கழல்	79–84
14. செல்லாமை காட்டும் செயல்	85–87

உ

திருச்சிற்றம்பலம்

11

உமாபதி சிவாசாரியார்

அருளிய

கொடிக்கவி

1. ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்ஒன்று மேல்இடில்ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராதுஉள் உயிர்க்கு உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்து உளதேனும் திரிமலத்தே
குளிக்கும் உயிர்அருள் கூடும் படிகொடி கட்டினனே.

2. பொருளாம் பொருள்ஏது போதுஏது கண்ஏது
இருளாம் வெளிஏது இரவுஏது — அருளாளா!
நீபுரவா வையம்எலாம் நீஅறியக் கட்டினேன்
கோபுர வாசல் கொடி.

3. வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்காது உணர்வுஅரிய தன்மையனை — நோக்கிப்
பிறித்துஅறிவு தம்மில் பிரியாமை தானே
குறிக்கும்அருள் நல்கக் கொடி.

4. அஞ்சுஎழுத்தும் எட்டுஎழுத்தும் ஆறுஎழுத்தும் நால்
எழுத்தும்
பிஞ்சுஎழுத்தும் மேலைப் பெருஎழுத்தும் — நெஞ்சு
அழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமல் காட்டக் கொடி.

★

கொடிக்கவி முற்றிற்று

கொடிக்கவி வரலாறும் கொடியேற்று விழாவும்

திருக்கோயில்களில் கொடியேற்று விழா என்னும் நிகழ்ச்சியைத் தொடக்கமாகக் கொண்டு பெருவிழாக்கள் நிகழ்த்தப் பெறும். பெருவிழாக்கள் வேறுவகையிலும் தொடங்கப் பெறும் எனினும் கொடியேற்று விழா இல்லாமல் எந்தப் பெருவிழாவும் நடைபெறாது. உமாபதி சிவாசாரியார் சிதம்பரத்துக்கு அருகில் உள்ள கொற்றவன் குடி என்னும் ஊரில் மடம் அமைத்து வாழ்ந்திருந்த காலம் அது. தில்லையில் திருவிழாத் தொடக்கத்தில் அந்தணர்கள் கொடியேற்று விழாவைச் செய்ய முயன்றபோது கொடிக் கம்பத்தில் கொடி மேலே எழாமலேயே இருந்தது. அதனால் அவர்கள் மனக்கவலை கொண்டனர். அப்பொழுது வான்வெளியில் ''உமாபதி வந்தால் கொடி ஏறும்'' எனும் திருவாக்கு எழுந்தது. உடனே அவர்கள் உமாபதி சிவாசாரியாரை அணுகி வேண்டினர். சிவாசாரியாரும் விரைவில் தில்லைக்குச் சென்று ''ஒளிக்கும் இருளுக்கும்'' எனத் தொடங்கும் பாடலைப் பாடியவுடன் கொடி தானாகவே மேல் ஏறிற்று; பின்னர் எஞ்சிய மூன்று பாடல்களையும் பாடி அருளினார். ஆகமமுறைப்படி திருக்கோயில்களில் திருவிழாத் தொடக்கத்தில் நடைபெறும் கொடியேற்றுவிழாத் தொடர்பான நிகழ்ச்சிகள் கொடிக்கவி என்னும் இந்நூலில் கூறப்பெற்றுள்ள தத்துவக் கருத்துக் களை வெளிப்படுத்திக் காட்டுவனவே.

உ

திருச்சிற்றம்பலம்

12

உமாபதி சிவாசாரியார்

அருளிய

நெஞ்சுவிடு தூது

பூமேவும் உந்திப் புயல்வண்ணன் பொற்புஅமைந்த
நாமேவு மாதுபுணர் நான்முகத்தோன் — தாம்மேவிப்
பன்றியும் அன்னமுமாய்ப் பார்இடந்தும் வான்பறந்தும்
என்றும் அறியா இயல்பினான் — அன்றியும்
இந்திரனும் வானோரும் ஏனோரும் எப்புவியும்
மந்தர வெற்பும் மறிகடலும் — மந்திரமும்
வேதமும் வேத முடிவும்விளை விந்துவுடன்
நாதமும் காணா நலத்தினான் — ஓத
5. அரியான் எளியான் அளவுஇறந்து நின்ற
பெரியான் சிறியான் பெண்பாகன் — தெரியா
அருவான் உருவான் அருவுருவும் இல்லான்
மரியான் மரிப்பர் மனத்தான் — பரிவான
மெய்யர்க்கு மெய்யன் வினைக்குவினை ஆயினான்
பொய்யர்க்குப் பொய்யாய்ப்பொய் ஆயினான் — ஐயன்
படநாகம் பூண்ட பரமன் பசுவின்
இடமாய் நிறைந்த இறைவன் — சுடர்ஒளியான்
என்றும்உளன் அன்றளவும் யானும் உளன்ஆகி
நின்றநிலையில் தரித்து நில்லாமல் — சென்றுசென்று
10. தோற்றியிடும் அண்டம் சுவேதசங்கள் மண்ணின்மேல்
சாற்றும் உற்பீசம் சராயுசங்கட்கு — ஏற்றபிறப்பு
எல்லாம் பிறந்தும் இறந்தும் இருவினையின்
பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேன் — கல்லா
உணர்வின் மிசையோடு உலகா யதனைப்
புணர்வதுஒரு புல்லறிவு பூண்டு — கணையின்
கொடிதுஎனவே சென்று குடிபழுதே செய்து
கடிய கொலைகளவு காமம் — படியின்மிசைத்

தேடி உழன்று தெரிவைத் தெரியாமல்
வாடி இடையும் மனம்தனக்கும் — நாடிஅது
15. போன வழிபோகும் புந்திக்கும் புந்தியுடன்
ஆன திறல்ஆர் அகந்தைக்கும் — மேனி
அயர அயர அழிய அழியும்
உயிரின் துயரம் உரையேன் — வயிரமே
கொண்டதொரு காமனுக்கும் கோபனுக்கும் மோகனுக்கும்
மண்டும் மதமாச் சரியனுக்கும் — திண்திறல்சேர்
இந்திரியம் பத்துக்கும் ஈர்ஐந்து மாத்திரைக்கும்
அந்தம்இலாப் பூதங்கள் ஐந்தினுக்கும் — சிந்தைகவர்
மூன்றுகுற்றம் மூன்றுகுணம் மூன்றுமலம் மூன்றுஅவத்தை
ஏன்றுநின்று செய்யும் இருவினைக்கும் — தோன்றாத
20. வாயுஒரு பத்துக்கும் மாறாத வல்வினையே
ஆய கிளைக்கும் அருநிதிக்கும் — நேயமாம்
இச்சை கிரியை இவைதரித்துஅங்கு எண்இலா
அச்சம் கொடுமை அவைபூண்டு — கச்சுஅரவன்
சீரில்நிலை நில்லாமல் திண்டாடும் பல்கருவி
வாரி அகப்பட்டு மயங்கினேன் — தேரும்கால்
உன்னை ஒழிய உறவுஇல்லை என்னும்அது
தன்னை அறிவைத் தனிஅறிவை — முன்னம்
'தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர்' என்று — நிலைத்தமிழின்
25. தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல் — ஐவர்க்கும்
ஆவதுவே செய்துஅங்கு அவர்வழியைத் தப்பாமல்
பாவம்எனும் பௌவப் பரப்புஅழுந்திப் — பூவையர்தம்
கண்வலையில் பட்டுக் கலவிக் கலைபயின்றுஅங்கு
உண்மை அறிவுஉணர்ச்சி ஓராமல் — திண்மையினால்
நாவில் கொடுமை பலபிதற்றி நாள்தோறும்
சாவில் பிறப்பில் தலைப்பட்டுஇங்கு — ஆவிநிலை
நிற்கும்வகை பாராய் நிலையான நெஞ்சமே
பொறப்பினுடன் யானே புகலக்கேள் — வெற்பின்மிசை
30. வந்துஇருக்க வல்லான் மதியாதார் வல்அரணம்
செந்தழலில் மூழ்கச் சிரித்தபிரான் — அந்தம்இலான்
வேத முடிவில் விளைவில் விளைவில்ஒளி
ஆதி அமலன் நிமலன்அருள் — போத
அறிவில் அறிவை அறியும் அவர்கள்
குறியுள் புகுதும் குணவன் — நெறிகொள்
வெளியில் வெளியில் வெளியன் வெளியில்
ஒளியில் ஒளியில் ஒளியன் — ஒளியில்
அளியில் அளியில் அளியன் அளியில்
அளவில் அளவில் அளவன் — அளவுஇறந்து
35. நின்றான் அனைத்தும் நிறைந்தான் நினைப்பவர்பால்
சென்றான் தெரியத் தெரியாதன் — குன்றா

விளக்காய் நிறைந்த விரிசுடரான் விண்மேல்
துளக்காமல் நின்றபெரும் சோதி — உளக்கண்ணுக்கு
அல்லாது தோன்றா அமலன் அகிலம்எலாம்
நில்லாமல் நின்ற நிலையினான் — சொல்ஆரும்
ஈசன் பெருமை இருவினையேன் இன்றுஉனக்குப்
பேசும் தகைமைஎலாம் பேணிக்கேள் — பாசம்
பலவும் கடந்து பரிந்துஅருள்சேர் பண்பால்
குலவி விளங்குகுணக் குன்றோன் — இலகவே
40. செய்ய தருமச் செழும்கிரியின் மீதுஇழிந்து
வையம் பரவ மகிழ்ந்து எழுந்துஅங்கு — ஐயம்
களவுபயம் காமம் கொலைகோபம் காதி
அளவில்வினை எல்லாம் அழித்துஇங்கு — உளம்மகிழத்
தொம்எனவே எங்கும் முழங்கிச் சுருதிபயில்
செம்மைதரும் ஆகமங்கள் சேர்ந்துஓடி — மும்மலத்தின்
காடுஅடங்க வேர்பறித்துக் கல்விக் கரைகடந்துஅங்கு
ஓடுபல பூதத்து உணர்வுஅழித்து — நீடுபுகழ்
மெய்வாய்கண் மூக்குச் செவிஎன்னப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாஅகற்றி — நையும்இயல்
45. வாக்குப் பாதம்பாணி பாயுரு(உ)பத்தம் பலவும்
நீக்கிச் செறிந்து நிறைந்துஓடிப் — போக்குஅரிய
பந்தம்எனும் சோலை பறித்துப் பரந்துஅலைக்கும்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் — சிந்திவிழ
மோதி அலைக்கும் அருள்நீர்மை முக்குணமும்
காதி உரோமம்எலாம் கைகலந்து — சீதப்
புளகம் அரும்பப் புலன்மயக்கம் போக்கி
விளைவில் புலன்முட்ட மேவிக் — களபதன
மாதர் மயக்கம் அறுத்துவளர் மண்டலத்தின்
சோதிஒரு மூன்றினையும் சோதித்து — நீதியினால்
50. ஆதாரம் ஆறினும்சென்று ஆறிஅடல் வாயுக்கள்
மீதான பத்தும் மிகப்பரந்து — காதிப்
பிருதிவி அப்புத்தேயு வாயு ஆகாய
உறுதி நிலம்ஐந்தும் ஓடி — மறுஇலா
நான்முகன்மால் ஈசன் மகேசன் நலம்சிறந்த
தான்முகம் ஐந்தாம் சதாசிவமும் — ஆனதுஒரு
விந்துநாதம் கடந்து சுத்த வெறுவெளியில்
அந்தம்இலாப் பாழ்அடங்கத் தேக்கியபின் — முந்திவரும்
அவ்அறிவுக்கு அப்பாலும் சென்றுஅகண்டம் உள்ளடக்கிச்
செவ்அறிவே ஆகித் திகைப்பு ஒழிந்துஅங்கு — எவ்அறிவும்
55. தானாய வீடுஅளித்துத் தன்னில் பிரிவுஇல்லா
ஊனாகி எவ்வுயிர்க்கும் உள்புகுந்து — மேனியில்ஆர்
அஞ்சுஅவத்தையும் கடந்து ஆயபெரும் பேர்ஒளிக்கே
தஞ்சம்எனச் சென்று தலைப்பட்டு — வஞ்சம்அறத்
தான்அந்தம் இல்லாத தண்அளியால் ஓங்கிவரும்
ஆனந்தம் என்பதோர் ஆறுஉடையான் — ஆனந்தம்

பண்ணும் பயன்சுருதி ஆகமங்கள் பார்த்துஉணர்ந்து
நண்ண அரியதொரு நாடுஉடையான் — எண்ணெண்
கலையால் உணர்ந்து கருத்துஅழிந்து காம
நிலையானது எல்லாமும் நீத்துஅங்கு — அலைவுஅறவே
60. தேட்டற்ற சிந்தை சிவஞான மோனத்தால்
ஒட்டுஅற்று வீற்றுஇருக்கும் **ஊர்உடையான்** — நாட்டத்தால்
தெள்நீர் அருவிவிழச் சிந்தைமயக்கம் தெளிந்து
உள்நீர்மை எய்தி உரோமம் எலாம் — நண்ணும்
புளகம் புனைமெய்யர் பொய்யில் கூடாமல்
உளகம்பம் கொண்டு உள்உருகி — அளவுஇலா
மாலாய் இருக்கும் அவர்மனத்தை வாங்கஅருள்
மேலாய் விளங்கு அலங்கல் **மெய்யினான்** — தோலாத
வானம் புவனம் மலைகடல்ஏழ் பாதாளம்
ஊன்ஐந்து பூதத்து உயிர்உணர்ச்சி — ஞானமாய்
65. எல்லாமாய் அல்லவாய் எண்ணுவார் எண்ணத்துள்
நில்லாமல் நிற்கும்நீள் **வாசியான்** — சொல்ஆரும்
பாதாளம் ஊடுஉருவிப் பார்ஏழும் விண்ஏழும்
ஆதாரம் ஆகி அகண்டம் நிறைந்து — ஓத
அரிதாய் எளிதாய் அருமறைஆறு அங்கத்து
உருவாய் உயிராய் உணர்வாய்ப் — பெரிதாய
வெய்யதுயர்ப் பாசம்அற வீசியே வெம்பிறவித்
துய்ய கடலைத் துகள்எழுப்பி — ஐயம்உறும்
காமக் குரோதலோப மோகமதம்காய்ந்து அடர்த்துச்
சாம் அத் தொழிலின் தலைமிதித்து — நாமத்தால்
70. கத்தும் சமயக் கணக்கின்விறல் கட்டுஅறுத்துத்
தத்தம் பயம்கொலைகள் ஆங்குஅழித்தே — தத்திவரும்
பாசக் குழாத்தைப் படஅடித்துப் பாவையர்தம்
ஆசைக் கருத்தை அறவீசி — நேசத்தால்
ஆனவேகம் கொண்டு அருள் மும்மதத்தினால்
ஊனையார் தத்துவங்கள் உள்புகுந்து — தேனைப்
பருகிக் களித்துஉயர்ந்து பன்மறைநாற் கோட்டால்
மருவித் திகழ்ஞான **ஆனையான்** — இருமுச்
சமயம் கடந்து தனக்குஒப்பு இலாது
சுமைதுன்பம் நீக்கும் **துவசன்** — கமைஒன்றித்
75. தம்மை மறந்து தழல்ஒளியுள்ளே இருத்தி
இம்மை மறுமை இரண்டுஅகற்றிச் — செம்மையே
வாயுவை ஓடா வகைநிறுத்தி வானத்து
வாயுவையும் ஆங்கே உறஅமைத்துத் — தேயுவால்
என்றும் ஒருதகைமை யாய்இருக்கும் இன்பர்உளே
நின்று முழங்கும் **நெடுமுரசோன்** — அன்றியும்
மாலும் அயனும் வகுத்துஅளித்த வையம்எலாம்
சாலும்அதற்கு அப்பாலும் எப்பாலும் — மேலை
உலகும் உலகால் உணரஒண்ணா ஊரும்
இலகிநடக்கும் எழில் **ஆணையான்** — அலகுஇறந்த

80. காட்சியான் காட்சிக்கும் காணாக் கலைஞான
ஆட்சியான் ஆட்சிக்கும் ஆயினான் — சூட்சியான்
பாரும் திசையும் படர்ஒளியாலே நிறைந்தான்
தூரும் தலையும்இலாத் தோன்றலான் — வேராகி
வித்தாகி வித்தின் விளைவாகி மேவுதனுச்
சத்தாதி பூதங்கள் தானாகிச் — சுத்த
வெறுவெளியாய்ப் பாழாய்ப் வெறும்பாழுக்கு அப்பால்
உறுபொருளாய் நின்ற ஒருவன் — பொறிஇலியேன்
வெம்பும் பிறவிஅலை வீழாமல் வீடுஅளித்த
85. சம்பந்த மாமுனிஎன் தம்பிரான் — அம்புவியோர்
போற்றும் திருவடிஎன் புன்தலைமேலே பொறித்தோன்
ஏற்றின் புறத்துஅமைந்த எம்கோமான் — சாற்றுவார்
சாற்றும் பொருளான் தனிமுதல்வன் தான்அல்லான்
வேற்றுஇன்பம் இல்லா விளங்குஒளியான் — போற்றும்
குருவேடம் ஆகிக் குணம்குறிஒன்று இல்லாப்
பெருவேடமாய் நிறைந்த பெம்மான் — கருவேடம்
கட்டும்உருக் கட்டுஅறுத்தான் கற்றவர்வாழ் தில்லையான்
எட்டும்அவர்க்கு எட்டா இயல்பினான் — மட்டுஅவிழ்தார்
வானோன் பவனி வரக்கண்டு வல்வினையேன்
ஏனொரும் ஏத்துதல்கண்டு ஏத்தினேன் — தான்என்னைப்
90. பார்த்தான் பழையவினைப் பஞ்சமலக் கொத்தைஎல்லாம்
நீத்தான் நினைவுவேறு ஆக்கினான் — ஏத்துஅரிய
தொண்ணூற்று அறுவர்பயில் தொக்கின் துவக்குஅறுத்தான்
கண்ஊறு தேன்அமுதம் காட்டினான் — வெண்ணீறும்
வேடமும் பூசையுமே மெய்என்றான் பொய்என்றான்
மாடையும் வாழ்க்கை மனையுமே — நாடுஅரிய
அஞ்செழுத்தின் உள்ளீடு அறிவித்தான் அஞ்செழுத்தை
நெஞ்சுஅழுத்தி நேய மயல்ஆக்கி — அஞ்செழுத்தை
உச்சரிக்கும் கேண்மை உணர்த்திஅதில் உச்சரிப்பு
வைச்சிருக்கும் அந்த வழிகாட்டி — அச்சம்அறச்
95. சென்று விளக்கை எழத்தூண்டிச் செஞ்சுடரில்
ஒன்றி ஒருவிளக்கின் உள்ஒளியாய் — நின்ற
பெருவிளக்கின் பேரொளியாய் உள்ளே பிரசம்
மருவும் மலர்போல் மதித்துஅங்கு — அருவின்உருக்
கொள்ளா அருளைக் கொளுத்திக் குணம்குறிஒன்று
இல்லா இடத்தே இளைப்பாற்றி — விள்ளாத
உள்ளம் முதலாக உள்ளதெல்லாம் வாங்கஅருள்
வெள்ள மயல்அளித்து மேவினான் — கள்ளம்
மறப்பித்தான் மெய்ஞ்ஞானம் ஆக்கிமனம் எல்லாம்
இறப்பித்தான் என்பிறவி ஈர்த்தான் — விறல்சொல்லுக்கு
100. எட்டானை யார்க்கும் எழுதா இயல் குணங்கள்
எட்டானை ஆற்றா எழுத்தினான் — மட்டுஆறும்
பாடலார் ஆடலார் பண்பலார் நண்பலார்
ஆடலார் ஆடல் அகன்பதியாம் — கூடலார்

காணக் கிடையாதான் காண்பார்க்குக் காட்சியான்
பாணர்க்கு இலகு பலகையிட்டான் — சேணில்
சிறந்த உருவான் திருமாலுக்கு எட்டான்
நிறைந்த திருவுருவாய் நிற்போன் — கறங்குடனே
சூறைசுழல் வண்டு சுழல்கொள்ளி வட்டம்என
மாறில் கருணையினால் மாற்றினான் — நீறு அணிந்த
105. மெய்யன் அமலன் நிமலன்அருள் வீடுஅளிக்கும்
ஐயன்அறிவுக்கு அறிவு ஆயினான் — பொய்யர்பால்
பொய்ம்மையாய் நின்றான் புரிந்தவர்தம் நெஞ்சத்துள்
மெய்ம்மையாய் நினறு விளங்கினான் — கைம்மழுவன்
அத்தன்பால் நீசென்று அடையும் இடத்தைஎல்லாம்
சித்தம்சேர் நெஞ்சமே செப்பக்கேள் — நித்தலுமே
பூசிமுடித்து உண்டுஉடுத்துப் பூங்குழலார் தம்கலவி
ஆசைதனில் பட்டுஇன்ப ஆர்கலிக்குள் — நேசம்உற
நின்று திளைக்கும் இதுமுத்தி அல்லதுவேறு
ஒன்று திளைக்கும் அதுமுத்தி — அன்றுஎன்று
110. இலகா இருள்அலகை போல்இகலே பேசும்
உலகா யதன்பால் உறாதே — பலகாலும்
தாம்பிரமம் கண்டவர்போல் தம்மைக்கண்டு ஆங்குஅதுவே
நான்பிரமம் என்பவர்பால் நண்ணாதே — ஊன்தனக்குக்
கொன்றிடுவது எல்லாம் கொலைஅல்ல என்றுகுறித்து
என்றும்அறமே தெய்வம் என்றுஎன்று — வென்றிப்
பொறையே எனும்புத்தன் பொல்லாத புன்சொல்
மிறையே விரும்பி விழாதே — நிறைமேவி
வாழ்பவர்போல் மன்உடம்பில் மன்னும்உரோமம் பறித்துத்
தாழ்வு நினையாது துகில் தான்அகற்றி — ஆழ்விக்கும்
115. அஞ்சும் அகற்றும் அதுமுத்தி என்றுஉரைக்கும்
வஞ்சமணன் பாழி மருவாதே — செஞ்சொல்புனை
ஆதிமறை ஓதிஅதன் பயன்ஒன்றும் அறியா
வேதியர்சொல் மெய்என்று மேவாதே — ஆதியின்மேல்
உற்றதிரு நீறும் சிவாலயமும் உள்ளத்துச்
செற்ற புலையர்பால் செல்லாதே — நற்றவம்சேர்
வேடமுடன் பூசைஅருள் மெய்ஞ்ஞானம் இல்லாத
மூடருடன் கூடி முயங்காதே — நீட
அழித்துப் பிறப்பது அறியாது அரனைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே — விழித்துஅருளைத்
120. தந்துஎம்மை ஆண்டுஅருளும் சம்பந்த மாமுனிவன்
அந்தம் கடந்து அப்பாலாய் நின்றோன் — எந்தைபிரான்
வீற்றிருக்கும் ஓலக்கம் எய்திஅடி வீழ்ந்துஇறைஞ்சிப்
போற்றி சயசய போற்றிஎன — ஆர்த்தகரி
அன்றுஉரித்தாய் நின்பவனி ஆதரித்தார் எல்லாரும்
வென்றிமதன் அம்புபட வீழ்வரோ — நின்றிடத்து
நில்லாத செல்வம் நிலைஎன்று நீங்கிப்
பொல்லா நரகம் புகுவரோ — பல்லோரும்

கத்தும் சமயக் கணக்கில் படுவரோ
சித்தம் பலகால் திகைப்பரோ — முத்தம்
125. பொருத நகைமடவார் புன்கலவி இன்பம்
மருவி மயங்கி வருவரோ — இருபொழுதும்
நாள் இருபத்துஏழும் நவக்கிரகமும் நலியும்
கோள் இதுஎன்று எண்ணிக் குறிப்பரோ — வேளை
எரித்த விழியாய் நின்இன்பக் கடற்கே
தரித்து மதிமறந்த தையல் — வருத்தம்எலாம்
தீராய் எனஉரைத்துச் செங்கமலப் பூந்திருத்தாள்
தாராய் எனப்பலகால் தாழ்ந்துஇறைஞ்சி — ஏர்ஆரும்
பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்துபுரி நெஞ்சமே
ஈங்குஒன்ற வாராய் இனி.

★

வெம்பும் பிறவிஅலை வீழாமல் வீடுஅளித்த
சம்பந்த மாமுனிவன் தார்வாங்கி — அம்புஉந்தும்
வஞ்சமேவும் விழியார் வல்வினை எல்லாம்அகல
நெஞ்சமே வாராய் நினைந்து.

நெஞ்சுவிடு தூது முற்றிற்று

நெஞ்சுவிடு தூது - கருத்து அடைவு

பொருள்	கண்ணிகள்
1. இறைவன் இயல்பு	1 - 8
2. உயிர் இயல்பு	9 - 16
3. பாச பந்தம்	17 - 22
4. நெஞ்சுக்கு அறிவுறுத்தல்	23 - 29
5. பரம்பொருளின் முதன்மை; தசாங்கம் எனப்படும் பத்துவகை உறுப்புகள் விளக்கம்	30 - 79
6. சிவனே குருமேனி தாங்கல்	80 - 89
7. குருவின் அருள்மாட்சிமைச் செயல்கள்	90 - 99
8. சிவபெருமானின் தனிமுதன்மை	100-106
9. நெஞ்சுக்கு அறிவுரை; நெஞ்சு செல்லக்கூடா இடங்கள்; திரு உலாக்காட்சி கண்டார் பெருமை	107-129

உ

திருச்சிற்றம்பலம்

13

உமாபதி சிவாசாரியார்

அருளிய

உண்மைநெறி விளக்கம்

1. மண்முதல் சிவம் அது ஈறாம் வடிவுகாண் பதுவே ரூபம்
மண்முதல் சிவம்அது ஈறாம் மலம்சடம் என்றல் காட்சி
மண்முதல் சிவம்அது ஈறாம் வகைதனில் தான்நிலாது
கண்நுதல் அருளால் நீங்கல் சுத்தியாய்க் கருதலாமே.

2. பாய்இருள் நீங்கி ஞானம் தனைக் காண்டல் ஆன்ம ரூபம்
நீயும்நின் செயல்ஒன்று இன்றி நிற்றலே தெரிசனம் தான்
போய்இவன் தன்மைகெட்டுப் பொருளில்போய் அங்குத் தோன்றாது
ஆய்விடில் ஆன்ம சுத்தி அருள் நூலில் விதித்த வாறே.

3. எவ்வடிவுகளும் தானாம் எழில்பரை வடிவுஅது ஆகிக்
கவ்விய மலத்து ஆன்மாவைக் கருதியே ஒடுக்கி ஆக்கிப்
பவ்வம்விண்டு அகலப் பண்ணிப் பாரிப்பான் ஒருவன் என்றே
செவ்வையே உயிருள் காண்டல் சிவரூபம் ஆகும் அன்றே.

4. பரைஉயிரில் யான்எனது ஒன்று அறநின்றது அடியாம்
பார்ப்பிடம் எங்கும் சிவமாய்த் தோன்றல் அது முகமாம்
உரைஇறந்த சுகம்அதுவே முடியாகும் என்றுஇவ்
உண்மையினை மிகத்தெளிந்து பொருள்வேறு ஒன்று இன்றித்
தரைமுதலில் போகாது நிலையினில் நில்லாது
தற்பரையில் நின்று அழுந்தாது அற்புதத்தின் ஆகும்
தெரிவுஅரிய பரமானந்தத்தில் சேர்தல்
சிவன்உண்மைத் தெரிசனமாய்ச் செப்பும் நூலே.

5. எப்பொருள் வந்துஉற்றிடினும் அப்பொருளைப் பார்த்து அங்கு
எய்தும்உயிர்தன்னைக் கண்டுஇங்கு அவ்வுயிர்க்கு மேலாம்
ஒப்பில்அருள் கண்டுசிவத்து உண்மை கண்டு இங்கு
உற்றதுஎல்லாம் அதனாலே பற்றி நோக்கித்
தப்பினைச் செய்வதும் அதுவே நினைப்பும் அதுதானே
தரும்உணர்வும் பொசிப்பும் அதுதானே ஆகும்
எப்பொருளும் அசைவு இல்லைஎன அந்தப் பொருளோடு
இசைவதுவே சிவயோகம் எனும் இறைவன் மொழியே.

6. பாதகங்கள் செய்திடினும் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினும் நெறியல்லா நெறிபயிற்றி வரினும்
சாதிநெறி தப்பிடினும் தவறுகள்வந் திடினும்
தனக்குஎன ஓர்செயல்அற்றுத் தான்அதுவாய் நிற்கில்
நாதன்அவன் உடல்உயிராய் உண்டுஉறங்கி நடந்து
நானா போகங்களையும் தான்ஆகச் செய்து
பேதம்அற நின்றுஇவனைத் தானாக்கி விடுவன்
பெருகுசிவ போகம்எனப் பேசும்நெறி இதுவே.

★

உண்மைநெறி விளக்கம் முற்றிற்று.

உ
திருச்சிற்றம்பலம்

14

உமாபதி சிவாசாரியார்
அருளிய

சங்கற்ப நிராகரணம்

விநாயகர் வணக்கம்

1. திருந்திய அருந்தவம் பொருந்துபல் முனிவர்
கமையாக் காதல் அமையாது பழிச்சும்
நிகரில் செக்கர்ப் புகர்முகத்து எழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெரும் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடும் தடக்கை
வாட்டுஅரும் மும்மை நாட்டம் நால்வாய்ப்
பாசம் அங்குசம் தேசுறும் எயிறுஒண்
கனியிவை தாங்கும் புனித நாற்கரத்து
அங்கதம் கடகம் பொங்குஇழை ஆரம்
நிறைமணிச் சுடிகைக் கறைஅணல் கட்செவி
கொண்ட திண்பெரும் பண்டிக் குறும்தாள்
களிறுதன் இருகழல் கருதா
வெளிறுஉறு துயரம் வீட்டினம் பெரிதே.

பாயிரம்

2. பெரும்கடல் உதவும் கரும்கடு வாங்கிக்
கந்தரத்து அமைத்த அந்தம்இல் கடவுள்
பாலரை உணர்த்தும் மேலவர் போலக்
கேட்போர் அளவைக் கோட்படு பொருளால்
அருளிய கலைகள் அலகிலவால் அவை
பலபல சமயப் பான்மைத்து அன்றே
அஃதால் அந்நூல் தன்மை உன்னிய
மாந்தர் இதுவே பொருள்என்று அதன்நிலை

அறைதலின் வேற்றுஓர் பனுவல் ஏற்றோர்க்கு
இசையா மாறுபாடு கூறுவர் அதனால்
புறச்சம யங்கள் சிறப்பு இலஆகி
அருளில் மாந்தரை வெருள்உற மயக்கி
அலகைத் தேரின் நிலையில் தீரும்
ஈங்குஇவை நிற்க நீங்காச் சமயம்
மூவிரு தகுதி மேவிய தாமும்
ஒன்றோடுஒன்று சென்றுஉறும் நிலையில்
ஆறு மாறா வீறுடைத்து இவற்றுள்
எவ்வம் இல்லாச் சைவநற் சமயத்து
அலகில் ஆகமம் நிலவுதல் உளஅவை
கனகம் இரணியம் காஞ்சனம் ஈழம்
தனம்நிதி ஆடகம் தமனியம் என்றுஇப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதிபசு பாச விதிமுறை கிளக்கும்
வாய்ந்த நூல்கள் ஆய்ந்தனர் ஆகி
ஆசான் ஆகி வீசிய சமத்துடன்
ஏழ்அஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம்
வாழும்நல் சகனம் மருவா நிற்பப்
பொற்பொது மலிந்த அற்புதன் ஆனி
ஆறாம் விழவில் பொன்தேர் ஆலயத்து
ஏறா எண்மர் நிரையில் இருப்ப
மயங்கு வாத மாயா வாதி
முயங்கிட ஒருதலை முதுவெதிர் மணிசேர்
பெண்ணை சூழ்ந்த வெண்ணெய்அம் பதிதிகழ்
மெய்கண் டவன் அருள் கைகண் டவர்களில்
ஒருவர் ஒருதலை மருவி இருப்ப
வஞ்சப் பிறவிக்கு அஞ்சிவந்து ஒருவன்
ஏதுஇறை அருள்என இதுஎனும் மாயா
வாதியை அயலினர் மறுதலைத்து அருள்தர
மற்றவர் அயலினர் அவர்உரை மறுத்துச்
சொற்றர அயலரில் அவரும் தொலைவுற்று
இன்னே எழுவரும் முன்னே கழியுழி
ஆங்குஅயல் இருந்த அருளினர் அழகுஇது
நீங்கள் சங்கற்பம் நிராகரித் தமைஎன
மற்றவர் உரைத்த சொற்றரு பொருள்கொடு
வாதம் செற்பை விதண்டையும் ஏதுவும்
ஓது நால்வகை உவமையும் திகழ்தர
அருள்சேர் மாந்தர் வெருள் சேராமல்
தர்க்கமும் விடையமும் கற்க
நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே.

நூல்

மாயாவாதி சங்கற்பம்

3. நவிற்றிய நிரையில் அவித்தையினோன் உரை
நித்தன் அறிவன் சுத்தன் அகண்டிதன்
நிருவிகற்பன் நிர்த்தத்துவன் நிரஞ்சனன்
சொல்வகை எவையும் தொடராத் தூய்மணி
வரம்புஇல் வேதச் சிரம்தரு பரம்பொருள்
சத்தாய் எவையும் தானாய் அவித்தை
தொத்தாது உயர்ந்த தொல்சுடர் மூவா
இன்ன தன்மையன் ஏகன் அநேகன்
கன்னல் பெரும்சுவை தன்னில் பிறவாப்
பெற்றியின் இருந்து பொற்பணி இயல்பினில்
வான்வளி அனல்நீர் மண்மருந்து அன்ன
மான தாது ஆறுஐங் கோசத்
தொகுதி யாக்கைப் பகுதியது ஒருபுடை
சுத்தி வெள்ளி ஒத்தென மித்தையில்
தான்எனல் ஆகும் தன்மைத்து உலூதையில்
சில்நூல் தகையின் வேற்றுமை மரீஇயது
என்னப் பன்மையது எனில்இலை பழம்பூத்
தோல்நார் வயிரம் தருத்தரும் தொன்மையில்
வான்நாரம் திரை நுரைதரு வாய்மையில்
கூடும் அசித்தைச் சித்து உதவாது எனில்
நெல்பதர் பலாலத்தில் பரம் தரும்இது
தன்இயல்பு என்றும் விளையாட்டு என்றும்
முன்உள மறைகள் மொழிதலின் ஒருநூல்
பன்மணி நிலையும் பசுப்பால் எனவும்
பலஅகல் நீரில் அலர்கதிர் எனவும்
கூவல்ஆழி குளம்சிறு குழிகால்
வாவி யாவையும் வருபுனல் எனவும்
அவ்அவற்று அடங்கி ஆடியுள் நிழல்எனத்
தோன்றி யாக்கைநல் காந்தத்து இரும்பும்
கனவில் தீங்கும் கங்குலில் கயிறும்
புனலில் தோன்றும் பேய்த்தேர்ச் செய்தியும்
அன்னதும் பின்னர் நன்னிறப் பளிங்குஎனப்
பதினாற் கரணத்து ஒருமூன்று அவத்தை
நாளும் நாளும் நயந்துஉறும் இருபயன்
தன்னில் சாராத் தொன்மைத் தன்மை
தற்பண நிழல்கண் குற்றிபாய்ந்து அற்றே
இவ்வியல் பந்தப் பவ்வம் அதுஅகல
விண்முதல் தந்த கொண்மூப் படலத்து
இருள்அற உதித்த கால்தக விவேகம்
தன்னில் தோன்றிச் சாதகம் அனைத்தையும்
மன்அகப் பிரிப்பும் மடிஇழை வாங்கலும்

போல ஞாலம் பொய்அறக் கழீஇத்
தானே தானாய்த் தன்னில் தன்னைத்
தானே கண்டு தன்நலம் உற்று
வசையில் தத்துவ மசிபதத் தெளிவால்
அகமே பிரமம் ஆயினன் என அறிந்து
அசலன்ஆகி நற்சலசல மதியெனக்
கண்டிடும் உடலம் விண்டுஅகல் கடத்து
மங்குல்அதுஉடைதர எங்குமாம் தகைத்தே
இவ்வகை உணர்ந்து செய்தொழில் அறாத
மடவோர் தாமும் கடனா இயற்றும்
கன்ம காண்டத் தொன்மைப் புரிவால்
தோற்றிய வித்தை மேற்கடை அரணியில்
எழுந்துஎரி அவற்றை விழுங்கியது என்னத்
தன்ஒழிந்து உள்ள தானாய் ஒழியும்
அந்நிலை அன்றி அழிவறு முத்தி
ஏயாது என்றுதன் இயல்பை
மாயா வாதி வகுத்து உரைத்தனனே.

மாயாவாதி சங்கற்ப நிராகரணம்

4. உரைதரு பிரமம் ஒன்று எனும் உரைக்கண்
வருபிரமாணம் மறைஎனில் அருமறை
ஒன்றுஎன்றது அன்றி இருபொருள் உரைத்தல்
நன்றுஅன்று அபேதம் நாடிய பொருளேல்
பேதமும் அபேதமும் ஓத வேண்டா
பேதம்எனினும் அபேதம் எனினும்
பேதாபேதம் எனினும் அமையும் நின்
ஐயம்இல் உரையில் பையவந்து உளதாம்
திகழ்பிரமாண இகழ்வும் உண்டு அன்றிப்
பெத்தம் பேதம் முத்தி அபேதமேல்
அனவத் திதமாம் அவைஇரு திறனும்
இனிஅப் பழமொழி இரண்டுஅல ஒன்றேல்
அன்றியும் பெத்தம் பேதத்து அறைதலும்
ஒன்றிய முத்தி அபேதத்து உரைத்தலும்
பழுதாம் இத்திறன் பதையாது ஆய்கமற்று
எழுதா மறைஎனும் இப்பிர மாணம்
ஆர்உரை தானே ஆயினதேல் உனது
ஏகம் அநேகம் உறும் இயம்பாமல்
சத்தரூபம் தகாது எனில் வானத்து
ஒத்துஒலி உழறும் எனில்வறிது உதியாது
அன்றியும் பதமும் பாழியும் அனைத்தும்
இன்றிஓர் ஒலியாய் எழுந்திடும் அதனுக்கு
அறிவுஇலது உருவுஇலது அறியாது அறையாது
அன்றியும் அவ்வகை அகண்டிதம் அதுஇது

என்றுஅது குறிப்பது எவ்வகை யாவும்
ஒன்றுஎனும் உரையும் ஒழிந்தனை அன்றே
அருமறை பிரம உரைஎனில் அதற்குத்
தந்தம் தாலுமுதல் நவில்பொறி இலது
என்னில்ஓர் உடற்கண் மன்னிய அலகை
அறைந்தற்று என்பது ஆர்சொல் அதுஅமலத்
திறம்பெற் றின்றே செய்தோர் பெயரால்
சுயம்பு என்றுஉலகு இயம்பும் என்று அறிஇனித்
தன்கீழ்த் தலைவரைத் தான்தொழுது உரைக்கும்
சொற்கேள் புரவலன் ஏவல் அமைச்சரை
அடியேம் மற்றுஎம் குடிமுழுது ஆள்மின் என்று
ஏத்தி இறைஞ்சிக் காப்பர்கள் என்றுஆங்கு
ஈசன் நாம்செயப் பேசினன் அன்றி
இனையவை பிறரில் கனவிலும் இலனே
தன்னைத் துதிக்கும் சொல்நலம் தானும்அத்
துறைஅறி வாணர்க்கு அறைவது ஒன்று அன்றியும்
தனக்குத் தானே தன்நலம் பகராது
அசத்துக்கு உரையாது ஆர்க்குஉரை உயிர்க்குஎனில்
உரைபிர மாணம் இறைபிர மேயம்
நீ பிரமாதா நின் பிரமிதி என
நால்வகை உளதுஉனது ஏகம் நன்று அன்றே
நற்பிர மாணம் நிற்பது ஒன்று அன்றால்
அப்பிர மேயமும் அதன் இயல்பு அன்றே
கன்னற் சுவையில் அன்னியம் இலதால்
இனிமை தோன்றாத் தன்மைத்து என்றனை
அறிவிற்கு உவமை அசத்தாம் கட்டி
பிறிவித்து ஒட்டினும் பேறுஅது உறாதே
தற்பர விரிவு பொற்பணி தகும்எனில்
செய்வோர் இன்றிச் செய்வினை இன்மையில்
பொன்பணி ஆகை தன்பணி அன்றே
செய்வோர் போலாச் செயப்படு பொருள்முதல்
செய்வோர் ஏயாச் செய்யவும் படுமே
சுத்தி வெள்ளியில் தோன்றிற்று ஆயினும்
சத்துஉலகு ஏதும் தாரா தரும்எனில்
உலகம் மித்தை என்று ஓராது உரைத்தனை
நிலவும் நின்மரபு நினைந்திலை யாம்கொல்
விவகா ரத்தில் வேண்டுதும் உலகம்
பரமார்த் தத்தில் பகராம் என்னில்
பரத்து உளதேல் இவையும் பரமார்த்தம்
பரத்துஇலதேல் ஒழி முன்பகர் மாற்றம்
அதன்முதல் இதுஎன உதவுக அன்றியும்
விவகரிக்கும் கால் திகழ் பரமார்த்த
நிலைஅது தெரியில் இதுநீ நீயேல்
தெரியாது ஆயின் அஃதும் தெரியாது

உரையார் அளவையும் ஒழிந்தனை அன்றே
அளவை காண்டல் கருதல் உரைஎன
உளதுஅவை மூன்றின் மொழிவழி நுழையின்
நின்பிரமேயம் என்பது என்ஆம் கொல்
பொற்பிதிர் பிதிர்ந்தும் பொன்னே யாம்நின்
தற்பரம் அசித்தைத் தருமாறு என்எனச்
சிலம்பி நூல்தரு நலம்போல் தோன்றும்
என்றனை அதுவும் தன்தொழில் அன்றியும்
ஒன்று அதன் இயல்புஉலகு ஓர்இயல்பு அன்றுஎனப்
பலம்இலை பழம்பூப் பாதவம் தரும்நீர்
திரைநுரை திவலை சிலதரும் இவைபோல்
தானே பலவாம் எனநீ சாற்றினை
சத்துஅசத் தாகவும் சத்தினில் அசத்தின்
கொத்துஉள தாகவும் கூறினர் இலரால்
வித்துஇலை கனிநனி விழுதுஆல் தருநெறி
சத்துஅலது ஒன்று தான்தர வேண்டும்
நெல்பதர் பலாலத்திற்கு உபாதானம் என்
காரணம் இன்றிக் காரியம் பிறவா
பாரிடை ஒருபடம் பண்ணவும் படுமே
அந்தம்இல் பிரமம் அவித்தை காரணம்எனத்
தந்தனை அவித்தை தான் எய்துறுதல்
தன்இயல்பு என்னில் வன்னிதன் வெம்மையில்
சத்தினது இயல்பும் சத்தே அசத்துஎனில்
வைத்ததன் இயல்பு எனும் வழக்குஒழி அன்றியும்
இருள்பொதி விளக்குஎன வரும் இருவிளக்கில்
கருமை பயந்த பெருகுஒளி தகும்எனில்
தன்இயல்பு அன்று அதன் உபாதி வசத்தால்
மன்னியது அன்றி மைதான்தனில் மாயாது
ஒன்றுஆன சுத்தன் அன்றாம் அன்றே
ஆங்குஒரு காலத்து ஓங்கியது ஆயின்
அந்தம்இல் அவித்தை வந்து அணைவதற்கு ஓர்
ஏது வேண்டும் புயல்இயல்பு எனில்வீடு
ஓத வேண்டா ஒழிந்தோரினும் உறும்
களங்கம் அது அறஉறும் அவித்தைதற் கவித்தல்
விளங்கிய பிரம விளையாட்டு ஆயின்
அவித்தை என்பது ஒன்று அன்னியம் தன்னில்
உதிக்கும் என்றமுன் உரையும் மறந்தனை
நுண்நூற் குடம்பை நுந்துழி போல்உட்
படுநெறி அதனால் விடுநெறி இலதால்
தலைமையும் அறிவும் இலதுஎன் அவித்தையை
விடுத்து எடுத்து ஆணரும் வேற்றோர் அன்றே
ஒளிகொள் தாமிரம் குளிகைபெற்று ஆங்குஅதன்
அவித்தையை வித்தை தவிர்க்கும் என்றுஉரைக்கில்
நித்தன் அறிவன் சுத்தன்என்று உரைத்த

வித்தகம்என் நீ வித்தையும் வேறுஒன்று
எம்மனோரில் ஒருவன் நின்இறை
அம்ம சைவந்தவன் நீ அன்றே
பன்மணி பசுநற் பாத்திரம் எனவும்
நன்னூல் பால்நீர் நற்கதிர் எனவும்
உடலையும் உணர்வையும் உவமித் தனையேல்
தடமணி சரடொடு தாம் கூடலவே
உணர்வுஉணர்வு ஒழியின் உலகு உணர்வுறின் நின்
பாலும் பசுவுஞ் சாலும் சாலக்
கலம்பல அன்றிச் சலம்பல இலதுஎனக்
காணுநர் இன்றி வீண்நீ விளம்பினை
ஆடியுள் நிழல்போல் கூடுதல் கூறில்
தன்நிழல் கொண்டு தற்பணம் சலிக்கில்
மன்நிழல் கொண்டுஉடல் வந்து அகன்றிடுமே
மன்அயக் காந்தம்என உடல் பிரம
சந்நிதி அளவில் சலித்திடும் ஆயின்
அகண்டிதம் சன்னிதி அலதுஇலது எவையும்
நடந்திட வேண்டும் கிடந்திடப் பெறாவே
காந்தத்து இரும்பு காட்டுநர்ப் பெறில்அயம்
சேர்ந்திடும் நீக்கும்செயல் அதற்கு இலதே
கனாத்துயர் கயிற்றுஅரவு எனாச்சில தொடுத்தனை
கனவின் பயனும் நனவின் பயனும்
வினையின் பயன்அவை பொய்என வேண்டா
உடல் மாறாட்டக் கடன்அது கருதுக
உற்ற புற்றும் மற்றுஅதில் கயிறும்
உடலும் கூடமுச் சடம்என அறிதி
அறிவு கயிறுஎன்று அறியாது அன்றே
அச்சம்அது அடைதல் கொச்சமை உடைத்தே
இன்னும் அக்கனவில் இருள்உறு கயிற்றில்
பின்னும் நின் பிரமம் பிரமித் திடுமே
துன்னிய வினையில் செம்மலர்ப் பளிங்குஎனத்
தானாம் தகைமை ஆனால் மலர்என
ஒருபயன் அன்றிப் பலபயன் மரீஇயது
இருவினை தருபயன் என நனி வேண்டில்
ஆண்ட வித்தையும் அவித்தைகொடு ஆக்கையும்
ஈண்டு இருவினையும் இயம்பினை பரத்தைக்
கள்வரைப் பிணிக்கும் காவலர் எனமுயல்
தொல்வினைத் தொடக்கில் தோன்றுஉடற் சிறையிட்டு
இருவினை ஊட்டும் அருள்உறும் எம்மான்
அருவினை உடல்கண் அவத்தைகள் உரைத்தனை
ஆர்உறுபவர் பரம் அகண்டிதம் அடங்காது
ஓர்விலது உடல்சடம் உறுநெறி யாதுஎனின்
மன்னிய கரண மாறாட்டத்தில்
பன்னினம் என்னில் இவையோ பரமோ

முதலியது ஆயின் இவைபிறழ்வு எய்தாது
இவைஎனில் உனது மொழிபழுது உளதே
உடல்படு பிரமம் உறுமேல் சாளரத்து
இடத்தகும் உறுவிரல் நுதிஅளி எறிதுயர்
அங்குலிதானே அருந்திடில் உடல்கண்
தங்கிய அறிவு தனித்துஉறும் அன்றே
தற்பண நிழல்கண் குற்றிபாய்ந்து அற்றால்
நற்கணில் துயரம் நணுகாத் தகைத்துஎனில்
நின்மொழி விரோதமும் காட்சி விரோதத்
தன்மையும் உறும்அவை தவறுஇல ஆகா
யாம்உடைப் புதிவகை யாவரும் பலகலை
சொல்லுதல் எளிது அரிதுஅத் தொழில்புரிவுஎனப்
புல்லிய பழமொழி புதுக்கினை அன்றே
அகண்டிதம் எனநீ பகர்ந்தமை தனக்குப்
பந்தம் இதுஎனத் தந்தமை கருதில்
வானில் நடக்கும் காலினைப் பிடித்துப்
பருவிலங்கு இட்ட ஒருவன் நீஅன்றே
பந்தம் அதுஅகல முந்து விவேகம்
வான்வளி எனத்தனில் தானே தோன்றின்
முன்புஉளதாயின் மயங்காது இலதுஎனில்
பின்புஉளது ஆகாது இலதுஉளது எனில்வெளி
மலரது தரும்அனல் மரக்கண் இன்றுஆகித்
தருவது தகும்எனில் தானே தோன்றா
விறகின் உதித்த கனல்தகும் ஆயின்
அவித்தையின் உதித்த வித்தை அம்மரத்து
உதித்த விவேகம் வித்தைஎன்று உரைத்த
வெந்தழல் அனைய விவேகம்அது உதித்த
இந்தனம் அனைய இறையில் அன்றுஅற்றே
இற்படப் பிரிப்பின் மெய்ப்படும் எவற்றையும்
இதுஅன்று இதுஅன்று எனக்கழி காலை
அதுவே தானே ஆயினது என்றனை
வித்தை முன்னர் அவித்தையும் அவித்தைமுன்
வித்தையும் நில்லா வியன்ஒளி இருள்என
இருள்அல ஒளிக்கும் ஒளியல இருட்கும்
ஒருகாலத்தும் ஒருபயன் இலதால்
இரண்டையும் நுகரும் முரண்தரு விழிஎன
வித்தையும் அவித்தையும் உய்த்தது ஒன்றுஉளதே
தானே தானாம் ஆனால் பயன்என்
தன்னில் தன்னைத் தானே காணில்
கண்ணில் கண்ணைக் காணவும் படுமே
தன்நலம் அதனைத் தானே நுகரும்
என்னில் முன்நலம் எய்தாது இருந்ததுஎன்
கட்டிபோல் எனக் கதறினை இன்பம்வந்து
ஒட்டிடும் வித்தை உடையை ஆயிடினே

தத்துவ மசிஎன வைத்த முப்பதத்திற்கு
ஒன்றே பொருள் என்றுஅன்றே பகர்வது
நீபுலி யாயினை என்றுஆங்கு உணரில்
ஆயினை எனறதும் ஆகு உவமைத்தால்
நோயா யினம்எனல் ஆயாய் என்றால்
அகமே பிரமம் ஆயினது என்றால்
சகமே அறியத் தான்வேறு அன்றே
உண்மையில் சலம்இலம் உடற்சலம் சலம்உறும்
வெண்மதி போல விளங்கினம் என்றனை
அசலன் ஆகிச் சஞ்சல சலத்துச்
சலனம் மேவினம் எனமதி காண
வேண்டும்அது அன்றிக் காண்பவர் பிறரேல்
ஈண்டுஉனது ஏகம் என்செய்தது இயம்புக
உடல்விடக் கடத்துள் படுவெளிபோல் எனில்
விட்டுஎன் பெறஉடல் பட்டுஎன் படமற்று
இகல்அற ஒருவன் இவ்வகை தெளிய
அகிலமும் முத்தி அடைந்திட வேண்டும்
அறிந்தோர் முத்தி அடைந்தோர் ஆயின்
பிறிந்தோர் உயிர்பல பேதத்து அன்றே
கன்ம காண்டம் காரணம் ஆக
மன்னும் விவேகம் என்னில் அவித்தைக்கு
ஏது காரணம் ஓதினை இல்லை
இதற்குக் காரணம் விதித்தல் வேண்டின்றே
அரணியில் உதித்த கனல்அவை கவர்வுஎன
விரதத்து உதித்த விவேகம் அது அழித்தல்
வருந்தி யாயினும் திருந்திய வேத
நீதி எல்லாம் நீத்துப் போதம் ஒன்று
அறியார் தாமும் இகழ் அவ்வழி நடத்தல்
பொறியோ போத நெறியோ இதுபவம்
நீங்கிடும் நெறிதரு பாங்கினைப் பழித்தல்
நன்றி கொன்றல் அன்றே அன்றியும்
ஞால நீதியும் நான்மறை நீதியும்
பாலர் உன்மத்தர் பசாசரில் எனவும்
உறங்கி னோன்கை வெறும்பாக்கு எனவும்
தானே தவிராது ஆனால் புரியாது
ஒழிந்திடில் நிரயத்து அழுந்துதல் திடமே
உய்த்தோன் அன்றி முத்தி உரைத்தல்
பித்தோ பிரமம் செத்தோ பெறுவது
உடலையும் நீயே சடம்எனச் சாற்றினை
வையினும் வாழ்த்தினும் கொய்யினும் கொளுத்தினும்
வணங்கினும் உதைப்பினும் பிணங்குதல் செய்யாப்
பிரமத் தன்மை பெறுவதுஎக் காலம்
இருக்கும் நாள்சில எண்ணில்நூல் கதறித்
தருக்கம் பேசித் தலைபறி உற்றுக்

கண்டோர் ஈந்த பிண்டம் உண்டுஅலறிப்
பல்நோய் யாக்கை தன்நோய் உற்றுஉடல்
விடவரும் என்று நடுநடு நடுங்கி
விட்டோர் தெய்வத் தொட்டின்று அன்றியும்
யானே எவரும் ஆனேன் என்றலின்
அவ்வவர் சீறி அவ்வவர் வாழ்நாள்
செவ்விதில் நிரயம் சேர்த்துவர் அதனால்
மாயா வாதப் பேயா உனக்குத்
தேவரில் ஒருவர் உண்டாக
மேவரும் நரகம் விடுதலோ அரிதே.

ஐக்கியவாதி சங்கற்பம்

5. அரிதேர்ந்து உணராப் பெரியோன் உரைத்த
பதிபசு பாசம் விதிமுறை கிளக்கில்
ஈசன்ஏகன் எண்ணிலி பசுக்கள்
பாசம் இருவகைப் பரிசினது உலகத்
தாயவன் உயிர்க்கு மாயையின் அருளால்
இருவினைத் தகையின் உருவினைத் தருமால்
கருமுகில் அடர இரிதரு கதிர்போன்று
அறிவாம் உயிரில் பிரியாது ஏயும்
ஈட்டும் இருபயன் ஊட்டிடும் நியதி
ஒருபோது இருபயன் நுகர்வுற மருவுதல்
இன்மை யாதல் முன்னிய காலைச்
சத்தி நிபாதம் உற்றுஇறை அருளால்
உருவுகொடு உலகு தெரிவுற மருவி
மாசுறும் தூசு தேசுற விளக்கும்
தன்மையில் உணர்த்தும் புன்மைகள் நீங்கி
நீரும் நீரும் சேரும் தகைமையில்
அறிவினோடு அறிவு செறிவுறப் பொருந்தி
ஒன்றுஆம் என்பதை உலகோர்
நன்றாம் முத்தி எனநவிற் றினரே.

ஐக்கியவாதி சங்கற்ப நிராகரணம்

6. முத்தி என்பதை எவனோ சுத்த
அறிவு எனில் பாசம் செறியா மாயை
உருஇரு வினையால் வரும்இரு வினையும்
உருவால் அன்றி மருவாது இவற்றின்
முந்தியது ஏதோ வந்து அணைவதற்கு ஓர்
ஏது வேண்டும் தான்இயல்பு என்னில்
வீடு உற்றவரினும் கூடக் கூடும்
ஈங்குஇவை நிற்க நீங்காக் கருவிகள்
கொண்டு அறிவு அறியக் கண்டதும் அன்றி
மருவிய உருவு துயில்பெறும் காலைச்
சிறுபொறித் தறுகண் கறைஅணல் சுடிகைத்

துத்திக் கடுவுள் துளைஎயிற்று உரகக்
கொத்துஅயல் கிடப்பினும் குவைதரு நவமணி
ஒருபால் துதையினும் பெருகு ஆர்வத்தினோடு
அச்சமும் அணுகாக் கொச்சமை என்னோ
கருவி யாவும் பிரிவுறு நிலையேல்
பொறிபுலன் ஆதி குறைவற நிறைந்து
காட்சியது அளிக்கும் மூட்சியின் முன்னாக்
கொடுத்து ஓர் ஆழி விடுத்தவன் நாடிக்
கொள்வோர்க் காணாது உள்கி மீண்டுழித்
தந்தவன் கண்டாங்கு அந்தமில் அதனைத்
தருக வென்னும் பெருமதி பிறங்கும் அது
அறிவிலாமை என்றனைஅது மலமாக்
குறிகொளாளர் அறைகுவர் அன்றே
அறிவிற்கு அறிவு செறியவேண் டின்றே
உண்மையில் இருமையும் ஒளியே எனில்ஒரு
தன்மை யாகமுன் சாற்றினர் இலரே
முன்பு நன்றுடன் ஒன்றிய காலை
இன்பம் எய்துதற்கு இலது உயிர் ஆதலின்
நீயலை பொருத மாயா வாதி
ஆயினை அமையும் அருள்நிலை கேண்மதி.

பாடாணவாதி சங்கற்பம்

7. மூல மலத்தால் சாலும் மாயை
கருமத்து அளவில் தரும்உரு இறைவன்
செறிந்துஇரு பயனும் நுகர்ந்திடும் உயிர்கள்
இருள்உறு மலத்தில் பருவரல் படுதலின்
இடைஇரு நோக்கும் தடைபட் டோரில்
துயர்உறும் அதனால் செயிர்உறு துன்பம்
கொத்தை மாந்தர் உய்த்துஉறும் துயில்போல்
காட்சி என்னக் காணாத் துயர
மாட்சியை முத்தி எனவகுத் தனரே.

பாடாணவாதி சங்கற்ப நிராகரணம்

8. வகுத்துஉரை பெருகத் தொகுத்திடும் முத்தி
நன்று நன்றுஇருள் ஒன்றிய மலத்துஆம்
உளத்திற்கு உறுபொறி செறிபுலன் நுகர்தல்
விளக்கின் திகழும் மேன்மையது அன்றே
கருவிகள் அகல்வுழி மருவிய துயரமும்
நன்றுஎனல் ஆகும் துன்றிய படலத்து
இடைதடைப் பட்ட சுடர்விழி மாந்தர்
படலம் நீங்குதல் கடன் ஆதலினே
காட்சி என்னக் காணாத் துயர
மாட்சியை முத்தி எனவகுத்து உரைக்கில்

கரணா பாவம் மரணம் கருமரம்
ஏய்ந்தவர் முத்தி சேர்ந்தவர் அன்றே
இனைய கதிக்குஓர் முனைவரும் வேண்டா
தனிதரு துயரம் எனும் இதுதிடனே
பாடா ணத்தில் கூடா முத்தி.

பேதவாதி சங்கற்பம்

9. ஈசனது அருளால் பாசத் தொகுதி
செறிவுறு செம்பில் கறையுறு களிம்பு
குளிகை தாக்க ஒளிபெற்று ஆங்கு
நித்த சுத்த முத்தர் ஆக
வைத்தனர் உலகில் மறைவல் லோரே.

பேதவாதி சங்கற்ப நிராகரணம்

10. மறைகள் ஆகமத் துறைகள்மற்று எவையும்
நாசமில் பதிபசு பாசம்என்று உரைத்தல்
அயர்த்துஓர் குளிகைச் சயத்தால் தாமிரக்
காளித நாசம் பாசத்து ஏய்த்தல்
கூடாது அன்றியும் குளிகை சீருணம்
நீடாது அழித்த நிலைஇலை ஆதலின்
பேத வாதம் ஓதுதல் பிழையே
இன்னும் இன்உயிர் ஏமம் குளிகை
தன்னில் அன்னியம் தருவது திடமே
வீடுஇத் திறத்தினில் கூடக் கூடா.

சிவசமவாதி சங்கற்பம்

11. பாசமும் பசுவும் ஈசனும் என்றுஇம்
மூவகை உணர்வு தாம் முதன்மையவாய்ப்
பாச ஐம்புலன் தேசுற உணர்த்தப்
பசுத்தனி ஞானம் பொசித்திடும் அன்றே
இனைய ஞானம் பிரிவுற எரியாச்
செந்தழல் தகுநெறி அந்தம்இல் உயிரும்
அறிவாய் ஒன்றும் அறியாது அன்றே
இவ்வாறு ஒழுகும் ஏனைய உயிர்க்கு
முன்னோன் தனது முதிர்ஒளி ஞானம்
அறியாப் பச்சைச் சிறுபுழுக் கவர்ந்த
வண்டுஎன உயிரைக் கொண்டிடும் உயிர்அது
தன்னை நோக்கித் தான்அது வாகி
ஐவகைத் தொழிலும் மெய்வகை உணர்வும்
பிரியா வாறு பெற்றுத்
திரியாப் பெரியோர் திரட்சிசேர்ந் திடுமே.

சிவசமவாதி சங்கற்ப நிராகரணம்

12. சேர்ந்த மும்மை வாய்ந்த ஞானமும்
ஒருகால் அன்றித் திரிவுற நிற்கில்
ஒண்பொருள் காணும் பண்பினுக்கு ஒருகால்
பரிதியும் மதியும் எரிதரு விளக்கும்
வேண்டல் இன்றே காண்தகு காலை
ஒன்றுஒன்று ஆகநின்று அறிவுறும் எனில்
அன்னியம் அறியா மன்உயிர் பொறிபுலன்
தானோ அறியா தலைவர்க்கு உலகினை
ஆனா அறிவால் அறியவேண் டின்றே
கொழுந்தழல் தகுமேல் அழுந்திடும் அவத்தையில்
திரியாத் தலைவன் தெரியாத் தன்மைவந்து
எய்தல் ஆகா மெய்யுறு பொருட்கு
முன்னர்க் கீடம் தன்என எடுத்த
வேட்டுவன் இயல்பு கூட்டல் பெறாதே
வண்டுஇறும்பு எடா உட்கொண்டு அது தனக்கு
மந்திர வாதம் தந்ததும் இலதே
எடுத்திடும் அதனால் அடுத்தது என்று அறையில்
கருமயிர்க் குட்டி இருசிறைப் பறவை
ஆயினது எடுத்த தாயர் சாற்றிலரே
பிறவிப் பேதத் துறை இவை கிடக்க
ஏயும் இத்திறன் ஆயும் காலை
யோகத் தகுதி ஆகத் தகுமே
ஞானம் இன்மை என்று ஓதுவது எவன்எனில்
உயிரும் உணர்வும் பயிலுதல் இன்றி
வேட்டுவன் உருவம் மென்புழு உணர்வு
கூட்டுத லால்உருக் கூடுத லானும்
முத்தியில் இறையில் பற்றுதல் இன்றித்
தன்னுரு அணைந்த பின்அதன் நினைவு
மாறுத லானும் ஊறுடைத்து அன்றே
ஈசனது இயல்பு அருள்எய்து உயிர்இயற்றல்
பேசுதல் தவறுஎனப் பெருமறை அறைய
ஐந்தொழில் உயிரும் தந்திடல் தகுமே
ஆவதுஎன் முன்னாள் நாவலர் பெருமான்
பண்டுஒரு முதலை உண்ட மைந்தனை
வரவழைத்தனன் என்றாய் பிழைப்பு இலதுஅதூஉந்
தந்திட வேண்டும் என்றனர் அன்றே
இன்னவை கிடக்க முன்னவன் தன்மை
எய்தினர் எல்லாச் செய்தியும் செய்வர்
இரும்புஎரி எய்தித் தரும்செயல் தகவுஎனில்
பொருள்நிலை கிடக்க ஒருதிட்டாந்தப்
பேறே ஆயின் சீறாக் கதுவிய
புனல்ஒரு புடைசேர் கனல்தகும் ஆயினும்
வேறுஒரு பொருளை நீறுஆக் கிலதே

நெருப்புஎனும் இதனின் உருத்தனி காட்டுக
அங்கியும் ஒன்றைத் தங்கிநின்று அல்லது
தன்தொழில் நடத்தாது என்றுஅறி இனிநீ
இரும்புஅனல் செய்தி தரும்பரிசு உளதே
அதுஎன் ஓர்அலகை பொதிதரும் காலை
அதன்செயல் அனைத்தும் இவன்செயல் ஆமால்
அவன் இவன்ஆகில் இவன்அவன் செய்திக்கு
என்அவை என்னில் பின்னுறு செயலும்
அதன்செயல் அன்றி இவன்செயல் ஆகில்
இவன்செயல் பேயின் தன்செயல் ஆகி
இருந்த வாஎனத் தெரிந்திட வேண்டும்
தெரியாது ஆயின் புரியில் கடும்கனல்
எரிந்தது என்னும் இதுதகும் அன்றியும்
அவன்இவன் ஆகில் இவன்அவன் செய்தி
என்று செய்வான் ஒன்றிய மதத்தாய்
எல்லாம் அறிதல் செல்லாது உயிர்கள்
சிற்றறிவு எனும் இச்சொல் தவறுஆகும்
என்பதுஎன் அலகை தன்பதம் அடைந்தோர்
கொண்டவாறு கண்டனம் என்னில்
மூங்கை அந்தர் உற்றுஓங்கிய குணம்குறி
செய்ததென் இன்னும் பவ்வம்உற்று அழுந்தினும்
நாழி கொள்ளாது ஆழியில் அலைபுனல்
அதனால் கருத்து முதல்உளது ஆக
வேண்டும் அன்றே ஈண்டுஇனி அமையும்
எல்லாம் எனும்இச் சொல்லால் படும்பொருள்
அனைத்தும் தாக்காத் தனிப்பரத்து உற்றவர்க்கு
எவ்வகை உணர்வு செய்வதென் செப்புக
ஒன்றின் ஒன்றாம் ஒன்றாது உலகில்
நின்ற போது உயிர் நேராம் அன்றே
முத்தி உற்ற நற்றவர் அவையிடைச்
சேர்வர் என்றனை சார்தரு முத்தி
சாலோக் கியமோ சாயுச்சியம் எனில்
பந்தம் உற்ற கந்துஅல கழித்த
அறிவினோடு அறிவு பிரியாப் பெற்றி
வேண்டும் என்றதற்கு ஈண்டுஇவர் இவ்வாறு
இருப்பர் என்பதற்கு உருத்தான் வேண்டும்
அண்ணலது அருளில் நண்ணினர் இருப்பினும்
சீவன் முத்தர்என்று ஓதினர் அகன்று
நீங்கியும் உருவம் நீங்காது ஆயின்
ஓங்கிய முத்தி யாவதுஎன் உரைக்க
செடிஉடல் அணுகாக் குடிலை கொடுக்கும்என்று
ஓதினை நீயே பேதாய் பகட்டுஉரல்
ஒளிர்சினை முச்சித் தளிர்எனும் இதுதகும்
இச்சா ரூபம் நச்சினர் என்னில்

மும்மலத்து ஏதும் இன்மையது அன்றே
இதுவளர் முத்திப் பதமென இயம்புவர்
ஈங்குஇவை நிற்க

13. சங்கிராந்தவாதி சங்கற்பம்

நீங்காது ஒளிர்உயிர்
விளக்குஎன நிற்கும் அளப்புறும் அறிவின்று
இறைவற்கு ஏதும் அறிய வேண்டின்றே
மன்னும் ஆன்ம சந்நிதி அளவில்
காந்த பசாசத்து ஏய்ப்ப வாய்ந்த
உயிர்உடல் இயக்கும் செயலுறு பூட்டைப்
பலவகை உறுப்பும் இலகிய தொழில்போல்
ஐம்பொறி புலன்கள் இன்புறும் அன்றே
இனைய வாயிலின் நிகழ்தரு பயன்அவை
அந்தக் கரணம் முந்தி உணர்ந்திடும்
இவை அகல்வுழி ஐம்பொறி புலன் நிகழாது
உயிர்நீங்கிடில் உடல் செயல் இலதுஅன்றே
இவ்வகை வினையின் செவ்விதின் நடத்தும்
பழமலம் நீங்க நிகழும் காலை
ஏற்றோர் முகஒளி தோற்றும் கலன்எனத்
தலைவனது அருள்உயிர் நிலவிடும் நிலவக்
காட்டத்து அங்கி மாட்டத் தங்கிய
தன்மையும் அளத்துப் புல்வையின் நீப்பும்
போன்றது வாகித் தோன்றிடும் அதனால்
பசுகர ணங்கள் சிவகர ணங்கள்
ஆக மாறி அறிவும்
ஏகமாம் உயிர் யான்எனது இன்றே. 9

14. சங்கிராந்தவாதி சங்கற்ப நிராகரணம்

இன்றுஉனது உரையின் நன்றி உயிர்ஒளித்
தீபம் போலத் தாபம் தரில்இருள்
செறியும் தன்மைஎன் அறிவிலது ஆகில்
ஒளிஎன உரைத்த தெளிவதற்கு ஏதாம்
சந்நிதி அளவில் மன்னும் செயல்உடல்
காந்தம் போல வாய்ந்தது என்ற
தன்மையும் உணராப் புன்மையை அன்றே
உயிர்உடல் இயக்கில் துயில்பெறும் காலைச்
செய்ததுஎன் மனாதி எய்துஉயிர் பொறிபுலன்
நடத்த ஆவியும் சடத்தன ஆயின்
பூட்டையில் பூணி கூட்டல் பெறாதே
புலன்ஐம் பொறியில் நிலவிடும் என்றனை
அஞ்சும் ஒருகால் துஞ்சாது அறிதற்கு
அழிவுஎன் நற்றரு செழுமலர் இலைபலம்

கனிதருவது போல் இனையவை ஐந்தும்
ஒன்றுஒன்று ஆக நின்று அறிவுறும் எனில்
ஒன்றின் பயன் நனி ஒன்று அறியாதால்
இதுவே அல்லது கதும்என இருசெவி
இருகூற்று ஒருகால் தெரியாத் தன்மைவந்து
எய்தும் மனாதியும் மெய்யில் செயலும்
தனக்குஇலை ஒருவற்கு எனத்தெளி கிலையே
நோக்கும் முகஒளி நீக்காத் தான்எனக்
கவரும் தன்மை முகுரம் போலக்
கொடுத்தது கோடற்கு அடுத்தது உண்டு அன்றே
காட்டத்து அங்கி கூட்டக் கூடும்
இந்தனத்து இயற்கை வெந்தழல் தாங்கா
உப்பளத்து அடுத்த புற்பலா லங்கள்
சடத்த வேனும் கொடுத்தது கொள்ளும்
தன்மை உண்டுஉனக்கு இன்மையது அன்றே
அவம்உறு கருவி சிவமயமாம் எனக்
கூறினை தாகம் வேறுஉருக் கவராது
என்பது என் அவைமுன் துன்பம் துடைக்கும்
திருவருள் மருவ உரியன என்னில்
அருள்உரு மாயா இருளின தாம்கொல்
சத்தப் பரிச ரூப ரச கந்தம் என்று
எத்திறத் தினதுஅருள் இயம்புக அன்றியும்
நிறைந்து நீயாய் நின்றனை யேனும்
மறைந்துஐம் புலனால் வாராய் என்றும்
கரணம் எல்லாம் கடந்தனை என்றும்
மரணம் ஐயைந்தின் அப்புறத்து என்றும்
முன்அருள் தலைவர் பன்னினர் எனவும்
இனையவை ஒழிய அறிகுவது எவ்வாறு
என்ற நிற்கலிக்கு ஒன்றிய இன்பம்
கூறுதல் தகும்மருள் பேறினை அன்றே
ஏகம் உயிர்அறிவு ஆக மொழிந்தனை
இருபொருள் ஒருமை மருவியது இலதே
இவ்வகை கிடக்க மெய்வகை கேண்மதி!

15. ஈசுவர அவிகாரவாதி சங்கற்பம்

பஃறுளைக் கடத்தின் உள்விளக்கு ஏய்ப்ப
அறிவுள தாகும் உருஉறும் உயிர்கள்
கண்ணால் ஓசையும் கந்தமும் கருத
ஒண்ணாது என்னும் உணர்வு உடைமையினால்
அவ்வப் புலன்கட்கு அவ்வப் பொறிகள்
செவ்விதில் நிறுவிச் சேர்ந்தவை நுகரும்
மூல மலத்தின் பாகம்வந்து உதவுழி
இருள்தரும் இற்புக்கு ஒருபொருள் கவரத்
தீபம் வேண்டும் ஆனவா போல

மோக மாமலம் போக ஞான
விளக்குஅரன் அருளால் துளக்குஅறப் பொருந்தி
நீர்நிழல் அனைய சீர்பெறு கடவுளைச்
சலம்இலன் ஆகிச் சார்ந்தவர்க்கு என்றும்
நலம்மிக நல்கும் நாதனை அணைந்து
பூழி வெம்மை பொருந்தாது உயர்ந்த
நீழல் வாழும் நினைவினர் போலத்
திருவடி நீழல் சேர்ந்து
கருவுறு துயரம் களைந்து இருந்திடுமே.

16. ஈசுவர அவிகாரவாதி சங்கற்ப நிராகரணம்

இருந்ததுன் கேள்வி திருந்திடும் உயிர்கள்
அறிவின வாயில் பொறிபுலன் என்னை
மற்றவை பற்றி உற்று அறிந்திடுதலின்
அறிவுஎன வழங்கும் உயிர்என உரைத்தல்
காணும் கண்ணினன் கைகொடு தடவிப்
பூணும் பொருளின் பெயர்பல புகறல்
என்னும் கிளவி தன்னொடு தகுமே
அவ்வவ புலன்கட்கு அவ்வவ பொறிகளைச்
செவ்விதின் நிறுவலின் அறிவுஎனச் செப்பினை
அறிவிலாமை கண்டனம் அணை புலற்குப்
பொறிகள் ஏவலின் அறிவோடு பொருந்தில்
கண்டதோர் பொறியால் கொண்டிட வேண்டும்
உதவியது ஒன்றால் கதும்என இயற்றினர்
உண்டோ என்னில் கண்டன மேல்நாள்
கடவுளில் கடிமலர் முடுகிய மதனன்
அங்கம் அனங்கம் தங்கிடக் கிடந்தது
வையின் திரளில் செய்ய சிறுபொறி
மாட்டி மூட்டியது அன்றே மீட்டும்
தேன்அமர் தவிசில் நான்முகன் உச்சி
அறுத்ததும் கருவி பொறுத்தோ அன்றே
ஈசனது இயல்பு பேசுதல் தவிர்க
காழி மாநகர்க் கவுணியர் கடவுள்
ஞானம் ஆகிய நற்பதி கங்கள்
எழுதுறும் அன்பர்தம் இன்புறு மொழியால்
களிறுஎன அணைந்த கல்மனப் புத்தன்
முருட்டுச் சிரம்ஒன்று உருட்டினர் அன்றி
வாய்ந்த வாள்ஒன்று ஏந்தினர் இலரே
என்றதும் ஈர்வாள் கொன்றது என்பதுபோல்
தனித்துணை அருளால் துணித்தனர் என்ப
ஆதலின் வாயில் அளவினில் அறிதலின்
ஏதமில் அறிவுஉயிர்க்கு எய்துதல் இலதே
இருட்கு விளக்குஒன்று ஏந்தினர் போல
மருட்கு ஞானம் மன்னுதல் உளதே

என்றனை கருவிகள் யாவும் அசேதனம்
துன்றிய உயிரும் துரியத் தன்மையன்
ஆதலின் அந்தர் அனைவரும் கூடித்
தீதுஅற அருநெறி தெரியும் என்றற்றே
நீர்நிழல் அனைய சீர்பெறு கடவுளைச்
சேர்ந்தவர்க்கு இன்பம் வாய்ந்திடும் என்றனை
பாதவம் என்றும் சேதனம் இன்மையின்
இளைத்தோர் வம்மின் என்பதும் துன்பம்
விளைத்தோர் தம்வயின் வெறுப்பும் ஒன்றுஇலதே
பொடித்திடு கொப்புள் வெடித்திடு பாதம்
வெய்ய பூழியின் உள்ளுற அழுங்கி
ஆற்றுதல் இன்றி ஆறுஇயங்குநர் முன்
தோற்றிடும் என்று சொல்லவும் இலதால்
இவ்வகை கடவுட்கு இயம்புதல் தவறே
பாச அஞ்ஞானப் பழிவழி ஒழிக
ஈசன்து அருள்வழி இயம்புவன் கேள்மதி!

17. நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்பம்

புவனம் யாவையும் புனிதனது உருவாம்
சிவமும் சத்தியும் எனத்தெளி அவற்றுள்
அசேதனம் என்றுஒன்று அறைதற்கு இலதுஅது
சேதனன் நுகர்பொழுது இரண்டும் ஓர்திறத்தே
இதுவெனும் ஒன்றை அதுவாய்ப் படுத்துப்
பொதுமையில் நிற்கும் போதம் என்றுஅறிக
பொற்பணிப் பேதம் புரைவழி ஒருவழி
நற்பொனில் திகழ்வென் நயப்பதுஒன்று அன்றால்
ஆவதும் ஆகாது ஒழிவதும் எனும்இப்
பாவகம் உண்மை பாரா தோர்க்கே
பாராதோர் எனப் பல்லுயிர் பகர்தலின்
ஆராய்ந்து உரைக்கில் அவைபிற அல்ல
பலபல பேதம் இலஎன் போரும்இல்
கண்ணினது ஒளியைக் கண்ணினது எனில்அது
திண்ணிய இருளில் செறிபொருள் தெரித்தலும்
இன்மை மின்மினி எனஇரு கண்மணித்
தன்மை தானும் தாவிலது அதனால்
கண்ணினது உருவும் அதில்கதிர் ஒளியும்
நண்ணரும் சத்தி சத்தர்கள் நடிப்பே
உலகுஏழ் எனத்திசை பத்துஎன ஒருவன்
பலவாய் நின்ற படிஇது என்றும்
ஊனாய் உயிராய் உணர்வாய் என்றும்
மானக் கண்ணே மணியே என்றும்
தாமே தாமாய்ச் செய்தனன் என்றும்
நாமே சிவமாய் நண்ணினம் என்றும்
காயாய்ப் பழமாய்ச் சுவையாய் நுகர்வும்

ஓயாது உண்போன் தானே என்றும்
அறிவோன் தானும் அறிவிப் போனும்
அறிவாய் அறிகின் றோனும் அறிவுறும்
மெய்ப்பொருள் தானும் வியந்துஇது எனப்படும்
அப்பொருள் யாவும் அவனே என்றும்
தாய்தலைப் பட்டுஅங்கு ஒன்றாய்த்து என்றும்
ஏதம் அறநான் கெட்டேன் என்றும்
இன்னும் இன்னும் இறையோன் அளித்தவை
பன்னில் எண்ணரும் பான்மைத்து ஆதலின்
தருபொருள் கொள்பொருள் தருவோன் கொள்வோன்
ஒருபொருள் இவ்வியல் உவப்புஎன உணர்க
நுகர்பொருள் சத்துஇது நுகர்வோன் சத்தன்என்று
இகல்அறும் உணர்வுவந்து எய்துதல் அரிதே
நான்அவன் எனும்இது நவைவழி நல்வழி
தான்அவன் ஆகை இது சாயுச்சியம்
இத்திறன் தெளிய உய்த்திடும் அளவும்
யாதொரு வகையால் நீதியது ஆகத்
தான்அறி வழியே தலைநின்று என்றும்
ஊன்உயிர் சிவத்தில் ஒடுங்கிட நடத்தி
மூடும் முழுமலம் வீடும் காலை
கருவிகள் அளவில் புரிதரும் அறிவு
சாக்கிரம் கனவு நீக்கமில் சுழுனை
துரியம் என்றுஇவை பயில்தரும் அறிவு
துரியா தீதம் திரியாத் தன்மையில்
இறையருள் உதவும் கறைஅற மாறி
அறிவே ஆகும் பிறியாக் கருவிகள்
நிறைமுதல் அவத்தையில் அறிவுஇலது ஆகத்
துரியா தீதத் தோற்றம்
திரியா ததுநற் சிவகதித் திறனே. 11

18. நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்ப நிராகரணம்

திறம்பெற நீஇங்கு அறைந்தமை கருதில்
புவனம் யாவையும் புனிதனது உருஎனில்
அவன்முதற் காரணம் அன்றாம் என்னில்
நிமித்த காரணம் நிகழ்த்துக எனநீ
அவனே காரணம் அனைத்தும் என்று அறைந்தனை
மண்தனிக் குலாலன் தண்டசக்க ராதி
காரணம் மூன்றும் ஓர்பேர் அணைந்ததுஇத்
தாரணி அதனில் கண்டது சாற்றுக
அத்தன் இயற்றும் இத்தொழில் பிறர்க்கோ
தனக்கோ வீணோ எனக்கு ஈது இயம்புக
வீண்எனில் பித்தர் மாண்புஅறும் தொழில்போல்
தலைமையும் அறிவும் இலதுஎன இகழ்வர்

தனக்குஎனில் அஃதும் இசைப்பது ஒன்றுஅன்றே
தன்போல் அறிஞரும் தலைவரும் இலரால்
மின்போல் நிலைமையை வேண்டலும் பழுதே
பிறர்க்கு எனில் பிறரும் பிறர்க்குஆம் பொருளும்
பொருட்குஅமை கருவியும் அதற்குஉபா தானமும்
செய்கையும் என்றுஓர் ஐவகைத் தானொடு
மாறாச் சைவர் கூறார் என்றால்
நின்சித் தாந்தம் அவசித் தாந்தம்
என்சித்து ஆன்ற அசித்தைமற்று ஈனாது
அசித்துஇலது என்னில் வசித்தது என்உலகில்
உலகா யதனும் பூதக் கூட்டம்
சலம்மேல் கொப்புள் தகும்எனச் சாற்றினன்
தீய கருமச் சீனர் சாவகர் பிறர்
ஞேயம் இல்என நிகழ்த்தினர் இலரே
காண்டல் விரோதம் நிற்பிறர் கணித்திலர்
ஈண்டுஉனது உரைக்கும் மற்று யார்கரி உடலும்
சித்தோ சித்தின் சேர்வால் சித்துஎனில்
கட படாதியும் உடல்கண் சிதைவுஎன்
தாபர உயிர்போல் தனுஒழிந்து அவற்றுள்
மேவிய உணர்வு விரவிடும் என்னில்
சடத்துஉயிர் போல்எனச் சாற்றினை ஆகலின்
உடற்குஉயிர் இறையை ஒழிந்து உண்டுஅன்றே
தருதிட் டாந்தமும் தாட்டாந் திகமும்
ஒருபொருள் ஆகில் உவமை பெறாதே
ஒன்றே ஆகில் உடற்குஇறை தாபரத்து
ஒன்றிய நிலையில் விசேடம் என்உரைக்க
பூதச் சேர்வைப் பேதம்என்று அறையில்
சேர்வைப் பேதம் என்கொடு செப்புக
கருமத்து அளவில் வரும்எனில் பித்தர்
உரையில் திகழும் உணர்வுஒழிந் தனையே
கருமம் செய்வோன் கடவுள் அன்றுஉடலும்
மருவிநின்று இருவினை வாளா நுகரா
கடவுளும் உடலின் கண்படல் துஞ்சல்
இடர்நலம் உறுதல் இறங்குதல் ஏறுதல்
எவ்வகை யேனும் செய்கைஇன்று ஆதலும்
பலகலை உலகில் நிலவுத லானும்
எண்ணரும் பொருளும் இரவியும் ஒழியக்
கண்என ஒன்று காண்கையி னாலும்
பாசப் பகுதியும் ஈசனும் ஒழியப்
பசுவும் உண்டுஎன்று இசைய வேண்டின்றே
இதுஎனும் ஒன்றை அதுவாய்ப் படுத்துப்
பொதுமையில் நிற்கும் மாயையின் பொற்புஎனப்
பொற்பணி யாவும் பொன்னாம் தன்மையின்
நிட்கள சகளத் திருவுரு நிலையும்

ஈசனே எனப் பேசுவர் அன்றி
அருவுரு வாகி வரும்உலகு என்னில்
அனைத்தும் மாயை எனத்தெளி கிலையே
ஆவதும் ஆகாது ஒழிவதும் இலதுஎனும்
பாவகம் உலகாயதனது பான்மை
கள்கொலை வெகுளி காமம் களவுகள்
உட்படும் இவைவிட மொழியாதார் இலர்
சோம பானம் சுராபானங்கள்
ஆம்என மறைகள் ஆர்செவிப் பறைந்தன
மறையோன் புலைச்சியை மருவும் என்பது
முறையோ எனில்அது புனைமொழி என்னில்
சாதி பேத நீதிநீ தவறினும்
மேதியை ஏறு விழையா விரும்பும்
கண்ணினது உருவும் அதில் கதிர்ஒளியும்
நண்ணரும் சத்தின் நாடகம் எனில்அதற்கு
ஏதுவும் பயனும் ஓத வேண்டும்
நின்மொழி விரோதமும் நீடுஉலகு இயற்கையும்
தன்மசாத் திரமும் சகலமும் என்செயும்
உலகு ஏழ் எனஇறை பலவாம் தன்மை
கடமொடு சாரவம் கலசம் ஆதிகள்
அடல்உறு குயவன் ஆயினன் என்றால்
தானே ஆகா அவைதான் ஆகான்
ஆயினன் என்பது ஆக்கினன் எனவே
ஆனாய் என்பது அனைத்தும் அவ்வகை
தான் ஆகாமையைச் சாற்றிடும் என்க
தாமே எனும்இத் தனி ஏகாரம்
அழிந்திலர் அதுவே ஆய்த்திலர் அதுவிட்டு
ஒழிந்திலர் பிரிவிலர் எனும்இவை உணர்த்தும்
காயும் பழமும் சுவையும் நுகர்வது
ஆயவன் தானும் அவன்முதற்று என்னும்
அகிலமும் தெளிய அறிவோன் தானும்
அகிலமும் அறிஞரை அறிவிப்போனும்
அறிஞர்க்கு அறிவாய் அறிகின் றோனும்
அறிவிற்கு அறிபொருள் ஆவோன் தானும்
அகிலமும் மேனி ஆனவன் என்னும்
தருபொருள் கொள்பொருள் தருவோன் கொள்வோன்
ஒருபொருள்ஆயின் உவப்பு உண்டுஎன்க
நுகர்வோன் தனக்கு நுகர்பொருள் வேண்டிற்று
இகல்அறக் கிடையாது இருந்தது என் நிரயமும்
வேண்டா ராயினும் மெய்யுறு வியாதிகள்
ஈண்டாது ஒழியாது இறைக்குஇவை ஈடுஅல
சத்தியும் சிவமும் தாமே நுகரும்என்று
இத்திறன் உணர்வுவந்து எய்துவது எவர்க்கோ
தமக்கே என்னில் தாம் உணராமையும்

அமைப்பு அறஉணர்தலும் அவர்க்குஅடைவு அன்றே
நானும் அவனும் நவையும் நலனும்
தான்அவன் ஆகையும் நின் சாதனத்தில்
சகயோ கத்தைச் சாயுச் சியம்எனப்
பகர்வது பதிபசு பாசத் தவர்க்கே
யாதுஒரு வகைஎன ஓதியது இறைநூல்
சொன்னவற்று ஒன்றுஅன்று என்னில்வீடு எளிதே
தான்அறி வழியே தலைப்பொருள் பிடிக்கில்
மேல்நிகழ் பலமும் வீடுஅளித் திடுமே
நிலையாக் கருவியை நிலையாக் கருதிப்
புலையாடுதலும் உலகா யதன்பொருள்
குட்டியம் இன்றிநற் கோலம் எழுதுதல்
இட்டம தாயில் கருவியும் இடங்களும்
கருத்துற உரைக்கத் தெரித்திடும் அதீதத்து
அறிவொன்று இல்லோர்க்கு இறைஅருள் உதவுதல்
பிறிவுஅறிவு அரிய செறிஇருள் இடத்துஓர்
அந்தகர் காண வந்தோர் எம்மை
நீவிரும் காண வேண்டும் என்றுஆங்கு
எடுத்துஓர் தீபம் கொடுத்ததை ஒக்கும்
இச்செயற்கு இறைவன் கொச்சையன் அன்றே
கருவி வசத்தில் தெரிவுறக் காண
வேண்டுநர் இலரால் ஈண்டுஅறிவு யாவும்
சிவமே என்று செப்பினை அவம்உறு
பொறிபுலன் அறியா அறிவது பிரமம்
என்றோர்க்கு உன்போல் இடர்ப்படல் இலதே
ஏற்றம் கருவி இருபதோடு இரண்டும்
போற்றும்ஐந்து அவத்தையும் புகல்திரி மலமும்
ஈசனும் உயிரும் பேசினை அஃது ஒழிந்து
ஒன்றே ஆகும் என்றநின் இயல்பு
தாயர் மனைவியர் தாதியர் தவ்வையர்
ஆயவர் எவரையும் ஓர்மையில் காணும்
கோகழி தூர்த்தர் கொடுந்தொழில் தகுமே
ஆக மற்றுஅதன் அருள்நிலை தன்நிலை
ஏக நாயகன் ஆகிய இறைநிலை
நாசம்இல் பாசம் வீசிய வியன்நிலை
இனையவை ஒன்றும் நினைவினும் இன்றி
உண்டுஎனும் உணர்வில் கண்டது கருதில்
இழுக்குஎனும் புலன்வழி ஒழுக்கமும் அதுவாய்க்
கொண்டு பண்டையில் எண்தரு மடங்கு
வந்தவா செய்யத் தந்ததை அன்றே
புன்மைகள் நீங்க உண்மை கேண்மதி!

19. சைவவாதி சங்கற்பம்

அறிவாய் அறியும் அறிவுஉயிர் கேவலத்து
அறிவிலன் இருளொடும் பிறிவிலன் அண்ணல்

கலைமுதல் ஆக நிலவிய கருவிகள்
விளக்குஎன உதவும் துளக்குஅறப் பொருந்தி
இருவினை நுகர்வில் வருவினை செய்து
மாறிப் பிறந்து வருநெடும் காலத்து
இருள்மல பாகமும் சத்தி நிபாதமும்
மருவுழி அருள்உரு மன்னவன் அணைந்து
செல்கதி ஆய்ந்து பல்பணிப் படுத்திக்
கருவியும் மலமும் பிரிவுறப் பிரியா
ஞானம் நல்கலும் தான்அது நோக்கித்
தன்னையும் அதனையும் தன்முதற் பொருளையும்
இன்னஎன்று அறியா இருவரும் முயங்கி
ஒன்றாய் உறுபயன் உவப்பும்
இன்றாய் நிற்கும் இதுசிவ கதியே. 12

20. சைவவாதி சங்கற்ப நிராகரணம்

இதுகதி யாக முதல்அறிவு உயிரேல்
பொறிபுலன் நீங்க அறிவுஉயிர் அன்றே
அடைகாய் நூறின் இடைசேர் சிவப்புஎன
இந்தியத் தொகையின் வந்துஅறிவு ஒன்றுநின்று
இன்றாம் என்றல் அன்றே எந்தை
அறிவுஇலன் அதீதச் செறிவில்என்று உரைத்த
நின்மொழி விரோதமும் பின்முன் மலைவும்
மன்வயின் நிகழா மலம்இருள் இறைஒளி
ஆன்மா விளக்கில் தகும்மருள் கலாதிகள்
ஈனம்இல் இவன்இடத்து எவ்வாறு இசைந்தன
இசைந்தது ஆயினும் இசையாது ஆயினும்
அசைந்திடும் முத்தி சாதனம் அவமே
சத்தி நிபாதமோ தகுமல பாகமோ
உய்த்த காரண காரியம் ஓதுக
பாகம் காரணம் ஆகில் மற்றுஅது
கால அவதியில் காய அவதியில்
மேலாம் என்னும் வினைஉறும் அவதியில்
துயர்என உயிர்க்குத் தோன்றிடும் அவதியில்
நயம்மிகும் இறைவன் நல்கிடும் அவதியில்
ஏதில் கூடும் ஓதுக இருவினை
ஒத்த எல்லையில் வைத்தனர் என்னில்
அருவினை தூக்க உருவினை நில்லாது
ஒருவினை புரிகால் இருவினை ஆகா
ஒப்புறு மாறு செப்புக தேசிகன்
அருள்உரு என்ற பொருளினை ஆயின்
மாயா உருவினன் மாயா உருவினை
ஏயான் ஏய்ந்தவர் எம்ம னோரே
பல்பணி ஞான காரணம் என்னில்

தொல்பணி தொறும்பயன் தொடுப்பதனாலும்
ஒருபணி செய்யாச் சிரபுரச் சிறுவரும்
அரசர் ஆகிய தருணத் தலைவரும்
முதிர்பர சமயத்து இதம்உறும் அரசரும்
ஞானம் பெற்ற நன்மையி னாலும்
ஈனம்இல் பணிஅருட்கு ஏதுஅன்று என்றால்
ஞானோர் பத்தி நிமித்தம் இத்தொழில் என
ஏனோர்க்கு இறைநூல் இயம்பிற்று என்னாம்
கருவியும் மலமும் பிரிவுற அருள்தரும்
என்றனை கேவலத்து ஏதும் அறிவிலன்
துன்றிய சகலத்து அருள்நிலை தோன்றாது
எவ் அவத்தையில் இறைஅருள் பெறுகுவம்
செவ்விய ஞான தெரிசனம் ஆவது
நால்வகை மாயைப் பால்வரு ஞானம்
பண்டை ஞானம் இதுபறி தரவரக்
கண்ட ஞானம் இதுவாக் காணில்
ஈனம்இல் ஞானிகள் என்போர் யாரும்இல்
ஞான வேற்றுமை நாடலும் அரிதே
தானும் ஞானமும் தலைவனும் என்றனை
ஆனபின் இவனும் இவனது ஞானமும்
பாசமும் பாச ஞானமும் என்று இவை
பேசுவர் ஒன்றாப் பெற்றிய ஆகலின்
மும்மைப் பொருட்கும் மும்மைத் தன்மை
செம்மைத்து என்னில் செலவுகள் எழுதுக
இருவரும் கூடி ஒருபயன் ஆய்த்துஎன்று
அருளினை இவ்வாறு அபேதிகள் நிலையே.

21. சித்தாந்த சைவாசாரியார் அநுக்கிரகம்

பதிபசு பாசம் முதிர் அறிவுகளுடன்
ஆறா முன்னர்க் கூறாப் பின்னர்
இருபொருள் நீத்துமற்று ஒருநால் வகையையும்
ஈனம்இல் ஞாதுரு ஞானம் ஞேயம்என்று
இசைய மூன்றாய்ப் பசுபதி என்றவற்று
இரண்டாய் இரண்டும் ஒன்றின் ஒன்றுஆகத்
திரண்டுஆம் பயன்எனும் திருவருள் தெளியில்
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றாம்
என்றுஇறை இயற்கை இயம்புதல் தகுமே
ஒன்றாம் என்றல் அன்றியும் உவப்பும்
இன்றாம் என்றால் என்பயன் இயம்புக
என்றனை வினவும் யாவும் விளங்க
வென்றிகொள் கருத்தில் விரும்பினை ஆயின்
நதிக்கரை ஆன்எனக் கொதித்தல் மறந்து
வெண்ணெய் அம்பதிதிகழ் மெய்கண்டவன் அருள்

உள்நிலை உடையோன் ஒருவன் உரைத்த
தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காசச் செழுந்தமிழ் உண்மையை
அருளுடன் ஆய்ந்து கொள்ளத்
திருவருள் வினவல் திருந்திடும் அன்றே. 13

திருச்சிற்றம்பலம்

★

சங்கற்ப நிராகரணம்

முற்றும்

★

வெண்பா

தராவலயத்து உள்ளோர்கள் தந்த சங்கற்ப
நிராகரணம் என்னால் நிகழ்த்தும் — பிரானை இனி
வெம்பந்தம் நீங்கத் தொழுமின் வியன்மருதச்
சம்பந்தன் வநது அருளும் தான்.

பாட்டு முதற்குறிப்பு அகராதி

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
அகத்து உறு	217	அம்மையிலும்	12
அகம் புறம்	210	அயன் அரி	143
அகர உயிர்	213	அயன்தனை	96
அகலத்தரும்	217	அயன்தனை	120
அகலியை	130	அரக்கொடு	20
அகளத்தில்	14	அரசனும்	128
அகளமயமாய்	5	அரண உணர்வு	9
அகளமாய்	1	அரவுதன்	21
அகாரம்	25	அரன் அடிக்கு	127
அக்கரங்கட்கு	184	அரன்விதி	132
அங்கித்தம்பனை	168	அரிசனம் நூறு	70
அங்கியானது	51	அரிசனம் பூசி	141
அங்குரம்	63	அரிதேர்ந்து	252
அசத்து அறியாய்	27	அரியினொடு	61
அசித்து அரு	147	அரிவையர்	200
அசித்து எனில்	145	அரு அவிகாரி	145
அஞ்சி அன்று	99	அரு உணர்வு	66
அஞ்சு எழுத்தால்	33	அரு உரு ஈனா	113
அஞ்சு எழுத்தால்	165	அருகனுக்கு	72
அஞ்சு எழுத்துமே	7	அருக்கன்	35
அஞ்சு எழுத்தும்	231	அருஞ்செய	82
அஞ்சு எழுத்தே	186	அருத்திமிகும்	195
அஞ்சே அஞ்சாக	2	அருந்தவனாம்	82
அடைபவர்	206	அருந்து இன்ப	106
அணுகுதுணை	216	அருமறை ஆகமம்	42
அணுவானவை	77	அருமறை ஆகமம்	158
அண்டசம்	139	அருவமே இறைவன்	46
அண்டம் முதலாம்	4	அருவமோ உரு	115
அண்டம் மேவிட	210	அருவம் உரை	83
அண்ணல் முதலா	186	அருவினில்	113
அது இது என்றது	37	அருவும் உரு	213
அது இது என்றும்	13	அருவுரு என்னில்	145
அது இது என்னாது	4	அருவுருவம்	29
அதுவென்னும்	28	அருவெனில்	59
அத்துவா	119	அருவேல் உரு	224
அந்தக் கரணம்	24	அருளால் உணர்	224
அந்தக் கரணம் அடைவே	183	அருளாவகை	217
அந்தரியாகம்	166	அருளிற் பெரிய	216
அந்தவாய்	71	அருளினால்	104
அப்பாமுத்திக்கு இம்	187	அருளினால் உரை	128
அம்மை அப்பர்	5	அருளுண்டாம்	27

பாட்டு	பக்கம்
அருள் அது சத்தி	152
அருள் நூலும்	221
அருள் முன்பு	175
அர்த்தம் தெளி	84
அலகில் குண	198
அலகில் மணி	86
அலகிறந்த	61
அலைகடல்	94
அல்லல்மிக	195
அவயவம்	69
அவன் அவள்	18
அவன் இவனாய்	14
அவன் இவன் ஆனது	4
அவனே அவனி	14
அவனே தானே	33
அவனை அகன்று	222
அவன் அவள்	18
அவிழ இருக்கும்	3
அவிழ்ந்த	10
அவையே தானே	19
அவ்வவ யோனி	131
அவ்வினையை	20
அவ்வுடலின்	23
அவ்வுடன்	143
அழிகின்ற	82
அழித்திடும்	60
அழிந்தபின்	110
அழிந்திடும்	208
அழிந்துணர்வை	64
அழிப்பு அரி	96
அழிப்பு இளைப்பு	115
அழிவிலா	157
அளவை காண்டல்	105
அறத்தின்	72
அறிகின்ற	81
அறிதருமுதல்	150
அறிந்திடா	57
அறிந்திடும் ஆன்மா	151
அறிந்திடும் பிராண	142
அறிந்திடும் மனாதி	204
அறிந்தும்	24
அறிபொருள்	154
அறிய இரண்டு	28
அறியாமை அறிவு	162
அறியாமை உள்	217
அறியான் புருடன்	93
அறிவது ஐம்பொறியே	142
அறிவதே	69
அறிவறிவாய்	8
அறிவாய் அகில	84
அறிவிக்க அறிதலானும்	155
அறிவிக்க அன்றி	30
அறிவினால்	201
அறிவினோடு	92
அறிவு அரியான்	171
அறிவு அறிந்தது	223
அறிவு அறியாமை	174
அறிவு இச்சை	144
அறிவு இலன்	150
அறிவு உடற்குண	50
அறிவுடல்சிந்	148
அறிவு தான்	51
அறிவு பூதமது	49
அறிவுறும்	153
அறிவெனில்	201
அறுவகைச்	103
அற்றது என்	177
அனாதி உடல்	169
அனாதி சிவன்	9
அனாதி முத்த	68
அனாதியே	107
அனாதியேல்	51
அனைத்தினையும்	60
அனைத்தும்	155
அன்பே	10
அன்றளவி	215
அன்றளவு	214
அன்றியும் கேள்	184
அன்றியும் யானை	99
அன்றிவரும்	8
அன்று அன்று	22
அன்றுமுதல் ஆரே	6
அன்னிய சாதி	106
அன்னியம்	28
அன்னியம் ஆனவை	197
அன்னியம் இலா	154
ஆகமங்கள்	5
ஆக்கப்படாத	7
ஆக்கி எவையும்	213
ஆக்கி ஒரு	7
ஆக்கில் அங்கே	2
ஆங்காரம்	133
ஆசு ஆதியேல்	215
ஆசில் நவா	221
ஆசுறு திரோதம்	209
ஆசையுற்று	53
ஆடும்படி	185
ஆணவம் தான்	169
ஆணையால்	128
ஆதவன் தன்	186
ஆதனமும்	12

பாட்டு	பக்கம்
ஆதாரத்தாலே	2
ஆதாரம் ஆகி	15
ஆதாரயோகம்	7
ஆதி தான்	95
ஆதி நடு	41
ஆதிமலம்	186
ஆதியாய்	93
ஆதியை	7
ஆமையாய்	97
ஆயம் உடன்	84
ஆரணங்கள்	91
ஆரணம் ஆகம	117
ஆராதி ஆதாரம்	221
ஆர் அறிவார்	217
ஆர்வ கோப	72
ஆவதாய்	153
ஆளுடையான்	15
ஆறாறு தத்துவமும்	181
ஆறாறு தத்துவமும்	183
அறாறு தத்துவமும்	184
ஆறுகாரிய	74
ஆறுசுவை	184
ஆறு தாது	86
ஆற்றால்	6
ஆன ஐம்பொறி	49
ஆனகன்ம	87
ஆனதனு	198
ஆனந்தம்	83
ஆனா அறிவாய்	213
ஆன்மாவின்	144
இக்கணமே	15
இங்கு அடா	97
இங்கிவை	200
இங்கு நாம்	127
இங்குளி	34
இங்ஙன் இருந்தது	1
இச்சையால்	95
இச்சை வெறுப்பு	64
இடித்து	48
இதம் ஆகி	124
இது கதியாக	265
இத்தகைமை	198
இந்தனத்தில்	166
இந்திர புரோகிதன்	44
இந்திரியம் எனை	167
இந்திரிய வீதி	66
இந்துவில்	33
இந்நிரையில்	199
இந்நிலை தன்னில்	206
இந்நிலை தான்	162
இந்நூலைச்	62
இப்படி அன்றி	44
இப்படிப் பிருகு	101
இப்பொருள்கள்	11
இம்மையின்	123
இம்மையே	158
இயம்புகின்றது	91
இயம்பு நூல்	42
இயல்பு காண்	50
இயல்பு காண்	108
இரந்தரம் ஆகி	135
இரவு பகல் இல்லா	2
இருந்துதன்	259
இருபான்மையர்	77
இரு மலத்தார்	224
இரும்பை	170
இருவகை	149
இருவர் மடந்தை	220
இருவினை அனாதி	130
இருவினை இன்ப	122
இருவினை என்னை	123
இருவினைச் செயல்	123
இருவினைச் செயல்கள்	151
இருளானது	215
இருளில் இருளாகி	214
இருளில் ஒளி	223
இருளில் பழுதை	85
இருள் இன்றேல்	215
இருள் நனி	203
இருள் பொதிந்த	90
இலகு சோதி	88
இலயித்த	18
இலாடத்தே	25
இல்லது கருணை	58
இல்லா முலைப்பாலும்	30
இவன் உலகில்	167
இவ்வகை அவத்தை	202
இறந்திடும்	51
இறந்தோய்	177
இறுதியாம்	115
இறை சத்தி	221
இறைவனே	151
இறைவனையும்	43
இறைவன் ஆவான்	159
இறைவன் இங்கு	124
இறைவன் தன்	152
இற்றைவரை	216

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
இனைய பல	199	உரு அருள்	117
இன்பு அதனை	220	உரு இயல்	54
இன்பபூமி	73	உரு உணர்வு	201
இன்பம் எய்தி	51	உரு உயிர் என்	144
இன்பில்	220	உரு மேனி	119
இன்புறுவார்	220	உருவமும்	45
இன்பொடு	45	உருவமெலாம்	63
இன்மைமலம்	197	உருவாதி கந்தங்கள்	65
இன்றிங்கு	9	உருவாதி சதுர்	194
இன்று இச்	11	உருவினில்	146
இன்று உனது	257	உருவினைக்	150
இன்று தான்	14	உருவின் கணே	81
இன்று நோக்கு	206	உருவொடு கருவி	122
இன்று பசுவின்	6	உருவொடு நின்றான்	59
ஈங்கிது	193	உரைதந்திடான்	80
ஈங்குவான்	56	உரைதரு பிரமம்	246
ஈசனது	254	உரை தரும்	156
ஈசன் அருள்	42	உரைத்த	114
ஈசனார் அயனார்	46	உரை போல்	84
ஈசனுக்கு அன்பு	171	உரையா	83
ஈண்டு அளவை	44	உரையானது	83
ஈண்டு பக்க	107	உலகமே	152
ஈறாகி அங்கே	14	உலகம் எலாம்	193
ஈறிலாதன	70	உலகம் தானும்	85
உடம்புடைய	13	உலகினில்	116
உடல் இயான்	148	உலகினை	58
உடலினின்	146	உலகினை இறந்து	117
உடலின் வேறு	141	உலகு உடல்	126
உடல் செயல்	124	உலகு எலாம்	122
உடல் நின்று	81	உழவாது உணர்	2
உடல் பூதம்	63	உளது இலது	21
உடல் வரு	74	உள்வழக்கு	56
உடல் விடா	129	உள்ளதாவது	48
உணராத	153	உள்ளது கடாதி	58
உணராதே	8	உள்ளதும் இலதும்	109
உணர்தரா	75	உள்ளதே	20
உணர்ப	27	உள்ளபடி இத்தை	181
உணர்வரு	27	உள்ளபடிமாபூதம்	182
உணர்வன	143	உள்ள முதல்	6
உணர்வு காரணம்	64	உள்ளம் உருகில்	1
உணர்வு சார்ந்து	56	உள்ளுணர்	112
உண்டு ஒரு	78	உள்ளும்	3
உண்டெனில்	9	உள்ளும்புறம்பும்	10
உதிப்பதும்	108	உள்ளும் புறம்பும்	222
உந்தியில்	94	உறும்தொழிற்கு	222
உயிரானவை	77	உறை தரும்	205
உயிரினை அணு	146	உற்கை தரும்	219
உயிரினை அருவ	57	உற்ற குறி	185
உயிரின் ஒடு	106	உற்ற தொழில்	196
உயிர் அவை	114	உற்றவர்	180
உயிர் எனப்	141	உற்றாரும்	220
		உற்றிடும்	78

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
உற்றெழு	59	என்னுடல்	148
உன்னரிய	224	என்னுயிர்	74
உன்னல் அரும்	194	என்னை இப்	104
உன்னிய அங்கம்	78	என்னை உடையவன்	15
உன்னில் நீயும்	91	என்னை இது	194
உன்னுகின்ற	92	ஏகமாய்த்தம்	194
உன்னுதரத்தே	14	ஏகமாய் நின்றே	35
உன்னும் உளது	213	ஏகம் நானென	87
ஊடுவது	47	ஏகனும் ஆகி	1
ஊமன்கண்	214	ஏகன் அநேக	218
ஊனக்கண்	31	ஏணது ஒன்று	73
ஊன நடனம்	221	ஏனும் ஒன்று	71
ஊன் அறியாது	216	ஏது மூன்றாம்	107
ஊன் உயிரால்	218	ஏதேனும்	11
எங்கள் நூல்	59	ஏழ்கடல்	94
எங்குமாய்	57	ஏற்ற இவை	193
எங்கு முளன்	21	ஏன்றவினை	222
எங்கும் எவையும்	213	ஐந்துகந்தம்	68
எங்கும் தான்	170	ஐந்துசாக்கிர	150
எங்கும் தான் எனில்	146	ஐந்து சுத்தத்தின்	136
எங்கும் தான் நிறைந்து	170	ஐந்துநான்கு	49
எங்கும் நின்	90	ஐந்தையும்	35
எட்டுக் கொண்டார்	3	ஐந்தொழிலும்	222
எட்டும் இரண்டும்	184	ஐம்புல	29
எண் அரிதாய்	193	ஐம்புலனால்	219
எண்ண ஒன்று	202	ஐம்பொறியின்	31
எண்ணிய	27	ஐம்பொறியை	26
எண் திசை	177	ஐவகையால்	198
எண் நிலவு	25	ஒடுங்கிடா	207
எத்தனையோ	9	ஒண்பொருட்கண்	220
எந்தை சனற்	38	ஒத்துஉறு	44
எப்பொருட்கும்	66	ஒத்துநின்று	90
எப்பொருளும்	62	ஒருகாலத்து	64
எப்பொருள்வந்	242	ஒரு காலத்து ஓரிடத்தில்	66
எமனுக்கு என்	217	ஒரு கோட்டன்	41
எல்லாமாய்	137	ஒரு கோட்டன்	103
எல்லாம் அறியும்	222	ஒருபுலன்	140
எல்லார் அறி	11	ஒருபொருளும்	215
எல்லாவகையும்	221	ஒருபொருளைத் தேடி	61
எல்லை இல்	209	ஒருபொருள்	109
எல்லை பலம்	183	ஒரு மரத்தின்	67
எவ் அறிவு	201	ஒருவனே	121
எவ்வடிவுகளும்	241	ஒருவனோடு	108
எவ்விடத்தும்	169	ஒருவன் என்று	55
எவ்வுருவும்	31	ஒழுக்கம்	126
எழுதலம்	97	ஒளிக்கு	231
எழும் உடல்	132	ஒளியான	189
எனக்கு நீ	58	ஒளியும் இருளும்	214
எனது என்ற	22	ஒளியும் இருளும்	219
என்று மிலாது	63	ஒன்றதாய்	120
என்னறிவு	5	ஒன்றதாய் அநேக	138
		ஒன்றறிந்த	23

35

பாட்டு	பக்கம்
ஒன்றன்று	11
ஒன்றாம்	85
ஒன்றாலும்	220
ஒன்றி நுகர்வது	224
ஒன்றினை ஒரு	76
ஒன்று அணையா	25
ஒன்று அலா	19
ஒன்று அறிந்தது	23
ஒன்று இரண்டாய்	224
ஒன்று இரண்டு	208
ஒன்று என	122
ஒன்று எனும்	154
ஒன்று என்றது	20
ஒன்றுங்குறி	6
ஒன்று மிகினும்	215
ஒன்றுரைத்தது	13
ஒன்றொடு	118
ஓங்காரமே	185
ஓங்கிய	60
ஓங்கிவரும்	196
ஓங்குணர்வின்	222
ஓங்கொளியாய்	189
ஓசைநற்பரிச	134
ஓசையெலாம்	8
ஓடம் சிவிகை	12
ஒட்டற்று	8
ஓட்டு அற்று	2
ஓதிய வாசு	98
ஓதி உணர்ந்து	156
ஓதியிடும்	183
ஓதியே உல	89
ஓதுசமயங்	158
ஓராதே	218
ஓரிடம்	109
ஓர் இடத்து	202
கடத்தினில்	69
கடலமுதே	176
கடல் அலை	14
கட்டும் உறுப்பும்	20
கண்ட அத்தை	1
கண்ட இவை	165
கண்டதை	33
கண்டதொரு	37
கண்டத்தைக் கொண்டு	6
கண்ட நனவை	21
கண்ட நூல்	73
கண்டபடியே	218
கண்ட பொருளை	105
கண்டவற்றை	214
கண்டறியும்	23
கண்டிடும்	165
கண்டு அறி	203
கண்டு உணர்	149
கண்ணகல்	173
கண்ணப்பன்	10
கண்ணினில்	75
கண்ணுதலுங்	173
கண்ணுதல் நூல்	183
கண்ணுதல்யோகு	118
கண்ணும்	10
கண்ணொளி	202
கண்தொல்லை	218
கந்தமலர்	193
கந்தம் வெம்மை	51
கரணங்கள்	164
கரணம் வாயு	52
கருதிய கன்மம்	80
கருது காரண	111
கருதுவதன்	2
கருமங்கள்	82
கருவிஆம்	143
கருவி எல்லாம்	82
கருவிகண்படு	70
கருவிகழிந்தால்	163
கருவிதன்	72
கருவியால்	151
கருவியும்	69
கருவியும் ஒளி	61
கருவியும் பொரு	159
கருவினுள்	140
கலைஆதி	24
கல்லால்	17
கல்லில்	10
கழிந்தவுணர்	65
களியே	218
கள்ளத் தலைவர்	222
கள்ளரோடு	3
கற்றநூல்	114
கற்றாமன	187
கனவு நனவு	222
கன்மநெறி	195
காட்டிடும்	204
காட்டிய கண்ணே	32
காணும் கண்ணுக்குக்	35
காணொணா	51
காண்கின்றது	8
காண்டலே	48
காண்டல்	105
காண்பவன்	127
காண்பானாங்	224
காண்பான் ஒளி	219
காம மாதி	53
காயத்தின் அழிவு	109

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
காயத்தின்குணமது	45	சத்து இது	201
காயத்துள்	4	சந்தானம்	64
காயமுடன்	65	சந்திரன்	145
காயம் ஒழிந்தால்	168	சலம் இலனாய்	167
காரண அணு	110	சன்மார்க்கம்	159
காரண காரியத்தின்	55	சன்மார்க்கம்	160
காரணம் அவை	50	சன்னிதி	144
காரிய காரணங்கள்	111	சாக்கிரத்தே	163
காரியமாய்	67	சாக்கிரம்முப்	149
காரியம் என்பது	110	சாத்திரத்தை	5
காலமே கடவுள்	110	சாந்தியாதீத	157
காலம் நியதி	183	சாம்பொழுதும்	9
காற்றினை	3	சார்ந்தாரை	34
கிடந்த கிழவி	2	சார்பினில்	109
கிடைக்கத்	219	சார்புணர்ந்து	8
கிரியை என	191	சாவிபோம்	3
குடை நிழலும்	68	சாற்றிய காலம்	57
குணங்களை	144	சாற்றிய பஞ்ச	135
குரோதமே குணமாய்	53	சாற்று பெயர்	44
குறிகள் வச்சிர	135	சாற்றும் மறை	87
குறிகுலிசம்	182	சித்தமாம்	133
குறித்தது ஒன்று	117	சித்தமும்	3
குறித்து அடியில்	165	சித்தாந்த	159
குறிப்பிடம்	210	சித்தே உலகாய்	91
குற்ற வீடு	55	சிந்தித்து	25
குற்றம் அறுத்து	14	சிந்தையிலும்	15
குன்றா அரு	184	சிந்தையின்	4
கூடா அணு	77	சிலபொருளை	60
கூறிய மூன்று	174	சிவஞான	161
கூறு கூவல்	74	சிவமென்னும்	37
கூறு சேர்வையின்	49	சிவமே சிவ	13
கேடிலார்	64	சிவம் சக்தி	136
கேட்டலுடன்	160	சிவம் சத்தி	137
கேவல சகலம்	150	சிவம் முதலே	221
கைவரை	98	சிவனருள்	186
கொண்டது ஒரு	7	சிவனை அவன்	164
கொண்டுமுன்	75	சிவன் அரு	122
கொல்கரி	12	சிவன் எனவே	14
கொன்றிடல்	59	சிவன் சீவ	170
கோச உருவில்	86	சிவன் முதலே	11
கோலம் கொண்ட	179	சிறை செய்ய	31
சகமார்க்கம்	160	சிற்றறிவு	224
சங்கமம்	130	சிவமோ	114
சதசத்தாம்	34	சீவர்கள்	96
சத்திதன்	120	சீவனும்	120
சத்திதான் நாத	137	சுட்டி உணர்வதனை	32
சத்திதான் பல	102	சுத்த தத்துவ	135
சத்தியாய்	137	சுத்தமாம் சத்தி	205
சத்தியும்	121	சுத்தமாம் விந்து	119
சத்தியே	116	சுத்தமாய் ஆன்ம	146
சத்து அசத்து அறி	155	சுத்த மெய்	155
சத்து அசத்தை	214	சுத்தம் ஆனது	90

பாட்டு	பக்கம்
சுத்த வடிவு	43
சுத்த வித்தை	183
சுத்தன் அறிவன்	93
சுரந்த	10
சூக்கும உருவு	145
சூக்கும தேகி	147
சூக்குமம்	131
சூக்கும வாக்கது	112
சூடகம்	92
சூரியகாந்த	161
சூலிகாண்	100
செங்கமலத்	171
செத்தாரே	10
செப்பினாய்	131
செம்பு இரத	170
செம்மலர்	36
செயல்களே	125
செயல்தரும்	79
செய்க்கிடும்	125
செய்தவர்	126
செய்தற்கு	11
செய்திடும்	45
செய்தியும்	79
செய்யார்	11
செய்யில்	7
செய்யும்	7
செய்வானும்	218
செறிந்திடும்	200
சென்ற நெறி	4
சென்று அணையும்	170
சென்று இவன்	186
சேர்க்கும்	185
சேர்ந்த	255
சொல் தொழும்பு	177
சொல்லும் இடம்	3
சொல்லும் பொருள்	3
சொல்வது ஒன்று	72
சொல்வந்து	83
சொன்ன இத்	115
சொன்ன நால்	56
சொன்னமுறை	199
சோதிமாமணி	90
ஞாலம் அதில்	162
ஞாலம் உண்ட	99
ஞானஞேய	57
ஞானத்தால்	161
ஞானநூல்	160
ஞானபோக	172
ஞானமே	121
ஞானம் இவன்	217
ஞானேந்திரிய	182
தத்துவங்கள் ஆறா	184
தத்துவங்கள் எல்லாம்	186
தத்துவமான	205
தத்துவம் எண்	136
தத்துவம் சத்து	153
தத்துவ ரூப	136
தந்தைதாய்	125
தப்பிலா	79
தம்மில் சிவ	9
தம்மில் தலை	5
தம்மை உணர்ந்து	17
தராவலய	267
தருமாதரும	180
தரையை	216
தவகுணனாய்	100
தவம் செய்தார்	30
தனக்கு நிழல்	219
தனக்கென	203
தனுகரண	137
தன் அறிவு	205
தன் உணர	37
தன் நிலைமை	223
தன் நிறமும்	218
தன்மமோ	129
தன்னியல்	123
தன்னை அறிவித்து	37
தன்னைப் பெறு	9
தாக்கியே	2
தாங்கும்	85
தாடலை போல்	220
தாத மார்க்கம்	159
தாதுவானது	95
தாபரசங்கம	127
தாமடங்க	12
தாமேதரு	219
தாரத்தோடு	13
தானஞ் செய்	126
தானம் என்று	97
தானம் யாகம்	161
தானேதானாய்	87
தித்திக்கும்	219
திரவியம்	125
திரிமலத்தார்	214
திருக்கோயில்	171
திருச்சிலம்பு	2
திருந்திய	243
திருவருள்	211
திருவெழுத்து	209
திறம்பெற	261
தின்னுமது	67
தீங்குறு	209
துரியம்	3

பாட்டு	பக்கம்
துரியம் கடந்த	12
துன்பமாம்	10
துன்புறும்	215
தூங்கினரை	6
தூநிழல்	219
தூல உடம்பாய	9
தூலத்து அடுத்த	15
தூலமாம்	132
தெரித்தகுரு	192
தெரித்தது என்	175
தெரிந்த	152
தெரிவு அரிய	169
தேசம் இடம்	162
தேசுற	205
தேரரி இறை	100
தேராது உரைப்	178
தேவரில் ஒருவன்	117
தேவரும்	78
தேவர்பிரான்	190
தையலார்	47
தொண்டர்கள்	211
தொன்மையவாம்	192
தோல் இரத்தம்	53
தோற்பாவை	147
தோற்றமும்	110
தோற்றம் துடி	185
தோற்றிய	55
தோற்றியிடும்	199
தோற்றுவித்து	114
நங்கையினால்	13
நசித்து	36
நண் அனல்	34
நண்ணிடும்	115
நண்ணியிடும் உரு	195
நம்செயல்	1
நரர்களாய்	130
நரர்பயில்	140
நலம் இலன்	213
நலம்தரல்	190
நல்ல சிவ	6
நவிற்றிய	245
நற்குஞ்சர	213
நற்செவி	134
நற்றவத்தோர்	184
நன்றா உரை	184
நன்றாக நீர்	182
நாடிய சத்தி	200
நாடியோ	32
நாடுகளில்	168
நாட்டும் இதயம்	166
நாதாந்த	185
நாமல்ல	34
நாயகன்	118
நாரணன்	96
நாலாய	4
நாற்கோண	181
நானே பிரமம்	84
நான் அவன் என்று	34
நிகழ்ந்திடும்	112
நிக்கிரகங்கள்	125
நித்தமாய் அரு	132
நித்தமாய் எங்கும்	79
நியதி பின்	133
நிர்க்குணனாய்	32
நிலம் புனல்	108
நிலவு உலகா	211
நிறைந்து	73
நிறைவெங்கு	82
நிற்றலோடு	71
நின்றபடி	13
நீக்கம் இல்	202
நீடுபரா	192
நீடுபாவ	73
நீடு புகழ்	43
நீடும் இரு	218
நீடும் ஒளி	223
நீடு வேதம்	88
நீதியா நித்த	80
நீதியார்	54
நீதியால்	88
நீரின் வந்து	49
நீர்போல	60
நூலினை	95
நூலுரைத்தான்	62
நெல்லில்	84
நெல்லிற்கு	20
நெல்லினுக்கு	169
நோக்காது	19
பக்க மூன்றின்	106
பசித்தல்	71
பசித்து உண்டு	30
பசிப்படுத்து	80
படிக்கும் நூல்கள்	54
படை கொடு	149
படைத்தது	194
படைப்பன்	182
படைப்பு ஆதி	118
பண்டை நல்	104
பண்ணையும்	20
பந்தமான	209
பந்தமும்	116
பயப்பட்டு	101

பாட்டு	பக்கம்
பரசுடன்	98
பரஞானத்தால்	168
பரந்தபரா	189
பரந்து மீது	71
பரப்பமைந்து	216
பரப்பிரமம்	172
பரிணாமம்	83
பரிதியை	138
பரை இடமா	185
பரை உயிரில்	242
பலகலை ஆகமம்	192
பலரைப்புணர்	215
பலவிதம்	156
பல் ஆருயிர்	213
பல் நிறங்கள்	163
பல் நிறம் கவரும்	204
பழக்கம்	1
பழுதிலா	48
பற்றது இன்றி	89
பற்றிடும் கருவி	207
பற்றினுட்	8
பற்றை அறுப்பது	2
பன்மொழி	215
பன்நிறம் காட்டும்	31
பன்னகம்	129
பாச ஞான	164
பாசத்தை	100
பாசமா	207
பாசமும்	255
பாசிபடு	163
பாதகங்கள்	242
பாதகம்	7
பாயிருள்	241
பாய்பரி	12
பார் ஆதி	182
பார் திகழ	190
பார்த்தனார்	99
பார்புனல்	75
பார்வையென	217
பாலரொடு	156
பாலை நெய்தல்	6
பால் ஆழி	216
பாவக மேல்	28
பாவிக்கின்	208
பாவிப்பது	154
பிணத்தினை	141
பிரமம்	100
பிறந்தநாள்	214
பின்வரும்	98
புகலும் மலம்	197
புகல் அரும்	206
புகையால்	107
புண்ணிய பாவம்	76
புண்ணிய பாவம்	36
புண்ணியம் மேல்	162
புத்தனவன்	62
புத்திமன்	111
புத்திர மார்க்கம்	160
புந்தியை	148
புருடனே	149
புருடன் தன்	139
புருடன் பிர	93
புலன் அடக்கி	222
புல்லறிவு	223
புறச்சமயத்தவர்	191
புறச்சமயநெறி	158
புறம்வேயும்	166
புற்றின் நேர்	88
புன்செயலி	218
பூதத்தே	46
பூதம் அதின்	44
பூதம் ஆனவை	48
பூத மானவை	52
பூதமேவு	50
பூதனா	129
பூதாதி ஈறும்	18
பூமன்னு	225
பூமா என	83
பூர்வகன்மம்	74
பெண்டிர்	4
பெருக்கநுகர்	216
பெருமைக்கும்	213
பெரும் கடல்	243
பெறுவதிங்கு	58
பெற்றசிற்றின்பமே	3
பேசரிய	198
பேசாமை	8
பேயும்நரகரும்	65
பேய் ஒன்று	220
பேய்த்தேர்	29
பேரின்பம் ஆன	4
பேரின்பமான	13
பேரிழவு இடையூறு	76
பேறுஇழவுஇன்ப	123
பொய் இருண்ட	217
பொய் காட்டி	181
பொய்கை	94
பொருளது	70
பொருளாம்	231
பொருளும்	15
பொருள் இந்தி	84
பொறிஇன்றி	214

பாட்டு	பக்கம்
பொறிபுலன்	151
பொற்கொழு	4
பொற்புறு	207
பொன்குலாவு	53
பொன்பார்	182
பொன்மை	121
பொன்வாள்	36
பொன்னணி	148
பொன்னிறம்	13
போகத்தை	46
போகியாய்	118
போக்கொடு	79
போதகாரியம்	138
போதமிகுத்தோர்	43
போதமுண்டு	56
போதமும் தவிர	68
போதமும்மெலி	50
போதமே பொருளாய்த்	68
போது	107
போற்றி திரு	229
போற்றும்	86
மண் கடின	182
மண்ணினில்	113
மண்ணுளே	129
மண் தனில்	153
மண் புனல்	55
மண் புனல் அனல்	135
மண்முதல்கர	210
மண்முதல்சிவ	241
மண்முதல் நாளம்	33
மதிநிலா	47
மதிநின்பால்	177
மதி நுதல்	175
மந்திரங்கள்	157
மந்திரத்தால்	172
மந்திரம் அதனில்	119
மந்திரம் அத்து	119
மயக்கமது	29
மரங்கள்	67
மருத்து எண்ணெய்	63
மருத்துவன்	128
மருவிய அளவை	54
மருவிய பொறியில்	203
மருவு ஆனந்தம்	147
மருளும்	2
மலம் என	138
மலம் மாயை	139
மலர் தலை	17
மலை கெடுத்	216
மறப்பித்துத்	36
மறைகள் ஆகமத்	255
மறைகள் ஈசன்	128
மறைநின்று	81
மறையினால்	104
மனமது நினைய	126
மனம் அது	134
மனம் ஆதி	24
மன்னவன்	156
மன்னன் அருள்	12
மன்னிய கன்ம	176
மன்னியகன்	195
மன்னுசிவன்	26
மன்னுமறை	91
மன்னும் இருளை	35
மன்னும் பிரமம்	85
மாசறு காட்சி	105
மாயநூலது	89
மாயமான்	98
மாயாதனு	25
மாயைதனை	185
மாயைதான் உயிர்	99
மாயைதான் மலத்	116
மாயை மா மாயை	204
மாயைமுதல்	197
மாயையாய்	95
மாயையில்	132
மாயையின் உள்ள	111
மாயையின் காரி	139
மாயையின் வயிற்றுள்	147
மாயையே	138
மாய்ந்துபின்	45
மால் அயன்மா	43
மால் ஆர்	221
மாவினார்	97
மாறி இவ்	131
மானுடப்பிறவி	140
மான் அமரும்	178
மிகையாம்	77
மிக்கதொரு	161
மீன் ஆமை	94
முடிவின்றி	81
முத்தி என்பதை	252
முத்திதனில்	187
முத்திதனை	186
முத்திநிலம்	60
முத்திமுதலுக்கே	4
முத்திமுதல்	14
முந்திய ஒருமை	207
முந்திய பூதங்கள்	194
மும்மலம்	139
மும்மை தரும்	222
முழுதுணர்ந்து	54
முற்செயல்	124

பாட்டு	பக்கம்
முன்கண்ட	84
முன் நூலும்	62
முன்னாக	61
மூல மலத்	253
மூலம்புரி	92
முலை இருந்தாரை	2
மூவகை அணு	113
மூவகை ஆருயிர்	191
மூன்றாய	220
மூன்று திறத்துஅணு	157
மூன்று திறத்து	214
மூன்று பக்க	106
மெய்ஞ்ஞான	29
மெய்ஞ்ஞானம் தானே	30
மெய்வினையே	6
மேலைக்கு வரு	196
மேலைக்கு வித்தும்	124
மொய்தரு	136
மொழிந்த	175
மோகம்	12
மோகம்மிக	196
மோனந்த	185
யாதேனும்	13
யாது ஒரு	127
யாவையும்	28
யான்செய்தேன்	167
வகுத்து உரை	253
வஞ்சமுடன்	219
வண்டுகள் ஆகி	130
வண்மைதரு	181
வந்து அடைந்து	197
வரங்கள்	7
வரும்குண	133
வரம்பிலா	75
வளம் நிலவு	190
வாக்காலும்	231
வாக்கு ஆகாயம்	183
வாக்கு மனம்	186
வாக்கொடு	134
வாசமாமலர்	70
வாசமார்	49
வாசி அருளி	221
வாயாதி	134
வாரா நெறி	76
வாழவே	46
வாழ்ந்தேன்	187
வாழ்வு எனும்	140
வானகமும்	10
வானம் கீழ்	96
வானிடமாய்	182
விச்சையில்	133
விடம்நகுலம்	217
விடிவாம்	215
விதிப்படி	131
வித்தகயோக	116
வித்தியா	183
வித்தினை	3
விதுண்டாம்	19
வித்தும்	11
வித்தெழுந்து	92
வித்தைகள்	113
வித்தையில்	157
வித்தையோடு	121
விந்துவின்	111
விரிந்தும்	12
விரியமநமந	221
விரும்பிய	191
விளம்பிய	26
விளம்பிய வகையில்	208
வினையால்	37
வினையுணர்வ	65
வீட்டிலே	11
வீட்டில்	3
வீட்டினை உளது	47
வெண்மை	76
வெய்யோன்	26
வெள்ளத்துள்	216
வேண்டுங்கால்	9
வேதசாத்திர	164
வேதநூல்	158
வேதமே	78
வேதம் சுயம்பு	80
வேதன்	52
வேறது ஆகி	89
வேறதாகும்	89
வேறுபலரின்	83
வேறு வாயில்	88
வேற்றுமை	112
வைகரி	112
வையம் முழுதும்	4